# நீலமலை வெள்ளையர்கள்

## (ஒரு எதிர்கால நாவல்)

கி.பி. 2185 ஆம் ஆண்டில் ஜியார்ஜ் ஸ்மித் என்னும் ஆங்கிலேயர் நீலமலை வெள்ளையர்களைக் காண நம் நாட்டுக்கு வந்தார். அவருடைய பிரயாண வரலாறு இது. சென்ற இருநூறு ஆண்டு உலக சரித்திரத்திற்கு இந்த வரலாறு ஒரு முக்கிய மூல சாசனமாக அமைந்துள்ளது. மேலும் அக்காலத்திய இரு கோள மக்களின் மனோநிலையையும் உறவுகளையும் யதார்த்தமாக சித்தரிக்கிறது. ஆகவே இந்த வரலாற்றை தமிழில் வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம்.

(கதையில் வருவன கற்பனைப் பெயர்கள். இந்தப் பாத்திரங்கள் யாரும் இன்னும் பிறக்கவில்லை.)

## அத்தியாயம் ஒன்று

நான் லண்டன் நகரில் உள்ள ஆதிகால சரித்திர ஆராய்ச்சிக் கூடத்தில் பணி புரிந்து வந்தேன். அந்த நிறுவனத்தின் குறிக்கோள் அணுகுண்டு காலத்துக்கு முந்திய (அ.மு) நம் முன்னோர் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள், உறவுகள் இவைகளைப் பற்றி ஆராய்வதுதான். அம்மாதிரியான ஆராய்ச்சி நம் மூதாதைகள் செய்த பிழைகளை நாம் தவிர்ப்பதற்கும், நம் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கும் உதவியாய் இருக்கும். இந்த ஆராய்ச்சி அக்காலத்திய புத்தகங்கள், புகைப் படங்கள், திரைப்படங்கள், ரேடியோ பேச்சு வார்த்தைகள் மட்டுமின்றி, தொல்பொருள்கள் மூலமாகவும் நடத்தப்பட்டு வந்தது. மனோதத்துவ சாஸ்திரத்து பிரித்தனுகும் முறைகள் வாயிலாக அவர்களுடைய எண்ணங்கள், சிந்தனைகள் முதலியவற்றைப் பற்றி அறிந்துக்கொள்ள முடியும். இம்மாதிரியாக பழைய காலத்தைத் தெளிவாக்குவதில் ஏராளமான செய்திகள், பொருள்கள் இருந்தாலும் அவற்றை சரியாக பல கோணங்களிலிருந்து பார்த்து உண்மையை அறிவது மிகவும் கடினமான காரியம்.

எமது நிறுவனத்தில் இந்த ஆராய்ச்சி முறைகளைக் கையாளுவதில் அதிக முன்னேற்றம் அடைந்திருந்தோம். ஆனால் எம் கருத்துக்களையோ அல்லது முடிவுகளையோ வெளியிடவில்லை. காரணம் இம்மாதிரியான ஆராய்ச்சிக்கு அரசு ஊக்கமளிக்கவில்லை. சில சமயங்களில் எங்கள் வெளியீடுகளுக்கு தடுப்பும் விதிக்கப்பட்டது. பழைய கால போராட்டங்களைப் பற்றியும் பேதங்களைப் பற்றியும் எழுதினால் விஞ்ஞானத்தால் பக்குவப்படுத்தப்பட்ட இன்றைய மக்களின் மனம் சீர்குலையலாம் என்றும், பழைய போராட்ட உணர்ச்சிகள் மறுபடியும் தலையெடுக்கலாம் என்றும் கருதப்பட்டது. இதன் காரணமாக பல ஆண்டுகள் எங்கள் நிறுவனமும் மூடப்பட்டது. சமீப காலத்தில் கிழக்கு – மேற்கு கோளங்கள் ஒன்றான பிறகுதான் நாங்கள் மறுபடியும் செயல்படத் துவங்கினோம். ஆகவே எங்களைப் பற்றி பொது மக்களுக்கு ஒன்றுமே தெரியாது.

போன வருடம், அ.பி.218 ஆம் ஆண்டில் (அ.பி என்றால் அணுகுண்டுக்குப் பிறகு என்று அர்த்தம்) – அதாவது கி.பி.2163 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள ஜீவ மனோதத்துவ நிறுவனத்தில் இருந்து எங்களுக்கு கீழ்க்கண்ட கடிதம் வந்தது. 'நீங்கள் அணு காலத்துக்கு முந்திய (அ.மு.) சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். அப்படியென்றால் இங்கு 'ஆங்கிலேயர்கள்' என்று கூறிக்கொள்ளும் ஒரு வகுப்பினரைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவர்கள் இப்போதும் அணு காலத்துக்கும் முந்திய பண்பாட்டிலேயே வாழ்ந்து வருகிறார்கள். இந்த இருநூறு ஆண்டுகளாக ஏற்பட்ட முன்னேற்றங்கள் அவர்களை இன்னும் தொடவில்லை. உதாரணமாக இயற்கை முறையிலேயே அவர்கள் கர்ப்பம் தரித்து குழந்தை பெறுகிறார்கள். மானிட வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவது பற்றியும் அதற்காக ஜீவிய தேர்ந்தெடுப்பு பற்றியும் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. கல்வி கற்பது இன்றும் ஞாபக ரீதியில்தான். நம் முன்னோர்களுடைய போராட்டங்களும் சரித்திரகால உணர்ச்சிகளும் இன்றும் அவர்கள் மனதில் குடிகொண்டுள்ளன.

அவர்கள் இங்குள்ள நீலமலைப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். நமது நவீன பண்பாட்டுக்கு திடீரென்று அவர்களைக் கொண்டு வந்தால் அது அவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியாக இருக்கும் என்பதால் நாங்கள் இன்னும் அவர்களை தனிமையில் வைத்திருக்கிறோம். ஆனால் சிறிது காலத்தில் அவர்கள் நம் வாழ்க்கையில் இரண்டரக் கலந்து மறைந்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அது ஏற்படுவதற்கு முன்னால் அவர்களுடைய வாழ்க்கையையும் சமூக உறவுகளையும் பற்றி நேரடியாக ஆராய்வது நலம் என்று நாங்கள் கருதுகிறோம். பழைய கால வாழ்க்கையைப் பற்றியும் ஒரு இறந்த நாகரீகத்தையும் பற்றி அறிந்துகொள்ள இது ஒரு நேரடி வாய்ப்பு.

ஆனால் நாங்களே இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதில் ஒரு கஷ்டம் இருக்கிறது. இந்த வகுப்பினர் தாம் ஆதி காலத்தில் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர்களென்றும் அந்நாட்டு மக்களின் சந்ததிகள் என்றும் கூறிக்கொள்கிறார்கள். 'ஆங்கிலேயர்' என்னும் பெயரே 'இங்கிலாந்து' என்னும் மொழியிலிருந்து ஏற்பட்ட திரிபாகும். இந்தியாவில் இருக்கும் சூழ்நிலை அவர்களுக்கு ஒரு விரோதமாகத் தென்படுகிறது. நாங்கள் இந்த ஆராய்ச்சியில் முற்பட்டால் அவர்கள் இன்றைய சமூகத்துடன் இணைவது கடினமாகும். ஆகவே இந்த ஆராய்ச்சியை நீங்கள் மேற்கொண்டால் உங்களுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் கொடுத்துதவ நாங்கள் விரும்புகிறோம்......

நாங்கள் சேர்த்து வைத்திருந்த பழைய குறிப்புகளிலும் தஸ்தாவேஜுகளிலும் தேடிய போது இந்த கடிதத்தில் கண்டிருந்த வகுப்பினரைப் பற்றிய உண்மைகள் தெரிய வந்தன. ஆகவே சென்னை நிறுவனத்திடமிருந்து வந்த அழைப்பு உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீலமலை வெள்ளையர்களைப் பற்றி ஆராய்வதற்கு எங்கள் நிறுவனத்தின் பெரியோர்கள் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் அணு காலத்துக்கு முந்திய மொழிகளில் நான் பாண்டித்தியம் பெற்றிருந்தேன். மேலும் அந்த நீலமலை மக்கள் தங்களை 'வெள்ளையர்' என்றும் கூறிக்கொள்வதால் நானும் ஒரு 'வெள்ளையன்' ஆக இருந்தேன். என் தலை மயிர் கூட வெண்மையாக இருக்கும். பழைய மொழியில் 'பளாண்ட்' (Blonde) என்று சொல்வார்கள். ஆகவே நீலமலை மக்களுடன் உறவு கொண்டாடுவதில் எனக்கு எவ்வித கஷ்டமும் இருக்காது.

ஒரு விதத்தில் இந்த குறிப்பு என் பிரயாணத்தின் வரலாறு என்று சொல்லலாம். ஆராய்ச்சி நிபுணர்களுக்காக நான் இதை எழுதவில்லை. பொது மக்களுக்காகத்தான் இதை எழுதியிருக்கிறேன். இதை எழுதுவதில் இந்த நூறு ஆண்டுகளாக இருக்கும் சட்டங்களையும் நியதிகளையும் நான் மீறி இருக்கிறேன் என்பதும் எனக்குத் தெரியும். இம்மாதிரி மீறியதற்கு காரணம் எனக்கு ஏற்பட்ட ஒரு ஒப்பற்ற அனுபவமே ஆகும். செயற்கையாக பக்குவப்படுத்தப்பட்ட என் மனமும். 'நான்' என்னும் தன்நல மனப்பான்மையை ஒழிக்க முற்படும் நம் சமூகமும் இந்த ஆழ்ந்த புது அனுபவ உணர்ச்சிக்கு முன்னால் சூரியனைக் கண்ட பனி மாதிரி மறைந்துவிட்டன. இம்மாதிரி அபிப்பிராயங்களே நம் மேற்கு கோளத்தில் ஒரு நாட்டுத் துரோகமாகும். இதற்காக நான் கஷ்டப்படவும் நேரலாம். இது என் அனுபவத்தால் நேர்ந்ததல்லவென்றும் என் ஜீவிய அடிப்படையிலேயே (gesses) ஏதோ குற்றமிருக்கிறதென்றும் கூட நினைத்து என்னை முடிவு கட்டி விடலாம். ஒருவருடைய ஆழ்ந்த அனுபவங்களையும் அவற்றால் ஏற்பட்ட உணர்வு எழுச்சிகளையும் வெளியிடுவது குற்றமென்றால் நான் குற்றவாளிதான். நான் என்னையே பெருமைப்படுத்திக்கொள்ள இந்த வரலாற்றை எழுதவில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்த இதை நான் என் பெயரில் எழுதவில்லை. என் பெயர் உட்பட எல்லாமே புனை பெயர்கள்.

இப்பிரயாணத்தின் காரணமாக எனக்கு ஒரு பெரிய புரட்சிகரமான மனமாறுதல் ஏற்பட்டிருப்பினும், அதற்கு முன்னால் நான் மேற்கு கோளத்தின் விசுவாசமான பிரஜையாகவே இருந்தேன். சர்வ வியாபகமான யதார்த்தவாத தத்துவத்தை முழு மனதோடு கடைப்பிடித்தேன். இதை எங்கள் மொழியில் Philosophy of Universal Pragmatism என்று சொல்வார்கள். சுருக்கமாக பப் (PUP) அதுதான் எங்கள் மதம், தத்துவம், கொள்கை. என் மனமும் மனோதத்துவ வாயிலாக நன்றாக சோதனைச் சாலையில் பக்குவப்படுத்தப்பட்டது. எதிர்ப்பு மனப்பான்மை அணுவளவும் எனக்குக் கிடையாது. அப்படி இல்லையென்றால் இந்தப் பிரயாணத்துக்கு என்னைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள்.

***************

சென்னை ஹேலிபோர்ட்டில் ஜீவ மனோதத்துவ நிறுவனத்தின் பிரதிநிதி என்னை சந்தித்தார்.

''என் பெயர் 'ச்சக்' '' என்று அறிமுகம் செய்துகொண்டு உடனே விஷயத்துக்கு வந்தார்.

''நீங்கள் சில மாதங்களுக்கு அணுவுக்கு முந்திய கால நிலைமையில் இருக்கப் போகிறீர்கள். உங்களுடைய உடம்பு மாறுபடும் சீதோஷ்ண நிலைக்கு சரிக்கட்ட வேண்டியிருக்கும். பல மாறுபட்ட ஆகாரங்களை சாப்பிட்டு நீங்கள் ஜீரணம் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே அந்த சூழ்நிலைக்கு உங்களை சரிப்படுத்த ஒரு கிளினிக்குக்கு நீங்கள் போய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது,'' என்று ச்சக் விளக்கினார்.

''என்னிடம் எனக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் இருக்கின்றனவே,'' என்றேன்.

''நீங்கள் சந்திக்கப் போகும் மக்கள் அவர்களுடைய கேளிக்கைகளில் நீங்கள் பங்கு கொள்வீர் என்று எதிர்பார்ப்பார்கள். நீங்கள் அந்த சந்திப்பை ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியாக பாவித்தாலும், அவர்கள் அதை ஒரு சிநேக பாவத்துடன் வரவேற்பார்கள். அந்த எண்ணத்தை நாம் தூண்டுவது அவசியம். அப்பொழுதுதான் அவர்களை நமது புது சமூகத்தோடு இணைக்க முடியும்.''

இதைப்பற்றி நான் கொஞ்சம் யோசனை செய்தேன். ஆனால் ச்சக் மறுபடியும் பேசிக் கொண்டே போனார். “உங்கள் மனோபக்குவம் இதனால் பாதிக்கப்படும் என்று நினைக்க வேண்டாம். அதை பலப்படுத்தவும் நாங்கள் நடவடிக்கை எடுக்கப் போகிறோம். அங்கே இருக்கும்போது உங்களுடைய தன்னுணர்ச்சி பலவித அழுத்தங்களுக்கும் உட்பட வேண்டியிருக்கும். லண்டனில் இம்மாதிரி சமயங்களில் உபயோகப்படுத்தப்படும் மனோபக்குவ முறைகள் எனக்கு நன்றாகத் தெரியும். எங்களுடைய முறைகள் அவற்றை விட கொஞ்சம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்று சொல்லலாம். உங்களுடைய ஈ.டீ.எஸ் (Ego Data Sheet) தன்னுனர்ச்சி புள்ளி விவரத்தாள் கொண்டு வந்திருக்கிறீர்கள் அல்லவா?”

“ஆம்”

“அப்பொழுது பிரச்சனை ஒன்றும் இருக்காது. அதை எங்கள் ஈ.டீ.எஸ் கம்பியூடரில் ஊட்டினால் உங்களுக்கு வேண்டிய அளவு மனோபக்குவம் நடக்கும்.”

ஆகவே நான் ஒரு சூழ்நிலை மாறுபாட்டு கிளினிக்குப் போய் அங்கே சில நாட்கள் இருந்தேன். விண்வெளியில் பறக்கும் வீரர்களுக்குப் போலவே எனக்கும் பலவித சீதோஷ்ணஸ்திகளிலும் காற்று அழுத்தங்களிலும் கஷ்டமில்லாமல் இருப்பதற்கு வேண்டிய சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்கால வாழ்க்கை முறையினால் இயங்காமல் இருந்த உள் உருப்புகளை இயங்குமாறு வசதிகள் செய்யப்பட்டன. வியாதிகளைப் பரப்பும் கிருமிகள் என் உடம்பை பாதிக்காமல் இருக்க பல ஊசிகள் போடப்பட்டன. பலவித உணவுகளையும் மதுபான வகைகளையும் உட்கொள்ளுவதற்கு ஏதுவாக என் ஜீரண சக்தியும் வலுவாக்கப்பட்டது. ஏழு நாட்களுக்கப்புறம் நீலமலை மக்களின் விருந்தோம்பலுக்கும், சீதோஷ்ணத்துக்கும், தகுதியாக்கப்பட்டு அந்த கிளினிக்கில் இருந்து வெளியேறினேன்.

நான் சந்திக்கப் போகும் மக்களுடைய உணர்ச்சிகளும், மனப்போக்குகளும் என்னை பாதிக்காமலிருக்கவும், என் பாரபட்சமற்ற நிலைமை மாறாமல் இருப்பதற்காகவும் என் மனோதத்துவ பக்குவப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. கடைசியாக எனக்கு இருவித மாத்திரைகளையும் அளித்தார்கள். ஒன்று உடம்புக்கு நோய் வராமல் இருப்பதற்காக, இன்னொன்று மனோதத்துவ பக்குவம் கெடாமல் இருப்பதற்காக. வேண்டியபோது சென்னையுடன் தொடர்பு கொள்ளுவதற்காக ஒரு குறு அலை (Micro – wave) போனோ விஷனும் எனக்கு அளிக்கப்பட்டது. வழக்கமாக ஒரு தடவை உபயோகித்து எறிந்துவிடும் ஆடைகளுக்குப் பதிலாக பழைய காலத்துக்கு ஏற்ற உடைகளை தயாரித்து ச்சக் எனக்கு அளித்தார். ‘நீலமலை வெள்ளையர்கள் மாதிரியே நீங்களும் உடை உடுத்தால்தான் அவர்கள் நீங்கள் ஒரு உண்மையான ஆங்கிலேயர் என்று நம்புவார்கள்,’ என்று சொல்லிவிட்டு நீலமலை நாட்டுப் பணமும் அளித்தார்.

ச்சக் தான் என்னை நீலமலைக்கு அழைத்துக்கொண்டு போனார். நான் அங்கு போய் சேர்ந்த பிறகு வெளி உலகத்துடன் அவர் மூலமாகத்தான் தொடர்பு கொள்ள வேண்டும். ஒரு சிறு ஹொவர்காப்டரில் நாங்கள் இருவரும் புறப்பட்டோம். ச்சக்தான் அதை ஓட்டினார்.

“எப்படி இருக்கிறீர்கள்?” என்று ச்சக் விசாரித்தார்.

“நன்றாகத்தான் இருக்கிறேன். ஏன் கேட்கிறீர்கள்?” என்றேன்.

ச்சக் சிரித்தார். “நீங்கள் ஆழம் தெரியாமல் தண்ணீரில் இறங்கப் போகிறீர்கள். அங்குள்ள பிரச்சனைகள் நீங்கள் நினைப்பதைவிட ரொம்ப சிக்கலாக இருக்கும். அது நமது நவீன சமூகம் மாதிரி அல்ல.”

“எனக்குத்தான் எல்லா பாதுகாப்புகளும் இருக்கின்றனவே. உடம்பும், மனதும் இரண்டும் நன்றாக பக்குவப்படுத்தப்பட்டிருக்கின்றன இல்லையா?”

“இதுதான் நவீன விஞ்ஞானத்தில் உள்ள ஒரு குறை,” என்றார் ச்சக். “நமக்கு எல்லாம் தெரியும் என்னும் மனப்பான்மையை அது தூண்டுகிறது. இந்த நோக்கோடு பார்க்கும்பொழுது நாம்

அணு காலத்துக்கு முந்திய நமது மூதாதைகளைவிட மோசம். மனோ தத்துவத்துக்கும் ஜீவிய தத்துவத்துக்கும் உள்ள பூரண உறவைப் பற்றி நாம் இன்னும் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. இந்த உறவில் உணர்ச்சியினுடைய பங்கும் நமக்குத் தெரியாது.''

ச்சக்கின் சிந்தனை எனக்கு ஒரு புதிராய் இருந்தது. ''எப்படியிருந்தாலும் பக்குவப்படுத்தும் முறைகள் முன்னேறி இருக்கின்றன அல்லவா?'' என்றேன்.

''நமக்குத் தெரிந்த பிரச்சனைகளுக்கெல்லாம் அது ஒரு நல்ல மருந்துதான். ஆனால் நமக்குத் தெரியாத பிரச்சனைகளுக்கும் நம் அனுபவத்துக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளுக்கும் அது உதவுமா? மேலும் நீங்கள் இறந்த காலத்துக்குள் செல்கிறீர்கள். கர்ப்பப் பையுக்குள் திரும்பிப் போவது மாதிரி. அங்கிருந்து இரண்டாவது தடவையாக மறுபடியும் வளர்வது மாதிரி. இது ஒரு ஒப்பற்ற, முன்பு அறியாத நிலைமை.''

ச்சக்கின் பேச்சு எனக்கு கவலை தந்தது. ஏன் இப்படி பேசுகிறார் என்று யோசித்தேன். என் மேல் இருக்கும் அனுதாபத்தாலா அல்லது என் பக்குவப்பாடு பற்றி அவருக்கு சந்தேகம் இருக்கிறதா? ஒரு வேளை நான் ஏற்றுக் கொண்டிருக்கும் சவாலுக்கு வேண்டிய திறமை எனக்கு இல்லையென்றா? இதைப்பற்றி நான் கேட்டேன்.

அவர் சிரித்தார். ''உங்கள் பக்குவப்பாடு நன்றாக இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா? உமது பிரயாணத்திலும் நீலமலை வெள்ளையர்களை சந்திப்பதிலும் எந்தவிதமான பழுதும் இருக்கக் கூடாது. ஏனென்றால் நீலமலை மக்களை நம் சமூகத்துடன் பிரச்சனையின்றி இணைக்க வேண்டும். அப்படி இணைக்க முடியாவிட்டால் அவர்களை அழித்துவிடுவதை விட வேறு வழியில்லை. மேற்கு கோளத்தின் 'பப்' தத்துவத்துக்கு அது ஏற்றதாக இருந்தாலும், எங்களுக்கு அது பிடிக்கவில்லை. கிழக்கு கோளத்தில் பச்சாதாபம், மனக்கிளர்ச்சி முதலிய உணர்வுகள் இன்னும் இருக்கின்றன.''

மேலும் என்னை சோதனை செய்கிறாரா என்னும் சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. ''பப் தான் முடிவான உண்மை. அதற்கப்புறம் ஒன்றுமே கிடையாது,'' என்றேன்.

பிறகு அவர் பேச்சை வேறு பக்கம் திருப்பினார். ''உங்கள் ஆராய்ச்சியைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள். நீங்கள் அங்கே பார்வையாளராக மட்டும் போகிறீர்களா அல்லது பங்கெடுத்துக் கொள்ளப் போகிறீர்களா?''

''நான் ஒரு திறந்த மனப்பான்மையோடு போகிறேன். நிலைமைக்குத் தகுந்தவாறு நடந்து கொள்ளுவேன்,'' இவையெல்லாம் 'பப்' தத்துவத்திலிருந்து நான் தெரிந்து கொண்ட விடைகள்.

''உணர்ச்சி வசப்படாமல் எல்லா உறவுகளிலும் கலந்து கொண்டால்தான் நல்ல முடிவுகளுக்கு வரலாம்.''

''ஆம்,'' என்று நான் தலையசைத்தேன்.

''நான் சொல்வது சரி என்று உங்களுக்குத் தோன்றினால் இந்த குளிகைகளையும் நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டும்,'' என்று ச்சக் ஒரு சிறு பொட்டலத்தை அளித்தார்.

''இவை என்ன?'' என்று கேட்டேன்.

''இவைகளை 'காதல் மருந்து' என்று சொல்லலாம். ஆண்-பெண் உறவுகளுக்கு இவை ரொம்ப முக்கியம்.''

நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். ச்சக் நிறுவனத்தின் விருந்தாளியாக நான் வந்திருந்தாலும் ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் அது என் முழுப் பொறுப்பு. அவர்கள் எந்த விதத்திலும் தலையிடக்கூடாது. இதை ச்சக் ஏன் இப்பொழுது மாற்ற முயல்கிறார்? கிழக்கு கோளத்தின் மனப்பான்மையும் தொழில் முறைகளையும் நான் அறிந்து கொள்ளவில்லையா? அவர்களுடைய

தத்துவம் சிந்தனை கட்டுப்பாடு (Thought Control or டி.சி ) பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தேன்.

“டி.சி தெரிந்திருப்பதின் ஒரு அனுகூலம் என்னவென்றால், உங்கள் மனத்தில் நினைப்பதை நான் அறிந்து கொள்ள முடியும்,” என்றார் ச்சக். “இதைப் பொறுத்தவரையில் மேற்கு கோளத்தைவிட தாங்கள் அதிகமாக முன்னேறியிருக்கிறோம். நீங்கள் இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள் என்றால், ‘ச்சக் ஏன் இந்த சரித்திர கால ஆராய்ச்சியில் குறுக்கிடுகிறார். மேல் அதிகாரிகள் செய்த ஏற்பாட்டைக் குலைக்கப் பார்க்கிறார்?’ இல்லையா?”

என் மனதிலுள்ள எண்ணங்களை எப்படி அறிந்து கொண்டார் என்று நான் ஆச்சரியப்பட்டேன். அவர் சொன்னது உண்மைதான். இவர்கள் மேற்கு கோளத்தைவிட அதிகம் முன்னேறியிருக்கிறார்கள். ஆனால் ஆண்-பெண் உறவைப் பொருத்தவரையில், பெண் கா்ப்பப் பை இல்லாமலேயே விஞ்ஞான முறையில் குழந்தை உற்பத்தி ஏற்பட்ட காலத்திலிருந்து திருமணம் வேண்டியதில்லை என்றாகிவிட்டது. பப் தத்துவத்தில் ஆா்வமுள்ளவா்கள் திருமணத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்து முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அதை சட்ட விரோதமாக்கிவிட்டார்கள். ஒரு பெண் - ஒரு ஆண் என்பது பொது நோக்குக்கு விரோதமென்பதும் தனிமை மனப்பான்மையை வளா்க்கும் என்பதும்தான் இதற்குக் காரணம். திருமணம் என்பது அணு காலத்துக்கு முந்திய ஒரு மூட நம்பிக்கை என்றாகிவிட்டது. சா்வ வியாபகமான பக்குவப்படுத்தும் முறைகளினால் இந்த கருத்துக்களை எல்லா மக்களும் சீக்கிரம் ஆா்வத்துடன் கடைபிடிக்கலானார்கள். இந்தக் காரணங்களினால் ஆண் - பெண் உறவுகள் மிகக் குறைந்துவிட்டன.

“எப்படியிருந்தாலும் எனக்கு இந்த மாத்திரைகள் தேவையில்லை,” என்றேன்.

“அவை உங்களுக்கு கண்டிப்பாக தேவைப்படும்,” என்றார் ச்சக். அப்புறம் அதை தெளிவுபடுத்தினார். “நீங்கள் கவனித்திருக்கலாம். இயற்கை முறையில் பிறந்தவா்களுக்கு செயற்கை முறையில் பிறந்தவா்களை விட செக்ஸ் அதிகம் தேவைப்படுகிறது. நீங்கள் சந்திக்கப் போகும் வகுப்பினா் எல்லோரும் இயற்கை முறையில் கருத்தரித்துப் பிறந்தவா்கள்.”

“மிஸ்டர் ச்சக், நான் இப்பொழுது விஞ்ஞான சோதனை முறையில் ஒரு புராதன மக்களின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்வதற்கான இங்கே வந்துள்ளேன். அந்த வேலை முடிந்த உடனே லண்டனுக்கு திரும்பிச் சென்று எனது அறிக்கையை சமா்ப்பிப்பேன். இந்த நிலையில் செக்ஸ் விஷயம் எழ எந்த விதத்திலும் நியாயம் இல்லை.” நான் கொஞ்சம் கண்டிப்பாகவே பேசினேன்.

“அந்த மக்களுடைய ஆண் - பெண் உறவுகளைப் பற்றி நீங்கள் நேரடியாக தெரிந்து கொள்ளாவிட்டால் உமது அறிக்கை எப்படி பூர்த்தியாகும்,” ச்சக் விடுவதாய் இல்லை. ஏன் இந்த விஷயத்தைப் பற்றி பேசுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. என் எண்ணங்கள் அவருக்குத் தெரியும் போல் இருந்தது. ஆனால் அவருடைய குறிக்கோள் எனக்குத் தெரியவில்லை.

“நான் ஏதோ மனதில் வைத்துக்கொண்டு உங்களைத் தூண்டுவதாக நினைக்க வேண்டாம்,” ச்சக் பேசிக்கொண்டே போனார். “செயற்கை ஜீவிய உற்பத்தி நிபுணன் என்னும் முறையில் கிழக்கு கோளத்தில் பிறக்கும் குழந்தைகளில் தர கட்டுப்பாடுக்கு நான்தான் பொறுப்பு. சிலகாலமாக மலடுகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதைப் பற்றி நான் கவலைப்படுகிறேன். செயற்கை முறையில் பிறந்த தலைமுறைகள் அதிகமாக ஆக மலடுகளின் சதவிகிதமும் அதிகமாகிக் கொண்டே போகிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் இன்னும் ஒரு நூற்றாண்டில் மனித வா்க்கமே இல்லாமல் போய்விடும்.”

இது எனக்கு கொஞ்சம் கவலை தந்தது. நானே செயற்கை முறையில் மூன்றாவது தலைமுறை. “கொஞ்சம் விவரமாக சொல்லுங்கள்,” என்றேன்.

“உதாரணமாக சந்திர கோளத்தில் பிறந்த குழந்தைகள் ஒரு தலைமுறைதான் செயற்கை முறையில் பிறந்தவா்கள். ஆகவே அங்கே மலடுகள் அதிகம் இல்லை. மனித தரத்தை உயா்த்த ஜீவிய விஞ்ஞானம் செய்த முயற்சி கடைசியில் மனித வா்க்கத்தையே ஒழித்துக் கட்டினால் அது ஒரு பெரிய ஏமாற்றமாகி விடும்.”

“அதெப்படி முடியும்? முந்திய தலைமுறைகளை விட நாம் எல்லா வகையிலும் உயர்ந்தவர்கள் ஆயிற்றே?”

“மனித தரத்தை உயர்த்துவதற்காகத்தான் ஜீவிய சாஸ்திர முடிவுகளையும் கம்ப்யூட்டர் முறைகளையும் ஒன்று சேர்த்து குழந்தைகளை செயற்கை முறையில் உற்பத்தி செய்தோம். ஆனால் ஜீவிய கடிகாரத்தை (Biological clock) மாற்றிவிட்டோம். ஒன்பது மாதம் கருத்தரிப்பதற்கு பதிலாக அதை முப்பது நாட்களுக்கு குறைத்துவிட்டோம். ஒரு வேளை இயற்கையான கர்ப்பப் பையிலிருக்கும் முக்கியமான சில தாதுப் பொருள்கள் நாம் உருவாக்கிய செயற்கைப் பைகளில் இல்லையோ என்னமோ எனக்குத் தெரியாது.”

“பக்குவப்படுத்தும் முறைகள் இதற்குக் காரணமாக இருக்கலாமா?”

“ஒன்றும் தெரியவில்லை. இரண்டு கோளங்களிலுமுள்ள மனோதத்துவ நிபுணர்கள் இரண்டுக்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்கிறார்கள்,” ச்சக் தன் பேச்சை நிறுத்தி சில வினாடிகள் யோசனை செய்தார். பிறகு, “அணு காலத்துக்கு முந்தி ஃப்ராய்ட் என்று ஒரு மனோ தத்துவ நிபுணர் இருந்தார். அவர் செக்ஸ்சுக்கும் உணர்ச்சிக்கும் அதிக தொடர்பு உண்டென்றும் செக்ஸ்தான் உணர்ச்சிக்கே அடிப்படை என்றும் கூறியிருந்தார். அது உண்மை என்றால் நம் பக்குவப்படுத்தும் முறைகள் உணர்ச்சிகளையெல்லாம் நீக்கிவிடுகின்றன. அதனால்தான் செக்ஸ் ஆர்வமும் குறைகின்றது. அதனால் அது மலடுகளையும் உண்டாக்கலாம் அல்லவா?”

“,e;jg; gpur;ridiag; gw;wp ehd; nkw;F nfhsj;jpy; nfs;tpg;gl;ljpy;iy” vd;nwd;.

“அங்கேயும் இதே மாதிரிதான்,” என்று ச்சக் பதிலளித்தார். “அங்குள்ள விஞ்ஞானிகளுடன் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். அவர்களும் இதைப் பற்றி கவலை கொண்டிருக்கிறார்கள்.

“ஒரு சரித்திர ஆராய்ச்சியாளன் என்னும் முறையில் இந்தப் பிரச்சனையில் எனக்கு ரொம்ப அக்கறை இருக்கிறது. புராதன சரித்திரத்தில் பல சமயங்களில் ஒரு சிறிய வகுப்பினர் மனித வர்க்கத்தையே அழிவாகாமல் காப்பாற்றியிருக்கிறார்கள். உங்களுடைய சந்தேகங்கள் ஊர்ஜிதமானால் நீலமலை வெள்ளையர்கள் மனித சமூகத்தையே அழிவிலிருந்து காப்பாற்றுவோர்களாக அமையலாம் இல்லையா?”

“நான் கொடுத்த மாத்திரைகளின் முக்கியத்துவம் இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதா? “ என்றார் ச்சக். இந்தப் பேச்சு மூலமாக ச்சக் இடம் எனக்கு அன்பும் அனுதாபமும் எழ ஆரம்பித்தது. இது பக்குவப்படுத்தலுக்கு விரோதமாகும் என்பது எனக்குத் தெரியும். மனித உறவில் விருப்பு வெறுப்பு ஒன்றும் இருக்கக் கூடாது என்பதுதான் பப் தத்துவத்தின் முக்கியமான விதி.

ச்சக் மறுபடியும் பேசிக் கொண்டே போனார். “செயற்கை முறையில் பிறந்தவர்கள் மூன்று நான்கு தலைமுறைகளுக்குப் பின்பு ஆண் - பெண் உறவுகளில் ஈடுபட முடியுமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.”

“நீங்களே இந்த சோதனையை நடத்தலாமே” என்று திருப்பிக் கேட்டேன்.

“அது உண்மைதான். ஆனால் நீலமலைவாசிகளுக்கு இங்கிலாந்தின் மேல் மிக்க அன்பும் ஆர்வமும் உண்டு. இங்கிலாந்துதான் அவர்களுடைய தாய் நாடு என்று கருதுகிறார்கள். அங்கிருந்து வந்தவரை தங்கள் இருநூறு வருடமாக காணாதிருந்த உறவினறாக உங்களை வரவேற்பார்கள். ஆகவே நீலமலை பெண்களுடன் உறவு கொள்வதற்கு உங்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கும்.”

ச்சக் கொடுத்த மாத்திரைகளை நான் பத்திரமாக என் பையில் வைத்துக்கொண்டேன்.

“அவைகளை எப்படி உபயோகப்படுத்துவது என்றும் விவரங்கள் உள்ளே இருக்கின்றன,” என்றார் ச்சக்.

நாங்கள் வேகமாகப் பறந்து கொண்டிருந்தோம். நீலமலை வெள்ளையர்களை பற்றி மேலும் விவரங்களைக் கேட்டேன். “இந்த வகுப்பினர் இங்கே தனியே குடியேற விரும்பியபொழுது நாங்கள்

அதற்கு ஒத்துக் கொண்டதற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் எப்படி முன்னேறுவார்கள் என்று நாங்கள் பார்க்க விரும்பினோம். இந்த நூற்றைம்பது ஆண்டுகளாக அவர்களை சைக்கோவிஷன் மூலமாக கவனித்து வருகிறோம். எங்கள் சைக்கோவிஷனின் புதுமை என்னவென்றால் ஒளி, சத்தம் மட்டுமின்றி சிந்தனைகள் உணர்ச்சிகள் முதலியவற்றையும் அது பிரதிபலிக்கிறது. இவ்வளவு நுண்ணியமாக அவர்களை கவனித்து வருகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் ஆட்சேபங்கள் வந்திருக்கும். அவர்கள் இன்னும் அணுகாலத்துக்கு முந்திய லட்சியங்களையும் மனப்போக்குகளையும் கடைப்பிடிக்கிறார்கள். சில விஷயங்கள் 'புனிதமான'தென்றும் ஒரு தனி மனிதனின் 'உரிமை' என்றும் அவற்றை மற்றவர்களோ அரசாங்கமோ ஆக்கிரமிக்கக் கூடாதென்றும் நினைக்கிறார்கள்.

''புனிதம், உரிமை என்றால் எனக்குத் தெரியும். ஆனால் 'ஆக்கிரமிப்பு' என்றால் என்ன?'' என்று கேட்டேன்.

''மற்றவர்களின் புனிதம் என்று கருதுவதை உதைத்துத் தள்ளுவதுதான் ஆக்கிரமிப்பு. மேலும் அவர்களை தனியாக வைத்திருப்பது கடினம். அவர்களுக்கு ஆக்கிரமிப்பு மனப்பான்மை அதிகம். நம்மாதிரி அவர்கள் தலைமுறை தலைமுறையாக பக்குவப்படுத்தப்படவில்லை. அவர்களுடைய சமூகத்திலிருந்து போராட்ட மனப்பான்மையும் உணர்ச்சிவசப்படலும் இன்னும் நீக்கப்படவில்லை. ஒரு வினாடியில் அவர்களை நாசம் செய்யும் சக்தி நம்மிடம் இருக்கிறது என்று தெரியாமல் நம்மீது படையெடுத்து சுற்றியுள்ள நிலங்களை ஆக்கிரமிக்க விரும்புகிறார்கள். ஆகவே நமக்கு இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று அவர்களை நம் சமூகத்துடன் இணைத்து நம் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும்படி செய்தல் அல்லது அவர்களை பூரணமாக அழித்து விடுதல். ஆனால் நான் முன்பு சொன்ன ஜீவிய விஞ்ஞான காரணங்களுக்காக அவர்களை இணைத்தாக வேண்டும்.''

''அவர்களை எப்பொழுதாவது பக்குவப்படுத்த முயற்சி செய்யவில்லையா?'' என்று கேட்டேன்.

''அவர்கள் அதற்கு இசையவில்லை. ஒருவர் மனதுக்கு எதிராக பக்குவம் செய்வது ரொம்ப கடினம். அப்படி செய்தாலும் அது நிலைக்காது. நீங்கள் அவர்களுடைய 'தாய் நாட்டிலி'ருந்து வருவதால் அவர்களை இணைப்பதற்கு நீங்கள் உதவியாய் இருக்கலாம் என்று நினைக்கிறோம்.''

''இன்னும் சில காலத்துக்கு அவர்களை தனியாக விட்டுவிட முடியாதா?''

''இல்லை. ஏனென்றால் அவர்களைச் சுற்றியுள்ள மின்சார தடங்கல்கள் இருகோள ஒப்பந்தப்படி நீக்கப்பட்டுவிட்டன. சுற்றுப்புறங்களில் அவர்கள் தங்கள் மனப்பான்மையைப் பரப்பி நிம்மதியைக் குலைக்க ஆரம்பித்தார்கள். ஆகவே மறுபடியும் தடங்கல்கள் போட்டிருக்கிறோம். ஆனால் அவை தற்போதைக்குத்தான்.''

''நான் நிறைய புதிய வார்த்தைகளைக் கற்க ஆரம்பித்திருக்கிறேன்.'' என்றேன்.

''இவைகள் புதிய வார்த்தைகள் அல்ல. எல்லாம் அணுகாலத்துக்கு முந்தியவை; நான் மறந்துவிட்ட வார்த்தைகள். ஆங்கிலேயர்களை சந்திக்கும்போது இன்னும் பல வார்த்தைகளைக் கற்பீர்கள்,'' என்றார் ச்சக்.

''நமது பிரயாணத்துக்கு ஏதாவது எதிர்ப்பு இருக்குமா?''

''உமக்கு நல்ல வரவேற்பு இருக்கும்,'' என் துணைவர் உறுதியளித்தார். ''அவர்கள் இங்கிலாந்தை தம் தாய் நாடாக கருதுவதினால் உங்களை ஒரு உறவினர் என்றும் தூதுவர் என்றும் கருதுவார்கள். அவர்களுடைய கொள்கைகளும் அரசியல் நிறுவனங்களும் அணுகாலத்துக்கு முந்திய இங்கிலாந்தைப் போலவே இருக்கும். அவர்கள் மேற்கு கோளத்தைச் சேர்ந்தவர்களென்றும் கிழக்கு கோளத்தின் விரோதிகள் என்றும் கருதுகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு இரத்த சம்பந்த உறவினர்…..''

''இரத்த சம்பந்தமென்றால்?'' நான் குறுக்கிட்டேன்.

“அணு காலத்துக்கு முந்திய வழக்கப்படி ஒரே மூதாதையிலிருந்து ஜீவியமானது என்று கொள்ளலாம். ஆகவே உம்மை மிகவும் பெருமைப்படுத்தி வரவேற்பார்கள்.”

“அது நம் இரண்டு கோளங்களின் கொள்கைகளுக்கும் விரோதமாயிற்றே?” என்றேன்.

“ஆம். உண்மைதான் ஆனால் நீலமலை வெள்ளையர்கள் நமது சட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள். அவர்களை அணுகும்போது நமக்கு வேறு வழியில்லை.”

நாங்கள் இப்போது ஒரு வனாந்திரத்தின் மீது பறந்து கொண்டிருப்பதாக தோன்றியது. இயற்கையின் வாசைன வீசியது. செடிகொடி இல்லாத ஒரு நீண்ட நிலம் கண்ணுக்குத் தெரிந்தது. “அதோ பாருங்கள் அங்கேதான் நாங்கள் மின்சார தடங்கல் போட்டிருந்தோம். இங்கு அணுத் தடங்கல் வேண்டியிருக்கவில்லை. மின்சார கம்பிகளே போதுமானதாய் இருந்தது.”

அங்கிருந்து நாங்கள் மலைச் சாரல்களின் மேலே பறந்தோம். ஹோவர்காப்டர் நிலத்திலிருந்து சில மீட்டர் உயரத்தில்தான் பறந்தது. ஆகவே கீழே உள்ள எல்லாவற்றையும் நன்றாக பார்க்க முடிந்தது. அணு காலத்துக்கு முந்திய மிருகங்கள் அங்கே திரிந்து கொண்டிருந்தன. நவீன முன்னேற்றங்கள் ஒன்றுமே அங்கே கிடையாது. இந்த காட்சியே என் நரம்புகளைக் கொஞ்சம் சிலுசிலுக்க வைத்தது. உயர்ந்த மலைகளையும் ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் நான் முதல் தடவையாக பார்த்தேன்.

“இந்தக் காட்சி நம் பக்குவத்தைக் கொஞ்சம் சீர்குலைக்கவில்லையா?” என்று கேட்டேன்.

“அங்கு போய் சேரும்போது பாருங்கள்!” என்றார் ச்சக்.

நாங்கள் மேலும் உயரமாகச் சென்றோம். செடி கொடி இல்லாத நீண்ட கருப்பு நிலங்கள் சில சமயங்களில் தெரிந்தன.

“அதுதான் பழைய காலப் பாதை அ.மு. காலத்தில் அதன் மேல் வாகனங்கள் செல்லும். உலகமே அம்மாதிரியான பாதைகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. அதற்கே தனியான சட்டதிட்டங்கள் இருந்தது. ஒரு பாதையில் இடது பக்கம் செல்ல வேண்டுமா அல்லது வலது பக்கமாக செல்ல வேண்டுமா என்பதே ஒரு பெரிய பிரச்சனையாய் இருந்தது.”

ஜீவிய விஞ்ஞானத்தைப் பற்றியோ அல்லது நீலமலை ஆங்கிலேயர்களைப் பற்றியோ ச்சக் சொல்வதைக் கேட்க நான் தயாராய் இருந்தேன். ஆனால் அணு காலத்துக்கு முந்திய கால சரித்திரத்தைப் பற்றி எனக்கு அவரைவிட அதிக அறிவு உண்டு. இந்த விஷயங்களை அவர் விளக்க முற்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. “இதெல்லாம் எனக்குத் தெரியும். நாம் பார்க்கும் நிலங்கள் சாதாரண பாதைகள் அல்ல. அவைகளுக்கு ‘மெக்காடம்’ என்று பெயர். பின்னால் அவைகளை ‘மோட்டார் வே’ என்று சொல்வார்கள். அவைகளை உபயோகிக்கும் வாகனங்களுக்கு ‘மோட்டார் கார்’ என்று பெயர்.

ச்சக் சிரித்தார். “அதோ அந்த இருப்புப் பாதை தெரிகிறதே, அதன் மேல்தான் ரெயில் பெட்டிகள் சென்றன.” என்றேன்.

“கொஞ்சம் பக்குவ மாத்திரைகளை சாப்பிடுங்கள்,” என்று ச்சக் நிதானமாக சொன்னார். “தனியன், நான் என்னும் மனப்பான்மை கொஞ்சம் தலையெடுக்கிறது. இன்னும் மேலே செல்லச் செல்ல அது அதிகமாகும். உங்கள் நரம்புகளுக்கு அதிக தொந்தரவு கூடாது.”

“ஏன்…?” நான் வாதாட எத்தனித்தேன். ஆனால் உடனே ச்சக் சொல்வது சரி என்று எனக்குப் பட்டது. இரண்டு மாத்திரைகளை வாயில் போட்டுக்கொண்டு “நீங்கள் எப்படி சமாளிக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

“நான் இங்கு அடிக்கடி வருவதால் எனக்கு தானாகவே ஒரு இயற்கை பாதுகாப்பு இருக்கிறது.”

இப்பொழுது நாங்கள் மேலே ஏறாவிட்டாலும் நிலம் மேடு பள்ளங்களாக இருந்தது. வனாந்தரத்துக்கு பதிலாக வயல்களும் புல் தரைகளும் இருந்தன. இவையெல்லாம் நான் எங்கள் நிறுவனத்தில் பார்த்த பழைய சினிமா படங்களை நினைவுறுத்தின. கீழே நடந்து போய்க்கொண்டிருந்த ஒரு மனிதன் எங்களைக் கண்டதும் ஒரு கல்லெடுத்து எங்கள் வாகனத்தின் மேல் வீசினான். சிறிது நேரத்தில் நாங்கள் ஒரு சிறு நகரத்தின் மேல் பறந்தோம். அங்கே ஒரு திறந்த புல் வெளியில் எங்களை வரவேற்க ஒரு கூட்டம் கூடியிருந்தது. எங்கள் ரேடியோவிஷனில் கேட்டபோது அது ஒரு வரவேற்பு ஆரவாரம் என்று தெரியவந்தது.

அந்த மைதானத்திலுள்ள காலி நிலத்தில் ச்சக் எங்கள் ஹோவர்காப்டரை இறக்கினார். அதிலிருந்து நாங்கள் வெளியே வந்தபோது எனக்கு ஒருவிதமான நடுக்கம் தோன்றியது. ச்சக் சொன்னது சரிதான். இது ஒரு பழைய கர்ப்பப் பையிக்குள் புகுந்து மறுபடியும் பிறக்கும் மறுபிறப்பு மாதிரிதான்.

-----------------------------------

## அத்தியாயம் இரண்டு

இந்த வரலாறு வாசகர்களுக்கு கொஞ்சம் அறியக் கூடாததாக இருக்கலாம். அதற்குக் காரணம் என்னவென்றால் பல வருடங்களாக சரித்திரம் ஒரு பாடமாக யாருக்குமே கற்பிக்கப்படுவதில்லை. சரித்திரம் பழைய வேறுபாடுகளையும் போராட்டங்களையும் மக்களுக்கு நினைவுபடுத்தி சமூக நிம்மதியைக் குலைக்கும் என்பது அரசின் முடிவு. ஆகவே இந்த இரண்டு நூற்றாண்டுகளில் நடந்த சம்பவங்களைப் பற்றி விளக்கம் தருவது அவசியம். அப்பொழுதுதான் என் நீலமலைப் பிரயாணத்தின் காரணங்களையும் சூழ்நிலையையும் பூரணமாக அறிந்து கொள்ள முடியும்.

***************

ஆதிகாலத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு சிறு வகுப்பினர் - அவர்களுடைய ஜனத்தொகை ஒரு லட்சத்துக்கும் குறைவாகத்தான் இருக்கும் - எப்படி இந்தியாவில் தங்கிவிட நேர்ந்தது? அதுவும் உலக முன்னேற்றப் பாதையிலிருந்து விலகி ஒரு தனிமையான சூழ்நிலையில் எப்படி இருக்க முடிந்தது? இவர்களைப் பற்றி இதுவரையிலும் ஏன் யாரும் கேள்விப்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை வேண்டுமென்றால் அணு காலத்துக்கு முந்திய சரித்திரத்தின் வாயிலாகத்தான் கிடைக்கும். இப்பொழுதுதான் இந்த சரித்திரம் முதலாவதாக எழுதப்படுகிறது. ஆகவே வாசகர்களுக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருக்கலாம்.

அணு காலத்தின் முதல் ஐம்பது ஆண்டுகள் உலகம் முழுவதிலுமே குழப்பம் கலவரம் நிறைந்த காலமாக இருந்தது. கொள்கைப் போராட்டங்களும், வகுப்புப் போராட்டங்களும், உள்நாட்டு வெளிநாட்டு யுத்தங்களும் மிகுந்திருந்தன. எண்ணை, உணவு, முதலிய முக்கியமான மூலப் பொருள்களை பங்கிடுவதிலும், பண்டமாற்றங்களிலும், ஒரு நாட்டினர் மற்றவர்களை ஆக்கிரமிப்பதிலும் நிறபேத துவேஷத்திலும் பல சச்சரவுகள் எழுந்தன. இந்த காரணங்களினால் உலகின் பல பாகங்களிலும் குட்டி யுத்தங்களும் புரட்சிகளும் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. மத்திய கிழக்கிலும், தென் அமெரிக்காவிலும், கீழ் ஐரோப்பாவிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் பல போராட்டங்கள் தலையெடுத்தாடின. கடைசியாக திடீரென்று அ.பி ஐம்பத்தாறாம் ஆண்டில் (அதாவது கி.பி 2001 ஆம் ஆண்டு) அது ஒரு உலக யுத்தமாகிவிட்டது.

இரண்டாவது அணு யுத்தம் ஆரம்பித்து மானிட வர்க்கமே அழியும் நிலையில் இருந்தபோது இரண்டு பக்கங்களிலும் உள்ள அறிஞர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், என்ஜினியர்கள் ஆகிய எல்லோரும் தாமாகவே வேலை நிறுத்தம் செய்தார்கள். அதாவது தமது திறமையையும், ஆற்றலையும் யுத்தத்துக்கு அளிக்க மறுத்துவிட்டார்கள். இதன் காரணமாக வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டது. அரசாங்கங்கள் செயல்பட முடியவில்லை. யுத்தத்தில் இறங்கிய படைகளுக்கு தளவாடங்களோ உணவுப் பொருள்களோ போய்ச் சேரவில்லை. எல்லா நாடுகளிலும் குழப்பம். அமைதியின்மை, பட்டினி. ஆனால் மனித வர்க்கம் பூண்டோடு ஒழியாது என்னும் நம்பிக்கையும் வளர ஆரம்பித்தது.

வேலை நிறுத்தம் செய்தவர்கள் விடுத்த கோரிக்கைகள் படி சமாதானத்தை உருவாக்குவதற்காக ஒரு உலக மகாநாடு கூட்டப்பட்டது. ஆனால் அக்காலத்திய தலைவர்களுக்கு எப்படி போராட்டங்களையும் மனவேறுபாடுகளையும் தவிர்ப்பது என்று தெரியவில்லை. போராட்டமே இயற்கையின் சட்டம் என்று நினைத்தனர். ஓவ்வொருவரும் தம்முடைய செல்லமான லட்சியங்களையும், சிரத்தைகளையும் விட்டுக் கொடுக்கவில்லை. யுத்தம் நின்ற பிறகும் கூட அவர்களிடையே பேச்சிலும் போக்கிலும் பலாத்காரம் பிரதிபலித்தது. ஆக்கிரமிப்பு மனப்பான்மை இருந்ததே தவிர விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லை.

இம்மாதிரியான சிந்தனைகளில் பிறந்து வளர்ந்து வந்தவர்களுக்கு எக்காலத்திலும் சமாதானம், நிம்மதி என்பதிலோ, மானிட வர்க்கத்தின் திட்டமிட்ட முன்னேற்றம் என்பதிலோ நம்பிக்கையில்லை. ஆகவே ஒரு வருடம் நடந்தும் உலக மகாநாடு எந்த முடிவுக்கும் வரவில்லை. காகிதங்களும் கேசட் டேப்புகளும்தான் நிறைய குவிந்தன. வேலை நிறுத்தம் செய்த அறிவாளிகளும், மக்களும் கவலையோடு காத்திருந்தனர்.

கடைசியாக உலகத்தை கிழக்கு கோளமென்றும் மேற்கு கோளமென்றும இரண்டாக பங்கு போட்டுக் கொள்வது என்னும் முடிவு எடுக்கப்பட்டது. இரண்டுக்கும் நடுவில் ஒரு சக்தி வாய்ந்த அணு

குண்டு தடங்கல் இருக்கும். ஒரு கோளத்துக்கும் இன்னொரு கோளத்துக்கும் எந்தமாதிரியான பேச்சுவார்த்தையோ, போக்குவரத்தோ, வியாபாரமோ இருக்கக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. இரண்டு தனி உலகங்கள் ஏற்பட்டன. கிழக்கு கோளம் ஆசியா, ஆப்பிரிக்கா, கிழக்கு ஐரோப்பா இவைகளைக் கொண்டதாகும். அணு தடங்கள் வடக்கு துருவத்திலிருந்து யூரல் மலைகள், மெடிடரேனியன் கடல், அட்லாண்டிக் சமுத்திரம் வழியாக தென்துருவத்துக்குச் சென்று பசிபிக் சமுத்திரத்தின் வழியாக மறுமடியும் வடக்கு துருவத்தை அடைந்தது. மேற்கு ஐரோப்பா, அமெரிக்காக்கள், ஆஸ்திரேலியா, நியூசிலெண்ட முதலிய நாடுகள் மேற்கு கோளத்தைச் சேர்ந்தவை.

இந்த பெரிய பங்கீடு சாசனத்தின் ஒரு பிரிவு சிறுபான்மையோரைப் பற்றியதாகும். பல ஆயிர ஐரோப்பியர்கள் - முக்கியமாக ஆங்கிலேயர்கள்-ஆசியாவில் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு இங்கிலாந்துக்கோ அல்லது ஐரோப்பாவுக்கோ திரும்ப விருப்பமில்லை. இருந்தாலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தங்கள் பண்பாட்டுக்கிணங்க நடத்த விரும்பி தமக்கு ஒரு தனி இல்லம் வேண்டும் என்று வாதாடினர். கிழக்கு கோள அரசு அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடாதென்றும் தமக்கு பூரண சுதந்திரம் - கிழக்கு கோளத்திலேயே வேண்டுமென்றும் கோரினர். இந்த பிரச்சனை ஒரு சமயத்தில் மகாநாட்டின் ஒப்பந்தத்தையே சீர்குலைக்குமோ என்று ஆகிவிட்டது. கடைசியாக கிழக்கு கோளத் தலைவர்கள் அவர்களுக்கு ஒரு தனி நாடு அளிப்பதாக ஒத்துக்கொண்டனர். இதற்காக தென் இந்தியாவிலுள்ள நீலமலை பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு சீதோஷ்ன ஸ்திதி நன்றாக இருக்கும். அந்த ஜனத் தொகைக்குப் போதிய நிலமும் வளமும் இருந்தது.

நீலமலைகளின் சீதோஷ்ணம் எப்பொழுதுமே இங்கிலாந்திலுள்ள வெய்யற்காலம் போல் இருக்கும். ஆகவே கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த பல ஆங்கிலேயர்கள் அங்கு சுகவாசத்துக்காக செல்வதுண்டு. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு கூட அங்கே ஆங்கிலேய வாசனை கொஞ்சம் வீசிக் கொண்டிருந்தது. இங்கிலாந்துக்கு திரும்பிப் போக இஷ்டமில்லாத பல ஆங்கிலேயர்கள் அங்கு குடியேறினார்கள். அதனால் அதை அவர்கள் தமது குடியேற்ற இல்லமாக ஒப்புக்கொண்டதில் ஆச்சரியமில்லை.

பெரிய பங்கீடு நடந்த அதே சமயத்தில் இந்த சிறிய பங்கீடும் நடந்தது. ஆங்கில வர்க்கத்தினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் நீல மலையில் குடியேறி தமது வாழ்க்கையை சுதந்திரமாக நடத்தி வந்தனர். முதலில் சில காலம் அவர்களுக்கும் அவர்களை சுற்றியுள்ள பிரதேசத்துக்கும் கொஞ்சம் போக்குவரத்து இருந்து வந்தது. கிழக்கு கோள அரசும் அவர்களுக்கு சில சலுகைகளை அளித்தது. ஆனால் நாளாவட்டத்தில் எல்லாம் நின்று அவர்கள் பூரணமாக தனித்து இருந்தார்கள். சென்ற நூற்றைம்பது வருட காலமாக தமது லட்சியங்களுடனும் கொள்கைகளுடனும், உறவுகளுடனும் அந்த சிறு நிலப்பரப்பில் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அது ஒரு சிறு உலகம், அணுவுக்குப் பிந்திய நவீன உலகில், அணுவுக்கு முந்திய உலகம். இந்த நவீன உலகில் சரித்திரத்தைத் தடை செய்ததன் காரணத்தால்தான் இதுவரையிலும் இவர்கள் இருப்பது யாருக்குமே தெரியவில்லை.

**********

நான் பழைய சரித்திரத்தை சொல்ல ஆரம்பித்தபிறகு, இதுவரையிலும் நடந்துள்ள மற்ற மாறுதல்களைப் பற்றியும் விவரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

பெரிய பங்கீட்டு சாசனம் அமுலுக்கு வந்தவுடன் அக்காலத்தில் அரசு நடத்தி வந்த அரசியல்வாதிகள் என்போரை அறிவாளிகள் எல்லோரும் சேர்ந்து வெளியனுப்பிவிட்டனர். அரசியலும் அதிகாரமும் மனிதவர்க்கத்தின் அழிவைத் தவிர்த்த விஞ்ஞானிகளிடமும், பொருளாதார நிபுணர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. இரண்டு கோளங்களைப் பிரிக்கும் அணு திரைதான் முதலில் அவர்களின் பராமரிப்பில் இருந்தது. ஆனால் நாளாவட்டத்தில் எல்லா நிர்வாகத்தையுமே அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பெரிய பிரிவினைக்கு முன்னால் எங்கு பார்த்தாலும் கிளர்ச்சிகளும், ஸ்திரமின்மையும், வன்மையும் நிறைந்திருந்தன. அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதில்லை. எங்கு பார்த்தாலும் நோய் பட்டினி, ஒரு வகுப்பினருக்கும் இன்னொரு வகுப்பினருக்கும் ஏற்றத்தாழ்வு அதிகம். போட்டி, பொறாமை, சண்டை - இன்று இந்த வார்த்தைகளே நம் அகராதியில் இல்லை. சமூகத்தில் தாண்டவமாடின.

அதிகாரம் தம் கைக்கு வந்தவுடனே அந்த அறிவாளிகள் இரண்டு பெரிய குழுக்களை நியமித்தனர். ஒன்று பொருள்கள் வளர்ச்சிக் குழு ( Material Progress group M.P.G எம்.பி.ஜி).

மற்றொன்று அறிவு வளர்ச்சிக் குழு (Intellectual Progress group I.P.G ஐ.பி.ஜி). எம்.பி.ஜி பொருட்கள் உற்பத்திக்கும் வினியோகத்துக்கும் பொறுப்பு ஏற்றது. ஐந்து வருடங்களுக்குள் அவர்கள் மேற்கு கோளத்தில் எல்லோருக்கும் போதிய உணவு, உடை, இல்லம், கேளிக்கை முதலிய எல்லா துறைகளிலும் போதுமான அளவுக்கு உற்பத்தியை பெருக்கி நியாயமாக வினியோகம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். அணு காலத்துக்குப் பின் ஏற்பட்ட பல முன்னேற்றங்களுக்கு அவர்கள்தான் காரணம் என்று சொல்லலாம். செயற்கை உணவு பொருட்கள் உற்பத்தியால் நாம் விவசாயத்தை நம்பியிருக்க வேண்டியதில்லை. சம சீதோஷ்ன உடைகள், பஸ், ரயில்களுக்கு பதிலாக நகரும் மேடைகள் செயற்கைக் குழந்தை உற்பத்தி முறை, சூழ்நிலையில் பிரான வாயுவை அதிகரித்தல், பூரண நோய் தடுப்பு இவைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்து மக்களின் வாழ்வுத் தரத்தை படிப்படியாக உயர்த்தின. சந்திரனில் குடியேறுவதற்கும் இவர்கள்தான் முதல் முயற்சி எடுத்தார்கள்.

ஆனால் இதனாலெல்லாம் பொது மக்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. ஒவ்வொருவரும் தமக்கு அதிகம் வேண்டும் என்று வாதாடினார்கள். அதுமட்டுமின்றி மற்றவர்களுக்கு அதிக சலுகைகள் என்று குறை கூறினர். ஒரு வகுப்பினருக்கும் இன்னொரு வகுப்பினருக்கும், மாவட்டங்கள் இடையேயும் முறையீடுகளும் புகார்களும் வளர்ந்தன. இந்த நிலைமையை சமாளிப்பது அறிவு வளர்ச்சிக் குழுவின் ஐ.பி.ஜி. பொருப்பாயிற்று.

ஐ.பி.ஜி. யில் மனோ தத்துவ நிபுணர்களும் டாக்டர்களும்தான் அதிகமாக இடம்பெற்றிருந்தார்கள். பின்னால் மற்ற சில அறிவாளிகளும் அதில் சேர்க்கப்பட்டார்கள். ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சாட்டுவதையும், சமூக போராட்டங்களையும் தவிர்ப்பதுமே அவர்களுடைய முக்கிய குறிக்கோள் ஆகியது. பல பொருளாதார காரணங்களாலும், மனநோய் காரணங்களாலும்தான் சமூகத்தில் தகராறுகள் ஏற்படுகின்றன என்று அவர்கள் கருதினார்கள். ஆகவே அவற்றை சமூகத்திலிருந்து களைந்து விடுவதுதான் அவர்களின் முதல் வேலையாக மேற்கொள்ளப்பட்டது. லட்சியம், கோட்பாடுகள், விசுவாசம், நாட்டுப்பற்று, மரபு, குடும்ப பாசம் - இவைகள்தான் மூல காரணம் என்றும் அவர்கள் சோதனைகளிலிருந்து தெரிய வந்தது. மேலும் ‘நான்’ என்னும் மனப்பான்மை, ஆசை, அந்தஸ்து, சமூகத்தில் உயர வேண்டும் என்னும் குறிக்கோள், சேவை மனப்பான்மை ஆகிய குணங்களும், மேலும் முக்கியமாக உணர்ச்சிவசப்படுதலும் நிம்மதியை சீர்குலைப்பதாக ஊர்ஜிதமாயிற்று. இந்த குணங்களும் அபிலாஷைகளும் ஒரு மனிதனை தர்க்க ரீதியாக இயங்க முடியாமல் செய்துவிட்டன. ஆகவே அவனுடைய நடத்தையையும் முன்கூட்டி சொல்ல முடியாமல் போய்விட்டது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்துதான் அணுகாலத்துக்கு முந்திய பலாத்கார சூழ்நிலையை ஏற்படுத்தியது என்னும் முடிவுக்கு இந்த குழு வந்து சேர்ந்தது.

ஐ.பி.ஜி. இயங்கி வந்த முதல் சில ஆண்டுகள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அறிவாளிகளிடையே விவாதங்கள் இருந்து வந்தன. ஆனால் நாளாக ஆக வெறும் பேச்சிலேயே காலம் கடப்பதாக தீவிரவாதிகள் கருதினார்கள். விவாதங்களே விரோத மனப்பான்மையை வளர்ப்பதாகவும் தனி மனிதர்களுடைய முக்கியத்துவத்தை அதிகப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டினார்கள். ஆகவே விவாதமின்றியே முடிவுகள் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பள்ளிக்குழந்தைகளுக்கு கூட்டு மனோதத்துவ வைத்தியம்தான் (Psychological group Therophy) முதல் படியாக மேற்கொள்ளப்பட்டது. பின்னால் அதே முறைகளை வயது வந்தோருக்கும் தூண்டுதலின்றி அளிக்கப்பட்டது. இந்த முறைகளெல்லாம் மெல்ல வந்ததனாலும் அதைப்பற்றி அதிக பிரசுரம் செய்யாததாலும் என்ன நடக்கிறது என்று யாருக்குமே தெரியவில்லை. எல்லோரும் அறிந்துகொள்ளும் முன்பே பாதிக்கு மேற்பட்டவர்கள் இந்த முறைகளின் வாயிலாக பக்குவப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

பலதரப்பட்ட முன்னேற்றங்களும் இந்த போராட்ட தவிர்புக்கு உடந்தையாய் இருந்தன. செயற்கை முறைகளில் குழந்தை உற்பத்தியும், ஜீவிய சாஸ்திர மூலமாக பெற்றோர் தேர்ந்தெடுப்பும், உள் மனது( Sub conscious mind) வாயிலாக கல்வி கற்பிப்பும் மன மாற்றலுக்கும் பக்குவப்படுத்துவதற்கும் ஏதுவாய் ஏற்பட்டன. பிறகு பக்குவப்படுத்தும் முறைகளில் ஏற்பட்ட மாறுதல்களினால் ஒரு தனி மனிதனுடைய ஞாபகத்தையும், ஆசை அபிலாஷைகளையும், எப்பொழுதும் ஒரே கட்டுக்கடங்கிய நிலை இருக்குமாறு செய்ய முடிந்தது. இது எல்லாம் செய்து முடிவதற்கு பெரிய பிரிவினைக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் ஆகின. பக்குவப்படுத்தும் முறைகள் - இன்றுகூட நூற்றுக்கு நூறு வெற்றி என்று சொல்வதற்கில்லை. அதனால் ஏற்படும் தவறுகளால் மூளை நிரந்தரமாக சில சமயங்களில் பாதிக்கப்படுகிறது. ஆனால் சமூகத்திலிருந்து உணர்ச்சியை களைந்தெடுத்துவிட்டதால் அம்மாதிரி தவறுகளைப் பற்றி கவலைப்படவோ எதிர்ப்பு தெரிவிக்கவோ யாரும் இல்லை. ஜனத்தொகை எண்ணிக்கையில் அவைகள் ‘கழுவிப் பொருள் சதவிகிதம்’ என்ற காட்டப்படுகின்றன.

இந்த சீர்திருத்தங்களுக்கெல்லாம் எதிர்ப்பு இருக்கவில்லை என்று நினைப்பது தவறாகும். முதலில் மதத்தின் பேராலும், சுதந்திரத்தின் பேராலும், ஜனநாயகத்தின் பெயராலும் எதிர்ப்புகளும் ஆட்சேபங்களும் தோன்றின. இந்த ஆட்சேபங்களுக்கெல்லாம் பிரிவினைக்கு முன்பு யுத்தத்தை ஆரம்பிக்க முயன்றவர்கள் முன் நின்று தெரிவித்ததால் அதையாரும் அதிகமாக நம்பவில்லை. ஆனால் பக்குவப்படுத்தும் முறை வலுத்தபோது ஐ.பி.ஜி அங்கத்தினர்கள் யதேச்சாதிகாரம் உள்ளவர்கள் ஆகிவிட்டனர். பக்குவப்படுத்தப்பட்ட முதல் தலைமுறையும் அவர்கள் பக்கம் சார்ந்துவிட்டது.

இந்த பலவித முறைகளினால் ஐ.பி.ஜி ஒரு புதிய மனித வர்க்கத்தையே சிருஷ்டித்துவிட்டது என்று சொல்லலாம். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள்; சட்டத்துக்கு உட்பட்டு நடந்தார்கள்; அவர்களுக்கு எந்தவிதமான குறைகளும் கிடையாது. ஆனால் ஒரு புதிய காரியத்தைத் துவங்கும் தைரியமோ, உற்சாகமோ, திறமையோ, ஆர்வமோ இல்லை. தியாக மனப்பான்மையோ, கற்பனை சக்தியோ, அபாயத்தை எதிர்நோக்கும் துணிவோ அவர்களுக்கு என்னவென்றே தெரியாது. திருப்தியின்மை, பொருள் சேமிக்கும் ஆசை, ஆக்கிரமிப்பு ஆர்வம் எல்லாம் சமுகத்திலிருந்து களைந்தெரியப்பட்டன. வெளிச்சம் இருட்டு, இரண்டு இல்லாத ஒரு மங்கலான வாழ்க்கையில், ஆசை, ஏமாற்றம், இரண்டு இன்றி மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இந்த மாறுதல்கள் எல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் இவைகள் எல்லாம் போதாது என்று ஐ.பி.ஜி.யிலுள்ள தீவிரவாதிகளுக்குத் தோன்றியது. இந்த ‘முன்னேற்றங்கள்’ எல்லாம் வேண்டாதவற்றை ஒதுக்குவதாய் இருந்தனவே தவிர வேண்டிய நல்ல குணங்களை சிருஷ்டி செய்வதாக இல்லை. அவர்கள் சாதாரண மக்களுக்கு இந்த மாறுதல்களில் எல்லாம் நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒரு புதிய மதத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்கள். இதன் காரணமாகத்தான் சர்வ வியாபகமான யதாத்தவாத தத்துவம் (philosophy of Universal Pragmatism P U P) உண்டாக்கப்பட்டது. அதை சுருக்கமாக எல்லோரும் பப் என்றும் அவற்றை போதித்து வந்தவர்களை ‘பப்பிகள்’ என்றும் சொல்வது வழக்கம். அவர்கள் போதித்துவந்த விதிகளுக்கு பப் டிக்ட் என்றும் பெயர் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் ஐ.பி.ஜி.யில் பப்பிகள்தான் முக்கியஸ்தர்களாக திகழ்ந்தார்கள். அவர்களுடைய பப்டிக்ட்கள் சிபாரிசுகளாகவே வெளியிடப்பட்டாலும் அதிகாரிகள் அவைகளை தெய்வீக கட்டளைகளாகவே பாவித்தார்கள். பப் டிக்டுகளின் சில உதாரணங்கள்.

‘லட்சியங்கள் சமூகத்தை குழப்புகின்றன. ஆகையால் எல்லா
லட்சியங்களையும் ரத்து செய்ய வேண்டும்.’

‘உணர்ச்சியே போராட்டத்துக்கு ஆணி வேர். வாழ்க்கையிலிருந்து
அதை அப்புறப்படுத்த வேண்டும்.’

‘நான்’ என்னும் மனப்பான்மை தீங்கு. அதை அடக்க வேண்டும்.

‘தர்க்கவாதம்தான் வாழ்க்கையின் அடிப்படை பப்வாதம்தான்
சிறந்த வாதம்.’

‘தம்மையே தியாகம் செய்பவர்கள் மற்றவர்களையும் தியாகம்
செய்ய தயங்க மாட்டார்கள். எல்லாத் தியாகமும் வீணே.’

‘நியாயம் அநியாயம் இரண்டு சமூக விரோதிகள். இரண்டையும்
களைந்து எறிய வேண்டும்.’

சென்ற நூறு வருடங்களில் ஆயிரக்கணக்கான பப் டிக்ட்டுகள் பல தலைமறை பப்பிகளால் வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் ஒரு சர்வ வியாபகமான பப் டிக்ட் சில வருடங்களுக்கு முன்னால்தான் வெளிவந்தது. அது சுருக்கமாகவும் நேர்த்தியாகவும் இருந்ததைத் தவிர பப் தத்துவத்தை ஒரு மாத்திரை மாதிரி செய்தது.

‘பப்பி அதுக்கும் கூட சுத்தமான அழுக்கு.’

அதாவது, உண்மையான பப்பியாய் இருந்தால் குற்றம் செய்ய முடியாது என்று சொல்லலாம். இதைப் பற்றி பல விளக்கங்கள் போனோ விஷனிலும் மற்ற முறைகளிலும் கொடுக்கப்பட்டன. இதற்குப் பிறகு மற்ற பப் டிக்ட்டுகளுக்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது. இது எங்கு பார்த்தாலும் உள்ளும் வெளியிலும் பிரதிபலித்தது. மக்களின் உள் மனதில் பக்குவப்படுத்தல் மூலமாக ஆணி வைத்து அடித்த மாதிரி பதிக்கப் பெற்றது. மேற்கு கோளத்திலுள்ள சிந்தனையிலும் இது ஒரு நிரந்தர உண்மையாகத் திகழ்ந்தது.

நானும் மேற்கு கோளத்தில் பிறந்து உண்மையான பப்பி தத்துவத்தை பின்பற்றுபவனாக இருந்தும் அதைப் பற்றி எப்படி இவ்வளவு பாகுபாடு செய்து எழுதுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். மேலும் இப் புத்தகத்தை எப்படி பிரசுரிக்கப் போகிறேன், யார் விநியோகம் செய்யப் போகிறார்கள் என்றும் கேட்கலாம். முதல் கேள்விக்கு விடை ரொம்ப சுலபம். நான் சிறு இங்கிலாந்தில் நீலமலை வெள்ளையர்கள் அந்தமாதிரிதான் தம் நாட்டைக் குறிப்பிடுகிறார்கள் - சில காலம் இருந்த பிறகுதான் இந்த வரலாறை எழுத ஆரம்பித்தேன். எனது பக்குவப்படுத்தல் முற்றிலும் தேய்ந்துவிட்டது. இயற்கையான உணர்ச்சிகளும், ஆசைகளும், சிந்தனைகளும் திரும்பிவிட்டன. மேலும் பக்குவப்படுத்தல் என்பது பழைய காலத்தில் அம்மை தடுப்புக்கு ஊசி போடுவது மாதிரி, சிலருக்க கேட்கும் சிலருக்கு கேட்கும் சிலருக்கு கேட்காது. மேலும் அதன் விசை ஆறு மாதங்களுக்குமேல் இருக்காது. நான் இங்கு வந்தபிறகு அந்த மாத்திரைகளை சாப்பிடுவதுகூட நிறுத்திவிட்டேன். மேலும் மேற்கு கோளத்திலும் கூட இம்மாதிரி பக்குவப்படாமல் பலர் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நிரந்தரமாக போதையில் இருப்பதைவிட ரகசியமாக தம் கஷ்டங்களை அனுபவிப்பது மேல் என்று கருதுகிறவர்கள் அவர்கள். ஆனால் அதை வெளியில் காட்டினால் மறுபடியும் பக்குவப்படுத்தும் நிறுவனங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு சித்திரவதைக்கு உட்பட வேண்டும் என்ற எண்ணத்தால் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. அவர்களுக்காகத்தான் இந்த வரலாற்றை எழுதுகிறேன் என்று கூட சொல்லாம். ஆனால் இதை அவர்களுக்கு எப்படி சேர்ப்பது என்னும் பிரச்சனை எழுதி முடிந்ததற்கப்புறம்தான் முடிவு செய்ய வேண்டும்.

************

இந்த அணுகால சரித்திரத்தை ஆரம்பித்த பிறகு, பின்னால் நடந்த விஷயங்களையும் கூறிவிடலாம் என்று கருதுகிறேன். இரண்டு கோளங்களிலும் பிரிவினைக்குப் பிறகு தனிப்பட்ட முன்னேற்றம் நடந்து வந்தது. அணுத் தடங்கல் இருந்ததால் ஒரு கோளத்தில் என்ன நடக்கிறது என்று இன்னொரு கோளத்தினருக்கு பல ஆண்டுகள் தெரியவில்லை. இருந்தாலும், முன்னேற்றங்கள் எல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரிதான் இருந்தன. ஆனால் விண்வெளிப் பிரயாணம் ஆரம்பமான பிறகு இரண்டு கோளத்தவர்களும் சந்திரனில் சந்திக்க ஆரம்பித்தனர். விண்வெளியில் இரு சாராரும் உபகிரணங்களைப் பதிய வைத்தபோது அதைப்பற்றியும், சந்திரனில் குடியேறுவது பற்றியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் அதிலும் தனி முன்னேற்றக் கொள்கைதான் கடைப்பிடிக்கப்பட்டது.

விண்வெளியில் பிரயாணம் செய்பவர்களெல்லாம் ஒரு தனி பக்குவப்படுத்தல் முறைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அப்படியிருந்தும் அவர்கள் நடத்தையை வெளியுலகில் கட்டுப்படுத்துவது அரசுக்கு கஷ்டமாக இருந்தது. ஆனால் திரும்பி வந்தபிறகு விண்வெளி அனுபவம் அவர்களை பாதிக்காமல் இருக்க அவர்கள் ஒரு கிளினிக்கில் சில நாள் தங்க வேண்டும். இம்மாதிரியான முன் எச்சரிக்கைகள் எடுத்தும்கூட இரண்டு கோளங்களிலிருந்து சென்ற விண் பிரயாணிகள் சந்திரனில் சந்தித்து தம் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவர்களைத் தூண்டியது. அ.பி.நூறாம் ஆண்டில் சந்திரனில் குடியேறினவர்களின் முதல் ஜனத்தொகை எண்ணிக்கை எடுக்கப்பட்டபோது கணக்கிலில்லாத பல குழந்தைகள் பிறந்திருந்தது தெரியவந்தது. இயற்கை கருத்தரிப்பு முறையை தடை செய்திருந்தும் கூட இக் குழந்தைகள் பிறந்திருந்தார்கள். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் இக் குழந்தைகள் எல்லோருலமே கிழக்கு – மேற்கு கோள திருமணங்கள் மூலமாக பிறந்தவர்கள். எந்தவிதமான பக்குவப்படுத்தலும் இல்லாமல் இயற்கையாகவே இவர்கள் வாழ்ந்து வளர்ந்து வந்தார்கள். சண்டை பிடிப்பதும், தம் அன்புகளையும் ஆசைகளையும் கூச்சமில்லாமல் வெளிப்படுத்துவம் அவர்களுக்கு சாதாரணமாக இருந்தது. அவர்களிடையே குற்றங்களும் தலையெடுக்க ஆரம்பித்தன.

இந்த நிலைமை இரு அரசாங்கங்களுக்கும் ஒரு சங்கடமான நிலைமையை உண்டாக்கியது. இவ்வுலகைப் பொறுத்தவரையில் சர்வ வியாதுக பக்குவப்படுத்துவதினால் காவல் படைகளும் நீதி

மன்றங்களும் சிறைச்சாலைகளும் பல வருடங்களாக மூடப்பட்டிருந்தன. இக் குழந்தைகளின் பெற்றோரையும் தண்டிக்க முடியவில்லை. தாய் அல்லது தகப்பன் - இருவரில் ஒருவர் - இன்னொரு கோளத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே நிலைமையை அப்படியே விட்டுவிடுவதென்றும் ஆனால் எதிர்காலத்தில் கட்டுப்பாடுகளை தீவிரமாக அமல்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் சந்திர கிரகத்தில் பிறந்த குழந்தைகளை பக்குவப்படுத்துதல் மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர்கள் பக்குவமாகிவிட்டதாக நடித்துவிட்டு வெளியே போனவுடன் குரும்புத்தனமாக நடந்து கொண்டார்கள். இதற்குப் பிறகுதான் மேற்கு கோளத்திலேயே பிறந்தவர்கள் கூட பலர் பக்குவப்படாமல் இருந்தார்கள் என்பதும் தெரிய வந்தது. ஆகவே பக்குவப்படுத்தும் முறைகள் திருத்தி தீவிரமாக்கப்பட்டன. இதன் காரணமாக பலர் உயிர் இழக்கும்படியும் நேரிட்டது.

பிரிவினைக் கொள்கை விண்வெளியிலும் அமல்படுத்தலாமா என்று இரு அரசாங்கங்களும் யோசனை செய்தன. வெளியுலகில் அணு தடங்கலோ திரையோ நிர்மாணிப்பது அவ்வளவு சுலபமல்ல. பிரயாணத்துக்கும் அது தடங்கலாய் இருக்கும். மேலும் இரு அரசாங்கங்களுக்கிடையில் பேச்சு வார்த்தையே இல்லாததினால் ஒன்றும் செய்யவில்லை. விண்வெளி நாளாவட்டத்தில் இரு தரப்பிலும் உள்ள தைரியசாலிகளுக்கு ஒரு ரகசிய சந்திப்பு இடமாக ஏற்பட்டது. இரு அரசாங்கங்களும் ஒருவர் மேல் ஒருவர் உளவு பார்க்கவும் இது உதவியாக இருந்தது. நாளாவட்டத்தில் இரு அரசாங்கங்களும் இரு கோள திருமணங்களை அதிகார பூர்வமாக அங்கீகரிக்காவிட்டாலும் அவற்றை தடுக்கவில்லை. கணவன் மனைவிமார்களும் அவர்களுடைய குழந்தைகளும் தனிப்பட்ட முறையில் விண்வெளி மார்க்கமாக ஒரு கோளத்திலிருந்து இன்னொரு கோளத்துக்குச் செல்ல ஆரம்பித்தனர். இதற்கு விண்வெளி விமானிகளும் உடந்தை. இதைப்பற்றியெல்லாம் அக்காலத்திய ரகசிய தஸ்தாவேஜுகளில் நிறைய புள்ளி விவரங்கள் உள்ளன.

கடைசியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பக்குவப்படுத்தல் அத்தாட்சி, விண்வெளிப் பிரயான அத்தாட்சி, பிறந்தபொழுது இட்ட குறி முதலியவற்றைக் கொண்டு விண்வெளியில் - முக்கியமான சந்திரனில் - பிறந்தவர்களையும் அவர்களுடைய குழந்தைகளையும் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் இந்த தீவிர கண்காணிப்பினால் விண்வெளிக்காரருக்கு மட்டுமின்றி எல்லோருக்குமே கவலையும் அமைதியின்மையும் ஏற்பட்டது. இதே நிலைமைதான் கிழக்கு கோளத்திலும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இரு அரசுகளும் தங்கள் உளவாளிகள் மூலமாக விண்வெளியில் இந்தப் பிரச்சனையைப் பற்றி ஒரு ரகசிய கூட்டம் நடத்தினார்கள். அந்த கூட்டத்தில் ஒரு கோளத்திலிருந்து இன்னொரு கோளத்துக்குப் போக பாஸ்போர்ட் வசதிகளும், விண்வெளியில் பிறந்த குழந்தைகளைப் பதிவு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இந்த வசதிகள் இரு கோள மணம் செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே கிடைத்தது. எதிர்காலத்தில் அம்மாதிரி திருமணம் செய்துகொண்டவர்கள் குழந்தைகள் பெறக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட இருதர ஜன கட்டுப்பாடு அதிகாரிகள் நண்பர்கள் ஆனார்கள். ஆகவே அவர்கள் ஏதோ காரணங்களை வைத்துக்கொண்டு அடிக்கடி சந்தித்தார்கள். இந்த உறவினால் இரு கோளங்களிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பற்றி ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் பக்குவப்படுத்தல் முறைகளால் போராட்ட மனப்பான்மை மாறி ஒத்துழைப்பு மனப்பான்மை வேரூன்றி இருப்பதையும் இரு தரப்பினரும் அறிந்து கொண்டனர். இரு கோளங்களும் ஒன்றுபட வாய்ப்பு இருப்பதும் தெரியவந்தது. இருந்தாலும் மேலும் சில ஆண்டுகள் இரு சாராரும் தயங்கினார்கள். பிறகு போக்குவரத்துக்கு வசதியாக இருக்க அணு திரையில் சில வழிகள் விடப்பட்டன. ஒரு கோளத்தில் இருந்த இன்னொரு கோளத்துக்குப் போக விண்வெளிக்குச் செல்ல வேண்டி இருக்கவில்லை. பிறகு இரு கோளங்களுக்கும் வியாபாரம் துவங்கியது. செலவாணி நாணயங்கள் ஒன்றாக்கப்பட்டன. விஞ்ஞானம், கலை துறைகளில் நிபுணர் குழுக்களை மாற்றிக்கொண்டனர். கடைசியாக சில வருடங்களுக்கு முன்பு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட அணு திரையும் விலக்கப்பட்டது.

இதற்கு பிறகுதான் ‘சிறு இங்கிலாந்தில்’ வசிக்கும் வெள்ளையர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள நான் நீலமலைக்கு வந்தேன். எனது பிரச்சனைகளும் ஆரம்பமாயின.

## அத்தியாயம் மூன்று

ஹோவர்காப்டர் ஒரு திறந்த புல்வெளியில் இறங்கியது. அது ஒன்றுதான் சமபூமி என்று சொல்லலாம். சுற்றிலும் பசுமையான குன்றுகள். அ.மு. காலத்தில் அதற்கு பந்தைய மைதானம் பெயர் என்றும், எந்தன் குதிரை வேகமாக ஓடும் என்று சோதிப்பதற்காக அது உபயோகிக்கப்பட்டு வந்ததென்றும் பின்னால் தெரிந்து கொண்டேன். எந்தக் குதிரை வேகமாக ஓடும் என்னும் அபிப்பிராயத்தை ஒவ்வொருவரும் தம் பணம் கட்டி ஊர்ஜிதப்படுத்துவர். அப்படி ஊர்ஜிதமானால் அதிக பணம் கிடைக்கும். அவர்களுடைய அபிப்பிராயம் தப்பானால் கொடுத்த பணம் போய்விடும். இது ஒரு கேளிக்கையாக கருதப்பட்டு வந்தது. நானும் ச்சக்கும் வாகனத்தில் இருந்து இறங்கினோம்.

அங்கே சுமார் ஆயிரம் பேர் கூடியிருந்தனர். எல்லோருக்கும் அ.மு. ஆடைகளில் இருந்தனர். எல்லாம் நிலத்தில் விளைந்த பஞ்சிலிருந்தும் ஆட்டு ரோமங்களிலிருந்தும் செய்யப்பட்ட ஆடைகள். எல்லோரும் மகிழ்ச்சியுடன் எங்களை எதிர்பார்ப்பதாக தெரிந்தது. நாங்கள் இறங்கும்போது இருந்த ஆரவாரமும் சிரிப்பும் அடங்கி நிம்மதி குடிகொண்டது.

அந்த நீலமலை சுற்றப்புரத்தில் உள்ள வாயுவிலும் இளம் வெய்யலிலும் நான் பிரவேசித்ததும் சிறு காற்று என் முகத்தில் வீசியது. அந்த வெய்யலும், மந்த மாருதமும் எனக்கு ஒரு புதுவிதமான எழுச்சியைத் தந்தது. முதலில் அது அர்த்தமாகவில்லை. வெளி சூழ்நிலைக்கு நான் வந்திருந்தது இதுதான் முதல் தடவை. புதிய உணர்ச்சிகளை அது கிளப்பிவிட்டது. என் மனத்தில் ஒரு உற்சாகமும் கவலையும் சேர்ந்து தோன்றின. இக்கால அ.பி. மொழிகளில் இந்த உணர்ச்சிகளை விவரிக்க தகுதியான வார்த்தைகளே இல்லை. ‘‘நீங்கள் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறீர்கள். சிறுது காலத்தில் சரியாகிவிடும்,’’ என்று ச்சக் முணு முணுத்தார்.

அப்பொழுது அங்கு கூடியிருந்த கூட்டத்திலிருந்து பிரிந்து ஒரு மனிதர் எங்களிடம் வந்துகொண்டிருந்தார். கையில் ஒரு மலர்களாலான வளையத்தை வைத்திருந்தார். அவர் பக்கத்துக்கு வரவர அவரது முகத்தைக் கண்டு நான் கொஞ்சம் ஆச்சரியப்பட்டேன். ஆங்கிலேயர் என்றால் வெண்மை நிறமாக இருப்பார்கள். தலைமயிர் பழுப்பாகவோ அல்லது வெண்மை (Blond) யாகவோ இருக்கும். ஆனால் அவர் முகமே பழுப்பு நிறமாகத்தான் இருந்தது. தலைமயிர் மட்டும் கொஞ்சம் செம்பட்டை நிறமாக காட்சி அளித்தது. அவர் நெற்றியில் ஒரு சிலுவை (Cross) அச்சடித்தமாதிரி படிந்திருந்தது. பக்கத்துக்கு வந்து அவர் சிறிது தயங்கினார். யார் இங்கிலாந்தில் இருந்து வந்தவர் என்ற சந்தேகம் போலும். பிறகு எனது வெள்ளை முகத்தைக்கண்டு நேராக என்னிடம் வந்தார்.

‘‘சிறு இங்கிலாந்து மக்களின் சார்பில், மாட்சிமை தாங்கிய நமது சக்கரவர்த்தியின் தூதுவரை நான் மகிழ்வோடு வரவேற்கிறேன்’’ என்று சொல்லி அந்த மலர் வளையத்தை என் கழுத்தில் மாட்டினார்.

நல்லவேளையாக எனக்கு அ.மு. காலத்திய சரித்திரம் நன்றாக தெரியும். ஆனால் அரசாங்கத்தின் பிரதிநிதி என்னும் முறையில் நான் வரவில்லை என்று சொல்ல எத்தனித்தேன். ஆனால் ச்சக் அதை யூகித்து என்னை கொஞ்சம் நோண்டினார். நான் ஒன்றும் பேசவில்லை. பழைய கால வழக்கப்படி இருவரும் கை குலுக்கினோம்.

‘‘தங்களுடைய பெயர் சொல்ல முடியுமா? ’’ என்று கேட்டேன்.

‘‘நான்தான் சர் வின்ஸ்டன் பால்டுவின் சிறு இங்கிலாந்தின் பிரதம மந்திரி. தங்களுடைய நாமதேயம்? ’’

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ‘சர்’ ‘லார்ட்’ என்னும் பட்டங்கள் அ.பி. ஐம்பதாம் ஆண்டிலேயே ரத்து செய்யப்பட்டன. மேற்கு கோள சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு நம்பர்தான் இருக்கும். பெயர்கள் இருந்தாலும் அவைகளுக்கு அதிகாரபூர்வமாக அனுமதி கிடையாது. ‘நான்’ என்னும் அகம்பாவத்தைப் போக்கடிக்கத்தான் இந்த வழி கையாளப்பட்டது. என்னைப் பொருத்தவரையில் என் அடையாளச் சீட்டில் GB 145 APNH 628 என்று இருந்தது. GB என்றால்

கிரேட் பிரிட்டன். A லண்டனைக் குறிக்கும். PNH பிரி நியுக்கிளியர் ஹிஸ்டரி, 628 தான் நான். ஆனால் என் சில நண்பர்கள் சில சமயங்களில் 'ஜியார்ஜ்' என்று அழைப்பது வழக்கம்.

''என் பெயர் 'ஜியார்ஜ் ஸ்மித்' '' என்று பதிலளித்தேன்.

சிறு இங்கிலாந்தின் பிரதமர் ஆச்சரியப்பட்டார். ''மாட்சிமை தாங்கிய ஆங்கில அரசின் தனித் தூதுவர் அவ்வளவு சாதாரணமான பெயருடனேயா இருப்பார்! இங்கேயும் ஸ்மித்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிளேக்ஸ்மித் ஆகவோ அல்லது கோல்ட்ஸ்மித் ஆகவோதான் இருக்கிறார்கள்.''

அவர் பேசுவது எனக்கு அர்த்தமாகவில்லை. நான் ச்சக்கை கவனித்தேன். அவர், நீங்கள் இவரை 'ஸ்மித்சோனியன்' என்று சொல்லலாம்,'' என்றார்.

''இதில் ஏதோ ஒரு சிறிய பிசகு இருக்க வேண்டும்,'' என்றார் பிரதமர், ''ஆதியில் உங்கள் பெயர் 'சோனியன் - ஸ்மித்' என்று இருந்திருக்க வேண்டும். உயர் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு எப்பொழுதும் அம்மாதிரி இரட்டைப் பெயர்கள் இருக்கும். எனது மூதாதை ஒருவருக்கு சஸ்ஸக்சில் ஒரு சோனியன் - ஸ்மித்தைத் தெரியும். அது ஒரு பெருமைக்குரிய பெயர். நாங்கள் உங்களை இனிமேல் சர். ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் என்றுதான் அழைக்கப் போகிறோம். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''

நான் யோசனை செய்தேன். அவர் 'சர்' பட்டம் வைத்துக்கொண்டால் நான் ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? பப்பின் தத்துவமே அதுதானே. எப்படி இருந்தாலும் 'என் பெயர் 145 628' என்று ஒரு பழைய கால நம்பர் மாதரி சொல்வதை விட இது ரொம்ப பரவாயில்லை.

''உமது நண்பர்….. அவருடைய பெயர்?'' பிரதமர் ச்சக்கைப் பற்றி விசாரித்தார்.

''நான் ச்சக்கரவர்த்தி'. நீங்கள் என்னை 'ச்சக்' என்று கூப்பிடலாம்.''

''ஆ! நீங்கள் கடைசி ஆங்கில வைசராயாக இருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியினுடைய வாரிசு இல்லையா? '' என்றார் பிரதமர்.

''நான் சீக்கிரம் திரும்ப வேண்டும்'' என்றார் ச்சக். பிறகு என்னைப் பார்த்து ''உமக்கு ஏதாவது உதவி வேண்டியிருந்தால் அல்லது உமது வேலை இங்கே முடிந்தால் என்னுடன் தொடர்பு கொள்ளவும்,'' என்று சொல்லிவிட்டு கை குலுக்கிவிட்டுப் போய்விட்டார். எனது நாட்டவர், உறவினர் என்று சொல்லிக் கொள்ளும் மக்களுக்கிடையே நான் தனியன் ஆனேன்.

''நம் சடங்குகளை ஆரம்பிக்கலாமல்லவா?'' என்றார் சர் வின்ஸ்டன். பழைய காலத்தில் அப்படித்தான் பட்டமுள்ளவர்களைக் கூப்பிடுவது வழக்கம்.

''ஆம்'' என்றேன். ஆனால் என்ன சடங்குகள் என்று எனக்குத் தெரியவில்லை.

நாங்கள் அங்கு கட்டப்பட்டிருந்த ஒரு மேடைக்குச் சென்றோம். அதன் மேல் ரொம்ப தேய்ந்த பழைய கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது.

''இந்த கம்பளம் அரசு இல்லத்திற்கு சொந்தமானது. கடைசி ஆங்கில கவர்னர் சர் ஆர்சிபால்ட் நாய்தான் இதை கடைசியாக உபயோகித்தவர். ஆகவே இந்தக் கம்பளத்தின் மீது சிறு இங்கிலாந்தில் உள்ள எல்லோருக்குமே ஒரு தனி மனக்கிளர்ச்சி உண்டு. உங்கள் வருகைக்காக இதை இன்று இங்கு விரித்திருக்கிறோம்,'' பிறகு பிரதமர் தம் பேச்சை ஆரம்பித்தார்.

''இங்கு கூடியுள்ள பிரபுக்களே, பெரியோர்களே, தாய்மார்களே,

சிறு இங்கிலாந்தின் மக்கள் சார்பிலும் அரசாங்கத்தின் சார்பிலும், நம்மிடையே வந்திருக்கும் மாட்சிமை தாங்கிய ஆங்கில அரசாங்கத்தின் தூதுவரை நான் மனதார வரவேற்கிறேன். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாள். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு நாம் இங்கு பலாத்காரமாக குடியேற்றப்பட்டு இந்த நீலமலைகளில் அடைக்கப்பட்டோம். அப்பொழுதிருந்து இந்த நாளை நாம் எதிர்பார்த்து வந்திருக்கிறோம். நம் தாய் நாடோடு ஐக்கியமாகும் புனித

நாள் சீக்கிரம் வந்துவிடும். நமது நூற்றைம்பது ஆண்டுகளின் அபிலாட்சைகள் பூர்த்தியடையும் என்பதற்கு அடையாளமாகத்தான் சர் ஜியார்ஜ் சோனியன் ஸ்மித் தூதுவராக வந்திருக்கிறார். இந்த பெரிய ராஜ தந்திர வெற்றிக்கு எனது அரசாங்கம் பெருமைப்படுகிறது......''

இப்படியே அவர் சுமார் பத்து நிமிடங்கள் பேசினார். பிறகு,

''ஆகவே நமது தாய் நாட்டிலிருந்து வந்திருக்கும் தூதுவரை வருக! வருக! என வரவேற்கின்றேன். நமது பிரச்சனைகளைப் பற்றியும் கஷ்டங்களைப் பற்றியும் அவர் நன்றாக அறிந்து ஆங்கில சாம்ராஜ்ய அரசுடன் சொல்வார் என்பதில் சந்தேகமில்லை. நம் சரித்திரத்தில் இவர் வருகையினால் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நாம் எல்லோரும் அவரை ஆரவாரத்துடன் வரவேற்போமாக.''

எல்லோரும் எழுத்து நின்று கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. மேற்கு கோளத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களைப் பற்றி இவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பது தெளிவாய் இருந்தது. ஆனால் அவற்றைப் பற்றி இப்போது பேசுவது அவ்வளவு உகந்ததாகத் தெரியவில்லை. அது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருக்கும். ஆகவே நானும் 'மாட்சிமை தாங்கிய ஆங்கில அரசின்' தூதுவராக நடந்து கொள்ள முடிவு செய்தேன். அதுதான் 'பப்' தத்துவத்தின் வழி. நான் எழுந்து நின்று பேச ஆரம்பித்ததும் கூட்டத்தில் அமைதி நிலவியது.

'பெரியோர்களே, தாய்மார்களே

நான் உம்மிடையே வந்து இருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் இங்கு இருக்கும்போது உங்கள் வாழ்கையைப் பற்றியும் பிரச்சனைகளைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றைப் பற்றியும் உங்களுடன் விவாதிக்க விரும்புகிறேன். உங்களுக்கும் இங்கிலாந்துக்கும் ஒரு நிரந்திர தொடர்பு ஏற்படுத்துவதைப் பற்றியும் நான் யோசனை செய்து வருகிறேன். எனக்கு அளித்த வரவேற்புக்காகவும் என் மேல் வைக்கும் அன்பிற்காகவும் உங்களுக்கும், உங்கள் பிரதமருக்கும் எனது ஆழ்ந்த நன்றி''.

நான் பேசி முடித்தவுடன் கரகோஷமும் ஆரவாரமும் ஒலித்தன. பப்பின் பெரிய தத்துவவாதி கூட இதைவிட நல்ல ராஜதந்திர முறையில் பேசியிருக்க முடியாது என்று என் மனம் பூரித்தது.

பிறகு எனக்கு ராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. சிறு இங்கிலாந்தின் சிப்பாய்கள் நீண்ட, உறுவிய கத்திகளுடன் வரிசையாக நின்று எனக்கு மரியாதை செலுத்தினார்கள். இந்த புராதன வழக்கங்கள் எல்லாம் இப்போது மேற்கு கோளத்தில் இல்லாவிட்டாலும் எனது சரித்திர அறிவினால் இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள முடிந்தது.

பிறகு நானும் பிரதமர் சர் வின்ஸ்டனும் நாட்டின் முக்கியஸ்தர்கள் கூடியிருந்த ஒரு கூடாரத்துக்குப் போனோம். பலருக்கு நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். டீ என்னும் பானம் எல்லோருக்கும் வழக்கப்பட்டது. அதை சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது ஒரு மனிதர் என்னை கிழக்கு – மேற்கு கோள உறவைப் பற்றியும், இந்த நூற்றைம்பது வருடங்களில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றியும் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தார். நான் சுருக்கமாக எந்த விதத்திலும் பிடி கொடாமல் பதிலளித்தேன். ஆனால் அவர் விடுவதாய் இல்லை.

''சர் ஜியார்ஜ்! இங்கிலாந்தில் குடியரசா அல்லது இன்னும் முடி அரசு இருக்கிறதா? இது ஒரு சுலபமான கேள்விதானே. இதற்காவது பதில் சொல்லக் கூடாதா?''

''மிஸ்டர் ஷா தான் இந்த ஊர் பத்திரிக்கை ஆசிரியர்.'' சர் வின்ஸ்டன் விளக்கம் தந்தார்.

''முடியரசு மூன்றாம் சார்லஸ்சுக்குப் பிறகு ரத்து செய்யப்பட்டது'' என்றேன்.

‘‘எனக்கு சரித்திரம் தெரிந்தவரையில் அரசர்தான் இங்கிலாந்தில் பட்டங்கள் வழங்குவது வழக்கம். முடியரசு ரத்து செய்யப்பட்டபோது பட்டங்களும் ரத்தாகியிருக்குமே. அப்படியென்றால் உங்களுக்கு எப்படி ‘சர்’ பட்டம் வந்தது?

இது ஒரு சங்கடமான நிலைமையாக இருந்தது. இருந்தாலும் பப் என் உதவிக்கு வந்தது.

‘‘சிறு இங்கிலாந்து ஒரு முடியரசா?’’என்று திருப்பிக் கேட்டேன்.

‘‘இல்லை’’

‘‘அப்படியென்றால் உங்கள் பிரதம மந்திரி எப்படி ‘சர்’ பட்டம் பெற்றார்?

பத்திரிக்கை ஆசிரியர் ஷாவுக்கு மேலும் என்ன கேட்பது என்று தெரியவில்லை சும்மா இருந்துவிட்டார். எனது மேலதிகாரிகள் மட்டும் நான் நிலைமையை எப்படி சமாளித்தேன் என்று தெரிந்துகொண்டால் எனக்கு இன்னும் பொறுப்பான வேலைகளைக் கொடுப்பார்கள். ஆனால் பாராட்ட மாட்டார்கள். அது பப் தத்துவத்திற்கு விரோதம். இருந்தாலும் நான் கொஞ்சம் பெருமைப்பட்டேன்.

எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு முடிந்த பிறகு நான் ‘மோட்டார் கார்’ என்னும் ஒரு வாகனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அந்த வாகனத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால் அது நான்கு குதிரைகளால் இழுக்கப்பட்டது. நானும் பிரதமர் சர் வின்ஸ்டனும் அதில் ஏறிக் கொண்டோம். வண்டி ஒரு செங்குத்தான பாதையில் நகர ஆரம்பித்தது. பாதையின் இரு பக்கங்களிலும் நின்று கொண்டிருந்த ஜனங்கள் ‘யூனியன் ஜாக்’ என்னும் கொடியை – அ.மு. இங்கிலாந்துக்கு அதுதான் ராஜ்ய சின்னமாய் இருந்தது – ஆட்டி என்னை வரவேற்றார்கள். இதுவரையில் நான் பார்த்த எல்லோருமே தம் நெற்றிகளில் ஒரு சிலுவையை அணிந்திருந்தார்கள். ஆண்கள் வைத்திருந்த சிலுவைகள் எல்லாம் கருப்பாக இருந்தன. ஆனால் பெண்கள் அவைகளை பல நிறங்களில் அணிந்திருந்தார்கள். சமயம் கிடைத்த போது இதற்கு காரணம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் முடிவு செய்தேன்.

பத்து நிமிடத்துக்குப் பிறகு நாங்கள் ஒரு பழைய கட்டிட நுழை வாயிலுக்குள் சென்றோம். அந்த மூலையில் சிலர் நின்றுகொண்டு கருப்புக் கொடிகளை ஆட்டினார்கள். ‘ஏகாதிபத்தியவாதியே திரும்பிப்போ!’ என்றும் ‘இந்தியாவுடன் இணை!’ என்னும் கோஷங்களை எழுப்பினார்கள்.

சர் வின்ஸ்டன் கொஞ்சம் சங்கடப்பட்டார். ‘‘ஜனநாயகத்தின் தன்மைகளில் இதுவும் ஒன்று. ஒரு சிறு பகுதியினர் இந்த நாடு இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் கூச்சல் போட்டும் கூட்டம் போட்டும் தம் அபிப்பிராயங்களை மற்றவர்கள் மேல் திணிக்கப் பார்க்கிறார்கள்.’’

அவர் மிகவும் உணர்ச்சியால் பாதிக்கப்படுவதாக தெரிந்தது. இம்மாதிரியான மனக் கவலையோ பிரச்சனைகளோ மேற்கு கோளத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக கிடையாது. அவருடைய கஷ்டத்தைப் பார்க்க எனக்கும் எப்படியோ இருந்தது. இதற்குத்தான் ‘பரிவு’ ‘அனுதாபம்’ என்னும் பெயர்களோ, எனக்குத் தெரியாத உள் மனத்திலிருந்த இந்த வார்த்தைகள் வெளிவந்தன.

சர் வின்ஸ்டன் மீண்டும் பேசலானார். ‘‘நீங்கள் மன்னிக்க வேண்டும். இதைப்பற்றி நான் ரொம்ப உறுதியோடு இருக்கிறேன். நீங்கள் வந்த முதல் நாளே இதைப்பற்றி உங்களுடன் விவாதிக்க விரும்பவில்லை. இங்கிலாந்து எங்கள் தாய் நாடானாலும் ஒரு வெளி நாடானதினால் இந்தப் பிரச்சனைக்கு நீங்கள் ஒரு பக்கமும் சேராமல் இருப்பது நல்லது.’’

‘‘உங்களுடைய எல்லா பிரச்சனைகளைப் பற்றியும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்’’ என்று நான் பதிலளித்தேன்.

‘‘அதற்கு உங்களுக்கு நிறைய சமய சந்தர்ப்பங்கள் இருக்கும்.’’ எனது பதில் அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. ‘‘உங்களை கவுரவிக்கவும் எங்கள் வாழ்க்கையை உங்களுக்கு அறிமுகப்படுத்தவும் பல நிகழ்ச்சிகளை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கள் சமூகம், பண்பாடு எல்லாவற்றையும் அறிந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்பு இருக்கும்.’’

‘‘ஹேம்டன் கோர்ட் என்னும் மாளிகையை உங்கள் விடுதியாக ஏற்பாடு செய்திருக்கிறோம்’’ என்று மேலும் சொன்னார் சர் வின்ஸ்டன், பக்கிங்ஹாம் பேலசை விட அது சவுகரியமாக இருக்கும். உங்களை சந்திக்க விரும்புவோர்களை பார்ப்பதற்கும் அது வசதியாக இருக்கும். நீங்கள் இங்கே இருக்கும் வரையில் அரசாங்க விருந்தினராக இருப்பீர்கள்.’’

‘‘பக்கிங்ஹாம் பேலசா? ’’ என்று நாள் சந்தேகத்துடன் கேட்டேன்.

‘‘பெரிய பிரிவினைக்குப் பின்பு, இங்கிலாந்து எங்களை அலட்சியமாக ஒதுக்கிவிட்டாலும் எங்களுக்கு நாட்டுப் பற்று அதிகம் உண்டு.’’ அவர் மனம்விட்டுப்பேசினார். ‘‘ஆகவே நாங்கள் இங்கு ஒரு ஜனநாயக அரசு ஏற்படுத்திய உடனே ஆங்கில ஸ்தாபனங்களையும் ஆங்கில பண்பாட்டையும் நிரந்தரமாக பாதுகாக்க விரும்பினோம். ஆகவே இங்குள்ள கட்டிடங்கள், சாலைகள், ஸ்தாபனங்கள், எல்லாவற்றிற்கும் ஆங்கில பெயர் சூட்டினோம். எங்கள் தனி வாழ்விலும் பொது நடவடிக்கைகளிலும் ஆங்கில முறைகளையே கையாண்டோம். நீலமலைகள் கிரேட் பிரிட்டனுக்கு பதிலாக சிறு இங்கிலாந்து ஆகிவிட்டது. இங்கேயும் ஹவுஸ் ஆப் லார்ட்டும் ஹவுஸ் ஆப் காமன்னும் இருக்கின்றன. ராஜ்பவன் பக்கிங்ஹாம் பேலஸ் ஆயிற்று. டைனிங் ஸ்ட்ரீட்டும் ஒயட் ஹாலும் இங்கேயும் உண்டு. ஆனால் லண்டன் நகர் பூகோளத்துக்கும் எங்கள் பூகோளத்துக்கு ரொம்ப மாறுதல்கள் இருக்கும். நாங்கள் எங்கள் அரசாங்கத்தை ஒரு முடியரசாகவே கருதுகிறோம். ஆனால் அரசர் நிரந்தரமாக வெளிநாட்டில் இருப்பதால் நாங்கள் ஒரு வைஸ்ராயை நியமித்திருக்கிறோம். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது எங்களுக்கு நாம் தாய் நாட்டில்தான் இருக்கிறோம், தொடர்பு விட்டுப் போகவில்லையென்னும் ஓர் உணர்ச்சி பிறக்கிறது.’’

இன்றைய லண்டனை இவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று எனக்குப் பட்டது.

நாங்கள் ஹேம்டன் கோர்ட் மாளிகையில் போர்டிகோவை அடைந்தோம். அங்கு ஆறு வேலையாட்கள் வரிசையாக நின்று எனக்கு வணக்கம் தெரிவித்தார்கள். சர் வின்ஸ்டன் சமிக்கை செய்ததும் அவர்களில் ஒருவன் முன்னால் வந்தான்.

‘‘நான் பட்லர் சார், உங்களுக்கு சேவை செய்வதுதான் என் கடமை’’ என்றான். பிறகு எனது சாமான்களை காரிலிருந்து உள்ளே கொண்டுவந்தான். நானும் சர் வின்ஸ்டனும் கொஞ்சம் நன்றாக இருந்த இரு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டோம். மற்ற நாற்காலிகளெல்லாம் சாய்ந்தும் வளைந்தும் இருந்தன.

‘‘நீங்கள் கொஞ்சம் ஒய்வெடுத்துக்கொள்ளுங்கள். அதிகாரபூர்வமான சந்திப்புகளெல்லாம் நாளையிலிருந்து ஆரம்பமாகும். இந்த அரண்மனையில் லண்டன் நகரத்து நவீனங்கள் இல்லாவிட்டாலும் நீங்கள் இருப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். வேறு ஏதாவது வேண்டியிருக்குமா?’’ என்று சர் வின்ஸ்டன் பரிவோடு கேட்டார்.

‘‘உங்களுக்கும் இங்கிலாந்துக்கும் நூற்றைம்பது ஆண்டுகளாக தொடர்பு இல்லை. உங்களுடைய சரித்திரத்தைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும் எனக்கு ஒன்றுமே தெரியாது. மற்றவர்களை சந்திக்கும்போது எனது அறிவீனத்தை வெளிப்படுத்தினால் நன்றாய் இருக்காது. அதனால் யாராவது எனக்கு உங்கள் ஐந்து தலைமுறை சரித்திரத்தைப்பற்றியும் இங்கு நான் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றியும் சொல்லிவைத்தால் சவுகரியமாய் இருக்கும். இதை நீங்கள் ஏற்பாடு செய்ய முடியுமா?’’ என்று கேட்டேன்.

‘‘மாண்புமிக்க வெளிநாட்டுத் தூதுவர் என்னும் அந்தஸ்த்துக்கு நீங்கள் இதற்காக ஒரு நூல் நிலையத்துக்கோ அல்லது மியூசியத்துக்கோ போகக்கூடாது. எங்கள் கலைக்கூடத்தின் கியூரேடரை உங்களுக்கு துணை அமைச்சராக (Minister in waiting) நான் நியமித்திருக்கிறேன். ஆகவே அவர் உம்மிடமே இருந்து உங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிப்பார். அதே சமயத்தில் சிறு இங்கிலாந்திலிருக்கும் நாங்களும் தாய் நாட்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறோம். எங்களை ரொம்ப நாள் காக்க வைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.’’

‘‘நீங்கள் சொல்வது ரொம்ப சரி,’’ என்று நான் ஆமோதித்தேன்.

“நாளைக்கு உங்கள் முதல் பணி நாட்டுக்கு தம் ஆயுளை அர்ப்பணம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல். பிறகு பார்லிமெண்ட் சபைகளின் கூட்டு கூட்டத்தில் பேச வேண்டும்.”

“பார்லிமெண்ட் கூட்டத்தில் பேசுவதைக் கொஞ்சம் தள்ளி வைக்கலாமே,” என்றேன். “இந்த நாட்டைப் பற்றி நான் கொஞ்சம் அறிந்து கொண்டால், பிறகு நன்றாக பிரச்சனைகளையும் மனதில் வைத்துக்கொண்டு பேசலாம்.”

“சரி” என்றார் சர் வின்ஸ்டன். “எதிர் கட்சிக்காரர்களிடம் நீங்கள் பேசப் போவதாக அறிவித்திருக்கிறேன். இப்போது நீங்கள் பேசாவிட்டால் நான் ஏதோ உங்களுடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்துவதாக குற்றம் சாட்டுவார்கள். இருந்தாலும் அதை எப்படி சமாளிப்பது என்று எனக்குத் தெரியும். ஆனால் உங்கள் வருகையை முன்னிட்டு பல விழாக்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். அவற்றில் நீங்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.”

“ரொம்ப சந்தோஷம். நான் கண்டிப்பாக கலந்து கொள்வேன்” என்றேன். “நான் இங்கு வந்திருப்பதே அதற்காகத்தானே.”

“சரி நான் விடைபெறுகிறேன்,” என்று சர் வின்ஸ்டன், எழுந்தார். “உமக்கு வேண்டிய எல்லாவற்றையும் பட்லர் கவனித்துக் கொள்வான்,” என்று சொல்லிவிட்டு சிறு இங்கிலாந்தின் பிரதமர் விடைபெற்றார்.

-------------------------------

## அத்தியாயம் நான்கு

இப்பொழுது என் சூழ்நிலையை கவனிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அ.மு. சரித்திர நிபுணன் என்பதால் எனக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய கட்டிட நிர்மாணிப்பைப் பற்றி கொஞ்சம் தெரியும். நான் இருந்த கட்டிடம் அந்த பாணியில் நிர்மாணிக்கப்பட்டது. உயர்ந்த தூண்களும் கட்டிடத்தின் மூன்று புறங்களிலும் வெராண்டாவும் இருந்தன. மிகவும் பழைய கட்டிடம், அதுவும் பல வருடங்களுக்கு பழுது பார்க்கப்படாத கட்டிடமானதால் பல இடங்களில் சுண்ணாம்புகூட இல்லாமல் பொரிந்து விழுந்து கொண்டிருப்பதாக தோன்றியது. பிரம்பு நாற்காலிகளெல்லாம் ரிப்பேர் செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. உள்ளே ஹாலில் பழைய கால மிருகங்களின் தலைகள் சுவர்கள் மீது மாட்டப்பட்டிருந்தன. ஜன்னல்களில் பல இடங்களில் கண்ணாடிகள் இல்லாமல் அட்டைகளால் அடைக்கப்பட்டிருந்தன. சோபாக்களும் தொங்கவிடப்பட்ட திரைகளும் மிகுந்த அழுக்குபட்டு கவனிப்பார் இல்லாததுபோல் தோன்றியது.

பட்லர் மறுபடியும் வந்து எனக்கு பேச்சுக் கொடுத்தான். ''நான் உங்களுடைய சவுகரியத்துக்காகத்தான் இங்கே இருக்கிறேன் சார். ஏதாவது வேண்டியிருந்தால் என்னைக் கூப்பிடுங்கள்,'' என்று சொன்னான்.

அவனை நான் சிநேகம் செய்துகொள்ள விரும்பினேன். இரு சமூகத்தினுடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதனுடைய வேலையாட்கள் மூலம் உண்மையை வெகு சுலபமாக தெரிந்து கொள்ளலாம் என்று சரித்திரத்தில் படித்திருக்கிறேன்.

''உன் பெயர் என்னப்பா? '' என்று கேட்டேன்.

''பட்லர் சார்.''

''அது உன் பெயரா அல்லது உன் தொழிலா?''

''இரண்டும்தான் சார். நான் பட்லர் தொழில் செய்கிறேன். அதனால் என் பெயரும் பட்லர்.''

''இது கொஞ்சம் புதுமையாய் இருக்கிறதே!'' என்று வியந்தேன்.

''இல்லை சார். இது புதுமை இல்லை. ரொம்ப பழைய கால வழக்கம். நான் பட்லர் வேலை செய்வதனால் பட்லர். தச்சு வேலை செய்பவனாய் இருந்தால் என் பெயர் 'தச்சன்' ஆக இருக்கும்.

இது ஒரு குழப்பமான பிரச்சனையாய் தோன்றியது. ஆனால் அதோடு விட்டுவிட்டேன். சூரியன் கீழே இறங்கி நிழல்கள் நீள ஆரம்பித்தன. சில நிமிடங்கள் தோட்டத்தை சுற்றிப் பார்த்தேன். கட்டிடம் எப்படியிருந்தாலும் தோட்டம் மிக்க அழகாக தென்பட்டது. நீண்ட புல் தரைகளும், பூபாத்திகளும், உயர்ந்த மரங்களும் மிகவும் நேர்த்தியாக காணப்பட்டன. அந்த மரங்களின் உயரத்தைப் பார்த்தால் அவைகள் அ.மு. காலத்தில் நாட்டப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் எனக்கு அப் பூக்களின் பெயர்களோ மரங்களின் பெயர்களோ தெரியாது. அ.மு. காலத்திய சரித்திரத்தைவிட வேறொன்றுமே தெரியாதென்று சொல்லலாம். மெல்ல வீசிய காற்று கொஞ்சம் குளிராகத் தோன்றியது. ஆயுள் பூராவும் செயற்கைக் காற்றில் பிறந்து வளர்ந்தவனுக்கு இதெல்லாம் பெரிய மாறுதல்கள். மிகவும் அசாதாரணமாக இருந்தது. அம்மாதிரி செயற்கை சூழ்நிலையில் வாழ்ந்தவர்களுக்கு இயற்கை சீதோஷ்ண ஸ்திதி மாறுதல்கள் மிக கெடுதல் என்றும் அதற்கு தகுந்த பாதுகாப்பு வேண்டும் என்றும் சென்னை கிளினிக்கில் அறிவுறுத்தி இருந்தார்கள். அதனால் நான் எனது அறைக்குச் சென்று குளிருக்கேற்ற துணிகளை மாற்றிக் கொண்டேன்.

லண்டனில் நான் ஒரு சிறிய அறை - மூன்று மீட்டர் நீளம் இரண்டு மீட்டர் அகலம் - ஒன்றில் வசித்து வந்தேன். செயற்கை வெளிச்சமும் செயற்கை காற்றும்தான் அதில் இருபத்தி நான்கு மணி நேரமும். அதனுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது இப்போது நான் இருக்கும் மாளிகை பிரமாண்டமானதாகத் தோன்றியது. சுற்றப்புறமுள்ள தோற்றம் அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தது. இந்த இயற்கையின் அழகையும் நவீன சமூகத்தின் சவுகரியங்களையும் ஒன்றாக அனுபவிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் சிந்தித்தேன். ஆனால் இந்த எண்ணங்களெல்லாம் பப்புக்கு முரண்பாடு என்று எனக்குத் தெரியும். நான் இங்கு ஒரு வேலை செய்ய வந்திருக்கிறேன்.

வேலை முடிந்தவுடன் திரும்ப வேண்டும். மற்ற சிந்தனைகளுக்கு இடம் தரக் கூடாது. அந்த சமயத்தில் நான் இரண்டு பக்குவப்படுத்தும்மாத்திரைகளை விழுங்கியிருக்க வேண்டும். ஆனால் ஏனோ மனது வரவில்லை.

நான் உள்ளே வந்தவுடனே, ‘‘சார் உங்களுக்கு ஒரு ‘ட்ரிங்க்’ வேண்டுமா? ’’ என்று பட்லர் கேட்டான்.

‘‘ட்ரிங்க்?’’ எனக்கு அர்த்தமாகவில்லை.

‘‘ச்சொடா பெக் சார்’’ என்றான். அது இன்னும் பெரிய புதிராக இருந்தது. பிறகு ‘விஸ்கி, பிராண்டி ஏதாவது சாப்பிடுகிறீர்களா? ’’ என்றான்.

இப்பொழுது மேற்கு கோளத்தில் ‘ஊக்கமளிப்பவை’ (Stimulants) என்பதையே அ.மு. காலத்தில் ட்ரிங்க்ஸ் என்று சொல்லிவந்தார்கள் என்பது தெரிந்தது. ஆனால் இக்காலத்திய பொருள்களை உபயோகிப்பதால் ஒரு ரம்மிய உணர்ச்சியே தவிர வேறு கெடுதல் ஒன்றும் இல்லை. பழைய கால மது வகைகள் தலைவலி, அஜீரணம் முதலிய நோய்களைக் கொடுப்பதாக அறிந்திருந்தேன். இருந்தாலும் அவைகளை ருசி பார்க்க வேண்டாமா? ‘‘ஆம். கொஞ்சம் கொண்டு வா,’’ என்றேன்.

‘‘விஸ்கி சார்? ’’

‘‘சரி’’

ஒரு டம்ளர் நிறைய ஒரு தங்க நிறமான பானத்தை பட்லர் கொண்டு வந்து வைத்தான். நான் அதை எடுத்து குடித்தேன். அது என் தொண்டைக்குள்ளும் வயிற்றுக்குள்ளும் ஒரு நெருப்புக் கட்டி மாதிரி சென்றது. வயிறு மெல்ல எரிய ஆரம்பித்தது. என்னைப் பார்த்துக் கொண்டிருந்த பட்லர், ‘‘ஒரு வேளை சர் ஜியார்ஜுக்கு தண்ணீர் கலக்க வேண்டுமா?’’ என்று கேட்டான்.

‘‘ஆம்’’ என்று தலையசைத்தேன்.

அவன் டம்ளரை திருப்பி எடுத்துக்கொண்டு போய் கொஞ்சம் தண்ணீர் கலந்து கொண்டு வந்தான். அடுத்த தடவை சுமாராக குடிக்க முடிந்தது. வாயிக்கு அவ்வளவு ருசி இல்லாவிடினும் உடம்புக்கும் மனத்துக்கும் ஒருவித ரம்மியம் ஏற்பட்டது.

பட்லர் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். நான் வேலை ஆட்களைப் பற்றி சரித்திரத்தில் படித்திருக்கிறேனே தவிர வேறொன்றுமே தெரியாது. சர் ஜியார்ஜ் என்னும் அந்தஸ்துடன் என்னை யாருமே முன்பு கூப்பிட்டதில்லை. இந்த அசாதாரண அன்னிய நாட்டில் எனக்கு ரொம்ப தனிமையாக இருந்தது. பட்லருக்கும் பேச ஆசை இருந்திருக்க வேண்டும்.

‘‘இங்கே வேறு யாராவது இருக்கிறார்களா?’’ என்று கேட்டேன்.

‘‘இல்லெங்க சார். ஹேம்டன் கோர்ட் பல ஆண்டுகளாக மூடி வைக்கப்பட்டிருந்தது. உங்கள் வருகைக்காகத்தான் அதைத் திறந்து சுத்தம் செய்து ஆட்களையும் அமர்த்தியிருக்கிறோம்.’’

‘‘அப்பொ நீ இங்கே புதுசு. இல்லையா? ’’

‘‘வழக்கமாக நான் பிரதம மந்திரிக்குத்தான் சேவை செய்வது வழக்கம்,’’ பட்லர் பெருமையாக சொல்லிக் கொண்டான். ‘‘என் மூதாதைகள் எல்லோரும் பட்லர்கள்தான். சிறு இங்கிலாந்து பிரதமரிடம்தான் இருந்தார்கள். அதற்கும் முந்தி எனது ஏழு தலைமுறைப் பாட்டனார் இந்தியாவின் கடைசி வைசராய் லார்ட் மவுண்ட் எவரஸ்டிடம் பட்லராய் இருந்தார்.’’

‘‘மவுண்ட் எவரஸ்ட்? ’’

“ஆம் சார். அவர் ஒரு உயர்ந்த வைசராயாக இருந்ததால் அவருக்கு உயர்ந்த மலையின் பெயரும் இருந்தது. அவருடைய சிலை இப்பொழுதும் கூட நீங்கள் பிக்கடெல்லி சர்க்கஸில் பார்க்கலாம். பார்லிமெண்ட் சபைக்கு முன்னால் இருக்கிறது.

“உனக்கு பட்லர் வேலையைத் தவிர வேறு வேலை செய்ய இஷ்டமில்லையா?”

“சார், என் வேலை சமூகத்துக்கு சேவை,” என்று பெருமையோடு சொன்னான் பட்லர். “இந்தத் தலைமுறைக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. ஆனால் அவர்கள் சோம்பேரிகள். ‘உன் நெற்றியின் வியர்வையால் உன் அரிசியையும் பருப்பையும் சம்பாதிக்க வேண்டும்’ என்று தெய்வமே சொல்லியிருக்கிறார்.”

பட்லர் ஒரு தத்துவஞானி போல் தோன்றியது. மேற்கு கோளத்தின் அவன் ஒரு பப்பியாக திகழ்ந்திருப்பான். ஆகவே அவன் மனத்தை மேலும் கொஞ்சம் துருவினேன். “நீ என்னப்பா ஹிந்துவா கிறிஸ்துவனா?”

“நான் கிறிஸ்துவன்தான் சார். முதல் கேண்டர்பரி ஆர்ச்பிஷப் இருந்தாரல்லவா. ஹிந்து மதமே கிருஸ்துவ மதத்திலிருந்துதான் பிறந்தது என்று நிரூபித்தவர். அவரைப் பின்பற்றுகிறவன். அதாவது செய்ந்ட் தாமஸ், மவுண்ட் தாமசிலிருந்து வேதம் ஓதிய பொழுதுதான் ஹிந்து மதம் பிறந்தது. மவுண்ட் தாமஸ்தான் உலகத்திலேயே மிகுந்த புராதன கோவில்.” பிறகு கொஞ்சம் யோசனை செய்து பட்லர் மறுபடியும் பேசலானான். “நான் சொல்வதற்கெல்லாம் தகுந்த நிரூபணங்கள் இருக்கின்றன. உதாரணமாக ஹிந்துக்களின் மாரி அம்மனும் நமது மேரி அம்மனும் ஒரே கடவுள். கிறிஸ்துவுக்கும் கிருஷ்ணனுக்கும் மொழி பேதத்தால் ஏற்பட்ட வித்தியாசமே தவிர வேரொன்றும் இல்லை.”

“இந்த சிந்தனைகளை ஹிந்துக்களும் ஒத்துக் கொள்ளுகிறார்களா?”

“இவைகள் சிந்தனைகள் இல்லை சார். மறுக்க முடியாத உண்மைகள். இரண்டு மதங்களும் ஒன்றுதான். ஆனால் எதிலிருந்து எது வந்தது என்பதில்தான் வாக்குவாதம். இங்கிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு யோகி இருக்கிறார். அவர் ‘கிறிஸ்து இசம்’ என்னும் ஒரு புது மதத்தை போதிக்கிறார். அதாவது இரண்டிலும் உள்ள வேத வாக்குகளை ஒன்று சேர்த்து போதிக்கிறார். ‘தெய்வத்தின் மகனுக்கு அம்மை’ என்றுதான் நாங்கள் எல்லோரும் அம்மைத் தெய்வம் மாரி அம்மனைக் கும்பிடுகிறோம்.

நான் எப்பொழுதுமே சரித்திரத்தில் எப்படி எண்ணங்களும், சிந்தனைகளும் மாறி வளர்கின்றன என்பதில் அக்கரை கொண்டிருந்தேன். பட்லர் சொன்னது இதைப் பற்றி நான் வைத்திருந்த சில கோட்பாடுகளை ஊர்ஜிதப்படுத்தியது. ஆனால் மேலும் இதைப் பற்றி அவனுடன் பேசிப் பிரயோஜனமில்லை என்று நினைத்தேன். சரித்திரத்தைப் பற்றி நன்றாக அறிந்தவர்களுடன் இதைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

எனது டம்ளர் காலியாக இருந்தது. பட்லர் மறுபடியும் நிறைத்துக் கொண்டு வந்தான். பிறகு, “சார் நான் உங்களை ஏதாவது கேட்கலாமா? ” என்று மரியாதையாக வினவினான்.

“கேட்கலாம்.”

“நீங்கள் உண்மையிலேயே இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறீர்களா? ”

“ஆம். நான் லண்டனில் பிறந்து வளர்ந்தவன். இங்கு வரும்வரையில் அங்கேதான் இருந்தேன். ஏன் சந்தேகம்? ”

“கடை வீதியில் நீங்கள் இந்திய அரசாங்கம் அனுப்பிய ஒற்றர் என்றும் இங்கிலாந்திலிருந்து வந்ததாகச் சொல்லி ஏமாற்றி சிறு இங்கிலாந்தை ஆக்கிரமிக்கப் போவதாகவும் ஒரு வதந்தி இருக்கிறது.”

“அது உண்மையல்ல,” என்றேன். நான். இம்மாதிரியான வதந்திகள் பரவினால் எனது பிரயாணத்தின் குறிக்கோளே முடியாமல் போய்விடும். “எனக்கும் கிழக்கு கோள அரசுக்கும்

எந்தவிதமான உறவும் கிடையாது. இங்கே நான் வருவதற்கு வேண்டிய வசதிகள் அவர்கள் செய்து கொடுத்தார்கள். அவ்வளவுதான்.''

''எனது ஏழாவது பாட்டனார் இங்கிலாந்திலிருந்துதான் வந்தார்.'' பட்லர் சம்பாஷணையைக் கொஞ்சம் திருப்பினான். ''அந்நாட்டு வாழ்க்கையைப் பற்றி அவர் ரொம்ப பெருமையோடு பேசுவாராம். அது இன்னும் எங்கள் குடும்பத்தில் ஞாபகம் வைத்திருக்கிறோம். அவர் லார்ட் மவுண்ட் எவரஸ்ட் தங்கியிருந்த மாளிகையில்தான் இருந்தார். எங்கள் குடும்பத்தினர் எல்லோருக்குமே இங்கிலாந்துக்குப் போக வேண்டும் என்று ஆசை. ஆனால் பெரிய பிரிவினைக்குப் பிறகு அது முடியவில்லை. இப்போது நீங்கள் திரும்பிப் போகும்போது என்னையும் அழைத்துச் சென்றால் உங்களை நன்றாக கவனித்துக் கொள்வேன்.''

''இங்கிலாந்து முன் மாதிரி அல்ல. இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் அங்கு பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது நீ அங்கே போனால், உனக்கு அந்நாட்டை பிடிக்காமல் இருக்கலாம்.''

''ஆங்கில வாழ்க்கை முறையையே நாங்கள் எப்பொழுதும் பேணி வந்திருக்கிறோம்,'' என்றான். அவனுக்காக நான் அனுதாபப்பட்டேன்.

இருட்டாகிவிட்டது. பட்லர் லைட் சுவிட்ச் போட்டான். இரண்டு பல்புகளிலிருந்து மங்கலான ஒளி வீசியது. ''இந்த மாளிகையில்தான் மின்சாரம் இருக்கிறது சார். அதனால்தான் உங்களை இங்கே வைத்திருக்கிறார்கள். பக்கிங்ஹாம் பேலசில் கூட மின்சாரம் கிடையாது.''

''பக்கிங்ஹாம் பேலசில் யார் வசிக்கிறார்கள்? ''

''நியாயமாக அரசர்தான் அங்கே தங்க வேண்டும். ஆனால் இல்லாத காரணத்தினால் அது காலியாகத்தான் இருக்கிறது. முக்கியமான சடங்குகளுக்குத்தான் அதை உபயோகிக்கிறார்கள். ஆனால் இரண்டாவது நூற்றாண்டில் அரசர் இங்கே வருவார் என்று ஜோசியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.''

அப்பொழுது இன்னொரு பணியாள் வந்து ''மிஸ்டர் கியூரேடர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்,'' என்றான்.

ஒரு உயரமான மனிதர் அவ்வளவு நேர்த்தியற்ற உடைகளை அணிந்தவர் உள்ளே வந்து என்னுடன் கை குலுக்கினார். ''நான்தான் கியூரேடர். எல்லோரும் என்னை 'கர்' என்று கூப்பிடுவார்கள். நீங்களும் அப்படியே கூப்பிடலாம். நான் தான் உங்களுக்கு துணை அமைச்சர். ஆதலால் இனிமேலாவது மற்றவர்கள் எனக்கு கொஞ்சம் மரியாதை காட்டுவார்கள் என்று நினைக்கிறேன். வழக்கமாக ஆங்கில சரித்திர மியூசியத்தை பார்த்துக் கொள்வதுதான் என் வேலை. இந்த நூற்றைம்பது வருட சிறு இங்கிலாந்தின் சரித்திரத்தை உங்களுக்கு நான் சொல்ல வேண்டும்.''

''உங்களை சந்திப்பதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் மற்றவர்கள் மாதிரி 'கர்' என்று கூப்பிட்டு உங்களை அவமானப்படுத்த நான் விரும்பவில்லை. உங்கள் வீட்டில் உம்மை எப்படி கூப்பிடுகிறார்கள்.''

''வீட்டில் என் பெயர் ஜான், நீங்களும் அப்படியே கூப்பிடலாம்.''

அவர் பக்கத்திலிருந்த சோபாவில் அமர்ந்து பட்லரைக் கூப்பிட்டார். ''பட்லர் எனக்கு ஒரு பிராண்டி கொண்டு வா,'' என்று அவனிடம் ஒரு துண்டு காகிதத்தைக் கொடுத்தார்.

''அது என்ன? '' என்று கேட்டேன்.

''அதிகமாக குடிப்பது இந்த ஊரில் ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது,'' என்று ஜான் விளக்கம் தந்தார். ''அதற்காக ஒரு கூப்பன் முறையை அரசாங்கம் அமல்படுத்தியிருக்கிறது. ஏதிர்க்கட்சிக்காரர் எல்லோருக்கும் பூரண மது விலக்கு அமல் படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள்.''

‘‘நாம் இருவரும் பல வாரங்களுக்கு ஒன்றாய் இருக்கப் போகிறோம், ‘‘ஜான் நிறைந்த டம்ளரை வாங்கிக் கொண்டு மேலும் பேசலானார். ‘‘நான்தான் உங்களுக்கு நண்பனாகவும் உதவியாளனாகவும் இருக்கப் போகிறேன். ஒன்றாக குடித்துப் பழகினால்தான் அந்த நட்பு ஊர்ஜிதமடையும்,’’ என்று சொல்லி தம் டம்ளரிலிருந்து குடித்தார். அவருடைய பானம் என்னுடையதைவிட அதிக சக்தி வாய்ந்ததாக தெரிந்தது.

‘‘சியர்ஸ்’’ என்று சொல்லி நானும் ஒரு வாயளவு குடித்தேன்.

‘‘முதலில் சிறு இங்கிலாந்தைப் பற்றி எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். பிறகு நீங்கள் பெரிய இங்கிலாந்தின் இன்றைய நிலைமையைப் பற்றி எனக்கு விளக்கலாம். பைபிளில் சொன்ன மாதிரி எண்ணம் மாற்றுதல் லஞ்சமாகாது,’’ என்று சிரித்தார்.

‘‘உங்கள் நூற்றைம்பது கால வரலாற்றில் உள்ள முக்கிய அம்சங்களைப் பற்றி முதலில் சொல்லுங்கள்,’’ என்று கேட்டேன்.

‘‘அது ஒரு பெரிய கதை’’ என்று சொல்லி மறுபடியும் கொஞ்சம் குடித்தார். ‘‘அப்பொழுதிருந்த பலாத்காரத்தைப் பற்றியும், பத்திரமின்மையைப் பற்றியும் ஸ்திரமற்ற சூழ்நிலையைப் பற்றியும் உங்களுக்குத் தெரியுமல்லவா? ’’

‘‘பெரிய பிரிவினைக்கு முன்பா?’’

‘‘ஆம்’’

‘‘தெரியும்,’’ என்றேன். ‘‘நான் சில காலம் அ.மு. சரித்திர நிறுவனத்தில் வேலை செய்தேன். மேற்கு கோள கண்ணோக்கிலிருந்து தெரியும்.’’

‘‘அப்பொழுது நாம் இருவரும் ஒரே மாதிரிதான்’’ என்றார். ‘‘இந்தியாவிலும் மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. பிரயாணம் என்றாலே பயம். வீட்டிலேயே இருந்தாலும் பத்திரம் என்று சொல்வதற்கில்லை. பெரிய பிரிவினை முடிவு ஏற்பட்டு இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் எல்லோரும் நீலமலைகளில் குடியேறுவது என்னும் தீர்மானம் வெளியிடப்பட்டதும் டில்லி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தது. இந்தியாவிலுள்ள எல்லா ஆங்கிலேயர்களும் பத்திரமாக இங்கே கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள். இங்கு இருந்த இந்தியர்களை வெளியேற்றி அந்த வீடுகளெல்லாம் ஆங்கிலேயர்களுக்கு அளித்தார்கள். சிறு இங்கிலாந்தின் எல்லைகள் ஒரு கூட்டு கமிஷனால் நிர்ணயிக்கப்பட்டது. பிறகு மற்றவர்கள் உள்ளே வராதிருக்க ஒரு வேலியும் போட்டார்கள். ஒரு வருடத்திற்கு வேண்டிய உணவு, துணி, முதலிய அத்தியாவசியப் பொருள்களும் சேகரித்து இங்கே எங்கள் மூதாதைகளுக்கு அளித்தார்கள். பிறகு நீங்கள் இனி உங்கள் இஷ்டம்போல் இருக்கலாம் என்று சொல்லிவிட்டு இந்திய அதிகாரிகள் வெளியேறிவிட்டார்கள்.’’

‘‘இதெல்லாம் இவ்வளவு விவரமாக உங்களுக்கு எப்படித் தெரியும்?’’

‘‘எப்பொழுதுமே ஆங்கிலேயர்களுக்கு நல்ல சரித்திர மனப்பான்மை உண்டு. அது நம்முடைய சாம்ராஜ்யத்தைப் பற்றி ஆனாலும் சரி அல்லது நீலமலை கிளப்பைப் பற்றி ஆனாலும் சரி. முதல் சில மாதங்கள் நமக்கு டெல்லி அரசாங்கத்துக்கும் நிறைய கடிதப் போக்குவரத்து இருந்தது. அந்த தொடர்பு கொண்டிருந்தவர் பெரிய பிரிவினையைப் பற்றியும் அதை ஒட்டி இங்கு ஏற்பட்ட சிறிய பிரிவினையை ஒட்டியும் எல்லா தஸ்தாவேஜுகளையும் அதைப் பற்றிய பத்திரிக்கை வெளியீடுகளையும் தம் சொந்த குறிப்புகளுடன் பத்திரப்படுத்த வைத்திருந்தார். அவைகள்தான் என் மியூசியத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஒரு நாளைக்கு நீங்கள் அவைகளைப் பார்க்க வேண்டும்.’’

‘‘நீலமலைகளில் ஆங்கிலேயர் மட்டும்தான் குடியேறினார்களா அல்லது சில இந்தியர்களும் இங்கேயே தங்கிவிட்டார்களா?’’

‘‘ரொம்ப சுவாரஸ்யமான கேள்வி,’’ என்றார் ஜான். ‘‘இதிலிருந்து உங்களுடைய சரித்திர

ஞானமும் உணர்வும் நன்கு விளங்குகின்றன. நீங்கள் ஒரு அரசியல் தூதுவர் என்று எனக்குத் தெரியாவிட்டால் ஒரு உயர்ந்த சரித்திர ஆசிரியர் என்று நான் பந்தையம் கட்டியிருப்பேன்.''

எங்கே உண்மை வெளியே வந்துவிடுமோ என்று எனக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. ''சரி என் கேள்விக்கு பதில் சொல்லவில்லையே,'' என்றேன்.

''பணக்கார இந்தியர்களெல்லாம் போய்விட்டனர். ஆனால் சில சிறு விவசாயிகள் தம் நிலத்தை விட்டுப்போக இசையவில்லை. மேலும் ஆங்கிலேயர்கள் தம் பணி ஆட்களை இங்கேயே வைத்துக்கொள்ள விரும்பினர். அவர்களின் ஜனத்தொகை சுமார் இருபது சதவிகிதம் இருந்தது. ஆனால் இந்த ஐந்து தலைமுறைகளில் அவர்கள் நம்மைவிட அதிகரித்து வந்திருக்கிறார்கள்.''

அவருடைய டம்ளர் காலியாக இருந்தது. பட்லர் அதை நிரப்பிக் கொண்டு வந்து வைத்தான். அதே சமயத்தில் எனது டம்ளரையும் நிரப்பிவிட்டான்.

''இரண்டு விஷயங்கள் எனக்கு அர்த்தமாகவில்லை,'' என்றேன். ''ஒன்று ஜனங்களுடைய நிறம். இங்குள்ள ஆங்கிலேயர் எல்லோருமே பழுப்பு நிறமாக இருக்கிறார்களே தவிர வெள்ளையாக இல்லை. இரண்டாவது எல்லா ஆங்கிலேயர்களும் தமது நெற்றியில் ஒரு சிலுவை வைத்திருக்கிறார்கள். இவற்றிற்கு நீங்கள் விளக்கம் தர முடியுமா?''

ஜான் உற்சாகத்தோடு பேசினார். சம்பாஷனை, பிராண்டி - இரண்டும் அந்த உற்சாகத்திற்கு காரணம். பழைய காலத்தைப் பற்றி பேச அவருக்கு அதிக வாய்ப்பு இல்லை. ''இவற்றை நீங்கள் இவ்வளவு சீக்கிரம் கவனித்திருப்பது உங்கள் புத்தி சாதூரியத்தைக் காட்டுகிறது. ஆனால் நாங்கள் அவைகளைப்பற்றி பேசுவதில்லை. நீலமலைகள் சிறு இங்கிலாந்து ஆகி ஆங்கிலேயர்கள் குடியேறியபோது அவர்கள் ஜனத்தொகையில் பெண்கள் குறைவாக இருந்தார்கள். எங்கள் எதிர்காலத்துக்கே இது ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. ஆனால் அப்போது எங்களுக்குத் தலைவராய் இருந்தவர் எல்லா ஆண்களையும் கூப்பிட்டு ஒவ்வொருவரும் பக்கத்து கிராமங்களிலிருந்து இந்திய பெண்களை மணந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.''

''அவர் பெயர் என்ன?''

''அவருடைய மனோ உறுதியாலும் பேச்சு வன்மையாலும் எல்லோரும் அவரை சர்ச்சில் என்று அழைத்தார்கள். அதே பெயரில்தான் அவர் சரித்திர புத்தகங்களிலும் காணப்படுகிறார். அவர் உண்மைப் பெயர் யாருக்குமே ஞாபகம் இல்லை. அப்பொழுது இந்தியாவுடன் தொடர்பு பூரணமாக துண்டிக்கப்படவில்லை. இங்கிருந்த ஆங்கில மாதர்களுக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் நாட்டின் ஜனத்தொகை குறையாதிருக்க வேண்டி அவர்களும் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இது கொஞ்சம் சங்கடமான பிரச்சனையானதால் இதைப்பற்றி யாரும் பேசுவதில்லை. ஆனால் நாங்கள் எல்லோருமே 'தூய்மையான வெள்ளையர்கள்' என்றுதான் எண்ணி வருகிறோம்.''

''நெற்றியிலிருக்கும் சிலுவை?''

''எங்கள் மூதாதைகள் இந்தியப் பெண்களை மணந்து கொண்ட போது அந்தப் பெண்களெல்லாம் தமது மரபுப்படி நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வார்கள். அதே மாதிரி அவர்கள் குழந்தைகளுக்கும் வைப்பார்கள். வைதீக கிறிஸ்துவர்களுக்கு இந்த வழக்கம் பிடிக்கவில்லை. கேண்டர்பரி ஆர்ச் பிஷப் இதற்காக ஒரு கூட்டம் போட்டு எல்லா குழந்தைகளுக்கும் நெற்றியில் பொட்டு அல்லது விபூதி, நாமம், இவைகளுக்கு பதிலாக சிலுவை சின்னத்தைத்தான் வைக்க வேண்டும் என்று ஆக்ஞை பிறப்பித்தார். அப்பொழுதிலிருந்து எல்லோரும் சிலுவைச் சின்னத்தால் அலங்கரித்துக்கொள்வது வழக்கமாகி விட்டது. ஆனால் இங்கு வசிக்கும் இந்தியர்கள் நெற்றியை அலங்கரிக்கும் வழக்கத்தையே விட்டுவிட்டனர்.''

ஜானுக்கு சிறு இங்கிலாந்தின் சரித்திரம் நன்றாக தெரியும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் அவர் பாரபட்சமின்றி சம்பவங்களை விவரித்தார். ஆகையால் அவரை மீண்டும் கொஞ்சம் துருவிப் பார்த்தேன். ''இந்த மாறுதல்கள் ஏற்பட்டு, புதிய அரசு ஏற்படும் நிறைய குழப்பம் இருந்திருக்குமே?'' என்று கேட்டேன்.

‘‘அப்படி ஒன்றும் இருந்ததாக தெரியவில்லை,’’ என்றார். ‘‘இந்திய அரசாங்கம் முதல் வருடம் வேண்டிய உதவிகள் அளித்தது. நல்ல வேளையாக எங்கள் மூதாதைகளும், ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றை மேற்கொண்டு இருந்தார்கள். சர்சிலுனுடைய முன் ஏற்பாட்டால் ஆயுத வகைகளும் அவர்கள் வைத்திருந்தார்கள்.’’

‘‘இருந்தாலும் பல பிரச்சனைகள் இருந்திருக்கும்.’’

‘‘எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது எங்கள் மூதாதைகள் அதிக தொந்தரவு இல்லாமல் நிலைமையை சமாளித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நமது நாட்டாரிடம் அந்த ‘டன்கர்க்’ உணர்ச்சி எப்போதும் இருந்திருக்கிறது. காலத்துக்கு ஏற்ற தலைவர்களும் உருவாகிறார்கள். பழைய இங்கிலாந்தில் சர்ச்சில் இருந்த மாதிரி இங்கேயும் ஒரு சர்ச்சில் இருந்தார். முதலில் அவரே எல்லாவற்றையும் நிர்வகித்து நடத்தி வந்தார். சட்டத்தை நிலை நாட்ட தற்காலிக போலீசையும் நீதி மன்றத்தையும் அவர் உண்டாக்கினார். புது நாணயங்களும் பேப்பர் பணமும் போட்டு இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கஜானாவை நிரப்பினார். அரசுபுரிய சிவில் அதிகாரிகளையும் நியமித்தார்.

‘‘எந்த சட்டங்களை அமல்படுத்தினார்கள்?’’

‘‘அப்பொழுதிருந்த வாதபிரதிவாதங்களெல்லாம் நிலப் பிரிவினை சம்பந்தப்பட்டவை. இவைகளில் நீதிபதிகள் ‘இயற்கை நியாயக் கோட்பாடுகள்’ (Principles of Natural Justice) என்னும் முறையையே கையாண்டார்கள். ஆனால் சர்ச்சில் கூடிய சீக்கிரத்தில் ஒரு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி ஒரு அரசியல் சாசனத்தையும் சில முக்கியமான சட்டங்களையும் நிறைவேற்றினார். இதில் ஒரு பிரச்சனை என்னவென்றால் இங்கிருந்த ஆங்கிலேயர்கள் எல்லோரும் வியாபாரிகள் அல்லது டீ, காப்பியில் நிபுணத்துவம் பெற்றவர்கள். அவர்களுக்குள் வக்கீல் ஒருவர்கூட இல்லை. ஆகவே இந்தியர் உதவியை நாட வேண்டியிருந்தது.’’

எங்கள் டம்ளர்கள் காலியாகிவிட்டன. எங்களையே கவினித்துக் கொண்டிருந்த பட்லர் மேலும் பானங்களைக் கொண்டு வந்தான். எனக்கு கொஞ்சம் தலை சுற்றும் போல் இருந்தது. இருந்தாலும் நீல மலையர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் இந்த வாய்ப்பை நான் கைவிட விரும்பவில்லை. ‘‘எந்தமாதிரியான அரசியல் சாசனத்தை அவர்கள் தயாரித்தார்கள்?’’ என்று கேட்டேன்.

‘‘நாட்டுப் பிதாக்கள் - அதுதான் அக்காலத்திய முக்கியமானவர்களின் பெயர் - பல நாட்கள் வக்கீல்களுடன் விவாதித்தார்கள். கடைசியாக ஒரு வைசிராயும், மக்கள் சபையும் பிரபுக்கள் சபையும் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். வைசிராய் - அரசர் மாதிரி – ஆயுட்காலம் முழுதும் பதவி வகிப்பார். பிரதம மந்திரி பத்து ஆண்டுகளுக்கு பொதுவாக அரசியல் சாசனம் அவ்வளவு மோசம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.’’

‘‘இந்தியர்களுக்கு உங்கள் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் உண்டா?’’

‘‘முதலில் இல்லை. பின்னால் கொடுக்கப்பட்டது. ‘‘நூறு பேர் உள்ள மக்கள் சபையில் அவர்கள் பன்னிரெண்டு பேர் இருக்கிறார்கள்.

‘‘சிறு இங்கிலாந்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் அக்காலத்தில் உறவு எப்படி இருந்தது?’’

‘‘முதலில் ரொம்ப நன்றாகத்தான் இருந்தது. பின்னால் சில முரண்பாடுகள் ஏற்பட்டன. பிரிவினை ஒப்பந்தப்படி நாங்கள் தனியாகத்தான் வாழ வேண்டும். கிழக்கு கோள அரசாங்கம் ஏற்பட்ட பிறகு அதை உறுதியாக அமல் படுத்தினார்கள். எங்களுக்கும் சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கும் நடந்து வந்த வியாபாரத்தை நிறுத்திவிட்டார்கள். இவ்வளவு உறுதியாக அவர்கள் இருப்பார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. பெரிய பிரிவினையே ஒரு தற்காலிக ஒப்பந்தம், இரு கோளங்களும் சீக்கிரம் ஒன்றாகிவிடும் என்று நாங்கள் நினைத்தோம். இல்லையென்றால் இந்தப் பிரிவினைக்கே நாங்கள் ஒத்துக் கொண்டிருக்க மாட்டோம். கிழக்கு கோள அரசு இங்கே இருந்த சுதந்திர மனப்பான்மையை ரசிக்கவில்லை என்று நினைக்கிறேன். அந்தப் பக்கத்தில் சர்வாதிகாரம்தான் தாண்டவமாடியது.

“அப்படி தனிமையாக இருக்க ஆரம்பித்தபோது உங்கள் பொருளாதாரம் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்குமே?”

“ஆம். பழைய ஏடுகளிலிருந்து அது ஒரு பெரிய கவலைக்குரிய காலம் என்று தெரிய வருகிறது. இங்கே எந்த மாதிரியான நிர்ப்பந்தங்கள் இருக்கும் என்று நாட்டு பிதாக்களுக்கு முதலில் தெரியவில்லை. உதாரணமாக நீல மலைகளில் உலோகங்களே கிடையாது. இங்கத்திய விவசாயம் முக்கியமாக காப்பி, டீ தான். கோதும்பி, அரிசி முதலிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அப்போது இங்கு விளையவில்லை. பஞ்சு, கம்பளி முதலிய துணிக்கு வேண்டிய பொருட்களும் இல்லை. முதலில் அவர்கள் காப்பி டீ யை இந்தியாவுக்கு விற்று வேண்டியவற்றை வாங்கிக் கொள்ளலாம் என்று கருதினார்கள். ஆனால் பரிபூரண தனிமையை எங்கள் மூதாதைகள் எதிர்பார்க்கவில்லை.”

“அப்புறம் என்ன ஆயிற்று?” இவர்களுடைய சரித்திரம் என் மனதைக் கவர ஆரம்பித்தது.

“ஒரு வருடத்துக்கு அவர்கள் அளித்திருந்த உணவுப் பொருள்கள் குறைந்து கொண்டு வந்தன. முதல் பிரதமர் சர்ச்சில் நியூ டெல்லியிலிருந்து உதவி கோரினார். அங்கிருந்த சில அதிகாரிகள் வந்து பார்த்து உணவுப் பொருள்களும், துணிமணிகளும், தொழில்களுக்கு – முக்கியமாக மின்சார உற்பத்திக்கு – வேண்டிய உபகரணங்களை அனுப்பி வைத்தார்கள். இம்மாதிரி ஓரிரண்டு வருடங்களுக்கு வியாபாரம் நடந்தது. அப்பொழுதுதான் இந்திய பெண்களை மணம் புரிவதைப் பற்றியும் முடிவெடுக்கப்பட்டது.”

“அதற்கு பிறகு தன்நிறைவு பெற்று விட்டீர்களா? ” என்று கேட்டேன்.

ஜான் சிரித்தார். “பெண்களைப் பொருத்தவரையில் ‘ஆம்’ என்று சொல்லலாம். அவர்களுடைய உற்சாகத்தில் சிலர் இரண்டு மணங்கள்கூட செய்து கொண்டனர். ஆனால் மற்ற பொருள்களைப் பொருத்தவரையில் நிலைமை ரொம்ப மோசமாகத்தான் இருந்திருக்க வேண்டும். எல்லா அத்தியாவசியப் பொருள்களும் ரேஷன் செய்யப்பட்டதாக அறிகிறோம். கிழக்கு கோளத்தில் ஏற்பட்ட மாறுதல்களினால் நாங்கள் பூரணமாக வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டோம்.”

“இம்மாதிரி நூற்றைம்பது ஆண்டுகளாக இந்த சிறு நாட்டில் தனிமையாக இருப்பது ஒரு விநோதமான உணர்ச்சி தரவில்லையா?”

“முதல் தலைமுறைக்கு ஒரு வேளை அப்படி இருந்திருக்கலாம். அவர்கள் பெரிய உலகில் வாழ்ந்தவர்கள். ஆனால் அடுத்த தலைமுறை அவ்வளவாக பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய உலகமே அந்த மின்சாரக் கம்பிக்கு உள் அடங்கியதுதான். பழைய உலகத்தைப் பற்றி அவர்களுக்கு எந்தவித ஞாபகமும் இல்லை. இங்கிலாந்து என்றால் அது ஒரு சுவர்க்கம் மாதிரி. ஆனால் பலருக்கு சுவர்க்கத்தில் நம்பிக்கையில்லை. கொஞ்சம் கற்பனை சக்தி உள்ளவர்களைத்தான் அந்த ஞாபகம் பாதிக்கிறது. அது ஒரு கனவு மாதிரி. நீங்கள் வந்ததினால்தான் இன்று கனவு நனவாக ஆகியிருக்கிறது.”

“பிறகு உங்கள் பொருளாதார பிரச்சனைகளை எப்படி சமாளித்தீர்கள்?” என்று நான் விஷயத்தை மாற்றினேன்.

“முதல் பிரதமர் சர்ச்சில் பலவிதங்களில் ஒரு சர்வாதிகாரி என்றே சொல்லலாம். அவர் நிலைமை அபாயகரமானது என்று அறிந்தார். முதல் ஐந்து வருட காலத்தில் தன்நிறைவு பெற முயற்சி செய்து ஓரளவுக்கு வெற்றியும் கண்டார். அவரால் பல கஷ்டமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. முதலாவதாக காப்பி, டீ பயிர் செய்வதை தடை செய்தார். உணவுப் பயிர்களை நடுவது கட்டாயமாக்கப்பட்டது. ஆட்டுப் பண்ணைகளுக்கும், கோழிப் பண்ணைகளுக்கும் மான்யம் அளிக்கப்பட்டது. மலைச் சாரல்களின் அடிவாரங்களில் பஞ்சு விளைச்சலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆடு மாடுகள், குதிரைகள் பராமரிப்புக்கும் சலுகைகள் தரப்பட்டன. முக்கியமான வேலைகளுக்கு மட்டுமே மின்சாரம் அளிக்கப்பட்டது. நூற்பு சக்கரங்களும் கைத்தறிகளும் பல வீடுகளில் தோன்றலாயின. பல டாம்பீக பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைகளை மூடிவிட்டு ஜனங்கள் விவசாயத்துக்கு அனுப்பப்பட்டனர். நிலக்கரியும் உலோகங்களும் இல்லாததால் இருந்த சில தொழில்களைக் கூட மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.”

“இப்பொழுதுதான் உங்களுடைய பிரச்சனைகள் எனக்கு நன்றாக அர்த்தமாகிறது,” என்றேன்.

“அந்த முதல் ஐந்து வருடங்களில் ஏறக்குறைய எல்லா ஆலைகளும் நின்றுவிட்டன. பெட்ரோல் இல்லாததால் மோட்டார் கார்கள் நின்று விட்டன. மின்சாரம் இருந்தாலும் அதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் பழுதடையத் தொடங்கின. யந்திரப் புரட்சி பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தது. நாங்கள் வெகு சீக்கிரத்தில் ஒரு விவசாய நாடு ஆகிவிட்டோம். ஆனால் தொழில் அறிவையும் தொழில் ஞாபகங்களையும் மறக்க முடியவில்லை. அறிவு இருந்தும் அதை உபயோகப்படுத்த வாய்ப்பு இல்லை”

அவருடைய தெளிவான சிந்தனைகளும், பிரச்சனைகளை பிரித்தனுகும் மனப்பான்மையும் என்னை ஆச்சரியத்தில் அழுத்தின. இவ்வளவு தர்க்க ரீதியான அறிவு இந்த சூழ்நிலையில் அவருக்கு எப்படி வந்தது?

“மேற்கு கோளத்திலும் இம்மாதிரி ஒரு பெரிய பிரச்சனை எழுந்தது,” என்றேன் நான். “எண்ணை நெருக்கடி ஏற்பட்டு அரபு நாடுகள் மற்றவர்களுக்கு எண்ணை கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தபோது அங்கேயும் இம்மாதிரி யந்திரப் புரட்சி பின்நோக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் அப்பிரச்சனை சமாளிக்கப்பட்டது.”

“பேசினாலே எனக்கு தாகம் அதிகமாகிறது,” என்றார் ஜான். பட்லர் உடனே வந்து டம்ளர்களை நிரப்பினான். ஆனால் நான் மட்டும் ‘வேண்டாம்’ என்று மறுத்துவிட்டேன். “எனக்கும் இதுதான் கடைசி,” என்றார் ஜான். “பிறகு நான் கண்டிப்பாக போக வேண்டும்.”

நான் என்ன நினைத்தேன் என்று அவர் யூகித்துக் கொண்டாரோ என்னமோ, “இந்தப் பழைய கால சரித்திரம் எல்லாம் எப்படி இவ்வளவு விரிவாக எனக்குத் தெரியும் என்று நீங்கள் யோசனை செய்யலாம். சிறு இங்கிலாந்து அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை நாட்டிலிருந்த புஸ்தகங்களையும் தஸ்தாவேஜுகளையும் ஒன்று சேர்த்து ஒரு தேசிய நூலகத்தை ஏற்படுத்தியதுதான். எனது ஐந்தாவது பாட்டனார்தான் முதல் கியூரேடராக நியமிக்கப்பட்டார். அப்பொழுதிருந்து அந்த வேலை எங்கள் குடும்பத்திலேயே இருந்து வந்திருக்கிறது. ஆனால் இங்கே பள்ளிக் கூடங்களில் இதையெல்லாம் பற்றி அதிகம் கற்பிப்பதில்லை. ஆகவே இந்தப் பழைய வரலாறை பாதுகாப்பதுதான் என் வேலை. இதைப் பற்றி எல்லோரும் படிக்கும்படியான ஒரு புத்தகத்தை ஒரு மிகுந்த ஆராய்ச்சியின் பிறகு நான் எழுதி வருகிறேன்.”

“ஆனால் ஒவ்வொருவருக்கும் அவருடைய தொழிலே ஏன் அவர் பெயராக அமைய வேண்டும்?” என்று கேட்டேன்.

“தொழில் வளர்ச்சி அடையாத ஒரு சமூகத்தில் வம்சாவளியாக தொழில் செய்வதில் பல நன்மைகள் இருக்கின்றன,” என்று ஜான் ஆரம்பித்தார். அவருக்கு ரொம்ப சுவாரஸ்யமான ஒரு விஷயத்தைப் பற்றி நான் கேட்டுவிட்டேன் என்று தெரிந்தது. பிராண்டியைக் கொஞ்சம் குடித்துவிட்டு பேசலானார். அதிக வளம் அல்லது வளர்ச்சி இல்லாமல் இருக்கும் ஒரு சிறு ஜனத்தொகையில் தொழிற் பயிற்சி அளிப்பது கஷ்டம். எல்லோரும் அவரவர்களுடைய தகப்பனாரிடமே கற்றுக் கொண்டால் செலவும் குறைவு. நன்றாகவும் கற்றுக் கொள்வார்கள். எந்தத் தகப்பன் வேறொரு பையனுக்கு தன் தொழிலை கற்றுக் கொடுப்பான்? ஆகவே நாங்கள் ஆதிகால இந்தியாவில் இருந்த ‘குருகுலம்’ என்னும் முறையை அமல்படுத்தினோம். இந்த முறையால் சமூகத்திலிருக்கும் பல அடுக்குகளுக்குள் சண்டை சச்சரவுகள் வருவதில்லை.”

“நீங்கள் சொல்வது பழைய காலத்திய இந்தியாவிலிருந்த சாதி வித்தியாசம் மாதிரி தெரிகிறது,” என்றேன்.

“உங்களுக்கும் பழைய சரித்திரத்தில் நல்ல பரிச்சியம் இருக்கும் போல் இருக்கிறது. ஆம். நாங்கள் இந்துக்களிடம் இருந்து இதைக் கற்றுக் கொண்டோம் என்று சொல்லலாம். இதனால் மக்களுக்குள் போட்டி மனப்பான்மை குறைந்து விட்டது. ஆதிகால ஆரியர்கள் எப்படி பலதரப்பட்ட மக்களை வைத்துக் கொண்டு ஒரு இந்து சமூகத்தை உருவாக்கினார்களோ அதையேதான் நாங்களும் செய்திருக்கிறோம். ஆனால் ஒரு சாதியினர் மற்றவர்களை மணக்கக் கூடாது என்று நாங்கள் தடுப்பு விதிக்கவில்லை.”

எங்கள் விவாதத்தின் போது நாங்கள் நிறைய குடித்து விட்டோம். என்னைவிட ஜான் அதிகம் சாப்பிட்டிருந்தார். அவர் முகம் அந்த மங்கலான ஒளியில் கொஞ்சம் சிகப்பாகத் தோன்றியது. கண்களில் ஒரு பிரகாசம் இருந்தது. ஆனாலும் அவர் மனம் ரொம்ப தெளிவாக இருந்தது. ‘‘நல்ல வேளையாக மது வகைகள் செய்வதற்கு இங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றன. வியாபாரம் இருந்தால் ஸ்காட்லெண்டுக்கு கூட எங்களால் ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால் இங்கேயும் சில விஷமிகள் மது விலக்கு வேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்கள்.’’

பிறகு அவர் தம் கடிகாரத்தைப் பார்த்தார். ‘‘ரொம்ப நேரமாகி விட்டது. ஏன் பட்லர் இன்னும் சாப்பாடு கொண்டு வரவில்லை,’’ என்றார்.

பட்லர் சாப்பாட்டை தயாராக வைத்திருந்தான். நாங்கள் இருவரும் சாப்பிட்டோம். வறுத்த கோழியும் அரிசி சாதமும் ரொம்ப காரமாக இருந்தது. விஸ்கியும் சாப்பிட்ட பிறகு அது வயிற்றைப் புரட்டியது. பிறகு பழம் சாப்பிட்டோம்.

கடைசியாக ஜான் விடைபெற்று எழுந்த போது கொஞ்சம் தள்ளாடி நடந்தார். ‘‘ஒரு மாலையிலேயே எனக்கு உங்கள் நாட்டைப் பற்றி நிறைய அறிவித்துவிட்டீர்கள். தேங்க்ஸ்’’ என்றேன்.

‘‘அடுத்த தடவை நீங்கள் நம் தாய் நாட்டைப்பற்றி எனக்கு சொல்ல வேண்டும்.’’

‘‘ஆனால் நான் இன்னும் ரொம்ப கற்க வேண்டியிருக்கிறதே? ’’ என்றேன்.

‘‘நாம் காலையில் சந்திப்போம்.’’

என் படுக்கை அறைக்குப் போகும்போது நானும் கொஞ்சம் தள்ளாடியதாகத் தெரிந்தது. குளிக்கும் அறை ஏற்பாடுகளெல்லாம் ரொம்ப பழைய காலத்தியது என்றுதான் சொல்ல வேண்டும். என் உடைகளைக் சுழற்றியபோது குளிர் அதிகமாக தோன்றியது. நல்ல வேளையாக பட்லர் ஒரு சூடான கல்லை என் படுக்கைக்குள் வைத்திருந்தான். அப்படி இருந்தும் எனக்கு தூக்கம் வரவில்லை. குடித்த விஸ்கியும் சாப்பிட்ட சாப்பாடும் வயிற்றைக் குழப்பின. நான் பிறந்து வளர்ந்த செயற்கை வாழ்விலிருந்து இம்மாதிரியான இயற்கை வாழ்க்கைக்கு திரும்புவது கஷ்டமென்றும் சில சமயங்களில் அபாயகரமானதென்றும் கிளினிக்கில் எச்சரித்திருந்தார்கள். நான் இதுவரையிலும் முன்பே ஜீரணிக்கப்பட்ட ஆகாரங்களைத்தான் சாப்பிட்டிருந்தேன். குளிரிலோ வெப்பத்திலோ இருந்ததில்லை. அஜீரணம், தலைவலி இவையெல்லாம் எனக்கு புதியவை. இந்த வார்த்தைகள் கூட அகராதியிலிருந்துதான் தெரியுமே தவிர அனுபவித்துத் தெரியாது. மனதுக்கோ உடம்புக்கோ சிறிது கோளாறு ஏற்பட்டாலும் பக்குவப்படுத்தும் மனையில் சீக்கிரம் சரிப்படுத்திவிடுவார்கள். ஆகவே என் நிலைமையைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் மிகவும் கவலைப்பட்டேன். நல்ல வேளையாக கிளினிக்கில் கொடுத்த மாத்திரைகள் ஞாபகத்துக்கு வந்தன. ஒரு மாத்திரையை சாப்பிட்டவுடன் வயிற்றுக் கோளாறு சீக்கிரம் நிவர்த்தியாகிவிட்டது.

இருந்தும் தூக்கம் வரவில்லை. அன்றைய சம்பவங்ளைப் பற்றி நினைத்தேன். ஒரு சாதாரண வேலையிலிருந்து சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் ஆகவும், இங்கிலாந்தின் தூதுவராகவும் ஆனது ஒரு ஒப்பற்ற அனுபவம். மேற்கு கோளத்தில் ஒரு ‘சூபர் பப்பி’ ஆவதற்கு சமம் என்று சொல்லலாம். இப்பொழுது நான் ஒரு முக்கியஸ்தனாகிவிட்டேன். இதுநாள் வரையும் ஒரு பிரமாண்ட கம்ப்யூடரில் ஒரு நுண்ணிய புள்ளியாக இருந்தவனுக்கு இது ஒரு சாதாரண உயர்வு அல்ல. மேலும் இறந்த கால வாழ்க்கையைப் பற்றி படிப்பதும் படங்களில் பார்ப்பதும் ஒன்று. ஆனால் அந்த வாழ்க்கையில் நேரில் பங்கு கொண்டு அவர்களுடன் உணர்வோடு பழகுவது வேறொன்று. இது எனக்கு ஒரு எதிர்பாராத மன எழுச்சியைத் தந்தது. படங்களைப் பார்ப்பதற்கும் வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்வதற்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால் இது அறிவை ஊட்டுவது மட்டும்அன்றி உணர்ச்சியையும் தூண்டுகின்றது. சம்பவங்களையும் நடத்தைகளையும் பார்ப்பது மட்டுமன்றி அவற்றையெல்லாம் நம் வசீகர சக்தியால் மாற்றலாம் என்றும் ஆசையும் உண்டாகிறது.

இந்த எழுச்சியும் உணர்ச்சியும் ஆசையும் பப் தத்துவத்திற்கு மிகவும் விரோதமானவை என்று எனக்குத் தெரியும். பாரபட்சமின்றி, உணர்ச்சியின்றி பங்குகொள்வதுதான் பப் முறை. அதனால் என் மனோ பக்குவத்தை சரிப்படுத்துவதற்கு வேண்டிய மாத்திரைகளை உடனே சாப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் மிகவும் வேண்டியபோதுதான் சாப்பிட மனம் வரவில்லை. இந்த உணர்ச்சி, ஆசை எல்லாம் புது அனுபவங்கள் அவற்றை எப்படி கைவிடுவது. அவற்றை மேலும் மேலும் விருத்தி செய்து

அனுபவிக்க வேண்டும் என்று எனக்குத் பட்டது. அப்படிப்பட்ட அனுபவங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கும் என எண்ணினேன். உடம்புக்கு உணவு எப்படியோ அப்படித்தான் மனதுக்கு உணர்ச்சி இருக்கும். எனது பழைய வாழ்க்கையில், உணர்வு, ஆசை, அவா முதலிய இச்சைகளுக்கு கொஞ்சமும் இடமில்லை. ஆகவே இன்றைய அனுபவங்கள் என் வாழ்க்கையில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை உண்டாக்கிவிட்டன என்று சொல்லலாம்.

எனது சிந்தனைகள் எனக்கே ஒரு ஆச்சரியத்தை அளித்தன. இந்தமாதிரி எண்ணங்கள் என் உள் மனத்தில் இருக்கிறதென்றே இதுவரைக்கும் எனக்குத் தெரியாது. இவைகள் முன்பே அங்கே ஒளிந்திருந்தனவா அல்லது இங்கு வந்த பின்தான் தோன்றினவா? இந்த நீலமலைகளில் வீசும் தூய்மையான காற்றுதான் இவைகளுக்கு காரணமா? எனது எண்ணங்களை உருவாக்க சரியான வார்த்தைகளைக் கூட கஷ்டப்பட்டுத்தான் வெளிக் கொணரவேண்டியிருந்தது. இந்த வழியில் அபாயம் நிறைய இருப்பினும் அவை மனதுக்கு ஒரு ரம்மியத்தை அளித்தன. இம்மாதிரியான விபரீதங்கள், அதிர்ச்சிகள் ஏற்படும் என்று நான் முன்பே அறிந்திருந்ததால் இந்த பிரயாணத்திற்கே ஒத்துக் கொண்டிருக்கமாட்டேன். அதற்கு பதிலாக பக்குவப்படுத்தும் மனைக்குச் சென்று மேலும் ‘வைத்தியம்’ கோரியிருப்பேன்.

இப்பொழுதுதான் முதல்முதலாக நான் பப் தத்துவத்திலிருந்து விடுபட்டேன் என்பதையும் அறியலானேன். இந்த எண்ணம் எனக்கு ஒரு புது தெம்பையும் உற்சாகத்தையும் அளித்தது. ஏதோ ஒரு புதிய கண்டு பிடிப்பாகத் தோன்றியது. இந்த சந்தோஷத்தினாலும் தன்நிறைவு பெற்றுவிட்டோம் என்ற எழுச்சியினாலும் நான் படுக்கையிலிருந்து எழுந்து பாத்ரூமுக்குப் போய் பக்குவப்படுத்தும் மாத்திரைகளை ஒப்பணையில் எறிந்துவிட்டேன். சிறிது நேரத்திற்குப் பிறகுதான் நான் செய்த காரியத்தின் மகத்தான விளைவை பூரணமாக அறிந்து கொள்ள முடிந்தது. அந்த நிமிடத்திலிருந்து நான் என் சக்தியால், என் திறமையால், என் முயற்சியால்தான் வாழ வேண்டும். ஏற்படும் எல்லாவற்றிற்கும் நான்தான் பொறுப்பு. பப் தத்துவமோ அல்லது மேற்கு கோளமோ என் உதவிக்கோ பாதுகாப்புக்கோ வர மாட்டார்கள். அது மட்டும் அல்ல. நான் செய்த குற்றத்தை அறிந்தால் என்னை முடிவு கட்டுவதை விட வேறு வழியில்லை. இருந்தும் கூட என் மனத்தில் ஒரு புதிய சுதந்திர மனப்பான்மை குடி கொண்டிருப்பதை அறிந்தேன். அந்த குளிர்ந்த இரவில் ஜன்னல் வழியாக மின்னிக் கொண்டிருந்த நட்சத்திரங்களைப் பார்த்தேன். உலகத்தையே முதல் முதலாகப் பார்ப்பதாக எனக்கு ஒரு பிரேமை உண்டாயிற்று. ஒரு புதிய நோக்குடன் உலகத்தைப் பார்த்தேன். ஒரு மறு பிறப்பு மாதிரி தோன்றியது.

இருந்தாலும் பப் தத்துவத்தை பூரணமாக கைவிட முடியவில்லை. வாழ்க்கை முழுதும் நொண்டிக் கொண்டிருந்தவன் திடீரென்று ஊன்று கோல் இல்லாமல் நடக்க முடியுமா? எப்படி நவீன உடைகளையும் செயற்கை உணவுகளையும் தற்காலிகமாக விட்டுவிட்டேனோ அதேமாதிரிதான் பப்பையும் விட்டுவிட்டதாக சொல்லி மனத்தை திடப்படுத்திக் கொண்டேன். இன்னும் சில வாரங்களில் ச்சக்கின் ஹோவர்காப்டரில் ஏறிக்கொண்டு போய்விடுவேன். உடனே சென்னையில் ஒரு பக்குவ மனைக்குச் சென்றால் மேற்கு கோளத்திற்குப் போகுமுன் எல்லாம் சரியாகிவிடும். சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்தும், சிறு இங்கிலாந்து மக்களும் பக்குவப்படுத்தும் முறையால் என் ஞாபகத்தில் கூட இருக்கமாட்டார்கள். நானும் பிரம்மாண்ட கம்ப்யூடரில் ஒரு புள்ளி ஆகிவிடுவேன். ஆனால் இங்கே இருக்கும் வரையில் கொஞ்சம் உண்ர்ச்சி வசப்பட்டிருந்தால் அவ்வளவுக்கு என் ஆராய்ச்சியும் ஆழமானதாக இருக்கும்.

ஆனால் இம்மாதிரி உணர்ச்சி வசப்படுவதின் ஒரு குறை என்னவென்றால் அறநெறி பிரச்சனைகளும் என்னை பாதித்தன. நான் இங்கிலாந்தின் தூதுவர் என்றும் சர். ஜியார்ஜ் என்றும் சொல்லிக் கொள்வது சரியா? நியாயமா? இந்நாட்டு பாமர மக்களை ஏமாற்றுவதாகாதா? சரி, தப்பு, நியாயம், அநியாயம் என்னும் உணர்ச்சிகளும் என்னை பாதிக்கத் தொடங்கிவிட்டன. இதெல்லாம் ஆராய்ச்சிக்காக என்று சொல்லி மனதை திடப்படுத்திக் கொண்டேன். மனித உள்ளம் தன் இச்சைகளையெல்லாம் ‘நியாயம்’ ஆக்கும் சக்தி வாய்ந்தது என்பதையும் இந்த ஒரு நாளில் தெரிந்தேன்.

எழுச்சி, கவலை, எதிர்பார்ப்பு என்னும் உணர்ச்சிகளோடு தூங்கலானேன்.

-------------------

## அத்தியாயம் ஐந்து

மறுநாள் காலை எனது குளியல் அறையில் இரண்டு பக்கெட் சுடு நீர் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறையில் இருந்த மின்சார நீர் சூடு செய்யும் கருவி வேலை செய்வதாய் இல்லை. சிறு இங்கிலாந்தில் எந்த ஒரு கருவியும் வேலை செய்கிறதா இல்லையா என்பதே ஒரு புதிராக இருந்தது. நான் ஒரு மாதிரியாக குளித்துவிட்டு மசால் முட்டை, ரொட்டி, வெண்ணை இவைகளை சாப்பிட்டேன். பட்லர் மிகவும் அக்கரையுடன் என் நலத்தைப் பற்றி விசாரித்தான். “மிளகாய்ப் பொடி இல்லாமல் சமையல் செய்யக் கூடாதா? அது என் வயிற்றுக்கு ஒத்துக் கொள்வதில்லை” என்று யோசனை சொன்னேன்.

“சார், கறி பவுடர்தானே ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்திலிருந்து ஆங்கிலேயர்களுக்குப் பிடித்த ருசி. உங்களுக்கு ஆங்கிலேய ஆகாரத்தைத் தவிர வேறொன்றும் கொடுக்கக் கூடாது என்று எனக்கு உத்தரவு வந்திருக்கிறது,” என்றான் பட்லர்.

“இங்கிலாந்தில் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அங்கு யாருமே கறி பவுடரோ மிளகுப் பொடியோ சாப்பிடுவதில்லை.”

“நான் பிரதம மந்திரியின் காரியதரிசியை கேட்டுப் பார்க்கிறேன்,” என்று பதிலளித்தான்.

***************

ஜான் காலையில் சரியாக ஒன்பது மணிக்கு வந்து சேர்ந்தார். என்னைப் பார்த்ததும் தலை ஆட்டினார். “நாட்டு தியாகிகளின் சமாதியில் இந்த உடையில் மலர் வளையம் வைக்க முடியாது,” என்றார்.

என்ன சொல்கிறார் என்றே எனக்கு அர்த்தமாகவில்லை. “என் உடைக்கும் மலர் வளையம் வைப்பதற்கும் என்ன சம்பந்தம்? ” என்றேன்.

“நீங்கள் ஒரு கிரிக்கெட் மேட்ச் பார்க்கப் போவதாயிருந்தால் இந்த உடை சரி. ஆனால் இங்கிலாந்து தூதுவர் என்ற முறையில் இந்த நாட்டை கவுரவிக்கப் போகிறீர்கள். மரபுக்குத் தகுந்த உடை உடுத்தாவிட்டால் நீங்கள் இங்கே காலம் தள்ளுவது கஷ்டமாய் இருக்கும்.”

“சடங்குகளுக்கு உரிய உடை என்ன என்று எனக்குத் தெரியாதே,” என்றேன். “இங்கிலாந்தில் இந்த வழக்கங்களையெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பே மறந்து விட்டார்கள்.”

“நாங்கள் வந்துதான் இங்கிலாந்தை மறுபடியும் நாகரீகமாக்க வேண்டும் போல் இருக்கிறது.” என்று ஜான் சிரித்தார். “சடங்கு உடைகளில் ஃபேஷனோ மாறுதல்களோ கிடையாது. நீங்கள் ‘டெயில்ஸ்’ அணிய வேண்டும்.”

“என்ன வால்களா” என்று அதிசயத்தோடு கேட்டேன். “அதற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறீர்கள்? ”

“ஆடைகளில் அசட்டையாக இருப்பதுதான் வாழ்க்கையிலேயே அசட்டை என்பதற்கு முதல் அறிகுறி. நாம் நமக்கே மரியாதை செலுத்தவில்லையென்றால் மற்றவர்கள் நமக்கு எப்படி மரியாதை செலுத்துவார்கள்? உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களுக்கு இது ரொம்ப முக்கியம்.”

ஜான் சொன்னதிலிருந்து ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் உணர்ந்தேன். நான் இங்கே பங்கு கொள்ளும் முதல் சடங்குக்கு சரியான உடை தரிக்கவில்லையென்றால் இந்நாட்டினர் என்ன நினைப்பார்கள். ஏன் ச்சக் கூட இதை கவனிக்கவில்லை? என்று யோசனை செய்து பிறகு “நான் தகுந்த ஆடைகளை வாங்கும் வரையிலும் சடங்கைத் தள்ளி வைக்கலாமா? ” என்று ஜானை விசாரித்தேன்.

ஆனால் எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பட்லர் உள்ளே சென்று கோடிட்ட கருப்பு ட்ரௌசரும் நீண்ட ‘டெயில்ஸ்’ உடைய கோட் ஒன்றும் கொண்டு வந்தான். அந்த ‘டெயில்ஸ்’ நான்

பழைய படங்களில் பார்த்ததை விட ரொம்ப நீளமாக இருந்தன. அவைகளை மடித்து கையில் வைத்துக்கொள்வது அல்லது மேலாடையாக தோளின் மேல் போட்டுக் கொள்வதுதான் வழக்கம் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த உடைகள் பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கே தங்கியிருந்த ஒரு முக்கியஸ்தருக்கு சேர்ந்ததாய் இருக்கலாம். எனக்கு கொஞ்சம் பிடித்தமாக இருந்தது. இருந்தாலும் அவைகளை அணிந்து கொண்டேன்.

நாங்கள் நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு வாகனத்தில் பவனியாக ஒய்ட் ஹாலுக்குப் போனோம். அங்கே எனக்கு ராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. நான் மரியாதை தெரிவிக்கும் முறையில் என் கையை உயர்த்தி நேராக நிற்க வேண்டியிருந்தது. இந்த முறைகளைப் பற்றி நல்ல வேளையாக ஜான் எனக்கு முன்பே அறிவித்திருந்தார். ஒரு ராணுவ அதிகாரி எழுதி வைத்திருந்த தமது பேச்சை வாசித்தார்.

> ‘‘மாட்சிமை தங்கிய ஆங்கில அரசரின் தூதுவர் சர் சோனியன் - ஸ்மித் அவர்களே, பெரியோர்களே
>
> சர். ஜியார்ஜ் அவர்கள் தியாகிகளின் சமாதிக்கு அஞ்சலி செலுத்த வந்துள்ளார். இந்த சமாதி நம் நாட்டு வீரர்களுக்காக மட்டுமல்ல, நமது தாய்நாடான இங்கிலாந்து வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும் நமக்கு நினைவு ஊட்டுவதாக அமைந்துள்ளது. அவர்கள் எல்லோரும் பல கண்டங்களிலும் பல யுத்தங்களிலும் போர் புரிந்து, வெற்றி கண்டு வீர மரணம் எய்தி உள்ளார்கள். இப்பொழுது நமக்கும் நம் தாய் நாட்டுக்கும் மறுபடியும் போக்குவரத்து ஏற்பட்டுள்ளதால் பழைய சாம்ராஜ்யம் மீண்டும் உருவாகும் என்பதில் ஐயமில்லை. பழைய கால புகழ் மீண்டும் பிரகாசிக்கும். அந்த நம்பிக்கையோடு சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்தை மலர் அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறேன்.’’

நான் முன்னுக்குச் சென்று ஒரு சிப்பாய் தயாராக வைத்திருந்த மலர் வளையத்தை வாங்கி சமாதியின் மேல் வைத்து மரியாதை செலுத்தினேன். ‘‘சில வார்த்தைகள் பேசினால் தகுதியாகவும் நன்றாகவும் இருக்கும்,’’ என்று ஜான் குசு குசுத்தார்.

> ‘‘பிரதம மந்திரி அவர்களே சேனை தளபதி அவர்களே
>
> இது ஒரு பவித்திரமான நிமிடம். இறந்தவர்களுக்கு அஞ்சலியும் எதிர்காலத்துக்கு நம்பிக்கையும் தெரிவிக்கும் நிமிடம். இதில் பங்கு கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.’’

நான் திரும்பிப் போகும்பொழுது ஜான் ரொம்ப பிரமாதம். சில வார்த்தைகளில் ஒரு சகாப்தத்தின் சரித்திரத்தையே சொல்லிவிட்டீர்கள்’’ என்றார். ‘‘ஆனால் இன்னும் கொஞ்சம் நீளமாக இருந்திருக்கலாம்.’’

‘‘எனக்கு அதிகமாக பேசி வழக்கமில்லை.’’

‘‘ஒரு ராஜ தந்திரி என்னும் முறையில் நீங்கள் அடிக்கடி பேச வேண்டியிருக்குமே’’

நான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

பிறகு அங்கே போடப்பட்டுள்ள பந்தலில் முக்கியஸ்தர்கள் எல்லோரும் டீ சாப்பிட்டோம். அப்பொழுதுதான் நான் சில பார்லிமெண்ட் அங்கத்தினர்களை சந்தித்தேன்.

“நான்தான் சர் கிளெமெண்ட் வில்சன். எதிர்கட்சித் தலைவர்,’’ என்று ஒருவர் தாமே வந்து அறிமுகப்படுத்திக் கொண்டார். ‘‘நீங்கள் நேற்று வந்தபொழுது உங்களை வரவேற்க நான் வரவில்லை. அதற்காக மன்னிக்கவும். ஆனால் அதற்கு காரணம் என்னவென்றால் பிரதம மந்திரி உங்கள் வரவை நாட்டு நன்மைக்குப் பயன்படுத்தாமல் அதை தம் கட்சியின் வெற்றியாக கொண்டாடுகிறார். உங்கள் வரவைக் குறித்து எங்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை. தாய் நாட்டுத் தூதுவர் என்ற முறையில் நீங்கள் கட்சி பேதம் காட்டாமல் இருப்பது நல்லது,’’ என்று அறிவுரை வழங்கினார்.

**********

ஹேம்டன் கோர்ட்டுக்கு திரும்பி வந்த பிறகு ஜான் சிறு இங்கிலாந்தின் அரசியல் சிக்கல்களை விவரித்தார். ''நாங்கள் ஒரு சுதந்திர நாடான பிறகு ஒரே கட்சிதான் இருந்தது. சர்சில்தான் அதற்குத் தலைவர். ஆனால் அவருக்குப் பிறகு கட்சியில் பிளவு ஏற்பட்டு இரண்டு கட்சிகள் உதயமாயின. இருவரும் சர்சிலினுடைய வாரிசுகள் என்று சொல்லிக் கொண்டனர். ஆனால் நாளாவட்டத்தில் 'கன்சர்வேடொரிஸ்' என்றும் 'லேபாரெடொரிஸ்' என்றும் பெயர் வைத்துக் கொண்டார்கள். இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் கன்சர்வேடொரிஸ்தான் முக்கால்வாசி அரசு புரிந்திருக்கிறார்கள். இரண்டு தடவைகள் தான் லேபரோடொரில் அதிகாரத்துக்கு வந்தார்கள். அது ஒரு பெரிய சங்கடமாகப் போய்விட்டது.

''இரண்டு கட்சிகளுக்கும் என்ன கொள்கை வித்தியாசம்?''

''கன்சர்வேடொரிஸ் பழயதையெல்லாம் அப்படியே வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் லெபாரெடொரிஸ் யதார்த்தவாதிகள். 'பெட்ரோல் இல்லாதபொழுது மோட்டார் கார்களை வைத்திருந்து என்ன பிரயோஜனம்? ஓடாத யந்திரங்களும் இயங்காத ஆலைகளும் எதற்காக இருக்க வேண்டும்? அரசர் இல்லாதபோது முடியரசு என்று ஏன் சொல்லிக்கொள்ள வேண்டும்? என்று கேட்கிறார்கள். இவையெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது என்று சொல்கிறார்கள். ஆனால் கன்சர்வேடொரிஸ் முன்பு ஒரு முறை இங்கிலாந்து இந்தியாவை ஆக்கிரமித்து சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியதுபோல் மறுபடியும் இரண்டாம் சாம்ராஜ்யம் வரப்போகிறது, அப்பொழுது மோட்டார் கார்களும் யந்திரங்களும் மறபடியும் ஓடும். அதனால் அவற்றை பாதுகாக்க வேண்டும். என்கிறார்கள். ஆகவே குழந்தைகளுக்கு பள்ளிகளில் மோட்டர்கார்களைப் பற்றியும் யந்திரங்களைப் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. இவையெல்லாம் ஒரு புதிய மூட நம்பிக்கையாக ஏற்பட்டுவிட்டது.''

''எனக்கு லெபாரெடொரிஸ் கொள்கைதான் சரியானதாக தோன்றுகிறது. பழைய தொழில் நுட்பங்களைக் கற்று என்ன பிரயோஜனம்? வெளியுலகுடன் போக்குவரத்து ஆரம்பித்தாலும் கூட இவையெல்லாம் இறந்த தொழில் நுட்பங்களாகத்தான் இருக்கும்.''

''நீங்கள் சொல்வது சரிதான்,'' என்று ஜான் ஒத்துக்கொண்டார். ''ஆனால் ஒரு நாட்டின் கொள்கைகள் எப்பொழுதுமே தர்க்க ரீதியில் வகுக்கப்படுவதில்லை. சரித்திரம் கற்ற உங்களுக்கு நான் இதை சொல்ல வேண்டியதில்லை. மேலும் மானிட வாழ்க்கையில் தலைமுறைத் தத்துவம், ஐதீகம், இவைகள் பெரும்பங்கு கொள்கின்றன. இதை கன்சர்வேடொரிஸ் நன்றாக அறிந்திருக்கிறார்கள். பழைய கால ஆங்கில சாம்ராஜ்ய புகழையும் பெருமையையும் மீண்டும் திரும்பிக் கொண்டு வருவதாக சொல்கிறார்கள். ஓடாத மோட்டார் கார், இயங்காத இயந்திரம் இவைகளெல்லாம் அந்த கொள்கையின் சின்னங்கள். வாழ்க்கையில் ஒரு பெரிய, நல்ல திருப்பம் வரப்போவதாக பல ஆண்டுகளாக சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இப்போது நீங்கள் வந்திருப்பது அந்த நம்பிக்கையையும், அவர்களின் முயற்சிகளையும் ஊர்ஜிதப்படுத்துகின்றன. அதனால்தான் எதிர்கட்சிக்காரர்கள் உங்கள் வருகையை பிரதமர் தம் கட்சி நலனுக்காக உபயோகிப்பதாக குற்றம் சாட்டுகிறார்கள்.''

''நேன்று எனக்கு கருப்புக் கொடி காட்டியவர்கள் யார்?'' என்று பேச்சைக் கொஞ்சம் திருப்பினேன்.

''அவர்கள் தங்களை இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஜீவியத்தைப் பொருத்தவரையில் அவர்களுக்கும் எங்களுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஆனால் அவர்கள் சிறுபான்மையினர் என்றும் இந்தியாவுடன் இணைத்தால்தான் தமக்கு விமோசனம் கிடைக்குமென்றும் நினைக்கிறார்கள். பார்லிமெண்டில் தனி பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும், அவர்கள் வசிக்கும் பிரதேசத்தை தனி நாடாக்க வேண்டும் என்றும் கோருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஆதரவு இல்லை.''

''நாளுக்கு நாள் எனது அறிவு வளர்கிறது. உங்களுடைய பேச்சும் மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கிறது. இன்று பிற்பகல் நான் பார்லிமெண்ட் கூட்டத்திற்கு விஜயம் செய்ய முடியுமா?''

''தாராளமாகப் போகலாம். முக்கியஸ்த்தர் கேலரியிலிருந்து நடவடிக்கைகளைப் பார்வையிட நான் ஏற்பாடு செய்கிறேன்,'' என்று சொல்லி ஜான் விடை பெற்றார்.

பிற்பகல் ஜான் திரும்பி வந்தவுடனே, “நீங்கள் சவாரி செய்வதுண்டா?” என்று கேட்டார்.

எனக்கு அர்த்தமாகவில்லை.

“குதிரைச்சவாரி,” என்று விளக்கம் தந்தார். “நீங்கள் இங்கு பல நாட்கள் இருக்கப் போவதால், ஒரு குதிரை வைத்துக்கொள்வது நல்லது. அதிகாரபூர்வமான நடவடிக்கைகளுக்கு அரசின் விருந்தினராக உங்களுக்கு வாகனம் அனுப்பப்படும். ஆனால் சொந்த ஹோதாவில் வெளியே செல்ல வேண்டுமானால் ஒரு டோங்கா அல்லது குதிரை இருப்பது நல்லது.”

“நான் எப்பொழுதுமே குதிரை ஏறியதில்லை,” என்றேன்.

“இங்கிலந்தில் ‘ராட்டன்ரோ’வில் சவாரி செய்வது வழக்கமாயிற்றே?”

“ராட்டன்ரோ எங்கே இருக்கிறதென்றே எனக்குத் தெரியாது.”

“ராட்டன்ரோ, ஹைட் பார்க், லண்டனில் இல்லையென்றால் உலகமே தலைகீழாக மாறிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்,” என்றார் ஜான்.

பிறகு நாங்கள் ஜாவின் டோங்காவில் பார்லிமெண்ட் கூட்டத்துக்குப் போனோம். ஜான் அந்த கட்டிடத்தின் வரலாற்றைப் பற்றி சொன்னார். “பிரிவிணைக்கு முன்னால் இது ஒரு சினிமா கொட்டகையாக இருந்தது. அசெம்பளி ரூம்ஸ் என்று பெயர். எங்கள் சட்ட நிர்ணய சபை கூட இங்கேதான் கூடியது. சர்ச்சில் தான் தலைமை தாங்கினார்.”

நாங்கள் பால்கனியில் முக்கியஸ்தர்கள் அமர வேண்டிய இடத்தில் அமர்ந்து கொண்டோம். பிரதம மந்திரி பேசிக்கொண்டிருந்தார். தமக்கு முன்னால் இருந்த ‘மைக்’கை சரி செய்து கொண்டிருந்தார். “அந்த மைக் வேலை செய்வதில்லை என்று எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் அதை சரி செய்வது அவருடைய வழக்கம்,” என்று குசுகுசுத்தார் ஜான். பிரதமர் பேசலானார்.

> “மாட்சிமை தங்கிய ஆங்கில அரசின் தூதுவர் நம் நீண்ட கால முயற்சியால் நம் நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார் என்னும் நற்செய்தியை நான் அறிவிக்க விரும்புகிறேன். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் என்று நான் கனம் அங்கத்தினர்களுக்கு சொல்ல வேண்டியதில்லை. இன்று அவர் பார்லிமெண்ட் இரு சபைகளின் கூட்டு கூட்டத்தில் பேசுவதாக இருந்தது. ஆனால் அவருடைய நீண்ட பிரயாணத்தின் சோர்வினாலும் உடல்நலக் குறைவாலும் அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.”

எதிர் கட்சித் தலைவர் உடனே எழுந்தார். “கனம் பிரதமர் உண்மையை மறைத்துப் பேசுவது சர்வ சாதாரணம். ஆனால் இன்று அவர் தம்மையே மிஞ்சி விட்டார்,” என்று கூறினார்.

உடனே “வெட்கம்!” “வெட்கம்” என்றும் “வாபஸ் வாங்கு!” என்று அரசாங்க கட்சிக்காரர்களிடமிருந்து கோஷங்கள் கிளம்பின. ஆனால் எதிர்கட்சித் தலைவர் விட்டுக்கொடுப்பதாய் இல்லை. “பிரதமர் மட்டும் தம் தலையைக் கொஞ்சம் நிமிர்த்தி கேலரியை நோக்கினால் மூக்குக் கண்ணாடி கூட இல்லாமலேயே இங்கிலாந்து தூதுவர் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். அப்படியிருந்தும் கூட அவருக்கு பிரயாண சோர்வு என்றும் உடல்நலக் குறைவு என்றும் நம்புமாறு நம்மை எதிர்பார்க்கிறார்.......”

உடனே பிரதமர் குறுக்கிட்டார். “நமது நடவடிக்கைகளைப் பார்க்க வரலாம். ஆனால் கூட்டு சபையில் பேசுவதற்கு வேண்டிய சக்தி வேற விஷயம்.”

“பிரதமருடைய மருத்துவ அறிவை நான் மெச்சுகிறேன்,” என்றார் சர் கிளெமெண்ட். எதிர்கட்சியினர் ஏளனமாக சிரித்தனர். “ஆனால் நான் பிரதமரை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

இங்கிலாந்திலிருந்து வந்திருப்பதாக சொல்லப்படும் ‘தூதுவர்’ உண்மையிலிலேயே அங்கிருந்து வந்தவரா? அவரை அந்த அரசாங்கம் அனுப்பியதா? அல்லது டெல்லியிலிருந்து வந்த உளவு ஆளா? அவர் இங்கிலாந்திலிருந்து வந்ததற்கு என்ன அத்தாட்சி? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பிரதமர் பதில் சொல்வார் என்று எதிர் பார்க்கிறேன்.''

''பதில்! பதில்!'' என்று எதிர் கட்சியினர் கோஷமிட்டனர்.

''இம்மாதிரி ஒரு தோழமை அரசாங்கத்தை அவமதிக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல நான் மறுக்கிறேன்!'' என்று கூறினார் பிரதமர்.

ஆனால் அவர் பேச்சு இரு கட்சி சார்பாளரும் போட்ட சத்தத்திலும் ஏற்பட்ட குழப்பத்திலும் யாருக்கும் கேட்கவில்லை. அப்பொழுதுதான் கொஞ்சம் கருப்பு நிறமுள்ள ஒருவர் பேச எழுந்தார். அவர்தான் சிறு இங்கிலாந்தில் உள்ள இந்தியர்களின் பிரதிநிதி என்று அறிந்தேன். ''பிரதமருக்கும் எதிர்கட்சித் தலைவருக்கும் நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் தனியாகவோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ யாருடனாயிலும் எந்தவிதமான ஒப்பந்தங்கள் செய்து கொண்டாலும் அது என்னையும் என்னை இங்கே அனுப்பிய மக்களையும் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று எச்சரிக்க விரும்புகிறேன். எங்களுடைய கொள்கை தெளிவானது. முரண்பாடற்றது. பண்பாட்டினாலும், பூகோள ரீதியிலும், வம்சாவளியாலும் நாம் எல்லோரும் இந்தியாவின் ஒரு பகுதி. ஒரு சரித்திரக் கோளாரினால் தான் நீலமலைகள் தனி நாடாக நேர்ந்தது. அந்தக் கோளாரை மேலும் நீடிக்க நாங்கள் விரும்பவில்லை. இந்த அடிப்படையான உண்மைகளை இந்த அரசு மறந்தால் அதன் விளைவுகள் மிகவும் அபாயகரமாக முடியும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.''

''வெட்கம்! வெட்கம்!'' என்று அரசாங்க கட்சியினர் கோஷித்தனர்.

''நீங்கள் இங்கே பெரும்பான்மையோராய் இருக்கலாம். ஆனால் இந்தியாவுடன் ஒப்பிட்டால் நீலமலைகள் ஒரு அணுவளவு என்பதை மறக்க வேண்டாம். அப்படி நீங்கள் தனி நாடாக இருக்க விரும்பினால் அதே சுதந்திரம் இங்கே இருக்கும் இந்தியருக்கும் அளிக்கப்பட வேண்டும். தென் நீலமலை ஒரு தனி நாடாக வேண்டும். நீங்கள் இங்கிலாந்துடன் இணைய வேண்டுமென்றால் நாங்கள் ஏன் இந்தியாவுடன் இணையக்கூடாது? ''

சபையில் மேலும் கூச்சல் அதிகரித்தது. சபாநாயகர் எவ்வளவு முயன்றும் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. உடனே அவர் சபையை ஒத்திவைத்துவிட்டு எழுந்து சென்றார்.

அவர் சென்ற உடனே குழப்பம் தணிந்தது. இதுவரையிலும் விரோதிகள் மாதிரி சத்தம் போட்டவர்கள் எதிர் கட்சியினரோடு பேசவும், சிரிக்கவும், கை குலுக்கவும் ஆரம்பித்தனர். கேலரியிலிருந்து வெளியே வரும்போது இதைப்பற்றி நான் பிரஸ்தாபித்தேன்.

''இந்தக் கூட்டத்தில் பேசுவது மிகவும் கஷ்டமாய் இருக்கும்,'' என்றேன்.

''உங்களை அவர்கள் அமைதியுடனும் மரியாதையுடனும் கேட்பார்கள்,'' என்று ஜான் பதிலளித்தார். ''வெய்யற்கால கூட்டம் இன்றோடு முடிவடைகிறது. அதனால் நீங்கள் சில வாரங்களுக்குப் பிறகுதான் பேச வேண்டியிருக்கும்.''

''ஹேம்டன் கோர்டில் நான் வந்து இறங்கியதும் ஜான் ''இங்குள்ள முக்கியஸ்தர்கள் பலர் உங்களை சந்திக்க விரும்புகிறார்கள். நீங்கள் கலியாணமாகாதவர் என்பதால் பெண்களுக்கும் உங்களை சந்திப்பதில் ரொம்ப அக்கறை. நீங்கள் மணமாகாதவர்தானே?'' என்றார்.

''ஆம்''

''விவாகரத்து ஒன்றும் இல்லையே?''

''இல்லை.''

''இங்குள்ள பெண்கள் நாய்களுக்கு பயிற்சி கொடுப்பது போலவே கணவர்களையும் சிறு வயதிலேயிருந்து தம் இஷ்டப்படி வளர்ப்புப் பயிற்சி அளிப்பதாகப் பேசுவார்கள். ஆகவே நீங்கள்

ஒத்துக் கொண்டால் முதலில் என் வீட்டில் உங்களுக்கு இரவு சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன். உங்கள் துணை மந்திரி என்னும் முறையில் என் வீட்டுக்குத்தான் நீங்கள் முதலில் வர வேண்டும்.''

ரொம்ப மகிழ்ச்சி. அப்படியே செய்யுங்கள்,'' என்றேன்.

''நீங்கள் வந்தால் என் மனைவியும் மகளும் ரொம்ப சந்தோஷப்படுவார்கள். உங்கள் விஜயம் சிறு இங்கிலாந்திலேயே எங்கள் அந்தஸ்த்தை உயர்த்தும். நாளைக்கு மாலை ஏழு மணிக்கு என் டோங்கா உங்களுக்கு வரும்,'' என்று சொல்லி விடை பெற்றார்.

பட்லர் எனக்காக காத்திருந்தான். குளிப்பதற்கு சுடு நீர் கொண்டுவந்து வைத்தான். இம்மாதிரி சிரத்தையோடு கவனிக்கப்படுவது எனக்க வழக்கமில்லை. மேற்கு கோளத்தில் உடம்புகள் சுத்தம் செய்யும் யந்திரத்தின் மூலமாகத்தான் சுத்தமாகும். ஒரு தடவை உடுத்த துணிகளை மறுபடியும் அணிவதில்லை. ஆகவே அவைகளைப் பிழிவது என்னும் பிரச்சனையே கிடையாது. இங்கே மாதிரி நீர் ஊற்றி குளிப்பது ஒரு துண்டால் பிறகு உடம்பைத் துடைத்துக் கொள்வது அவ்வளவு சுத்தமான முறையாகத் தெரியவில்லை. துடைக்கும் துண்டில் ஆயிரக்கணக்கான கிருமிகள் இருக்கலாம். அப்படியிருந்தும் சுடு நீரில் குளிப்பது மனத்துக்கு ஒரு ரம்மியத்தை அளித்தது. குளித்துவிட்டு வெளியே வந்தபோது பட்லர் ஒரு விஸ்கியை தயாராக வைத்திருந்தான்.

''பட்லர், நீ இந்திய வம்சாவழியில் வந்தவன்தானே?'' திடீரென்று நான் கேட்டேன்.

என் கேள்வியை பட்லர் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் யோசனை செய்து பிறகு ''ஆம் சார்'' என்றான்.

''இப்பொழுது பிரிவினை ரத்து செய்யப்பட்டிருப்பதால் சிறு இங்கிலாந்து இந்தியாவுடன் சேர வேண்டுமா அல்லது பழைய இங்கிலாந்துடன் சேர வேண்டுமா?

பட்லர் முகத்தில் வேதனை தோன்றியது. ''நீங்கள் இப்படி கேட்கலாமா சார்?'' என்றான்.

''ஏன்? அதில் என்ன ஆச்சரியம்?''

''சார் என் நிறம் கருப்பாய் இருந்தாலும் என் உள்ளம் வெள்ளையானது. ஏழு தலைமுறைகளாக நாங்கள் ஆங்கில ஐதீகத்தையே கடைபிடித்து வந்திருக்கிறோம். என் வீட்டில் கூட ஆங்கிலத்தில்தான் பேசுவது வழக்கம். கியூரேடர் உங்களுடன் சொல்லியிருப்பார். இங்குள்ள ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் உள்ள வேறுபாடு நிறத்தில் இல்லை சார். மனப்பான்மையிலும் உணர்ச்சியிலும்தான் இருக்கிறது. இந்த நாட்டை இந்தியர்கள் எடுத்துக்கொள்வதாய் இருந்தால் நான் இங்கிலாந்தில் போய் குடியேற நீங்கள் வசதி செய்ய வேண்டும்.''

என் கேள்வி அவன் உள்ளத்தை கவலையில் ஆழ்த்தி விட்டது போல் தோன்றியது. ''சார், எங்கள் குடும்பம் பல தலைமுறைகளாக ஆங்கிலேயருக்கு சேவை செய்திருக்கிறது. மாட்சிமை தங்கிய இங்கிலாந்து அரசரின் தூதுவர் எனது விசுவாசத்தை சந்தேகிப்பார் என்று நான் நினைக்கவில்லை.''

பட்லருடைய ஆத்மாவே ஒரு வேலையாளின் ஆத்மாவாக தோன்றியது. ''கவலைப்படாதே. உன் விசுவாசத்தை நான் சந்தேகிக்கவில்லை. உன் அபிப்பிராயத்தைப் பற்றித்தான் கேட்டேன்.''

''ரொம்ப வணக்கம் சார்'' என்றான்.

* * *

ஒவ்வொரு இரவும் பத்து மணிக்கு மேல் பத்தரை மணிக்குள்ளாக நான் ச்சக்கை ரேடியோ மூலமாக கூப்பிடுவது என்று ஏற்பாடு செய்திருந்தோம். எனது வாழ்க்கையைப் பற்றியும், பிரச்சனைகளைப் பற்றியும் அவருடன் விவாதிப்பது அவசியம் என்று கருதினேன். ஆனால் முந்திய இரவு அதிகம் குடித்ததாலும் அஜீரணத்தாலும் மனக்கிளர்ச்சியாலும், அது ஞாபகம் வரவில்லை. ஆனால் இன்று நேரத்திலேயே சாப்பிட்டுவிட்டு ஆட்கள் எல்லோரும் படுத்துக்கொண்ட பிறகு ச்சக்கை கூப்பிட்டேன்.

“GB 145 உள்ளோசை” என்ற பரிபாஷையோடு ஆரம்பித்தேன். அதுதான் எங்களுக்குள் அடையாளம் கண்டுகொள்ளும் வழி.

“MD 541 வெளியோசை பேசுங்கள்” என்று தெளிவாக ச்சக்கிடம் இருந்து பதில் வந்தது.

“முதல் வேட்டு விடுங்கள்” என்றார் ச்சக். அவர் எப்பொழுதுமே விஞ்ஞான விஷயங்களைப் பற்றிக் கூட சுவராஸ்யமாய்ப் பேசுவார். இந்த வரலாற்றைப் படிப்போருக்கு அந்த திறமை எனக்கு இல்லை எனத் தெரிந்திருக்கும். ஒரு வேளை பக்குவப்படுத்தும் முறைகளில் இரு கோளங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் இதற்கு காரணமாய் இருக்கலாம். கிழக்கு கோளத்தில் தர்க்க அடிப்படைக்கு பதிலாக கேளிக்கையே அஸ்திவாரமாக இருப்பது போல் தோன்றியது.

“ஒரு உபயோகமான நாள். கியூரேடரை எனக்கு உதவியாளராக அளித்திருக்கிறார்கள். இந்நாட்டின் வரலாற்றை எனக்கு விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். காலையில் தியாகிகளின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினேன். பிற்பகல் பார்லிமெண்ட் கூட்டத்திற்கு கௌரவ விருந்தினராக சென்றேன். எனது வருகையைப் பற்றி விவாதம் காரசாரமாக இருந்தது. பிரச்சனைகள் ஒன்றும் இல்லை.”

“வேலை கொஞ்சம் அதிகம் போல் தெரிகிறது. விளையாட்டும் கொஞ்சம் இருக்க வேண்டும்,” என்றார் ச்சக்.

“நாளை இரவு கியூரேடர் என்னை சாப்பாட்டுக்கு அழைத்திருக்கிறார்.”

“அவருக்கு ஏதாவது வயதுவந்த பெண்கள் உண்டா?”

“ஆம். ஒரு மகள்”.

“பத்திரமாய் இருங்கள்,” ச்சக் சிரித்தார். “உங்களுடைய வெள்ளை சிகையும் வெள்ளை முகமும் அவர்களுக்கு மிகவும் வசீகரமாகத் தோன்றும். மேற்கு கோளத்துக்கு மனைவியோடு போனால் அதன் விளைவுகள் உங்களுக்குத் தெரியும். சந்திர மனைவிகள் எப்படியோ சரிக்கட்டிவிட்டார்கள். ஆனால் நீலமலை மனைவிகளுக்கு அந்த சலுகைகள் கிடைக்காது.”

ச்சக் சொல்வதில் கேளிக்கையுடன் ஒரு எச்சரிக்கையும் கலந்திருந்தது. எனக்கு கோபம்.

“இன்னும் நாற்பத்தி எட்டு மணி நேரத்துக்குப் பிறகு தொடர்பு கொள்கிறேன்,” என்றேன்.

“நான் கொடுத்த மாத்திரைகளை மறந்து விட வேண்டாம்,” என்றார் ச்சக் கடைசியாக.

-----------------

## அத்தியாயம் ஆறு

அன்று இரவு நன்றாக தூங்கினேன். ஏன் சூழ்நிலைக்கும் உணவுக்கும் வழக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றியது. மறுநாள் காலை ஆறரை மணிக்கு பட்லர் டீ கொண்டு வந்தபோதுதான் தூக்கம் தெளிந்தது.

“வணக்கம் சார்!” என்றான் பட்லர். அவனும் கொஞ்சம் உற்சாகமாக இருப்பதாகக் காணப்பட்டான். “நீங்கள் காலை உணவுக்கு முன்னால் நடக்கிறீர்களா அல்லது சவாரி செய்கிறீர்களா? பிரதமர் வீட்டிலிருந்து ஒரு குதிரை அனுப்பியிருக்கிறார்கள்.”

குதிரைச் சவாரி செய்ய ஆசையிருந்தாலும், கொஞ்சம் பயமும் எனக்கு இருந்தது. குதிரை கீழே தள்ளிவிடுமோ என்று யோசனை செய்தேன். ஆனால் குதிரைச் சவாரி தெரியாதென்று சொன்னால் இந்த ஊரில் அதிக மதிப்பு இருக்காது என்பதையும் அறிந்தேன்.

பட்லருக்கு என் சங்கடம் தெரியும் போல் இருந்தது. “நல்ல, பழகிய, சாதுவான குதிரை. குழந்தைகள் கூட சவாரி செய்யலாம்,” என்றான்.

“இன்றைக்கு நான் நடக்கிறேன்,” என்றேன்.

“உங்கள் இஷ்டம் போல் செய்யலாம். நீங்கள் திரும்பி வரும்போது காலை உணவு தயாராக இருக்கும்,” என்றான் பட்லர்.

டீ சாப்பிட்ட பிறகு குளிருக்காக உல்லன் துணிகளைப் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பினேன்.

சூரியனின் இளம் வெய்யில் வெப்பமாக இருந்தாலும் காற்று ‘ஜில்’ என்று குளிராய் வீசியது. கற்பூர மரங்களின் வாசனை பரிமளித்தது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து சோர்ந்த மனதிற்குக்கூட புத்துயிரும் தெம்பும் அளிப்பதாய் இருந்தன. வானத்தை அளாவிய மரங்களிலிருந்து பறவைகளின் பலவித நாதங்கள் கேட்டன. சாய்ந்த புல் தரைகளும் பலவித பூ பாத்திகளும் அழகாக சுற்றிலும் படர்ந்திருந்தன. இந்த ரம்மியமான சூழ்நிலை என் உள்ளத்தில் என்றும் காணாத ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. இந்த வாழ்க்கையை எனது மேற்கு கோள வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அ.மு. காலத்தில் ஒருவருடைய வாசஸ்தலம் என்றால் அங்கு தன் குடும்பத்துடன் வாழ வேண்டும். மனைவி, குழந்தைகள், பெற்றோர் முதலியவர்களுடன் வாழ வேண்டும். அந்த வாழ்க்கையில் அன்பு, ஆசை, சிரிப்பு, துக்கம் எல்லாம் இரண்டரக் கலந்திருக்கும். ஒருவருடைய உடமைகள், ஞாபகச் சின்னங்கள் சுற்றிலும் இருக்கும். ஜதீகம், மரபு, நிரந்தரம் இவைகள் எல்லாம் குடும்ப வாழ்க்கையில் பிரதிபலிக்கும். அதைப்பற்றி சொந்தம் பாராட்ட முடியும். நீலமலை வாசிகளும் இந்த வழக்கப்படிதான் வாழ்கிறார்கள். ஆனால் இந்த அர்த்தத்தில் பார்க்கும்பொழுது எனக்கு சொந்த வீடோ வாசஸ்தலமோ கிடையாது. தூங்கும் அறையும் வேலை செய்யும் இடங்களுந்தான் இருந்தன அல்லது பொதுவான கேளிக்கை மனைகளும் உண்டு. இவையெல்லாமே தீடீரென்று மாறிவிடும். ஒருவருடைய ஆசைகளுக்கும், அந்தஸ்துக்கும் இவற்றிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. எல்லோரும் இன்றைக்காகத்தான் வாழ்ந்தார்கள். பழைய ஞாபகங்களோ எதிர்கால நம்பிக்கைகளோ கிடையாது. ‘உங்கள் ஊர் எது? உங்கள் வீடு எங்கே என்று யாரும் கேட்பதில்லை. ஒருவர் திடீரென்று காணாமற் போய்விட்டார், ‘அவர் எங்கே?’ என்று யாரும் கேட்க மாட்டார்கள். என்ன ஆகியிருக்கலாம் என்று எல்லோருக்கும் தெரியும்.

இங்கு வருமுன்னால் நான் இருந்த சிறு அறையில் இரவுக்கும் பகலுக்கும், வெய்யில் காலத்துக்கும், குளிர்காலத்துக்கும் வித்தியாசமில்லை. உட்காருவதற்கு ஒரு நாற்காலியும் படுக்க ஒரு படுக்கையும் இருந்தன. பார்ப்பதற்கு ஒரு சுவரைத் தவிர வேறொன்றும் இல்லை. அதன் மேல் ஒரு பப் சித்திரம் வரையப்பட்டிருந்தது. அதன் கீழே சில யந்திர முள்களும், கைப் பிடிகளும், திருகுகளும் இருந்தன. அறைக்குள் என்ன நடந்தாலும் அவற்றையெல்லாம் பதிவு செய்யும் வாய்ப்பு இருந்தது. அந்த பதிவுகளெல்லாம் ஒரு மத்திய கம்ப்யூட்டரில் சேகரிக்கப்பட்டு பிரித்து அலசி எனது சொந்த

டைரியில் வைக்கப்படும். அதே மாதிரி என் வேலையைப் பற்றியும், கேளிக்கை இடங்களிலும் எனது நடத்தையை ரிகார்ட் செய்து எல்லாம் அந்த கம்ப்யூடருக்குப் போய் சேரும். இந்த சமாச்சாரங்களைக் கொண்டுதான் எனது பக்குவப்படுத்தும் முறை வகுக்கப்படும். நுான் துாங்கும்பொழுது பப் சுலோகங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும். அவை என் உள் மனதில் புகுந்து ஒரு நிம்மதியையும் விசுவாசத்தையும் ஏற்படுத்தும். வேறு எந்தவிதமான உணர்ச்சிகளோ அதிருப்திகளோ, ஆசைகளோ மனத்தில் தோன்றாது. நான் வேலைக்குப் போனபொழுது சில சமயங்களில் இந்த கேளிக்கையில் பங்கெடுத்தல் நல்லது என்று ஒரு 'யோசனை' என் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும். அல்லது 'பெண் தொடர்பு கொள்ள வேண்டும்' என்று கூட சொல்லலாம். அதிகமாக அழுகை வரும்படியோ அல்லது சிரிக்கும்படியோ இருக்கும் நாடகத்தைப் பார்க்கச் சொல்லலாம். ஆனால் இதிலெல்லாம் ஒரு முக்கியத்துவம் என்னவென்றால் எனக்கு ஒருவித பொறுப்பும் கிடையாது. எல்லாவற்றையும் பப் கவனித்துக்கொள்ளும். பப் தான் மாதா, பிதா, தெய்வம்.

என் இறந்த காலத்தைப் பற்றி நான் பாரபட்சமின்றி பேச வேண்டும். நான் சுகவாசியாக இருந்தேன். நாக்குக்கு வேண்டிய ஆகாரம், உடம்புக்கு வேண்டிய துணி எல்லாம் இருந்தன. நோய், நொடி என்ற பேச்சே கிடையாது. வேண்டிய கேளிக்கை சுலபமாக கிடைக்கும். என் படுக்கை ஒரு காற்றின் மேல் படுப்பது போல் அவ்வளவு சுகமாக இருந்தது. யாரும் என்னை கண்டித்ததோ அல்லது விமரிசத்ததோ கிடையாது. யாராவது என்னுடன் சிரிக்கவோ துக்கப்படவோ அல்லது சண்டை பிடிக்கவோ இல்லை. இங்கே சிறு இங்கிலாந்தில் எல்லோரும் எப்பொழுது பார்த்தாலும் சீதோஷ்ண ஸ்திதியைப்பற்றியும், மழை பெய்யுமா பெய்யாதா என்பதைப் பற்றியும் விவாதிக்கிறார்கள்.

எனது எண்ணங்களிலே ஆழ்ந்து நான் ஒரு பெரிய பாதையை அடைந்தேன். பார்த்தவர்கள் எல்லோரும் சிரித்து வணக்கம் தெரிவித்தார்கள். சில மரங்களின் மீது இருந்த குரங்குகள் என்னை உற்று நோக்கின. ஒரு வயதானவர் என்னைப் பார்த்ததும் நின்று பேசலானார்.

''நீங்கள்தான் ஆங்கில தூதுவரா? ''

''ஆம்,'' என்றேன்.

''மாட்சிமை தங்கிய அரசருக்கு என் வணக்கத்தை அனுப்புங்கள். நான்தான் லார்ட் விண்ட்சர். அங்கே அரச குடும்பத்திற்கு எனது நிலங்களுக்குப் பக்கத்தில் ஒரு கோட்டை இருக்கிறது.''

நான் அனுப்புவதாக ஒத்துக்கொண்டேன். ''எனக்கு வயதாகிவிட்டது. பிரயாணம் செய்ய முடியாது. சிறு வயதாய் இருந்தால் உடனே திரும்பிப் போய் அரசருக்கு சேவை செய்வேன். என் மூதாதைகள் இங்கிலாந்தை ஜெய்த்த வில்லியம் உடன் வந்தவர்கள். இந்த குடி அரசு என்னும் குப்பைத்தொட்டியெல்லாம் அப்போது கிடையாது.''

************

என் காலை உணவு முடிந்ததும் பட்லர் வந்தான்.

''சார் உங்களிடம் ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும்,'' என்றான். அவர் முகத்தில் புன் சிரிப்பு தோன்றியது. ''நீங்கள் இன்று காலையில் பிரதமர் வீட்டுக்குப் போய் மரியாதை செலுத்தினால் அது ராஜதந்திர முறைக்கு ஏற்றதாய் இருக்கும். உங்கள் சன்னத்துகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. அதற்குத் தகுதியான சமயம் வேறு. ஆனால் ஒரு சினேக விருந்தினர் என்னும் முறையில் அதிகாரபூர்வம் இல்லாமல் போய்விட்டு வந்தால் அது உறவை பலப்படுத்துவதாக இருக்கும்.''

''நல்ல யோசனை தான்'', என்றேன்.

''பல ராஜதந்திரிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அவர்களின் பணி ஆட்களைத்தான் நம்பியிருக்கிறார்கள். என் மூதாதைகளில் ஒருவர் - ஜீவ்ஸ் என்பவர் - இங்கிலாந்து தேசத்தில் எல்லா பிரபுக்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கற்பித்தவர். நானும் அவர் ஏற்படுத்திய கோட்பாட்டின் படிதான் நடந்து கொள்ளுகிறேன்.''

''பிரதமர் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தால் என்ன செய்வது? '' என்று கேட்டேன்.

“நான் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன் சார். இன்னும் சிறிது நேரத்தில் டோங்கா வரும். பிரதமர் உங்களை பத்து மணிக்கு எதிர்பார்க்கிறார்.”

“தேங்க்யூ பட்லர்,” என்றேன்.

“சார் நான் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். நீங்கள் அங்கே முதல் தடவையாக செல்கிறீர்கள். சம்பாஷணை சாதாரண விஷயங்களைப் பற்றித்தான் இருக்க வேண்டும். ஆழ்ந்த அரசியல் விஷயங்களைப் பற்றி – அதுவும் பெண்கள் இருக்கும் போது – பேசாமல் இருப்பது நல்லது. நீங்களும் அரை மணி நேரத்துக்கு மேல் இருக்கக்கூடாது. குடிக்க ஏதாவது கொடுத்தால் வாங்கி சாப்பிடலாம். ஆனால் மதிய உணவுக்கு தங்கக் கூடாது.”

பட்லர் சொன்ன யோசனைகளையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு நான் பிரதமர் வீட்டுக்கு சரியாக பத்து மணிக்கு வந்து சேர்ந்தேன். அவருடைய அந்தரங்க காரியதரிசி என்னை வரவேற்றார். “சார், என்னுடைய பெயர் பிட்மென். நாங்கள் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்,” என்றார்.

பிரதமரும் லேடி பால்ட்வினும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வீடும் ஏறக்குறைய ஹேம்டன் கோர்ட் மாதிரிதான் இருந்தது. ஆனால் கொஞ்சம் சுத்தமாக இருந்தது. சில கலைப் பொருள்களும் அவர்களுடைய முன் அறையை அலங்கரித்தன.

“நமது தாய் நாடு எப்படி இருக்கிறது?” என்று லேடி பால்ட்வின் கேட்டார். அவர் ஒரு நெருங்கிய நண்பரைப் பற்றி விசாரிப்பது போல் எனக்குத் தோன்றியது. “இன்னும் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்களா? எனது நான்காம் பாட்டி இங்கிலாந்து என்பதற்கு பதில் ‘ஸ்ட்ரைக்லாந்து’ என்று சொல்வது வழக்கம்.”

“இப்போது அங்கே வேலை நிறுத்தங்கள் கிடையாது,” என்றேன்.

“அதனால்தான் நம் சாம்ராஜ்யமே பாழடைந்தது,” என்றார் அந்த அம்மாள். “அதனால்தான் அமெரிக்கர்கள் நம்மை ஆக்கிரமித்து அந்த முட்டாள்தனமான பிரிவினைக்கு ஒத்துக்கொள்ள வைத்தார்கள். இந்தியர்களும் பிரிவினை பிடிக்கவில்லை. இது அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் சேர்ந்து நம் சாம்ராஜ்யத்தை ஒழிக்க செய்த ஒரு சதி என்று நான் நம்புகிறேன்.”

“மை டியர். சர் ஜியார்ஜுக்கு இந்த அத்தை பாட்டி கதையெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்?” என்றார் சர்.வின்ஸ்டன்.

“இதெல்லாம் அத்தை பாட்டி கதை அல்ல,” என்றார் லேடி பால்ட்வின் பிடிவாதமாக. “நான் என்ன பத்தாம் பசலி 1066 ஆம் வருஷத்தைப்பற்றியா பேசுகிறேன்? ” பிறகு மறுபடியும் என் பக்கம் திரும்பினார். “சர் ஜியார்ஜி, இந்த பிரிவிணையால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட அநியாயங்களையெல்லாம் நீங்கள்தான் தீர்த்து வைக்க வேண்டும்.”

‘என்னால் முடிந்ததை செய்கிறேன்,” என்றேன் நான். ஆழ்ந்த அரசியல் விஷயங்களைப் பற்றி பேச வேண்டாம் என்று பட்லர் சொன்ன யோசனைகள் எல்லாம் இந்த அம்மாள் முன் நடக்காதுபோல் தோன்றியது.

“இங்கேயும் இங்கிலாந்திலேயும் பெண்கள் அரசு ஏற்பட்டால்தான் எல்லோருக்கும் நியாயம் கிடைக்கும். முதல் எலிசபெத் காலத்தில்தானே ஷேக்ஸ்பியரே பிறந்தார்! நான் பிரதமராய் இருந்தால் சில நாட்களில் எல்லா பிரச்சனைகளையும் ஒரே அடியில் தீர்த்துக் கட்டிவிடுவேன்.”

“சந்தேகமே இல்லை?” என்றேன்.

“பெண்களுக்கு ஆட்சி வந்தால் சில நாளில் அடுத்த உலக யுத்தத்தையே ஆரம்பித்துவிடுவார்கள்,” என்றார் பிரதமர்.

ஆனால் லேடி பால்ட்வின் அவர் சொல்வதை கவனிப்பதாய் இல்லை. ‘‘உங்களுக்கு பிரிவினைக்கு முந்திய சமூக சரித்திரம் ஒரு வேளை தெரிந்திருக்கலாம். அக்காலத்தில் பெண்கள் சுதந்திரத்துக்கென்று ஒரு தனி கட்சியிருந்தது. அக்கட்சியின் முயற்சியினால்தான் பல நாடுகளில் பெண் பிரதமர்கள் இருந்தார்கள். இங்கிலாந்தில் கூட மிசஸ் தேச்சர் என்னும் பிரதமர் இருந்தார். ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் தான் பெண்களை பதவிக்கு வர அனுமதிக்கவில்லை. அதனால்தான் பிரிவினைக்கு அவர்கள் காரணம் என்பது தெரிகிறது…….’’

அந்த அம்மாள் மறுபடியும் பேசிக் கொண்டே இருந்திருப்பார். ஆனால் சர் வின்ஸ்டன் குறுக்கிட்டார். ‘‘சர் ஜியார்ஜ் முதல் தடவையாக இங்கு வந்திருக்கிறார். ஒரே நாளில் நம் பிரச்சனைகளையெல்லாம் அவருக்கு சொல்லிவிட்டால் அடுத்த தடவை அவர் வரும்போது பேசுவதற்கு ஒன்றும் இருக்காதே. மேலும் அவருக்கு தாக சாந்திக்கு ஏதாவது அளிக்க வேண்டாமா?

‘‘ஆம் மறந்துவிட்டேன்,’’ என்று லேடி பால்ட்வின் எழுந்தார். ‘‘அதுதான் இன்று பெண்களுடைய வேலை. ஆண்களுக்கு தாக சாந்திக்கு அளிப்பது.’’

பிரதமர் பெரு மூச்சுவிட்டார். ‘‘என் மனைவிக்கும் அரசியல் ஆசை கொஞ்சம் உண்டு’’ என்றார்.

‘‘அதிகார பீடத்துக்குப் பக்கத்தில் இருப்பதால் அது இயற்கைதானே’’ என்று பதிலளித்தேன்.

‘‘என் மனைவி அதிகார பீடத்துக்குப் பக்கத்தில் இருப்பது மட்டும் அல்ல. அதில் உட்கார்ந்திருக்கிறார்’’ என்றார் பிரதமர்.

ஒரு பணி ஆள் இரண்டு டம்ளர்களையும் பாட்டில்களையும் கொண்டு வந்து வைத்தான். சர் வின்ஸ்டன் ஒரு டம்ளர் பியர் ஊற்றிக் கொண்டு எனக்கு ஒன்று அளித்தார்.

‘‘இங்கிலாந்தில் கிரிக்கெட் எப்படியிருக்கிறது? யார்க்ஷயர்தான் வருடாவருடம் வெற்றி பெறுகிறார்களா?’’ எனக்கு வினாவினார்.

கிரிக்கெட் என்ன என்பதே மறந்துவிட்டேன். நல்ல வேளையாக அவர் கேட்டதும் ஞாபகம் வந்தது. என்ன? உங்களுக்கு கிரிக்கெட்டில் அக்கறை இல்லையா? என்றார் பிரதமர்.

‘‘இப்போது அங்கே யாரும் கிரிக்கெட் விளையாடுவதில்லை. ஆஸ்ட்ரேலியர்களும் மேற்கு இந்தியர்களும் கிரிக்கெட் ஆடுவதை விட்டுவிட்டார்கள். இந்தியாவும் பாக்கிஸ்தானும் கிழக்கு கோளத்தின் பகுதி ஆகிவிட்டன. ஆகவே டெஸ்ட் மேட்சுகளே கிடையாது.’’

‘‘சிறு இங்கிலாந்திலிருந்து ஒரு கோஷ்டியை அனுப்பலாம் என்று நினைத்தேன்,’’ என்றார் சர் வின்ஸ்டன். ‘‘கிரிக்கெட் இல்லாத இங்கிலாந்தை கற்பனை செய்வதே கஷ்டமாக இருக்கிறது எனக்கு. நான் இப்போது அங்கே போனால் ஒரு அன்னியன் மாதிரி ஒன்றும் தெரியாதவனாகத்தான் இருப்பேன், இல்லையா?’’

அவருடைய கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. மேற்கு கோளத்தில் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான மாறுதல்களைப் பற்றி இவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் மனோ அதிர்ச்சி தாங்க முடியாத அளவுக்கு இருக்கும்.

‘‘இன்னும் பியர் குடிக்கிறார்களில்லையா?’’ என்று மேலும் கேட்டார் பிரதமர். ‘‘பியர் இல்லையென்றால்தான் அங்கே புரட்சி ஏற்படும் என்று அக்காலத்தில் சொல்வதுண்டு.

‘‘ஆம் எல்லோரும் பியர் குடிக்கிறார்கள்.’’

‘‘ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குடிக்கும் இடம் இருக்கும். ஊர் வம்பு எல்லாம் பேச அது ரொம்ப சவுகரியம்.’’

‘‘நான் லண்டனில் பிறந்து வளர்ந்தவன். அதனால் கிராமங்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது.’’

திடீரென்று பிரதமர் பேச்சை மாற்றினார். “உங்கள் அரசாங்கம் என்னை அங்கு அழைப்பதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா?” என்றார்.

“சிறிது நாளைக்குப் பிறகு நிலைமையை அனுசரித்து அழைப்பது வந்தாலும் வரலாம். ஆனால் இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை.”

“நான் அதிகாரபூர்வமாக இந்தக் கேள்வி கேட்கவில்லை. என் சொந்த ஹோதாவில்தான் கேட்டேன். நீங்களும் தனிப்பட்ட முறையில் இதைப்பற்றி விசாரிக்கலாம் என்று நினைக்கிறேன். அவர்களுடைய அபிப்பிராயம் தெரிந்த பிறகு அதிகாரபூர்வமாக விசாரிக்கலாம். இது கொஞ்சம் ரகசியமாகவே இருக்கட்டும்.”

“சரி, அதுதான் நல்லது,” என்றேன்.

“என் மூதாதைகள் இங்கிலாந்தில் ஸ்டொள்ஹெஞ் என்னும் ஊரில் இருந்து வந்தவர்கள். அப்போது எங்கள் குடும்ப பெயர் ‘எல்டர்டன்’ என்பது. ஆனால் அரசியல் காரணங்களுக்காக நான் அதை மாற்றிக் கொண்டேன்.” சர் வின்ஸ்டன் கொஞ்சம் ரகசியமாக பேசலானார். “என் பழைய தாய் நாட்டைக் காண எனக்கு ரொம்ப ஆவல். பழைய கிராமத்துக்குச் சென்று அங்கே இன்னும் யாராவது ‘எல்டர்டன்’ என்ற பெயருடன் இருக்கிறார்களா என்று பார்க்கலாம். பழைய தஸ்தாவேஜுகளின்படி அங்கே ‘ஜியார்ஜ் அண் ட்ரேகன்’ என்னும் ஒரு குடிக்குமிடம் இருப்பதாக தகவல். அது இன்னும் இருக்கிறதா என்று உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியாதே,” என்றேன்.

“லண்டன் மாநகரில் நீங்களெல்லாம் கேளிக்கையோடு வாழ்ந்து வழக்கப்பட்டவர்கள்,” சர் வின்ஸ்டன் தான் அதையெல்லாம் நேரில் பார்த்தது போல் பேசினார். “சோஹோவின் இரவு களியாட்டங்களும் ராஜாங்க விருந்துகளும் எல்லாம் மிகவும் தமாஷாக இருக்கும்.”

லண்டன் மாநகரில் எனது வாழ்க்கையைப் பற்றி நினைத்தேன். “அ.மு.கால வாழ்க்கைக்கும் இன்றைய வாழ்க்கைக்கும் ரொம்ப தூரம். நீங்கள் இப்பொழுது அங்கே சென்றால் பல ஆச்சரியங்களும் அதிர்ச்சிகளும் உங்களுக்கு இருக்கும்.

“ஆம். நூற்றைம்பது வருடங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும். அது இயற்கைதானே,”என்றார் பிரதமர் கொஞ்சம் சலிப்புடன். “சரி இன்னொரு பியர் சாப்பிடுங்கள்,”

“வேண்டாம். உங்களுக்கு அதிக வேலையிருக்கும். நான் வருகிறேன்,” என்றேன்.

“இங்கே எவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பட்லர் சொல்லியிருப்பானே? ”

“ஆம்”

“பணியாட்கள் இல்லாவிட்டால் வாழ்க்கை ரொம்ப சுலபமானதாக இருக்கும். நீங்கள் கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தால் பட்லர் உங்களுக்கு திருமணம் கூட ஏற்பாடு செய்து விடுவான். உங்களுக்கு மணம் ஆகவில்லையல்லவா? ”

“இல்லை. மணம் செய்துகொள்ளும் உத்தேசமும் இல்லை.” நேற்று ஜான் பேசியதிலிருந்து இதை தெளிவாக அறிவித்துவிடுவது நல்லது என்று நினைத்தேன்.

“இந்த ஊர் பெண்களை உங்களுக்குத் தெரியாது. வலை வீசுவதில் நிபுணர்கள்,” என்றார் பிரதமர் சிர்த்துக்கொண்டே.

அதோடு நான் விடைபெற்றேன். பிட்மென் என்னை வழியனுப்பினார்.

* * * * * * *

அன்று மாலை ஜான் வீட்டில் நடக்கும் விருத்துக்குப் போக நான் தயாரானேன். அங்கு போய்ச் சேர என்ன நேரம் ஆகும் என்று பட்லரை விசாரித்தேன். உடனே பட்லா் அங்கே நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இன்னொரு பாடம் புகட்டினான்.

‘‘சாா், அங்குபோய் சேர பத்து நிமிடம் தான் பிடிக்கும். உங்களை ஏழரை மணிக்கு கூப்பிட்டிருக்கிறாா்கள். ஆனால் நீங்கள் சரியாக ஏழரைக்கு அங்கே போகக் கூடாது. நீங்கள்தான் முக்கிய விருந்தினா். மற்றவா்கள் வந்து சோ்ந்த பிறகு நீங்கள் போய் சோ்ந்தால் போதும். ஆனால் ரொம்ப தாமதித்துச்சென்றாலும் அவ்வளவு நன்றாக இருக்காது. அங்கே ஏழு நாற்பதுக்கு மேல் ஏழு நாற்பத்தைந்துக்குள்ளாக போய்ச் சேர வேண்டும்.’’

எனது கடிகாரத்தைப் பாா்த்துக் கொண்டே ‘‘சரி’’ என்றேன்.

‘‘போவதற்கு முன்னால் ஒரு ட்ரிங்க் சாப்பிட்டுவிட்டுப் போவது நல்லது. அப்போதுதான் மனது ரம்மியமாக இருக்கும்,’’ என்று சொல்லி ஒரு டம்ளா் விஸ்கி கொண்டுவந்து வைத்தான்.

நான் அதைக் குடித்துக்கொண்டிருந்த போது மேலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் சொன்னான்.

‘‘விருந்து சாப்பிட்ட உடனே நீங்கள் திரும்பி வரக்கூடாது. டோங்கா ஓட்டுபவன் சாப்பிடுவதற்கு பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் ஆகும். அதனால் அரை மணி நேரம் கழித்து நீங்கள் புறப்பட வேண்டும். நீங்கள் விடைபெற்ற பிறகுதான் மற்றவா்களும் புறப்படுவாா்கள். அதனால் அரை மணி நேரத்திற்கு மேலும் இருக்கக் கூடாது.’’

நான் ஜான் வீட்டை அடைந்தபொழுது அங்கே சுமாா் பத்து பெண்களும் பத்து ஆண்களும் கூடியிருந்தனா். பேச்சு சுவாரஸ்யமாக இருக்கும் போல் இருந்தது. ஆனால் நான் சென்றதும் எல்லோரும் பேச்சை நிறுத்தி என்னைத் திரும்பிப் பாா்த்தாா்கள். ஜான் என்னை அழைத்துக் கொண்டு போய் எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தாா்.

‘‘வெளியுலக விருந்தினா்!’’ என்றாா் எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவா். புரொபஸா் வோ்ட்ஸ்வொா்த் என்று ஜான் அவரை அறிமுகப்படுத்தினாா். ‘‘உங்களுடைய வெகு தூர உறவினா்கள் எப்படி இருக்கிறாா்கள் என்று பாா்க்க வந்திருக்கிறீா்களா?’’

‘‘நான் சந்திரனிலிருந்தோ செவ்வாயிலிருந்தோ வரவில்லை. இதே உலகத்திலிருந்துதான் வந்திருக்கிறேன்,’’ என்றேன்.

‘‘எங்களைப் பொருத்தவரையில் எல்லாம் ஒன்றுதான்,’’ என்றாா் புரொபஸா். ‘‘உலகம் ஒரு உருண்டையென்றும் அது சூரியனைச் சுற்றி வருகிறதென்றும் தெரியும். ஆனால் எங்களைப் பொருத்தவரை அது உருண்டையும் இல்லை தட்டாகவும் இல்லை. கரடு முரடாகவும் குளிராகவும்தான் இருக்கிறது. இந்த நீலமலைகளுக்கு வெளியே என்ன இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது.’’

‘‘கவலைப்படாதீா்கள் வில்லியம்’’ என்றாா் அவா் மனைவி. ‘‘சா் ஜியாா்ஜ், ஓய்வுக்காக இங்கிலாந்து செல்லும்போது உங்களையும் கூட்டிக்கொண்டு போய் எல்லாவற்றையும் காண்பித்து ஏரோப்ளேனில் பத்திரமாக கூட்டிக்கொண்டு வருவாா்.’’

‘‘எல்லாவற்றையும் எதற்காக பாா்க்க வேண்டும்? ’’ என்றாா் புரொபஸா் வோ்ட்ஸ்வொா்த். ‘‘இந்த ஊரை விட்டுப் போக வேண்டுமா என்பதே ஒரு சா்ச்சைக்குரிய விஷயம். ஆனால் போக முடிந்தால் நல்லதுதான். எனது பெயா் பெற்ற அந்த பழைய கவி வாழ்ந்த இடத்தை ஒரு தடவை பாா்த்துவிட்டால் போதும். அப்புறம் உடனே திரும்பி வந்துவிடுவேன்.’’

‘‘அது முடியுமா சா் ஜியாா்ஜ்? ’’ அவா் மனைவி விசாரித்தாா். முடியுமானால் நானும் அவருடன் போய் ஆக்ஸ்போா்ட் வீதியிலும் ரீஜெண்ட் வீதியிலும் உள்ள கடைகளைப் பாா்த்தால் மனசுக்கு கொஞ்சம் திருப்தியிருக்கும்.’’

“இன்னும் சிறிது காலத்துக்குப் பிறகு ஒரு வேளை ஏற்பாடு செய்ய முடியலாம்,” என்று பதிலளித்தேன்.

“ராஜதந்திரி வெகு ஜாக்கிரதையாக பேசுகிறார்,” சிரித்துக்கொண்டே யாரோ சொன்னார்கள்.

“இங்கிலாந்து நீங்கள் நினைக்கிறமாதிரி இருக்கும் என்பதற்கு என்ன ஊர்ஜிதம்? ” சிரிப்பை அலட்சியம் செய்துவிட்டு நான் கேட்டேன். “அந்த நாடு இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் கண்ணுக்குத் தெரியாதபடி மாறியிருக்கலாம். இப்போது நீங்கள் அங்கே சென்றால் பல ஆச்சரியங்களையும் ஏமாற்றங்களையும் எதிர்பார்க்கலாம்.”

“கவலைப்பட வேண்டாம் சர் ஜியார்ஜ்” என்றாள் ஒரு இளம் பெண். அவள்தான் ஜான் தம்பதிகளுடைய மகள் ஷீலா என்று அறிந்தேன். பார்ப்பதற்கு அழகாக இல்லாவிட்டாலும் அறிவுள்ளவளாகவும் சுதந்திர மனப்பான்மை உடையவளாகவும் தோன்றினாள். “இங்கிலாந்துக்கு டிக்கெட் இல்லாமல் போக நாங்கள் விரும்பவில்லை. சுவர்க்கத்தைப் பற்றி எப்படியோ அதே மாதிரிதான் நாங்கள் இங்கிலாந்தைப் பற்றியும் நினைக்கிறோம். அது ஒரு எட்டாத இடம். ஆனால் அங்கே போய்விட்டால் அது அவ்வளவு பிரமாதமாக இருக்காது.”

அவருடைய புத்தி கூர்மையை நான் மெச்சினேன். ஆனால் பதில் சொல்வதற்கு முன் இன்னொருவர் சம்பாஷணையில் இடைமறுத்தார். “இங்கிலாந்து ஏன் மாறவேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கு முன் இரண்டாவது உலக யுத்தத்தின்போது எல்லோரும் பாடிய பாடல் ஒன்று என் ஞாபகத்துக்கு வருகிறது.

“இங்கிலாந்து எப்போதும் அப்படியே இருக்கும்,” என்று

“உங்கள் பெயர் என்ன? ” என்று நான் விசாரித்தேன்.

“இவர்தான் சிறு இங்கிலாந்தின் அரசாங்கக் கவிஞர் ராபர்ட் க்ருக்,” என்று ஜான் அறிமுகம் செய்து வைத்தார்.

கவிஞர் தம் கேள்விக்கு பதில் எதிர்பார்க்கவில்லை. மேலும் பேசலானார். “எவ்வளவுக்கெவ்வளவு பொருள்கள் மாறுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவைகள் முன் போல் இருக்கும். நாம் ஒரு வட்டத்தில் சுற்றிக் கொண்டே இருக்கிறோம். எவ்வளவு தூரம் போனாலும் மீண்டும் அதே இடத்திற்குத்தான் வந்து சேருவோம். அதற்குத்தான் முன்னேற்றம் என்று பெயர்.”

“நாம் வெறும் வட்டத்தில் செல்வதில்லை. வட்டமான படிக்கட்டுகளில் செல்கிறோம். அதே இடத்துக்கு திரும்பி வந்தாலும் கொஞ்சம் உயர் மட்டத்தில் வருகிறோம். அது தான் முன்னேற்றம்,” என்றார் புரொபஸர் வேர்ட்ஸ்வொர்த்.

“புரொபசர் வேர்ட்ஸ்வொர்த்தான் சிறு இங்கிலாந்தின் தத்துவ நிபுணர்,” என்றார் ஷீலா.

“சும்மா ரவுண்டைப் பற்றி பேசுகிறீர்களே தவிர இன்னொரு ரவுண்ட் ட்ரிங்க்சைத்தான் காணோம்,” என்றார் மன்றோ என்னும் விவசாயி.

“அது என் தப்பு. இதோ கொண்ட வருகிறேன்,” என்று கூறி ஷீலா மறைந்தாள்.

ஜான் மனைவி மிஸஸ் கியூரேடர், “பணி ஆட்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டம். அதற்காகத்தான் இந்தியர்களை இங்கே இருக்க ஆதியில் அனுமதித்தோம். ஆனால் இப்போது அவர்கள் வீட்டு வேலைக்கு வர மறுக்கிறார்கள்” என்றார்.

“வெகு சீக்கிரத்தில் நாம் அவர்களிடம் வேலைக்குப் போக வேண்டும்,” என்றார் மன்றோ.

“அவர்கள் ஏன் நம்மிடம் வேலை செய்ய வேண்டும்? ” என்று கேட்டார் கவி ராபர்ட் க்ருக்.

“இன்னும் சில ஆண்டுகளில் அவர்களே நாட்டைக் கைப்பற்றி விடுவார்கள் போல் இருக்கிறது. நல்ல வேளையாக இங்கே ஜனநாயகம். நாம் இன்னும் பெரும்பான்மையோராக இருக்கிறோம்,” என்றார் இன்னொருவர்.

“கொஞ்சம் பொறுங்கள்,” என்றார் மன்றோ. “அவர்களுடைய ஜனத்தொகை நம்மைவிட அதிகம் பெருகிக்கொண்டு போகிறது. இன்னும் இரண்டு தலைமுறைகளில் அவர்கள் நம்மை மிஞ்சி விடுவார்கள்.”

“ஆனால் அதற்குள்ளாக இந்த பிரிவினை சமாசாரம் எல்லாம் மாறிவிடும். நாம் இங்கிலாந்தின் ஒரு பகுதி ஆகிவிடுவோம்.”

ஒரு வயதான கிழவர் சம்பாஷணையில் ஈடுபட்டார். அவர் பெயர் ஸ்கின்னர். “இந்தியர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். குடிப்பதோ சீட்டாடுவதோ பந்தயம் கட்டும் வழக்கமோ அவர்களிடம் கிடையாது. அவர்கள் இந்நாட்டை ஆண்டால் செழிக்கும்.”

“நீங்கள் பேசுவது நாட்டுத் துரோகம்,” என்று மிஸஸ்.வோர்ட்ஸ்வொர்த் கூறினார். “அவர்கள் ஆண்டால் நமக்கு நாடே இல்லாமல் போய்விடும்.”

நல்லவேளையாக அந்த சமயத்தில் ஷீலா ஒரு தட்டத்தில் பல டம்ளர்கள் நிறைய பானங்களோடு வந்தாள் . எல்லோரும் ஒவ்வொரு டம்ளர் எடுத்துக் கொண்டார். அதே சமயத்தில் ஜான் வந்து “சர். ஜியார்ஜ் நீங்கள் மற்றவர்களையும் சந்திக்க வேண்டும்” என்று இன்னொரு கூட்டத்துக்கு அழைத்துச் சென்றார்.

முதலில் பார்லிமெண்ட் அங்கத்தினர் விக்கர்ஸ் என்பவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். “நீங்கள் லண்டனிலிருந்து வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன் ரொம்ப மகிழ்ச்சி. என்னைப் பொருத்தவரையிலும் லண்டனுக்குப் போய் சில நாடகங்களைப் பார்த்தால் போதும். பிறகு பார்லிமெண்டுக்குப் போய் அவர்கள் முறைகளைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கு நாங்கள் கைப்பற்றும் சில முறைகள் தவறு என்பது என் கருத்து,” உங்களுக்கு பார்லிமெண்டரி முறைகளைப் பற்றி பரிச்சயம் இருக்கிறதா? ”

“ இல்லை” என்றேன்.

“நீங்கள் நேற்று கீழ் சபைக்கு வந்திருந்தீர்களே? எங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? வெஸ்ட் மினிஸ்டர் அளவுக்கு நாங்கள் வருவோமா? ”

“பார்லிமெண்டரி முறையில் பேச்சு சுதந்திரம்தான் முக்கியம் என்றால் நீங்கள் பழைய இங்கிலாந்து பார்லிமெண்டுக்கு ஈடானவர்கள் என்பதில் சந்தேகமில்லை.”

“இவர் ஒரு கேள்விக்குக்கூட நேரான பதில் சொல்லவில்லை,” என்றார் கவிஞர் க்ரூக். அவர் எனக்குப் பின்னாலேயே வந்திருக்கிறார். “தொட்டும் தொடாமல் பேசுகிறார். இன்றைய இங்கிலாந்து எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. தாகசாந்தியைத் தவிர வேறு வழியில்லை,” என்று சொல்லிவிட்டு மற்றொரு டம்ளரைத் தேடிக்கொண்டு போனார்.

“எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு அது ஒன்றுதான்,” என்று ஆமோதித்தார் பார்லிமெண்ட் அங்கத்தினர்.

“வெஸ்ட் மினிஸ்டர் எபியையும், பார்லிமெண்ட் கட்டிடங்களையும், பக்கிங்ஹாம் அரண்மனையையும் ஒரு தடவை பார்த்துவிட்டால் அப்புறம் மகிழ்ச்சியாக இறந்துவிடலாம். நம் ஜனநாயகத்துக்கே அவைகள்தான் அஸ்திவாரம்,” என்று மேலும் விக்கர்ஸ் பேசினார். எல்லா அரசியல்வாதிகளுக்குள்ள குறை அவருக்கும் இருந்தது. அதாவது அதிகம் பேசுவது.

“அரசியல்வாதிகள் எப்பொழுதும் மிக சாதாரண விஷயங்களைப் பற்றித்தான் பேசுவார்கள். அவர்களுக்கு வேறொன்றும் தெரியாது” என்று கவிஞர் மேலும் ஆரம்பித்தார். “பண்பாடு என்றால்

என்ன, ஒரு ஷேக்ஸ்பியர் நாடகம், மில்டனின் கவிதை, இவற்றையெல்லாம் பற்றி சொன்னால் மீட்டர் என்ன விலை என்றுதான் கேட்பார்கள்.''

''வெட்டி வாக்குவாதம் வேண்டாம்,'' என்றார் மிஸஸ் வோர்ட்ஸ்வொர்த்.

''பழையகால லண்டனைப் பற்றி இவ்வளவு விரிவாக உங்களுக்கு எப்படி ஞாபகமிருக்கிறது?'' என்று கேட்டேன்.

''பழைய காலத்தைப்பற்றி நினைப்பதைவிட வேறு இங்கு என்ன வேலை? '' என்றாள் ஷீலா. ''நீங்கள் வந்திருப்பதனால் பழைய ஞாபகங்களெல்லாம் புதிய நம்பிக்கைகளாக உருவெடுக்கின்றன.''

சம்பாஷணையில் எல்லோரும் பங்கு கொண்டனர். உள்ளூர் பிரச்சனைகள், விலைவாசிகள், மதுவிலக்கு, பழைய கல்விக்கும் புது கல்விக்கும் இருக்கும் போட்டி இவற்றையெல்லாம் பற்றி வாக்குவாதம் நடந்தது. சிறிது நேரம் நான் இருப்பதையே மறந்துவிட்டார்கள்.

''என் மாணவர்கள் ஒரு புது மாதிரி பரிட்சை வேண்டும் என்று கேட்கிறார்கள்,'' என்றார் புரொபஸர் வோர்ட்ஸ்வொர்த். ''ஆசிரியர்கள் கேள்வி கேட்டு மார்க் போடுவதற்கு பதிலாக ஒவ்வொரு மாணவனும் தன்னைத்தானே சோதித்துக் கொள்ள வேண்டும் என்பது. கல்விக்கு முடிவு கட்டுவதற்கு அதுதான் நல்ல வழி.''

இன்னொருவர் விவசாய நிறுவனம் கையால் இயங்கும் தண்ணீர் பம்பை உற்பத்தி செய்திருப்பதாக சொன்னார். 'புது தொழில் கொள்கை' க்கு இது உதவுமா என்று விவாதிக்கப்பட்டது. இப்போது பிரிவினை இல்லையாதலால் இந்தியாவிலிருந்து ஏன் உதவி கோரக்கூடாது என்று ஒருவர் கேட்டார். ஆனால் இது ஒரு சர்வதேச பிரச்சனை ஆகிவிடும் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

மது வகைகள் அதிகமாக ஆக பேச்சு சுவாரஸ்யமாயிற்று. சிரிப்பும் சத்தமும் அதிகமாயின. இரண்டு பேர் பாட ஆரம்பித்தனர். பாடல்களெல்லாம் அ.மு.காலத்தவை.

'காதல் தீர என்னைச்சேர வாதேனோ? '

என்று ஒருவர் ஆரம்பித்தார். மற்றவர்களும் பின்பாட்டு பாட ஆரம்பித்தனர். அடி அடியாக பாடிக்கொண்டே வந்தனர். பாட்டு ரொம்ப நீளமாகத் தோன்றியது.

''சர் ஜியார்ஜ், நீங்களும் சேர்ந்து பாடுங்கள்,'' புரொபஸர் என்னைக் கூப்பிட்டார்.

''எனக்கு இந்த பாடல்கள் ஒன்றுமே தெரியாது,'' என்றேன்.

''இல்லையென்றால் புதிய பாடல்களை எங்களுக்கு கற்பிக்க வேண்டும்!''

''எனக்கு பாட்டே தெரியாது,'' என்று கை விரித்தேன். சீக்கிரம் என்னை மறந்துவிட்டு வேறு பாடல்களில் ஈடுபட்டார்கள்.

வெளியே நல்ல குளிர்ச்சியாக இருந்தாலும் வீட்டுக்குள்ளே உப்புசமாக இருந்தது. பாட்டுடன் ஆட்டமும் சேர்ந்தது. எல்லோரும் உற்சாகத்துடன் பங்கு கொண்டார்கள். ஷீலா மேலும் மது வகைகளைக் கொண்டு வரச் சென்றாள். நான் காற்று வாங்க வெளியில் வெராண்டாவுக்குச் சென்றேன். சில நிமிடங்களில் ஷீலாவும் அங்கே வந்தாள்.

''நாங்கள் எல்லாம் காட்டு மிராண்டிகள் என்று நீங்கள் நினைப்பீர்கள்,'' என்றாள் ஷீலா. ''லண்டனில் ரொம்ப உயர்ந்த பண்பாட்டையும் கேளிக்கைகளையும் பார்த்து அனுபவித்தபிறகு எங்கள் பழையகால ஆட்டமும் பாட்டும் உங்களுக்குப் பிடிக்காது.''

''இல்லை, இல்லை,'' என்றேன்.'' எல்லோரும் மகிழ்வோடும் சிநேக பாவத்தோடும் இம்மாதிரி நடந்துகொள்வது லண்டனில் கிடையாது. அன்பு, உணர்வு, ஆசை எல்லாம் மாறிவிட்டன. இது எனக்கு ஒரு புது தெம்பு அளிக்கிறது. ''அங்கே கேளிக்கையே ஒரு தொழில் மாதிரி ஆகிவிட்டது.''

“தொழில் கேளிக்கையாகி விட்டதா? ”

“இல்லை.”

“எங்களிடம் ஒரு பழைய கிராமபோன் கூட கிடையாது,” என்றாள் ஷீலா விசனத்துடன். இங்கிருக்கும் கிராம போன்களும் ரேடியோக்களும் வெறும் அலங்காரங்கள்; பழைய காலத்தை ஞாபகப்படுத்தும் சின்னங்கள். எங்கள் சங்கீத வாத்யங்கள்கூட பத்தாம்பசலிதான். பாட்டுகளெல்லாம் இருநூறு ஆண்டுகளுக்கு முந்தியவை.”

“கிராமபோன் வேலைசெய்வதில்லை என்று நீ கவலைப்பட வேண்டாம்,” என்று ஆறுதல் சொன்னேன். “உலக அரசியல் அரங்கில் நீங்கள் ஈடு வைக்கப்பட்டீர்கள். அது உங்கள் குற்றம் அல்ல. எவ்வளவோ கஷ்டங்களுக்கு உட்பட்டும் கூட உங்கள் தனிமையையும் ஹாஸ்ய உணர்ச்சியையும் நன்றாக பாதுகாத்து வந்திருக்கிறீர்கள்.”

“இந்த நாட்டில் ஒவ்வொரு குடும்பமும் தமது வம்சாவளியை மிகவும் பத்திரமாக எழுதி அதைப் பாதுகாத்து வந்திருக்கின்றது,” என்றாள் ஷீலா. இங்கிலாந்தில் ஏழு தலைமுறைகளுக்கு முன்பு எந்த ஊரில் பிறந்தோம், என்ன தொழில் செய்தோம் என்னும் விவரங்களையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் பெயர்களை மாற்றிக்கொண்டபோது கூட பழைய பெயர்களை அப்புத்தகங்களில் எழுதி வைத்திருக்கிறோம். இறந்த காலத்திய தொடர்பை நாங்கள் மறக்கவில்லை. எங்கள் வாழ்க்கையே ஒரு நாடகம் மாதிரி ஆகிவிட்டது. பழைய காலத்தில் வாழ்கிறோமே தவிர இன்றைய உலகில் நாங்கள் இல்லை. பட்டுப் பூச்சி தனது கூடுக்குள்ளே வாழ்வது போல வாழ்ந்து வருகிறோம். இங்கிலாந்து மறுபடியும் இந்தியாவை ஆக்கிரமிக்கும் என்று நினைத்து இந்துக்கள் அடுத்த அவதாரத்துக்கு காத்திருப்பது போல நாங்களும் காத்திருக்கிறோம். நீலமலைகளைச் சுற்றியுள்ள சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பிகள் எங்களுடைய எல்லா ஆவல்களையும் ஏமாற்றங்களையும் தடுத்து நிறுத்திவிட்டன. தொட்டபெட்டா சிகரத்தின் மீதோ பைகாரா முடி மீதோ நின்றுகொண்டு தூரத்திலுள்ள சமவெளிகளையும் அங்கே ஏற்படும் மாறுதல்களையும் பார்ப்பதுதான் எங்களுக்கு வேலை. நூற்றைம்பது வருடங்களாக கனாக் கண்டுகொண்டே இருந்து விட்டோம். நீங்கள் வந்துதான் எங்கள் நிம்மதியை குலைத்து விட்டீர்கள். நிறைவேறாத எங்கள் ஆசைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஒரு கைப்பிடி கொடுத்துவீட்டீர்கள்.”

“ஆம். நான் வந்ததும் உங்கள் தனிமை முடிந்துவிட்டது. அது உறுதி.”

“எங்கள் தனிமை போய்விட்டது என்றால் எங்கள் சுதந்திரமும், ஒற்றுமையும் போய்விடுமல்லவா?” என்றாள் ஷீலா. “எங்களுடைய கனவுகளும், நாடக வாழ்வும் போய்விடுமே? புதிய, கொடூரமான யதார்த்த வாழ்வில் எங்களால் வாழ முடியுமா? எனக்கென்னவோ எதிர்காலத்தைப் பற்றி நினைத்தாலே பயங்கரமாகத் தோன்றுகிறது.”

பப்பின் யதார்த்தவாதம் என் நினைவுக்கு வந்தது. “ஆம். உண்மைதான்,” என்றேன்.

“எங்கள் விதியே உங்கள் கையில்தான் இருக்கின்றது.” ஷீலா மெதுவாக பேசினாள். “யேசுநாதர் மறுபடியும் வரப்போவதாக பைபிளில் சொல்லயிருக்கிறது. அந்தமாதிரிதான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுடைய அறிக்கையைப் பொருத்துத்தான் எங்கள் தலையெழுத்து நிர்ணயிக்கப்படும். அதை அறிந்து கொள்ளாமல் நாங்கள் உங்கள் உதவியால் இங்கிலாந்து போக முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.”

“எனது வருகைக்கு நீ ரொம்ப முக்கியத்துவம் அளிக்கிறாய்.”

“உள்ளே இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் சிறிய ஆசைகளை வைத்துக் கொண்டு அவற்றை நிறைவேற்ற முயற்சிக்கிறார்களே தவிர உமது வருகையின் உண்மையையோ முக்கியத்துவத்தையோ அறிந்துகொள்ளவில்லை. பிரதமருக்குக்கூட தெரியுமா என்பது சந்தேகம்தான்.”

ஷீலாவின் முகம் அந்த மங்கலான ஒளியில் பிரகாசித்தது அவளுடைய உள்ளத்தின் எழுச்சிகள். ஆவல்கள் அவன் கண்களில் பிரதிபலித்தது. அவளுடைய சிந்தனைகளும், உணர்வுகளும் என் உள்ளத்தைக் கிளரின. அவளை அணைத்து முத்தமிட வேண்டும் என்று தோன்றியது. நல்ல

வேலையாக என் இச்சையை அடக்கிக் கொண்டேன். அங்கிருந்த எல்லோரையும்விட அவளுடைய பிரித்தணுகும் சக்தியும் எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையும் அவள் அறிவை வெளிப்படுத்தியது. அவளுடன் உண்மையைச் சொல்லலாமா, நான் அரச தூதுவன் அல்ல. எனது அறிக்கையை யாரும் பார்க்கப்போவதில்லை என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளலாமா என்று ஒரு நிமிடம் யோசித்தேன். அதற்கு வேண்டிய தைரியம் எனக்கு இல்லை.

‘‘நாளாவட்டத்தில் எல்லாம் சரியாகிவிடும்,’’ என்ற ஆறுதல் கூறினேன்.

‘‘நாளாவட்டத்தில் எல்லோரும் இறந்துவிடுவோம், இல்லையா?’’ என்றாள் சோகச் சிரிப்புடன்.

பிறகு ‘‘சாப்பாட்டைப் பற்றி கவனிக்க வேண்டும்,’’ என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஷீலாவுடன் பேசிய பிறகுதான் என்னுடைய சங்கடமான நிலைமை எனக்கு தெளிவாகப் பட்டது. அப்பொழுதுதான் புரொபஸர் வேர்ட்ஸ்வொர்த் வெளியே வந்தார். ‘‘சர் ஜியார்ஜ் உங்களைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். ஆஸ்தான கவிஞர் தமது புதிய கவியை அரங்கேற்றம் செய்யப் போகிறார். நீங்கள் வந்து கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு கோபம் வந்துவிடும்,’’ என்று என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

ராபர்ட் க்ரூக் தமது கவிதையை வாசித்தார். முடிந்ததும் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்.

பிறகு எல்லோரும் சாப்பிடும் அறைக்குச் சென்றோம். தட்டங்களும், கத்தி முள்ளுகளும் ஒரு மேஜை மேலும் பலவகைப்பட்ட பதார்த்தங்கள் இன்னொரு மேஜை மேலும் இருந்தன. ஒவ்வொருவரும் ஒரு தட்டத்தை எடுத்து தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக்கொள்ளலாம். முக்கிய விருந்தினர் என்னும் முறையில் நான் தான் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஜானின் மனைவி எது ருசியாக இருக்கும் என்று எனக்கு விவரித்தார். சுவர்களின் மேல் சில தட்டங்கள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. தனது ஆறாவது பாட்டி இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்த தட்டங்கள் என்று பெருமையாக அந்த அம்மாள் சொல்லிக் கொண்டாள்.

‘‘ஆம். அவைகள் மிகவும் அபூர்வமானவை. சிறு இங்கிலாந்தில் வேறு யாரிடத்திலும் இம்மாதிரி தட்டங்கள் கிடையாது’’ என்று புரொபஸர் மனைவி ஆமோதித்தார்.

‘‘அவைகளை நன்றாக வைத்திருப்பது தொந்தரவுதான். யார் திருடிக்கொண்டு போய் விடுவார்களோ என்னும் பயம் வேற,’’ என்றாள் ஷீலா.

‘‘அவை நம் வம்சாவளியைக் காட்டுகிறது. தாய்நாட்டுடன் இருக்கும் தொடர்புக்கு அடையாளம். பண மதிப்பு இல்லாவிட்டாலும் மனோ எழுச்சி விலை அதிகம்,’’ என்றார் அவள் அம்மா.

சாப்பிட்ட பிறகு எனக்கு பட்லரின் அறிவுரை ஞாபகத்துக்கு வந்தது. அரை மணி நேரத்துக்குப் பிறகு எல்லோருடனும் கைகுலுக்கி விடைபெற்றேன்.

‘‘நான் சொன்னதையெல்லாம் ரொம்ப முக்கியத்துவமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்,’’ என்றாள் ஷீலா.

‘‘பெண்கள் சொல்வதற்கு எப்பொழுதுமே நான் முக்கியத்துவம் அளிப்பதில்லை,’’ என்றேன் தமாஷாக.

‘‘இங்கத்து ஆண்களுக்கும் உங்களுக்கும் வித்தயாசம் இல்லை போல் தெரிகிறது,’’ என்றாள் ஷீலா.

‘‘இருந்தாலும் நம் சம்பாஷணை ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது.’’

‘‘நான் ஒரு முட்டாள் என்று நினைக்காமல் இருந்தால் சரி.’’

‘‘நம் சம்பாஷணை மறுபடியும் தொடர வேண்டும் என்பதுதான் என் விருப்பம்,’’ என்றேன்.

‘‘ஒரு வேளை நாளைக்கு மாதா கோவிலில் சந்திப்போம்,’’ என்று விடைபெற்றாள் ஷீலா.

# அத்தியாயம் ஏழு

ஞாயிற்றுக் கிழமை மேற்கு கோளத்தில் பப் தத்துவத்துக்கு அற்பணம் செய்த மாதிரி சிறு இங்கிலாந்தில் அது கடவுளுக்கு அற்பணம் செய்யப்பட்டது. டெலிவிஷன் ரேடியோ முதலிய சாதனங்கள் இல்லாவிட்டாலும் இங்கு மரபும் நம்பிக்கையும் ஏராளமாக இருந்தன. குடிக்கும் இடங்களும் பந்தாடும் இடங்களும், மற்ற கேளிக்கை இல்லங்களும் அன்று மூடப்பட்டன. ஏறக்குறைய எல்லோருமே இரண்டு தடவை கோவிலுக்குப் போவார்கள். இது ஒரு சமூக முக்கியத்துவம் பெற்றது என்றே சொல்லலாம். அவரவர்களுடைய சினேகிதர்களை சந்திப்பது, கோவில் புல் தரையில் அவர்களுடன் உரையாடுவது, பிறகு அவர்களையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போய் பியர் சாப்பிடுவது - இவையெல்லாம் வாராவாரம் நடக்கும் சடங்குகள் மாதிரி. பட்லர் சொன்ன பிரகாரம் நான் செண்ட் பால்ஸ் கெதிட்ரல் என்னும் கோவிலுக்கு நடந்து சென்றேன். பிரதம மந்திரியிலிருந்து நகரின் முக்கியஸ்தர்கள் எல்லோரும் அங்கேதான் வழிபடுவார்கள் என்று பட்லர் அறிவித்திருந்தான். எல்லோரும் அவரவர்கள் குடும்பங்களுடன் தமக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். எனக்கும் இரண்டாவது வரிசையில் கியூரேடரின் ஆசனத்துக்கு அருகில் ஒரு நாற்காலி வைக்கப்பட்டிருந்தது.

வழிபாடு ரொம்ப நேரம் ஆயிற்று. பிஷப் தமது உரையில் எனது வருகையைப் பற்றியும் எதிர்கால மாறுதல்களைப் பற்றியும் நாசூக்காக சுட்டிக் காட்டினார். மோஸஸ் தமது மக்களை ஈஜிப்டிலிருந்து இஸ்ரேலுக்கு கூட்டிச்சென்றது போல நானும் சிறு இங்கிலாந்து வாசிகளை பெரிய பிரிட்டனுக்கு கூட்டிக்கொண்டு போக வந்திருப்பதாக சொன்னார்.

வழிபாடு முடிந்த பிறகு எல்லோரும் வெளியே வந்து பேசிக் கொண்டிருந்தோம். ‘‘புது மோசஸ் என்று ஒருவர் என்னை அழைத்தார். ஆனால் அதைப்பற்றி நான் அக்கரை செய்யவில்லை.

‘‘மோசஸ் மாதரி பத்து புது கட்டளைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா சர் ஜியார்ஜ்?’’ என்று ஒருவர் கேட்டார். ‘‘பழைய கட்டளைகளை அமல்படுத்துவதே கஷ்டமாக இருக்கிறதே.’’

‘‘பைபிளைப் படித்திருந்தால் உங்களுக்கே தெரியுமே? ’’என்றார் ஜான். ‘‘அவைகள் பின்னால் வரும். நீங்கள் தாய்நாடு போன பிறகு.

‘‘அப்படியென்றால் நான் இங்கேயே இருந்துவிடுகிறேன்,’’ என்றார் அவர்.

‘‘நீங்கள் பழைய கட்டளைகளையே இன்னும் அமல்படுத்தவில்லை. ஆகையால் புதியவைகளைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? ’’ என்றார் ஜான். எல்லோரும் சிரித்தார்கள்.

நாங்கள் நகர்ந்தபோது ஷீலா வந்தாள். ‘‘இவ்வளவு அதிகாரம் இருப்பது மனதுக்கு எப்படித் தோன்றுகிறது?’’ என்றாள்.

‘‘நீ சொல்வது அர்த்தமாகவில்லையே’’ என்றேன்.

‘‘இந்நாட்டின் எதிர்காலமே உங்கள் உள்ளங்கையில்தானே இருக்கிறது.’’

‘‘உண்மையாகச் சொன்னால், நான் எப்போதுமே அதிகாரத்தை உபயோகப் படுத்தியதில்லை,’’ என்றேன். என் பழைய வாழ்க்கையைப் பற்றி அவர்களுக்கு தெரிந்தால் என்னைப் பற்றி பரிதாபப்படுவார்களே தவிர பொறாமைப்பட மாட்டார்கள்.

‘‘ஆனால் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். அதுதானே முக்கியம்? ’’ என்றாள் ஷீலா.

‘‘அம்மாதிரி தப்பான அபிப்பிராயத்தை நான் ஏற்படுத்தவில்லையே? ’’ என்றேன்.

‘‘எங்கள் அபிப்பிராயம் நீங்கள் நடப்பதைப் பொருத்து இல்லை. உங்களுடைய அந்தஸ்த்தைப் பொருத்தது. நீங்கள் ஆங்கில அரசாங்கத்தின் தூதுவர் என்று எங்களுக்குத் தெரியும். நிலைமையை

அறிந்து எங்களை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்யத்தான் உங்களை அனுப்பியிருக்கிறார்கள். அப்படியில்லை என்றால் கிழக்கு கோள அரசாங்கம் நீங்கள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்திருக்கமாட்டார்கள்.''

''ஷீலா, இந்த உலகம் நீ நினைப்பதைவிட ரொம்ப சிக்கலானது,'' என்று நான் அறிவுறுத்தினேன். ''இங்கிருப்பவர்கள் யாருமே இன்றைய இங்கிலாந்தில் சந்தோஷமாக இருக்க முடியாது.''

''யூதர்களை மோசஸ் இஸ்ரேலுக்கு கூட்டிச் சென்றபோது அவர்கள் சந்தோஷமாக இருந்தார்களா?'' ஷீலா திருப்பிக் கேட்டாள். ''அது அவர்கள் விதி. அதே மாதிரி இங்கிலாந்துக்குப் போக வேண்டியதும் எங்கள் விதி. எங்களை அங்கே கூட்டிக்கொண்டு போவது உங்கள் பொறுப்பு. உங்களைப் பற்றி நான் ரொம்ப பெருமைப்படுகிறேன்,'' என்று சொல்லி அன்போடு தன் கையை என் கை மீது வைத்தாள்.

அந்த நிமிடத்தில் நான் என்றும் இல்லாத ஆனந்தம் அடைந்தேன். வயதானவர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக என்னைப் பெருமைப்படுத்திப் பேசுவது முக்கியமல்ல. ஆனால் தன் நாட்டுக்காக ஒரு இளம் பெண் வாதாடினால் எப்படி மறுக்க முடியும்? அதுவும் அன்பு காட்டிக் கேட்டால் என்ன சொல்வது? நானும் அவள் கையை கொஞ்சம் அழுத்தினேன்.

''மதிய உணவுக்கு எங்களோடு வாருங்கள்,'' என்று ஷீலா அழைத்தாள். ''அப்பா அதை ரொம்ப விரும்புவார்.''

''பட்லர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பானே,'' என்றேன்.

''உங்கள் வாழ்க்கையை பட்லரிடம் ஒப்பித்துவிட வேண்டாம். எங்களோடு சாப்பிடுவதாக அவனுக்கு செய்தி அனுப்பிவிடலாம்.''

நான் கியூரேடர் குடும்பத்தினருடன் அவர்கள் வீட்டுக்குப் போனேன். ஷீலா என்னை தனது உடமை ஆக்கிக்கொண்டது போலத் தோன்றியது. இளம் பெண்கள் உள்ள மற்ற பெற்றோர்கள் நாங்கள் போவதை கூர்மையாக கவனித்தனர்.

''வழக்கமாக ஞாயிறன்று நாங்கள் மதுவகைகளை உபயோகிப்பதில்லை. ஆனால் ஒரு முக்கிய விருந்தினர் இருக்கும்போது அதற்கு விலக்களிக்கலாம்,'' என்று சொல்லி ஜான் இரண்டு டம்ளர் பியர் கொண்டு வந்தார். இம்மாதிரி குடிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் விருந்தினர் என்ற முறையில் வேண்டாம் என்று சொல்லவும் மனம் வரவில்லை. ஒரு டம்ளருக்குப் பிறகு மற்றொன்றும் வந்தது. கடைசியாக சாப்பிட உட்கார்ந்தபொழுது எனக்கு என்னையும் மீறி தூக்கம் வரும்போல் இருந்தது. என்ன சாப்பிட்டோம் என்றே ஞாபகம் இல்லை.

''நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள். நாங்கள் வயதானவர்கள். கொஞ்சம் தூங்கப் போகிறோம்'' என்று சொல்லிவிட்டு ஜான் தம்பதிகள் அவர்கள் அரைக்குப் போய்விட்டார்கள்.

ஷீலாவும் நானும் தனியாக இருந்தோம். நிலைமை எனக்கு ஒரு புதிராக இருந்தது. ஷீலாவுக்கு என்மேல் அன்பு என்றும் அதை அவள் பெற்றோர்களும் விரும்புகிறார்கள் என்றும் நான் தெரிந்து கொண்டேன். மேற்கு கோளத்தில் இந்த மாதிரியான பிரச்சனைகளே கிடையாது. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பினால் அவர்கள் உடனே செக்ஸ் தொடர்பு வைத்துக் கொள்வார்கள். அது ஒரு நாள், ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் நீளலாம். அதற்கு மேல் போவதை பப் விரும்பவில்லை. நிரந்திர உறவு சமூக துரோகம் என்பது பப் தத்துவத்தின் ஒரு முக்கிய அம்சம். திருமணமும், குடும்பமும் ரத்து செய்யப்பட்ட பின் அம்மாதிரி உறவுகளுக்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் சிறு இங்கிலாந்தில் பழைய மரபுகளும், நீதிகளும் மக்கள் உள்ளங்களை கவர்ந்திருந்தன. நான் இங்கே வெறும் பார்வையாளனாக இருப்பது கஷ்டம் என்றும் அறிந்தேன். ச்சக் அன்று சொன்னது உண்மைதான். உணர்ச்சிவசப்படாமல் பங்குகொள்வதுதான் நல்லது. ஆனால் எவ்வளவு தூரம் பங்கு கொள்ளலாம்? அதுவும் திருமணத்தில் ஈடுபடாமல்? அ.மு பழக்கவழக்கங்களைப் பற்றி படங்களில் பார்ப்பதும் புத்தகங்களில் படிப்பதும் ஒன்று. ஆனால் பங்கு கொள்வது மிகவும் சிக்கலானது என்று தெரிந்தது.

“நீங்கள் ராஜதந்திரி ஆவதற்கு முன்பு பிராதன சரித்திரத்தில் அக்கரை கொண்டிருந்தீர்களாமே? ” என்று ஷீலா கேட்டாள்.

“உனக்கு எப்படித் தெரியும்?”

“அதைப்பற்றி நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை,” ஷீலா சிரித்துக்கொண்டே சொன்னாள். “இங்கே உங்களை அழைத்து வந்தவர் தமது இந்திய நண்பர்களுடன் சொல்லியிருப்பார்போல் இருக்கிறது. செய்திகள் இங்கே சீக்கிரம் பரவும். இங்கிலாந்து சரித்திரத்தில் உங்களுக்கு அக்கரையிருந்தால் நீங்கள் இந்த புஸ்தகத்தைப் படிக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் இதிலிருந்துதான் பழைய சரித்திரத்தைக் கற்கிறோம்,” எனக்கு ஒரு சிறு புஸ்தகத்தை கொடுத்தாள்.

அது ஆங்கில சரித்திரத்தை ஹாஸ்ய உணர்வுடன் எழுதிய புத்தகம். “நான் படிக்கிறேன்” என்று வாங்கிக் கொண்டேன்.

நாங்கள் ஒரே சோபாவில்தான் உட்கார்ந்திருந்தோம். ஷீலா மெல்ல மெல்ல நகர்ந்து என் பக்கத்தில் அமர்ந்தாள். “இப்போது இங்கிலாந்தில் எல்லாம் எப்படி என்று சொல்லுங்களேன்?” என்று என் தோள் மீது தன் கையைப் போட்டாள். “என்னிடம் மட்டும் சொல்லுங்கள். நான் யாருடனும் அதைப் பற்றி பேச மாட்டேன்,” என் தோளை கொஞ்சம் அழுத்தினாள்.

“எங்கே ஆரம்பிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை,” என்றேன். “எல்லாம் அவ்வளவு மாறிவிட்டன. இங்கே இருப்பவர்களுக்கு அதை கற்பனை செய்வதே கஷ்டமாக இருக்கும். அங்கே நீங்கள் யாராவது போனால் அது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருக்கும்.”

“இருந்தாலும் சொல்லுங்கள்,” அவள் கொஞ்சினாள். “ஆண்களும் பெண்களும் இப்போதும் தனி இடங்களுக்குப் போவதில்லையா? சினிமாவில் பின் வரிசையில் உட்கார்ந்து கொண்டு முத்தம் வைப்பதில்லையா? இறுக்கப் பிடித்து நடனமாடுவதில்லையா? ”

அவளுடைய உடம்பு ஸ்பரிசம் எனக்குப் பட்டது. ஆனால் மதுவும், உணவும் ஒரு சோர்வையும் உண்டாக்கியது. ஷீலா மேலும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

“இங்கிலாந்து முன்மாதிரி இப்போது தனி நாடல்ல. மேற்கு கோளத்தின் ஒரு பகுதி, அதுவும் ஒரு சிறிய பகுதி,” என்றேன்.

அதைச் சொன்னதும் ‘ஏன் சொன்னோம்’ என்று ஆகிவிட்டது. ‘இங்கிலாந்து ஒரு சுதந்திர நாடு அல்ல என்றால் நீங்கள் எப்படி அந்நாட்டு தூதுவராக வரலாம்? ” என்று ஷீலா உடனே திருப்பிக் கேட்டிருக்கலாம். நல்ல வேளையாக அவள் மனது வேறு திக்கில் சென்று கொண்டிருந்தது.

“தனி நாடல்லவென்றால், ராஜகுடும்பம், பார்லிமெண்ட், ஒன்றுமே இல்லையா? ”

“இல்லை”

“ஆனால் ஆடல் பாடல்களும் கேளிக்கைகளும் பிரமாதமாக இருக்குமே?”

பொது கேளிக்கைகளைப் பற்றியும் புதுவித டெலிவிஷன், ஆகார வகைகள், வைத்தியத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், ஆண்பெண் உறவு சுதந்திரம், ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சொன்னேன்.

“அப்படியா? ” என்றாள் ஷீலா ஆச்சரியத்துடன். “ஆண் பெண் உறவில் ஒரு விதி, ஒழுங்கு, விசுவாசம், நம்பிக்கை, காதல் ஒன்றுமே கிடையாதா? திருமணம் என்பதற்கு ஒரு தூய்மை, புனிதத்தன்மை என்பதே இல்லையா? ”

“தூய்மை, புனிதத்தன்மை மட்டுமல்ல. திருமணமே கிடையாது. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் மணம் சட்ட விரோதமாக்கப்பட்டது. இருவர் வேண்டுமென்றால் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அரசுக்கு எந்தவிதமான நிரந்தர உறவும் கூடாதென்பதுதான் கொள்கை.”

“இந்த நிலைமையில் குழந்தைகளை எப்படி வளர்க்கிறார்கள்? ” கேட்டாள் ஷீலா.

அதனால் நான் செயற்கை முறை குழந்தைகளைப் பற்றியும், ஜனத்தொகை கட்டுப்பாடுபற்றியும், புது முறைக் கல்வியைப் பற்றியும் சொல்ல வேண்டி நேர்ந்தது. ஷீலாவுக்கு இவையெல்லாம் கொஞ்சம் பயங்கரமாக தோன்றியிருக்க வேண்டும். என்னிடம் இருந்து கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொண்டாள். ஆனால் நான் பப் தத்துவத்தைப் பற்றியும் பக்குவப்படுத்தும் முறைகளைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. இதுவரை சொன்னதே அவளுக்கு பெரிய அதிர்ச்சியாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

சிறிது நேரம் ஷீலா பேசவில்லை. மெல்ல மெல்ல முகத்தில் கொஞ்சம் ஒளி வீச ஆரம்பித்தது. “நீங்கள் சொன்னதெல்லாம் பெரிய ஆச்சரியம்தான். ஆனால் நீங்கள் அதற்கெல்லாம் விலக்கல்லவா? எங்கள் பழைய பண்பாடு உங்களுக்கு பிடித்திருப்பதாக எனக்குத் தெரிகிறது இல்லையா?”

நான் புராதன சரித்திரத்தைக் கற்றவன். ஆதனால் நான் இரண்டு பண்பாடுகளுக்கும் சரி செய்து கொள்வேன்.

“ஆனால் உங்களுக்கு எது பிடித்தது? ”

“இங்கே இருப்பதுதான் எனக்குப் பிடித்தது. என் வாழ்க்கையில் முதல் தடவையாக மனிதாபிமானம் என்றால் என்ன என்று அறிந்து கொண்டேன். யந்திரங்களுக்கும், விஞ்ஞானத்துக்கும், நாம் அடிமையாவதைவிட அவைகளை நமக்கு அடிமையாக்குவதுதான் மேல் என அறிந்து கொண்டேன். ஆனால் மனத்தில், புனிதத் தன்மையில் எனக்கு நம்பிக்கையில்லை,” என்றேன்.

“இங்கிலாந்திலுள்ள மக்கள் எல்லோரும் அறிவு மிகுதியாக வளர்ந்த மிருகங்களாய் இருக்க வேண்டும்,” என்று ஷீலா கூறினாள். “நீதி, நேர்மை, சமூக கண்ணியம், முதலியவை அவர்களுக்கு இல்லைபோல் இருக்கிறது. ஆனால் நாங்கள் அங்கே சென்றால் அதையெல்லாம் மாற்றிவிடுவோம்!”

தம் வாழ்க்கையின் உயர் தரத்தில் அவளுக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது!

அப்புறம் பேச்சு எப்படித்திரும்பியது என்று எனக்கு ஞாபகமில்லை. ஷீலாவின் மடி மீது தலை வைத்து நான் உறங்கி விட்டேன் எழுந்தவுடன் மன்னிப்பு கேட்டேன். ஆனால் ஷீலா “நீங்கள் ரொம்ப சோர்ந்து போய் இருக்க வேண்டும். உங்களை எழுப்ப எனக்கு மனம் வரவில்லை. ஆனால் மறுபடியும் சந்தித்து நம் சுவாரஸ்யமான சம்பாஷணையைத் தொடர வேண்டும்,” என்றாள்.

* * *

அன்று இரவு நான் ச்சக்குடன் தொடர்பு கொண்டேன். பரிபாஷை மூலம் ஒருவரையொருவர் தெரிந்துகொண்ட பிறகு பேசலானோம்.

என் நடவடிக்கைகளைப் பற்றி அவரிடம் சுருக்கமாக சொன்னேன். முக்கியாக பார்லிமெண்ட் விஜயத்தைப் பற்றி சொன்னேன்.

“காற்று பைகள் கிடக்கட்டும். நல்ல பெண்களை சந்தித்தீர்களா? ” என்றார் அவர்.

பிறகு ஜான் வீட்டு விருந்தைப் பற்றியும், மாதா கோவிலுக்குப் போனதைப் பற்றியும் ஷீலாவைப் பற்றியும் சொன்னேன். “நான் அ.மு சரித்திர ஆசிரியர் என்று ஏன் சொன்னீர்கள்? என்று கேட்டேன்.

“உங்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகத்தான்” என்றார் ச்சக். “உங்கள் தொழிலைப் பற்றி சொன்னால்தான் மற்றவர்களுக்கு உங்கள் மேல் கொஞ்சம் அக்கறை இருக்கும்.”

“ஷீலா நல்ல அறிவாளி. நல்ல வேளையாக என்னை இங்கிலாந்தைப் பற்றி குறுக்கு விசாரணை செய்யவில்லை,” என்று நடந்ததை தெளிவாக சொன்னேன்.

என் கவலையை ச்சக் கவனித்ததாக தெரியவில்லை,” ஷீலாவை இப்பொழுதே ரொம்ப பிடித்துவிட்டதா? ” என்றார்.

“இல்லை, இல்லை. நான்தான் பப்பைப் பின்பற்றுபவன் ஆயிற்றே.”

“பார்ப்பதற்கு நன்றாக இருப்பாளா? ”

“பரவாயில்லை,” என்றேன்.

“அவளுடைய அறிவுக்காக மட்டுமேதான் செக்ஸா? ”

“செக்ஸைத் தவிர உங்களுக்கு வேற நினைப்பே இல்லையா? ” என்று கேட்டேன்.

“நான் முன்பே உங்களுக்கு தெளிவாக சொல்லியபடி இதெல்லாம் விஞ்ஞான சேவைக்காகத்தான்,” என்றார் ச்சக். “உங்கள் மகிழ்ச்சிக்காகவும் கூட என்று சொல்லலாம். நான் கொடுத்த மாத்திரைகளை மறந்துவிட வேண்டாம்.”

“அவைகள் தேவைப்படுமா என்பது சந்தேகம்” என்றேன். “இனிமேல் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் உங்களைக் கூப்பிடுகிறேன்.”

“நீங்கள் எப்படி சொன்னாலும் சரி.” என்று ச்சக் பேச்சை முடித்தார்.

* * *

அடுத்த சில வாரங்களில் என் சூழ்நிலையை நன்றாக அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்து. பார்லிமெண்ட் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதனாலும் பிரதமர் ஒய்வு எடுத்துக் கொண்டிருந்ததனாலும் எனக்கு வேலையில்லை. எனது சன்னத்துகளை சமர்ப்பிப்பதும் தள்ளிவைக்கப்பட்டது. பட்லரின் தூண்டுதலின் பேரில் நான் குதிரைச் சவாரி செய்யக் கற்றுக் கொண்டேன். பிறகு எங்காவது செல்ல வேண்டுமென்றால் டோங்காவை நம்பியிருக்க வேண்டியதில்லை. என் வாழ்நாள் முழுதும் பிரமாண்ட கம்ப்யூட்டரைத் தவிர வேறு யாரும் கவனிக்காமல் சுற்றிப் பழகியவனுக்கு எப்பொழுதுமே கூட டோங்கா ஓட்டுபவன் இருந்தால் அது தொந்தரவளித்தது. எல்லா சம்பவங்களும் போக்குவரத்துகளும் பப் மூலம் பதிவு செய்யப்பட்டாலும், கூடவே ஒரு மனிதன் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. பக்குவப்படுத்தும் மாத்திரைகளும் இல்லாமல் ‘ராஜாங்க தூதுவர்’ ஆக நடிப்பதும் கொஞ்சம் கஷ்டமாய் இருந்தது. குதிரை மேலோ, நடந்தோ, தனியாக சுற்றுவது மனதுக்கு ஆறுதலை அளித்தது.

சிறு வனங்களிலும் மேடுபள்ளங்களிலும் கிராமப்புறங்களிலும் தனியாக சுற்றினேன். பாழடைந்த தொழிற்சாலைகளும், மின்சாரம் இல்லாதகம்பிகளும் விளக்குமரங்களும், யந்திர பாகங்களும் பல இடங்களில் சிதறிக் கிடந்தன. ஆனால் டீ தோட்டங்கள் நேர்த்தியாக பராமரிக்கப்பட்டு வந்தன. சில சமயங்களில் ஒரு புது வீடு தெரியும். சுற்றிலுமுள்ள பாழடைந்த சூழ்நிலைக்கு அது ஒரு திருஷ்டி பரிகாராம்போல் இருக்கும். மலைகளின் கீழ் மட்டங்களில் நெல் வயல்களும், காய்கறித்தோட்டங்களும் இருந்தன. பல கஷ்டங்களும் இடையூறுகளும் இருந்தும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் சிரிப்பும் நிறைய இருக்கிறமாதிரி தோன்றியது. மக்களுக்கு எந்தவிதமான கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. சில சமயங்களில் பேச்சும் கூச்சலும் சண்டை சச்சரவுகளும் மானிட உறவில் நிறைந்திருந்தது. ஆனால் பயம், சந்தேகம் என்பதே அவர்களிடம் இல்லை. வாழ்நாள் பூராவும் கேள்வி கேட்காமல் சொன்னபடி செய்துவந்த எனக்கு இந்த சுதந்திரம் முதலில் ஒரு பெரிய அதிர்ச்சியாகவும் பின்னால் ஒரு மன எழுச்சியாகவும் தெரிந்தது. ‘சுதந்திரம் முன்னேற்றத்துக்கு எதிரி’ என்றும் பப் டிக் டைப் பின்பற்றியவனுக்கு இம்மாதிரி சுதந்திரமாக மக்கள் வாழ முடியுமா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. இந்த முரண்பாடுகள் எனக்கு மிகுந்த வேதனை அளித்தன.

சில சமயங்களில் கிராமப்புரங்களில் நான் சில மக்களை சந்தித்தேன். என் வெள்ளைத் தலைமயிரும் வெள்ளை முகமும் அவர்களை சந்தேகத்தில் ஆழ்த்தின. அவர்களுக்குள்ளேயே பேசிக் கொள்வார்கள்.

“அது யார் அந்த ஆள்? ”

“உனக்குத் தெரியாதா? இங்கிலாந்திலிருந்து வந்த தூதுவரைப் பற்றி நீ கேள்விப்படவில்லையா? ”

“கம்பிக்கு அப்பால் இருந்து வந்தவன் என்றால் தீர்த்துவிடுவேன்.”

“பார்த்தால் அப்படியா இருக்கிறார்? ”

ஒரு தடவை ஒரு பெண் என்னைப் பார்த்து, “இங்கிலாந்திலிருந்து தங்கம் ஏதாவது கொண்டு வந்தீர்களா? ” என்று கேட்டாள்.

உடனே அவள் கணவன், “தங்கத்தால் என்ன உபயோகம். டர்பைனுக்கு உபகரணங்கள் கொண்டுவந்திருந்தால் பிரயோஜனம் இருக்கும்,” என்றார்.

“மின்சாரத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை. தங்கம் இருந்தால் இந்திய பெண்கள் மாதிரி நானும் நகை வைத்துக்கொள்ளலாம்.”

பொதுவாக கிராம மக்கள் சினேகபாவத்தோடு இருந்தார்கள். டீ அல்லது காப்பி குடிக்க அழைத்தார்கள். அவர்கள் குழந்தைகளுக்கு என்னைக் காண்பித்து, “பார் தாய் நாட்டிலிருந்து வந்தவர்” என்று பெருமையோடு சொன்னார்கள். தலைநகரில் இருந்தவர்களைவிட ரொம்ப பாமர மக்களாக தோன்றினர்.

மேற்கு கோளத்தில் இருந்த எந்த ஒரு சவுகரியமும் இங்கே எனக்கு இல்லை. 3-D டெலிவிஷன், தூரப் பேச்சுக்கு போனோவிஷன், சீதோஷ்ணகட்டுப்பாடு, பலமட்டங்களில் ஓடும் பாறை வாகனங்கள், கேளிக்கை மனைகள், சுலபமான, சிக்கல் இல்லாத செக்ஸ் வாழ்க்கை, இவை ஒன்றுமே இல்லை. உலகத்திலேயே மிக ஜன நெருக்கமுள்ள நகரத்தில் நான் பிறந்து வளர்ந்திருந்தாலும் அங்கு தனிமை இருந்ததே தவிர தோழமை, அன்னியோன்யம், அன்புறவு, இவை கிடையாது. ஆனால் நான் தனிமையாய் இருந்தேன் என்று இங்கு வரும்வரைக்கும் எனக்குத் தெரியவில்லை. நான்மட்டுமல்ல மேற்குகோளத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒரு தீவு மாதிரி. பாந்தம் என்பதே கிடையாது. ஆனால் இங்கே உறவு, அன்பு, சுதந்திரம், தொடர்பு இவைகள்தான் முக்கியமாகத் தோன்றியது. மனித சமூகம்இ மனித அபிமானம் என்றவற்றை இங்கு வந்தபின்தான் நான் உணர்ந்தேன். நோய்கள், விபத்துகள், சாவுகள் நிறைய இருந்தாலும், பொறாமை, வெறுப்பு, சண்டை முதலியவைகள் இருந்தாலும் அன்பு, விசுவாசம், தியாகம் இவை எல்லாவற்றிக்கும் மேலாக நல்லது கெட்டது என்பதற்கு வித்தியாசம் இந்த குணங்களும் இவர்களிடம் நிறைய இருந்தன. முதலில் இவை எனக்கு நன்றாக புரியாவிட்டாலும் நாளாவட்டத்தில் இவைகளெல்லாம் எனக்கு வாழ்க்கையில் ஒரு புது உற்சாகத்தை உண்டாக்கின்.

விவாதம்தான் இவர்களுடைய மூச்சாக இருந்தது. ஒருவரைப் பற்றி இன்னொருவர் என்ன சொன்னாலும் சிறிது நேரத்தில் அதை மறந்துவிட்டு கைகுலுக்கி தமாஷாக பேசி நண்பர்கள் ஆகிவிடுவார்கள். ஜனத்தொகை சிறிதாயிருந்தாலும் எப்பொழுது பார்த்தாலும் சண்டை பிடிப்பதும் சினேகமாவதுமோ அவர்கள் தொழில் மாதிரி தோன்றியது.

நகரத்தின் கூட்டமான இடங்களுக்குச் சென்று சாதாரண மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள நான் ஆசைப்பட்டேன். குடிக்குமிடங்களிலும், உணவுச் சாலைகளிலும் அவர்களை சந்திக்க விரும்பினேன். ஆனால் ஜான் வேண்டாமென்று அறிவுறுத்தினார். “இது ஒரு சுதந்திர நாடு. ஆனால் சில சமயங்களில் அந்த சுதந்திரம் கட்டுக்கு மீறிவிடுகிறது. நீங்கள் உங்கள் அந்தஸ்த்துக்கு தகுந்தவர்களோடே உறவாடுவதுதான் நல்லது நீங்கள் ஏதாவது விவாதத்திலோ சண்டையிலோ மாட்டிக்கொண்டால் நம் உறவுக்கு நல்லதல்ல,” என்றார்.

அவருடைய எச்சரிக்கையை புறக்கணித்துவிட்டு நான் ஒருநாள் நகருக்குள் சென்றேன். பட்லரிடம்கூட பொய் சொல்ல வேண்டியிருந்தது. என்னை யாருக்கும் அடையாளம் தெரியாதிருக்க

கொஞ்சம் இருட்டான பிறகு சென்றேன். வீதி விளக்குகள் அதிகம் இல்லை. நகரம் ரொம்ப அசுத்தமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் குப்பை, கூளம், ஜலதாரைகளில் அழுக்குத் தண்ணீர். நகரின் ஒரு அம்சம் எனக்கு உடனே பட்டது. அதுதான் சுவற்றுப் பத்திரிக்கைகள் காகிதக் குறைவினாலும் அச்சடிக்கும் யந்தரக் குறைவினாலும் யார் என்ன சொல்ல விரும்பினாலும் அதை சுவற்றில் எழுதி விடுவார்கள். மாலை நேரத்தில் மக்கள் அதைப் படித்து ரசிப்பார்கள். ஹாஸ்யமாக ஏதாவது எழுதியிருந்தால் அங்கே கூட்டம் நிறைய இருக்கும். சில இடங்களில் இதற்காகவே சுவர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவைகளுக்கு 'சுதந்திரச் சுவர்' என்று பெயர். யார் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். மற்ற சுவர்கள் அரசாங்கத்துக்கும், அரசியல் கட்சிகளுக்கும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இருட்டாகிவிட்டதால் நான் அவைகளைப் படிக்க முடியவில்லை. ஆனால் ஒரு இடத்தில் இருந்த தலையங்கத்தைப் பார்க்க முடிந்தது. 'ச்சர்சுக்காகவும் ச்சர்ச்சிலுக்காகவும் போரிடுவோம்' என்றிருந்தது. பப் தத்துவத்தின் முறைகளும் உத்திகளும், நுணுக்கங்களும் இவர்களுக்கு இல்லாவிட்டாலும் இவர்கள் கையாண்ட முறையும் மிகவும் நல்லதாக எனக்குப் பட்டது. வார்த்தைகள் ஆக்கிரமிப்பையும் பலாத்காரத்தையும் தூண்டுவனவாக எனக்குப்பட்டது. ஆனால் மற்றவர்கள் அதற்கு அவ்வளவு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

பொதுமக்களின் முக்கியமான பொழுதுபோக்கு மது சாப்பிடுவதுதான். கடைவீதியில் மது விற்கும், குடிக்கும் இடங்கள் ஏராளமாக இருந்தன. பழைய இங்கிலாந்திலுள்ள பெயர்கள்தான் அவைகளுக்கும் வைக்கப்பட்டிருந்தன. அடுத்தபடியாக நாடக மன்றங்களும், பெண்கள் அரை நிர்வாணமாக ஆடும் இடங்களும் மிகுந்திருந்தன.

ஒரே ஒரு தடவை நான் குடிக்கும் பார் ஒன்றுக்குள் சென்றேன். உள்ளே ஏகப்பட்ட கூட்டம். பேச்சு சத்தமும் அதிகமாய் இருந்தது. மேஜைகள் நாற்காலிகளெல்லாம் அழுக்குப்பட்டிருந்தன. பழைய மது நாற்றம் எங்கும் வியாப்பித்திருந்தது. மதுபானங்கள் ஊற்றும் இடத்தில் சில கிழிந்த படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் சிலர் பணம் வைத்து சீட்டாடிக்கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் எல்லாம் பார்த்துவிட்டு வெளியே போய்விட முடிவு செய்தேன்.

அப்போது, "நீங்கள் இங்கே புதியவர். இல்லையா?" என்றாள் ஒரு கனத்த பெண்.

"ஆம்" என்று ஒத்துக்கொண்டேன்.

"உங்களுக்கு பர்மிட் இருக்கிறதா? " என்றாள்.

அவள் சொன்னது எனக்குப் புரியவில்லை.

"பர்மிட் இல்லாமல் இங்கே வரக்கூடாது. தெரியாதா? " என்று கேட்டாள்.

அப்போதுதான் எனக்கு மது குடிக்க பர்மிட் வேண்டும் என்பது ஞாபகம் வந்தது. மேலும் அப்படி ஏதாவது குடித்தாலும் அதை வாங்க பணம் கொண்டு வரவில்லை என்பதையும் உணர்ந்தேன்.

"நான் சும்மா பார்க்கத்தான் வந்தேன்."

அந்தப் பெண் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். என் உடைகளையும் முகத்தையும் நன்றாக பார்த்துவிட்டு "எல்லாம் பார்த்தாகிவிட்டதா அல்லது இன்னும் கொஞ்சம் பார்க்க வேண்டுமா? " என்று கோபத்தோடு கேட்டாள்.

எனக்கு பயமாய் இருந்தது. "நான் வந்து...... ஏதோ ..... சும்மா," என்று இழுத்தேன்.

"ஏழைகள் எப்படிக் குடிக்கிறார்கள் என்று பார்க்க வந்தையா? உனக்கிருக்கிறதெல்லாம் எங்களுக்கும் இருக்கிறது. கொஞ்சம் ஜாஸ்தியாகவே இருக்கிறது. என்ன தெரிஞ்சதா? "

"விரட்டு முடுக்கு ஜலீன்" என்று ஒருவன் பாருக்கு பின்னாலிருந்து கத்தினான்.

"சரி! போ வெளியே," என்று என்னைப் பிடித்து தள்ளினாள்.

அதே சமயத்தில் ஒரு இளம் பெண் உள்ளே வந்தாள். "ஜலின்! கொஞ்சம் பொறு. அவரை எனக்குத் தெரியும். அவருக்கு நான் ஜாமின்," என்றாள்.

ஜலீன் என்ற பெண் என்னை வெளியே தள்ளுவதை நிறுத்தி தன் கையை எடுத்துக் கொண்டாள். உள்ளேவந்த பெண் என்னைப் பார்த்து “என்ன சாப்பிடுகிறீர்கள்? ” என்று கேட்டாள்.

“நான் பணம் ஒன்றும் கொண்டுவரவில்லை. சும்மா பார்க்கலாமென்று உள்ளே வந்தேன். உங்களிடமிருந்து பானம் வாங்கிக்கொள்வது சரியல்ல,” என்றேன்.

“சரியாக நடந்துகொள்பவர் போல் இருக்கிறீர்களே?” என்றாள் அந்தப் பெண். “பிறகு ஜலீனுடன் “வழக்கம்போல் இரண்டு கொண்டுவா,” என்றாள்.

பிறகு என்னைப் பார்த்து, “சங்கடப்பட வேண்டாம். நீங்கள் யார் என்று எனக்குத் தெரியும். நீங்கள் இங்கு வந்த அன்று கூட்டத்தில் நின்று நானும் உங்களைப் பார்த்தேன்.”

அந்தப் பெண் என்னை அடையாளம் தெரிந்துகொண்டதால் என் சங்கடம் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. பழைய மது நாற்றமும் புகையிலைப் புகையும் என்னைத் திணர வைத்தன. இந்த சூழ்நிலையில் என்னால் குடிக்கமுடியுமா என்பதே சந்தேகமாக இருந்தது.

“பயப்பட வேண்டாம். இங்கே நீங்கள் சந்தோஷமாக இருந்து அனுபவிக்கலாம். யாரும் உங்களை கண்டுகொள்ளமாட்டார்கள். பிறகு வேண்டுமென்றால் என் வீட்டுக்கு சென்று தனியாக இருக்கலாம்,” அவள் கண்ணைச் சிமிட்டினாள்.

ஆனால் கவலை, பயம் என்னைவிட்டு நீங்கவில்லை.

அவள் ஒரு இளம் பெண். பார்ப்பதற்கு நல்ல முகம். உருண்டு திரண்ட உடம்பு. முகத்தில் ஏராளமாக பௌடர் போட்டு அலங்கரித்திருந்தாள். அது இல்லாவிட்டால் முகம் இன்னும் சோபித்திருக்கும்.

எங்கள் பானங்கள் வந்தன. ஒரு குடி சாப்பிட்டதும் தொண்டையில் நெருப்பு பற்றிக் கொண்டமாதிரி இருந்தது.

“என் பெயர் மேரி” என்றாள் தன் டம்ளரில் பாதியை ஒரு முடக்கில் குடித்துவிட்டு. “உங்களுக்கு கவலை வேண்டாம். நீங்கள் இங்கே வந்ததைப் பற்றி நான் யாருடனும் சொல்ல மாட்டேன்.

“ரொம்ப வணக்கம்,” என்றேன்.

“அப்படி நான் பேசினால் மறுபடியும் நீங்கள் வரமாட்டீர்களே,” என்றாள். பிறகு “ஏன், அந்த பிராண்டி பிடிக்கவில்லையா?”

“சாப்பிட்டு எனக்கு வழக்கமில்லை.”

“என்ன பால் குடித்துத்தான் வழக்கமா? ” என்றாள் மேரி சிரித்துக்கொண்டே. பிறகு பாருக்குப் போய் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து என் டம்ளரில் கலக்கினாள். “இன்னும் சில நாட்களில் மற்றவர்கள் மாதிரியே நீங்களும் குடிக்க ஆரம்பித்துவிடுவீர்கள்.”

பிறகு நான் மெதுவாக குடிக்க ஆரம்பித்தேன்.

“உங்கள் பெயர் சர் ஜியார்ஜ் என்று கேள்விப்பட்டேன். நீங்கள் என்ன வெறும் நைட்டா அல்லது கார்ட்டர் நைட்டா?”

“வெறும் நைட்தான்.”

“பரவாயில்லை. கார்ட்டர் என்னிடம் இருக்கிறது” என்று தன் தொடையைத் தொட்டு காண்பித்தாள். அப்போதுதான் எனக்கு ‘கார்ட்டர்’ என்றால் கால் உரையை மேலே இழுத்துக் கட்டும் கொக்கி என்ற ஞாபகம் வந்தது.

நீலமலைவாசிகளிடையே திருமணம், குடும்பம் என்னும் நிறுவனங்கள் மிகவும் முக்கியமானவை என்று நான் அறிந்திருந்தேன். ஆனால் மேரியின் இடது கை மோதிர விரலில் மோதிரத்தைக் காணோம். ஆகவே அவளுக்கு கலியாணம் ஆகவில்லை என்பதை யூகித்துக் கொண்டேன்.

‘‘நீங்கள் இங்கே ரொம்ப நாள் இருக்கப் போகிறீர்களா? ’’ என்று கேட்டாள் மேரி.

‘‘இன்னும் முடிவாகவில்லை. அது பல பிரச்சனைகளைப் பொருத்து இருக்கிறது.’’

‘‘இங்கிலாந்துக்குப் போக முடிந்தால்கூட என் போன்றவர்களுக்கு அது கஷ்டமாக இருக்கும்.’’

‘‘இன்னும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. ஆனால் நாளாவட்டத்தில் எல்லாம் சரியாகிவிடும்.’’

‘‘சீக்கிரம் குடியுங்கள் என் வீட்டுக்குப் போகலாம்,’’ என்றாள் மேரி.

‘‘நான் சீக்கிரம் திரும்பிப் போக வேண்டும்’’ என்றேன்.

‘‘என் மாதிரி அந்தஸ்து உடையவர்களோடு பழக உங்களுக்கு இஷ்டமிருக்காது,’’ என்றாள் மேரி. ‘‘ஆனால் இரவில் யாரும் உங்களைக் கண்டுகொள்ள முடியாது. நாம் சிறிது நேரம் தமாஷாக காலம் போக்கலாம்.’’

வேறு வழியில்லை. நான் மேரியுடன் அவள் வீட்டுக்குச் சென்றேன். நாங்கள் சுமார் ஐந்து நிமிடம் நடந்து ஒரு சந்தில் திரும்பினோம். சிறிது தூரத்தில் இருட்டாய் இருந்தும் மேரி என் கையைப் பிடித்துக்கொண்டு சில படிக்கட்டுகளை ஏறி ஒரு கதவைத் திறந்தாள். உள்ளே ஒரு மெழுகு திரி மங்கலான ஒளியைப் பரப்பியது. உள்ளே சில பிரம்பு நாற்காலிகளும் ஒரு சோபாவும் இருந்தது. மேரி கொஞ்சம் பிரகாசமான விளக்கை ஏற்றியவுடன் உள்ளே ஒரு படுக்கை அறையும் தெரிந்தது. முன் அறையில் பழைய போட்டோக்களும் சில அலங்காரப் பொருள்களும் இருந்தன. டாம்பீகமாக இல்லா விட்டாலும், எல்லாம் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருந்தன.

என்ன செய்வதென்று தெரியாமல் நான் நின்றுகொண்டிருந்தேன். ‘‘உட்காருங்கள் நான் ஒரு விஸ்கி கொண்டு வருகிறேன்,’’ என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

இரண்டு ஜாடி கப்களில் பானம் கொண்டுவந்தாள். ‘‘விஸ்கி இந்த ஜாடி கப்களிலிருந்து குடித்தால்தான் ருசியாக இருக்கும். அதுவும் வீட்டில் கண்ணாடி டம்ளர்கள் இல்லாவிட்டால்,’’ என்றாள். ‘‘எவ்வளவு விஸ்கி எவ்வளவு தண்ணீர் என்று நீங்கள் சொல்ல முடியாது. இல்லையா? ’’

அவள் தனது பாதஉரைகளைக் கழட்டிவிட்டு, ‘‘இங்கே பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்’’ என்று சோபாவுக்கு அழைத்தாள்.

நான் அங்கே போய் உட்கார்ந்ததும் தன் கைகளால் என்னை அணைத்து முத்தமிட்டாள். பிறகு என் மார்பையும் கைகளையும் கால்களையும் நன்றாக அழுத்தி தொட்டுப் பார்த்தாள். எல்லாம் எனக்கு ஆச்சிரியமாக இருந்தது. ஆனால் நான் ஒரு பார்வையாளனாக இருந்தேனே தவிர பங்குகொள்ளவில்லை. சில நிமிடங்களுக்கு அப்புறம் தன் காதல் விளையாட்டை நிறுத்திக் கொண்டாள்.

‘‘இங்கிலாந்தில் எல்லாமே தானே இயங்கும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். செக்ஸ்கூட அப்படித்தானோ? ’’ என்றாள் மேரி.

‘‘அப்படியல்ல,’’ என்று மழுப்பினேன்.

‘‘ஒருவேளை என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையோ? ’’ என்றாள். ‘‘உங்கள் மாதிரியே வெண்மையான தலைமயிர் உடையவர்களைத்தான் பிடிக்குமோ? அப்படியென்றால் இங்கே ப்ளாண்ட்ஸ் யாருமே இல்லை.’’

‘‘உனக்கு அர்த்தமாகவில்லை,’’ என்றேன்.

எனது நிராகரிப்பால் மேரி ரொம்ப அவமானப்பட்டதாகத் தோன்றியது. ஆனால் செயற்கை கருத்தரிப்பைப் பற்றியும், அம்மாதரி பிறந்தவர்களுக்கு செக்ஸ் அதிகம் தேவையில்லையென்றும் எப்படி சொல்வது? எங்கே ஆரம்பிப்பது?

‘‘உண்மையாகவே இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலேயனுடன் செக்ஸ் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் நான் கொடுத்து வைக்கவில்லைபோல் இருக்கிறது. பரவாயில்லை. இந்த ஊரில் எனக்காக பலா் காத்திருக்கிறாா்கள். பிரதமரிலிருந்து.’’

அவள் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பெருமைக்காகவும் தன் ஏமாற்றத்தை மறைக்கவும் இம்மாதிரி பேசுவதாக நினைத்தேன். திருமணத்தின் தூய்மையைப் பற்றியும் குடும்பத்தின் புனிதத்தைப் பற்றியும் பெருமைப்படும் இந்த ஊரில் பிரதமா் போன்றவா்கள் அம்மாதிரி நடந்துகொள்வாா்கள் என்று நான் நினைக்கவில்லை.

‘‘என்னை நீங்கள் நம்பவில்லை,’’ என்றாள் மேரி. ‘‘இந்த ஊா் வழக்கம் என்னவென்றால், பண வசதி இருக்கும் ஒவ்வொரு ஆணும் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொள்வது வழக்கம். அவா்களை நன்றாக கவனித்துக் கொள்வாா்கள். மனைவிகளை அசட்டை செய்தாலும் எங்களை செய்யமாட்டாா்கள். நாங்களும் அவா்களுக்கு உண்மை விசுவாசத்தோடு நடந்துகொள்வோம். அவா்கள் ரகசியங்கள் எல்லாம் மனைவிமாா்களைவிட எங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். எல்லோருக்குமே இது ரொம்ப சவுகரியம். மனைவிகளுக்கு தெரிந்தால்கூட அதைப்பற்றி அவ்வளவாக கவலைப்படுவதில்லை. இப்பொழுது எனக்கு யாரும் இல்லை. அதனால் மாட்சிமை தங்கிய ஆங்கில மன்னரின் தூதுவருக்கு வைப்பாட்டியாய் இருந்தால் அது ஒரு புது அனுபவம் என்று நினைத்தேன். அவ்வளவுதான்.’’

மதுவின் தூண்டுதலினாலும் மேரியின் பேச்சினாலும் என் வெட்கமும் பயமும் நழுவியது. நான் செயற்கை கருத்தரிப்பு முறைகளைப் பற்றியும், மேற்கு கோளத்தில் இருக்கும் கேளிக்கை, பொழுதுபோக்கு வழிகளைப் பற்றியும் விரிவாகச் சொன்னேன். மேரிதான் நீலமலைகளில் என் உண்மையான சினேகிதி ஆனாள். நான் சொன்னதையெல்லாம் கேட்ட பிறகு மேரிக்கு என்மேல் மிகுந்த பச்சாதாபமும் ஒருவித ஆா்வமும் ஏற்பட்டிருக்க வேண்டும். மறுபடியும் என்னை பக்கத்திலிழுத்து கொஞ்சி குலாவினாள். மெல்ல படுக்கை அறைக்கு அழைத்துச் சென்று என் ஆடைகளை அகற்றி படுக்க வைத்தாள் சிறிது நேரத்தில் இருவரும் ஆனந்தத்தில் ஆழ்ந்தோம்.

‘‘உங்களுக்கு இன்னும் கொஞ்சம் பயிற்சி கொடுத்தால் சில நாட்களில் எல்லாம் சரியாகிவிடும்,’’ என்றாள் மேரி.

‘‘இங்கே எல்லாமே எனக்கு புதுமையாக இருக்கிறது,’’ என்றேன்.

‘‘உங்கள் நடத்தை எப்படி இருக்கிறது தெரியுமா?’’ என்று கேட்டாள் மேரி. ‘‘நான் சொல்வதற்கு கோபம் கொள்ள வேண்டாம். நீங்கள் தினமும் அடிக்கப்பட்ட ஒரு சிறு நாய் குட்டிமாதிரி பயந்திருக்கிறீா்கள். பால் குடிக்கும்போது எல்லாம் அதை அடித்தால் பாலே வேண்டாம் என்று ஆகிவிடும். இங்கிலாந்தில் எல்லோருமே இப்படித்தானோ? அப்படியிருந்தால் நான் இங்கேயே இருந்துவிடுகிறேன்.’’

‘‘இதுவரையில் நான் சந்தித்தவா்களுக்குள் நீ ஒருத்திதான் இங்கிலாந்துக்கு போகவில்லை என்று சொல்கிறாய்.’’

‘‘சும்மா சுற்றிப் பாா்ப்பதற்கு போவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. அங்கிருப்பவா்களுக்கு வாழ்வில் எது சந்தோஷம் என்று சொல்லிக் கொடுப்பேன். ஆனால் நீங்கள் சொல்வது உண்மை என்றால் நான் அங்கே வசிக்கப்போவதில்லை.’’

அவளுடன் பேசுவது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியை அளித்தது. மனதில் உள்ள கவலைகளையும் பிரச்சனைகளையும் சீக்கிரம் மறக்கச் செய்துவிட்டாள். நான் மறுபடியும் அவளைப் பாா்ப்பதென்றும் ச்சக் அளித்த மாத்திரைகளை அதற்கு முன்னால் சாப்பிடுவதென்றும் உறுதி செய்து கொண்டேன். அவளுக்கு ஏதாவது ஒரு வெகுமதி அளிக்க வேண்டும் என்றும் தோன்றியது.

“என்னுடன் ஒரு நிரந்தர ஏற்பாடு செய்துகொள்ள உங்களுக்கு விருப்பமா? ” என்று விணையம் இல்லாமல் கேட்டாள் மேரி. “அதற்கு தேவதாசி முறை என்று பெயர். புராதன இந்தியாவிலிருந்து நாங்கள் கற்றுக் கொண்டவைகளில் இதுவும் ஒன்று.”

“எனக்கு ரொம்ப இஷ்டம்.”

“எனக்கு பணம் இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் என்னை கவனித்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய வைப்பாட்டி என்ற அந்தஸ்து எனக்குத் தேவையே தவிர பணம் தேவையில்லை.”

பிறகு மேரி என்னை முக்கிய பாதை வரையிலும் கொண்டுபோய் விட்டாள். ஹேம்டன் கோர்ட்டுக்கு நடந்து போனேன். இந்த அனுபவம் எதிர்பாராததாகவும் நூதனமாகவும் இருந்ததால் உள்ளத்தைக் கலக்கியது. முரண்பட்ட உணர்ச்சிகள் தலையெடுத்தன. ஆனால் என்றும் காணாத ஒரு ரம்மியமும் இருந்தது.

“நாங்கள் ரொம்ப கவலைப்பட்டோம் சார்,” என்றான் பட்லர். “நீங்கள் துணையில்லாமல் நகருக்குள் போயிருக்கக்கூடாது. அதனால் ஏற்படும் அபாயங்கள் தவிர உங்களுடைய அந்தஸ்த்துக்கு அது சரியில்லை. பாமர மக்களோடு நீங்கள் சகஜமாக பழகுவது உகந்ததல்ல.”

“இது ஜனநாயக நாடாயிற்றே? எல்லோரும் சமம்தானே? ” என்றேன் கொஞ்சம் குறும்பாக.

“அரசியல் சமத்துவம் ஒன்று. சமூக சமத்துவம் வேறு,” என்றான் பட்லர்.

மேரியை பட்லருக்குத் தெரியாமல் சந்திப்பது எப்படி என்று யோசனை செய்யலானேன்.

-----------------------------

## அத்தியாயம் எட்டு

சிறு இங்கிலாந்தைப் பொருத்தவரையில் இரண்டு விஷயங்கள் எனக்கு முக்கியமாகப்பட்டன. ஒன்று அவர்களின் குருகலான வாழ்க்கை. ஆறு தலைமுறைகளாக அவர்கள் சில சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. வெளி உலகைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் அவர்கள் மனம் சிறையில் அடைக்கப்படவில்லை. மேற்கு கோளத்திலும் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டும் யாரும் தமது சூழ்நிலையைவிட்டு அதிக தூரம் செல்வதில்லை. வெளியுலகைப் பற்றி பப் சொன்னதுதான் எல்லோருக்கும் தெரியும். மனிதர்களின் மனது பக்குவப்படுத்தப்பட்டதால் வாழ்க்கை மாறுதலின்றி, சுவையற்றதாகிவிட்டது. அம்மாதிரி மனத்தை சிறையிலிடுவதுதான் கஷ்டமாக இருந்ததே தவர ஒரே இடத்தில் இருப்பது அவ்வளவு கடினமானதாக தோன்றவில்லை.

இரண்டாவது இந்த நீலமலைகளில் பல அத்தியாவசிய பொருள்கள் இல்லாததால் தொழில் சமூகம் ஒரு விவசாய சமூகமாக மாறிவிட்டது. உலோகங்கள் இல்லாததால் சாதாரணமாக அன்றாட உபயோகத்திலிருக்கும் பல பொருள்கள் பற்றாக்குறையாகிவிட்டன. விஞ்ஞான அறிவு இருந்தும்கூட அதை உபயோகப்படுத்த முடியவில்லை. முன்பு உலோகங்களில் செய்த பொருள்கள் இப்போது மரத்தினாலும் களிமண்ணாலும் செய்யப்பட்டு வந்தன. அப்பொருள்கள் புது கலையழகு பெற்றிருந்தன. இதன் காரணமாக அவர்கள் பல புதிய உத்திகளையும் திறமைகளையும் விருத்தி செய்திருந்தார்கள். இவைகள் புராதன இந்தியாவை ஞாபக மூட்டியதே தவிர இங்கிலாந்து தொடர்ச்சியை நினைவூட்டவில்லை. இம்மாதிரி உற்பத்தி செய்வதால் அவர்களுக்கு நல்ல தொழில் திருப்தியும் ஏற்பட்டிருந்தது. ஆனால் ஆங்கில மரபு என்று சொல்லிக்கொண்டு அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகளும் பழக்க வழக்கங்களும்தான் சிரிப்புக் குரியதாய் இருந்தன.

இயற்கை வளம் இல்லாவிட்டாலும், பொதுவாக மக்கள் நல்ல வாழ்க்கை நடத்திவந்தார்கள். ஏழ்மை அசுத்தம், நிறைய இருந்தன. நோய்களின்மீது கட்டுப்பாடு இல்லை. குழந்தைகள் சாவு நிறைய இருந்தது. ஆனால் குழந்தைகள் பிறப்பும் அதிகமாக இருக்க வேண்டும். வீதிகளில் எங்கு பார்த்தாலும் நிறைய குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒழுங்கு, கட்டுப்பாடு கொஞ்சம்கூட இல்லாவிட்டாலும், சுதந்திரம், தன்நம்பிக்கை ஏராளமாக இருந்தன. இதுதான் சரி, இது குற்றம் என்று சொல்வதற்கு இங்கே யாருமே இல்லைபோல் தோன்றியது. சூதாட்டம் அவர்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இரு நபர்களுக்குள்ளே ஒரு அபிப்பிராய பேதம் வந்தால் உடனே பந்தயம் கட்ட ஆரம்பித்துவிடுவார்கள். மேற்கு கோளத்தில் கீழ்படிதல்தான் நல்ல குணம் என்று நான் கற்றிருந்தேன். ஆனால் நீலமலைகளில் சவால்விடுவதுதான் முக்கியம் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

இந்த சுதந்திர வாழ்வு எனக்கு ரொம்ப ஆச்சரியத்தைத் தந்தது. ஒரு சிறு அதிருப்தி ஏற்பட்டால்கூட ஜனங்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். வீட்டு வேலையாட்கள் கூட சில சமயம் வேலைக்கு வரமாட்டார்கள். ஊர்வலங்களை நடத்துவது, கடைகளை மூடுவது, வீதிகளில் கோஷம் செய்வது, இவையெல்லாம் சர்வசாதாரணம். ஒரு சிறு கூட்டம் இருந்தால்கூட அங்கே ஒரு பேச்சாளர் வந்துவிடுவார். சொற்பொழிவு கேட்பதுதான் எல்லோருக்கும் பெரிய பொழுது போக்காக இருந்தது. அதற்கு ஒன்றுக்குத்தான் டிக்கெட் இல்லை.

நான் இங்கு வந்த ஒரு வாரத்துக்குப் பிறகு எதிர்க்கட்சியினர் ஒரு ஆட்சேபக் கூட்டம் நடத்தினர். அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முறையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. லேபரெடொரி கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் சிகப்பு – வெள்ளை நிறம் உள்ள துண்டுகள் தம் கழுத்தில் கட்டிக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்கள் கிளப்பினர். பிரதமரை கேலி செய்யும் முறையில் சில பாட்டுக்களையும் பாடினார்கள்.

ஃபூலிஷ் பால்ட்வின் கோ, கோ, கோ!

முட்டாள் பால்ட்வின் போ, போ, போ!

ஓட்ஃபர் பால்ட்வின் நோ, நோ, நோ!

த்ரோஅவுட் பால்ட்வின் சோ, சோ, சோ!

என்று பாடினார்கள்.

கூட்டம் பந்தைய மைதானத்தில் நடந்தது. இங்கிலாந்து தூதுவரை அழைத்த முறைபற்றியும், அவருடைய விஜயத்தை ரகசியமாக வைத்திருப்பது பற்றியும், அந்த விஜயத்தை தம் கட்சி நலனுக்கு பயன்படுத்துவதைப் பற்றியும், பேச்சாளர்கள் விமரிசித்தார்கள். பிரதமர் இந்திய அரசாங்கத்துடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஒரு பேச்சாளர் கூறினார். லஞ்சம், ஊழல், அரசாங்கத்தில் நிறைந்திருப்பதாகவும், பொது மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டினார்கள். கடைசியாக எதிர்கட்சித் தலைவர் சர்கிளெமென்ட் வில்சன் பேசினார்.

> “நம் சரித்திரத்திலேயே ஒரு மிக முக்கிய கட்டத்தில் இருக்கிறோம். நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நமது தனிமையைவிட்டு மற்ற உலக நாடுகளுடன் சரிநிகர் சமானமாக இருக்க நமக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வியாபாரம், பண்டமாற்றல், கலைப்பெருக்கம், விஞ்ஞான முன்னேற்றம் ஆகியவற்றில் நமக்குரிய பங்குபெற வேண்டும். இந்த நீலமலைகளைவிட்டு நாம் வெளிநாடுகளுக்குச் சென்று நம் பெருமையை நிலைநாட்ட வேண்டும். நம்மைச் சுற்றி வளைந்துள்ள மின்சார கம்பிகளை எடுத்தெறிய வேண்டும். ஆனால் இந்த முதுகெலும்பில்லாத அரசாங்கம் தம் குறுகிய சுயநல மனப்பான்மையோடு வரும் வாய்ப்புகளையெல்லாம் நழுவ விட்டுக்கொண்டிருக்கிறது.
>
> “நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நமது அஞ்ஞாத வாசம் முடிந்துவிட்டது. சர்வதேச கூட்டங்களில் நாம் நமக்குரிய பங்கு கோர வேண்டும். ஆங்கில தூதுவருடன் எதிர்கட்சியையும் வைத்துக்கொண்டுதான் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். ஒரு கட்சி அரசுக்கு பதிலாக எல்லா கட்சிகளும் சேர்ந்த தேசீய அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டும்…..”

இந்த கூட்டத்தைப் பற்றி நான் ஜானுடன் பிரஸ்தாபித்தேன். “இதெல்லாம் நமது பிரதமருக்கு அவல் மாதிரி மென்று விழுங்கிவிடுவார்” என்றார் ஜான். “தேசீய அரசாங்கம் என்றால் அதில் இந்தியர்களையும் சேர்க்க வேண்டாமா என்ற கேள்வி எழுப்புவார். உடனே எதிர்கட்சிகாரர்கள் பேசாமல் இருந்துவிடுவார்கள்.”

***********

இந்திய சமூகத்தினரைத்தான் நான் இதுவரையில் சந்திக்கவில்லை. அவர்கள் இந்த ‘நெருக்கடி’யைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். நீலமலைகளில் வாழும் வெள்ளையர்களுக்கும் இந்தியர்களுக்கும் எந்தவிதமான உறவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இது விரோத காரணமல்லவென்றும் சமூக பழக்க வழக்கங்கள் மாறி இருப்பதால் அவர்கள் அடிக்கடி சந்திப்பதில்லையென்றும் ஜான் சொன்னார். அவர்கள் எப்படி வசிக்கிறார்கள், என்ன நினைக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் அறிந்துகொள்ள ஆசைப்பட்டதனால் மிஸ்டர் கிருஷ்ணாவை சந்திக்க ஜான் ஏற்பாடு செய்தார். அவர் பார்லிமெண்டில் இல்லாவிட்டாலும் இந்திய சமூகத்துக்கு அவர்தான் தலைவர் என்று தெரியவந்தது.

இந்தியர்கள் வாழும் பகுதியிலுள்ள கிருஷ்ணாவின் வீட்டுக்கு போனபோது அது ஒரு வேற உலகத்துக்கே போவதுமாதிரி இருந்தது. ஒரு பெரிய சுமை போன்று இருந்த ஆங்கில வம்சாவளி இங்கு கொஞ்சமும் இல்லை. ஆனால் இந்தியாவின் மரபுகளும் அதிகமாக இருப்பதாக வெளியே தெரியவில்லை. இருந்தாலும் அவைகள் உள்ளூர அதிகமாக இருக்கும்போல தென்பட்டது. இங்கு இருந்த வீடுகள் எல்லாம் புதியவை. நவீன முறையில் சவுகரியமாக இருக்க ஏற்றதாக கட்டப்பட்டிருந்தன. சோபாக்கள், கம்பளங்கள், அலங்காரப் பொருள்கள் எல்லாம் நீலமலைகளில் செய்யப்பட்டதாய் இருந்தாலும், இயற்கைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அமைந்திருந்தன. உணர்ச்சிவசப்பட்டு வெள்ளையர்கள் உபயோகமற்ற பழைய பொருள்களைப் பாதுகாப்பது போல இங்கே ஒன்றும் இல்லை.

கிருஷ்ணா தமது முன் அறையில் என்னை வரவேற்றார். அங்கே பழைய சாமான் ஒன்றுமே கண்ணுக்குப் புலப்படவில்லை. அவர் அன்போடும் சினேகபாவத்தோடும் பேசினார். அவருடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். பிறகு அவர்கள் வேறு அறைக்குச் சென்றுவிட்டனர். முக்கியமான விஷயங்களைப் பற்றி பேச இது சவுகரியமாய் இருந்தது.

“நீலமலைகளுக்கு நீங்கள் விஜயம் செய்ததுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நூற்றைம்பது வருடங்களாக இல்லாத ‘சர்’ பட்டத்தை நீங்கள் ஏன் வைத்துக் கொண்டீர்கள் என்பதுதான் எனக்கு அர்த்தமாகவில்லை. நீங்கள் மன்னிக்க வேண்டும். ஆனால் இதில் ஏதோ ஒரு புதிர் இருக்கலாம் என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம்,” என்றார் கிருஷ்ணா.

“நான் இங்கே வந்து இறங்கியவுடனே உங்கள் பிரதமர்தான் அப்பட்டத்தை எனக்கு அளித்து கௌரவித்தார்,” என்றேன்.

“பட்டங்கள் அளிப்பதில் நாங்கள் நிபுணர்கள். இந்தியாவில் ஆங்கில ஆட்சி நடந்த காலத்தில் சின்னா என்பவருக்கு ‘லார்ட்’ பட்டம் அளிக்கப்பட்டது. அதேமாதிரி எனக்கும் அதே பட்டம் அளிக்க வேண்டும் என்று பிரதமர் விரும்பினார். ஆனால் நான் அதற்கு இணங்கவில்லை.”

“இது ஒரு மாதிரி கபட நாடகம் தானே? ” என்று கேட்டேன்.

“இல்லை. கபட நாடகம் நடிப்பவர்களுக்கு சாதாரணமாக அது பாசாங்கு என்று தெரியும். ஆனால் இங்குள்ள வெள்ளையர் இதை கபடமாக நினைக்கவில்லை. இது ஒரு தேசீய தன் ஏமாற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். இது ஒரு ஏமாற்றம் என்று தெரியும்போதுதான் ஒரு பெரிய அதிர்ச்சியாக இருக்கும்.”

“நான் உங்களை சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். இந்நாட்டைப் பற்றி தெரிந்துகொள்ளத்தான் நான் வந்திருக்கிறேன். மற்றவர்களை விட நீங்கள் பாரபட்சமின்றி பதில் அளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.”

“என்னை பெருமைப்படுத்த வேண்டியதில்லை,” கிருஷ்ணா சிரித்துக்கொண்டே டீ கொண்டுவரச் சொன்னார். உமது நண்பர் ஜான் கியூரேடரும் அறிவாளி உமக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் சொல்வார். இருந்தாலும் நீங்கள் கேட்கலாம்.

“இங்குள்ள வெள்ளையர்கள் தங்கள் நெற்றியில் ஒரு சிலுவை வைத்துக்கொள்கிறார்கள். அ.மு.காலத்தில் இந்தியர்கள்தான் நெற்றியில் பொட்டு, நாமம் அல்லது விபூதி வைத்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு என்ன காரணம்.”

“உங்களுக்கு ஜான் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார். இந்திய பெண்களை வெள்ளையர்கள் முதலில் மணம் செய்துகொண்டபோது நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டால் அவர்கள் இந்துக்கள் என்று எல்லோரும் நினைக்கலாம். ஆகவே கணவர்கள் அம்மாதிரி வைக்கக்கூடாது என்றார்கள். அந்தப் பெண்கள் அதற்கு இணங்கவில்லை. பிறகு அதை சிலுவை மாதிரியாவது இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். நாளாவட்டத்தில் ஆண்களும் அதே மாதிரி வைத்துக் கொண்டார்கள். இன்றைக்கு அது ஒரு அந்தஸ்த்து சின்னமாக மாறிவிட்டது. “நீங்கள் அம்மாதிரி வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் யாரும் சொல்லவில்லையா?”

அப்பொழுது டீ வந்தது. அதன் மணமும் சுவையும் மிகவும் நன்றாக இருந்தது. பிரதமர் வீட்டில்கூட அவ்வளவு நல்ல டீ கிடையாது. இதைப்பற்றி நான் பிரஸ்தாபித்தபோது “எங்கள் டீ மிகவும் உயரமான மலைகளில் பயிர் செய்யப்பட்டது. வெள்ளையர்கள் மதுவகைகளை அதிகமாக உபயோகிப்பதால் டீயின் அருமையும் நுண்மையான சுவையும் அவர்களுக்குத் தெரிவதில்லை,” என்றார் கிருஷ்ணன்.

மேலும் நான் கேட்காமலேயே தம் பழக்க வழக்கங்களைப் பற்றி விவரித்தார். “நாங்கள் இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டாலும், மத வித்தியாசம் பாராட்டுவதில்லை. யேசுநாதர் பல ஆண்டுகள் இந்தியாவில் வசித்து இந்திய தத்துவ ஞானத்தை ஆட்கொண்டதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. இங்கே இருந்தபோது அவர் பெயர் ‘கிருஷ்ணா’ என்று இருந்திருக்கலாம். உங்கள் ‘மேரி’க்கும் எங்கள் ‘மாரி அம்மனுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. ஆகையால் வெறும் சின்னங்களுக்கு நாங்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை.”

“ஆங்கில மரபைப் பேணிக்காத்து வருவதாக எல்லோரும் சொல்கிறார்களே, அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?” என்று கேட்டேன்.

“எங்களுக்குள்ளேயும் மரபைக் காப்பவர்களும் நூதன முறைகளைக் கையாளுபவர்களும் இருக்கிறார்கள்,” என்றார் கிருஷ்ணா. “ஆனால் அர்த்தமில்லாத மரபைக் காப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அம்மாதிரி செய்தால்தான் இந்துக்கள் ஷீண திசையை அடைந்தார்கள். அம்மாதிரி செய்தால் விஞ்ஞானம் கூட ஒரு மூட நம்பிக்கையாக மாறிவிடும். இன்று இங்கேயும் - வெள்ளையர்களுக்குள்ளே அந்தநிலைமை ஏற்பட்டுவிட்டது.”

“இங்கே மதுவிலக்கு எப்படி அமல் செய்யப்படுகிறது என்று எனக்கு சரியாக புரியவில்லை,” என்று நான் விஷயத்தை மாற்றினேன்.

“அதில் ஒன்றும் கஷ்டமில்லையே?” என்றார் கிருஷ்ண. “வெள்ளையர்கள் பொதுவாக அளவுக்கு அதிகமாக குடிக்கிறார்கள். இந்தியர்கள் வழக்கமாக குடிப்பதில்லை. முன்பெல்லாம் - ஏன் இப்பொழுதும் கூட – பொது இடங்களில் குடிப்பதற்கு நெற்றியில் சிலுவை இருந்தால் போதும்.”

“இந்தியர்கள் குடிப்பதே இல்லையா?” என்றேன் நான் ஆச்சரியத்தோடு.

“பொதுவாக குடிக்கமாட்டார்கள். வெள்ளையர்கள் வந்தால் அவர்களுக்கு அளிப்பதற்காக நாங்கள் சில சமயங்களில் ‘பர்மிட்’ வாங்குவதுண்டு. இந்தியர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து சேமிப்பதில் அக்கரையுள்ளவர்கள். ஆனால் வெள்ளையர்களுக்கு குடிப்பதும் பந்தயம் கட்டுவதும்தான் முக்கியம். அதனால்தான் ஆறுதலைமுறைகளுக்கு முன்பு வேலையாட்களாக ஆரம்பித்த இந்தியர்கள் பலர் இன்று வெள்ளையர்களை விட உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள்.”

கிருஷ்ணாவின் யோசனைப்படி நாங்கள் வீட்டைச்சுற்றியுள்ள பூங்காவுக்குச் சென்றோம். “நான் அதிக நேரம் இங்கே கழிக்க விரும்புகிறேன்” என்றார் கிருஷ்ணா. “இங்கே நிம்மதியுடன் இருக்கலாம். ஆழ்ந்து சிந்திப்பதற்கும் இது ஏற்ற இடம். இந்த சுதந்திரமும், சீதோஷ்ணமும் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடும் என்று நினைக்கிறேன்.”

“சிறு இங்கிலாந்து வெளியுலகத்துடன் இணைவதைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?”

“ஆம். அது ஏற்பட்டால் எங்கள் தனிமை, உரிமை, சுதந்திரம் எல்லாம் போய்விடும். அதனால்தான் நீங்கள் நிலைமையை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.”

எங்கள் சம்பாஷணையில் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துவிட்டதாக எனக்குத் தோன்றியது. “உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்” என்றேன்.

“முதலாவதாக இந்த சமூகம் - அதாவது வெள்ளையர் சமூகம் - அஸ்திவாரம் இல்லாத சமூகம் என்பதை நீங்கள் உணர வேண்டும். அவர்களுடைய ஆங்கில வாதம், தத்துவம் எல்லாமே ஒரு நாடகம்தான். ரத்த ரீதியில் பார்க்கும்போது அவர்களுக்கும் எனக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. எல்லோரும் இந்தியர்கள். ஆங்கில மரபு, பழைய பொருள்களைப் பேணிக் காத்தல் எல்லாமே ஒரு மூடநம்பிக்கையாகிவிட்டன. துரதிருஷ்டவசமாக நீங்கள் இங்கே வந்திருப்பது அந்த மூட நம்பிக்கைகளுக்கு ஒரு புது உயிர் அளித்துவிட்டது.

“கலைத் தொடர்பும், உணர்ச்சித் தொடர்பும் தம் பிறந்த நாட்டோடு இருப்பது இயற்கையல்லவா? ” என்று நான் கேட்டேன்.

“இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்?” கிருஷ்ணா ஆவேசத்தோடு பேசினார். “பிரிவினை தினத்திலிருந்து உலகம் அப்படியே நின்றிருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உலகம் - முக்கியமாக மேற்கு கோளம் - எப்படி மாறியிருக்கிறது என்று உங்களுக்கும் எனக்கும் தெரியும்.”

“உங்களுக்கு எப்படி தெரியும்?”

“எங்களுக்கு பல வழிகள் உண்டு. வெள்ளையர்கள் மாதிரி நாங்கள் அவ்வளவு தனிமையாக இல்லை. இந்த நூற்றைம்பது வருட விஞ்ஞான முன்னேற்றத்தைப் பற்றியும் அவர்கள் உண்டாக்கிய பிரச்சனைகளைப் பற்றியும் நாங்கள் அறிந்திருக்கிறோம். உங்களுடைய பப் தத்துவத்தைப் பற்றிக்கூட எனக்குத் தெரியும். அதிலிருந்து எங்கள் அறிவைப் பற்றி நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம். சர் வின்ஸ்டனும், சர் வின்ஸ்டனும், சர் கிளெமைண்ட் வில்சனும் அவர்கள் நினைக்கிறமாதிரி இங்கிலாந்துக்குப் போனால் சில நாட்களில் அதிர்ச்சியால் இறந்து விடுவார்கள்.”

கிருஷ்ணாவின் அறிவு எனக்கே பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

“இரண்டு கோளங்களிலும் இருக்கும் ஜீவிய தத்துவப் பிரச்சனைகளைப் பற்றியும் எங்களுக்குத் தெரியும்,” கிருஷ்ணா மேலும் பேசலானார். “குழந்தை உற்பத்தி குறைவு. அதனால் ஏற்படும் விளைவுகள், அதை திருத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் எல்லாவற்றையும் நான் அறிவேன்.”

“ச்சக் உங்களுடன் பேசியிருக்க வேண்டும்.”

‘யார் பேசினார் என்பது முக்கியமல்ல. இவைகள் மறுக்க முடியாத உண்மைகள். மனித குலம் இந்த பூமியில் நீடுழி வாழ வேண்டுமென்றால், எங்களை – அதாவது நீலமலைவாசிகளை – அப்படியே பாதுகாத்து, வளர வைத்து சிறிது சிறிதாக வெளியுலகத்துடன் ஒட்டவைப்பது ஒன்றுதான் வழி.”

“இந்தியாவுடன் சிறு இங்கிலாந்து உடனடியாக இணைய வேண்டும் என்று இங்குள்ள இந்தியர்கள் கோருகிறார்களே?” என்றேன்.

“சர் ஜியார்ஜ், இது ஒரு அரசியல் சதுரங்கமேடை. இங்குள்ள வெள்ளையர்கள் இங்கிலாந்துடன் இணைய விரும்புவதால் நாங்கள் இந்தியாவுடன்தான் இணைய வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால் நீல மலைகளின் எதிர்காலம் - ஏன் மானிடவர்க்கத்தின் எதிர்காலமே - நாங்கள் தனியே இருந்து மெல்ல வெளியுலகுடன் இணைவதுதான். நீங்கள்தான் அதற்கு வழிவகுக்க வேண்டும்.”

“இங்கிலாந்தின் தூதுவர் என்னும் முறையில் அந்நாட்டினுடன் இணைவதை நான் எப்படி எதிர்க்க முடியும்? ”

“நீங்கள் இங்கு எதற்காக, எப்படி வந்திருக்கிறீர்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். உமது ரகசியம் என்னிடம் பத்திரமாய் இருக்கும். அந்த ரகசியம் வெளிப்பட்டால் என் உதவி உங்களுக்கு தேவைப்படும். தவறாமல் நான் உங்கள் உதவிக்கு வருவேன். ஆனால் நீங்கள் எந்த கொள்கை கைப்பற்றி நடக்க வேண்டும் என்பது உமது முடிவு. அதில் நாங்கள் தலையிடமாட்டோம்.”

----------------------------

## அத்தியாயம் ஒன்பது

ஆண் பெண் உறவில் எனக்கு சிறிதளவு அனுபவமும் கிடையாது. இருந்தாலும் எனக்கும் ஷீலாவுக்கும் இருந்த உறவு பழையகால மரபுப்படியும், சிறு இங்கிலாந்து வழக்கப்படியும் முன்னேறியது என்று நினைத்தேன். எல்லோரும் பேசி வைத்தாற் போல ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களை தனியே விட்டுவிட்டார்கள். நான் சென்ற வீடுகளிலும் விருந்துகளிலும் ஷீலாவும் இருந்தாள். சிறு இங்கிலாந்தின் பழக்கவழக்கங்களைப் பற்றியும், கூடியுள்ள நபர்களைப் பற்றியும் ஷீலா என் காதில் குசுகுசுப்பாள். எனது சினேகிதி மட்டுமல்லாமல் ஆசிரியராகவும் இருந்துவந்தாள் எனக் கூறலாம். பொது நிறவனங்களுக்கு அதிகார தோரணையில் நான் சென்றபோது கூட ஜானுக்கு பதிலாக ஷீலா என்னுடன் வந்தாள். எல்லோரும் எங்கள் இருவர் பெயர்களையும் இணைத்துப் பேசலாயினார்.

கிரிக்கெட், கால்பந்து, குதிரைப்பந்தயம் முதலியவற்றைப் பற்றி ஷீலா எனக்கு விவரமாக எடுத்துச் சொன்னாள். வாரம் ஒரு தடவை ‘ஆஸ்காட்’ என்னுமிடத்தில் குதிரைப் பந்தயம் நடந்தது. ஏழை பணக்காரர் வேறுபாடின்றி எல்லோரும் எந்தக் குதிரை முதலில் வரும் என்று பணம் கட்டினார்கள். இது ஒரு பெரிய பைத்தியம் மாதிரி எனக்குத் தோன்றியது. கடைசியாக, பணம் சம்பாதித்தவர்களும் இழந்தவர்களும் வெற்றியைக் கொண்டாடவோ அல்லது இழந்த துயரத்தை மறக்கவோ குடிக்கும் கடைகளுக்குச் சென்று போதையில் எல்லாம் மறந்தனர். ஷீலாவை திருப்தி செய்வதற்காக நானும் பணம் கட்டினேன். நான் கட்டிய குதிரை முதலாவதாக வந்தபோது ஷீலாவின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தன் இரண்டு கைகளாலும் என்னை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டாள். “அடுத்த பந்தயத்திற்கு நமது ‘பெட்’டை இரட்டிக்க வேண்டும்” என்று வாதாடினாள். ‘ஜேக்பாட்’ ‘டிரெபிள்’ இவைகளைப் பற்றி எனக்கு விளக்கிக் கூறினாள். அடுத்த பந்தயத்தில் தோற்ற பிறகு “இன்னும் நம் ‘பெட்டை இரட்டிக்க வேண்டும். அப்போதுதான் விட்டதை திருப்பிப் பிடிக்க முடியும்” என்று அறிவுறுத்தினாள். நல்லவேளை நான் எப்போதுமே கொஞ்சம் சிக்கனம். இல்லாவிட்டால் ச்சக் அளித்த எல்லா பணத்தையும் ஒரே நாளில் தீர்த்திருப்போம்.

நான் மணமாகாதவன் என்பதாலும், ‘இங்கிலாந்து தூதுவர்’ என்பதாலும் மற்ற பெண்களும் ஷீலாவுடன் போட்டிக்கு வருவார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் என்னோடு மரியாதையாகவும் அன்புடனும் பழகினாலும் ஷீலாவுடன் போட்டி போடவில்லை. இதற்குக் காரணம் பின்னால்தான் எனக்குத் தெரிய வந்தது. நான் ஒரு சரித்திர நிபுணன் என்பதால் உள்ளூர் சரித்திர நிபுணரின் மகளை மணப்பதுதான் சரி என்று, எல்லோரும் நினைத்தார்கள். நாங்கள் ஒரே ‘வம்சம்’, சாதி. ஆனால் ஆஸ்தான கவி க்ரூக் மட்டும் இந்த ஏற்பாட்டை ஒத்துக்கொள்ளவில்லை. அவர் ஷீலாவை மணக்க விரும்பியதாகவும், நான் வந்த பிறகு ஷீலா அவரைக் கைவிட்டு விட்டதாகவும் பட்லர் மூலமாக கேள்விப்பட்டேன். ஒரு கல்வி நிறுவனத்தில் அவரை சந்தித்தபோது, தன் வாழ்த்துக்களை எனக்கு அளித்தார்.

“எதற்காக வாழ்த்துகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“காதலில் நல்லவர்கள் எப்போதும் தோற்பதுதான் வழக்கம்,” என்றார் க்ரூக்.

*   *   *

சிறு இங்கிலாந்திலேயே முக்கியமான கேளிக்கை நீலமலை கிளப்பில் வருடாவருடம் நடக்கும் டான்ஸ் ஆட்டம்தான். இந்த வருடம் அந்த விழாவை இங்கிலாந்து தூதுவரை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளன்று எல்லோரும் ஆங்கில சரித்திரத்திலிருந்து இரு பாத்திரமாக வேடம் தரித்து வர வேண்டும் என்று முடிவு செய்திருந்தார்கள். நானும் ஒரு தகுதியான வேடத்தில் வர வேண்டும் என்று என்னையும் முன் கூட்டியே எச்சரித்தார்கள்.

மற்ற வருடங்களை விட எல்லாம் மிகவும் சிறந்த முறையில் கொண்டாடப் போகிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன். புது புது அலங்கார ஜோடணைகளைப் பற்றியும், ஆகார வகைகளைப் பற்றியும், கேளிக்கைகளைப் பற்றியும் ஜான் எனக்குச் சொன்னார். பட்லரும் கிளப்பில் வேலை செய்வோரிடம் இருந்து தெரிந்து வந்த தீபாலங்காரங்களைப் பற்றியும் யார் யார் எந்த வேடங்களில்

வரப் போகிறார்கள் என்பதைப் பற்றியும் விவரித்தாள். நூலகத்திலிருந்து புத்தகங்களை இரவல் வாங்கி அதிலுள்ள படங்களைப் பார்த்து தம் உடைகளை பலர் செய்வதாக கேள்விப்பட்டேன். பட்லரும் இங்கிலாந்து சரித்திரத்தை நன்றாக அறிந்திருந்தான்.

“இங்கிலாந்து சரித்திரம் உனக்கு எப்படித் தெரியும்? ” என்று கேட்டேன்.

“சார், சிறு இங்கிலாந்தில் பிறந்த குழந்தைகள் எல்லோரும் ஆங்கில சரித்திரம் கற்க வேண்டும். மேலும் எனது குடும்பத்தினர் எப்போதுமே ஆங்கில அரச குடும்பத்துக்கு விசுவாசமாக இருப்பவர்கள். இந்த டான்சுக்கு நீங்கள் செய்ன்ட் ஜியார்ஜ் ஆகபோனால் நன்றாக இருக்கும்.

“ஆனால் செய்ண்ட் ஜியார்ஜ் ஒரு சரித்திர பாத்திரம் அல்லவே? ” என்றேன்.

“இல்லாவிட்டால் நீங்கள் ராபர்ட் கிளைவ் ஆக போகலாம். அவர்தானே இந்தியாவை ஆங்கில சாம்ராஜ்யத்தில் சேர்க்க காரணமாக இருந்தவர். நான் வேண்டுமென்றால் ஒரு தையல்காரனைக் கூட்டிக்கொண்டு வந்து உடை தயாரிக்கிறேன் சார்.”

“நான் ஏன் கை ∴பாக்ஸாக போகக் கூடாது? ” என்று கேட்டேன். (கை ∴பாக்ஸ் என்பவர்தான் கி.பி.18ஆம் நூற்றாண்டில் பார்லிமெண்ட் கட்டிடத்திற்கு தீ வைக்க முயற்சி செய்தவர்)

பட்லர் என்னை விசனத்தோடு பார்த்தான். “சார், உங்களுடைய நகைச் சுவையை இங்கு யாரும் மதிக்கமாட்டார்கள். மேலும் கை ∴பாக்ஸ் படம் இல்லை. அதனால் அவர் எந்த மாதிரி உடை அணிந்திருந்தார் என்று சொல்ல முடியாது.”

நான் என்ன உடை அணியப் போகிறேன் என்பதைப் பற்றி எல்லோரும் விவாதிப்பதாக தெரிய வந்தது. ஷீலாவை நான் சந்தித்த போது அவள் “நீங்கள் பிரின்ஸ் ஆல்பர்ட்டாக போவதாயிருந்தால் நான் குயின் விக்டோரியாவாக வருகிறேன்,” என்றாள்.

“நாம் என்ன உடை அணியப் போகிறோம் என்பது ரகசியமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களே? ” என்றேன்.

“மற்றவர்களுக்கு அது சரி. ஆனால் நெருங்கிய நண்பர்கள் தம் இஷ்டம் போல் செய்யலாம்.”

“பிரின்ஸ் ஆல்பர்ட்டை பலருக்கு அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கமே?”

“நான் விக்டோரியாவாக உங்களுடன் வந்தால் நீங்கள் யார் என்று எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்.”

“நான் இரண்டாவது சார்லஸ் ஆக போகலாம் என்று நினைத்தேன்.”

“நான் கண்டிப்பாக நெல் குவென் ஆக வரமாட்டேன்,” என்றாள் ஷீலா. (நெல் குவென் சார்லெஸ் அரசருடைய வைப்பாட்டிகளில் முக்கியமானவள்).

“அல்லது எட்டாவது ஹென்றியாக போகலாம்.”

“அப்பொழுது உங்களுக்கு ஆறு மனைவிகள் வேண்டுமே, என்ன செய்வீர்கள்? ”

எங்கள் உறவு வெளியே தெரியுமாறு உடையணிந்து செல்ல வேண்டும் என்று ஷீலா முடிவு செய்திருந்தால் போல தோன்றியது. அது ஒரு ‘மரியாதை குறைவான’ உறவாயும் இருக்கக் கூடாது. இதைப்பற்றி எனக்குக் கொஞ்சம் கவலையாய் இருந்தது. ஆனால் என்ன செய்வது என்று தெரியவில்லை. இன்றைய இங்கிலாந்தில் திருமணம் தடை செய்யப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லியிருந்தும் ஷீலா அதை பொருட்படுத்தியதாக தெரியவில்லை. மேலும் மேலும் இந்த உறவில் நான் அகப்பட்டுக்கொண்டதாக தோன்றியது. பப் தத்துவம் இதற்கு ஒரு வழி காட்டுமா என்று நினைத்துப் பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. காலப் போக்குக்கு விட்டுவிடலாம் என்று முடிவு செய்தேன்.

“நீங்கள் மரபுக்குமாறாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தால் ஷேக்ஸ்பியராக வாருங்கள். நான் அவர் சினேகிதி ஏன் ஹேதவேயாக வருகிறேன்,” என்றாள் ஷீலா.

“இதெல்லாம் நகைச் சுவைக்குத்தானே. ஏன் இவ்வளவு முக்கியமாக எடுத்துக்கொள்கிறாய்? ”

“நகைச் சுவையிலாவது நாம் இருவரும் ஒன்றுபட்டிருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தேன்,” என்று ஷீலா பதிலளித்தாள்.

கடைசியாக நான் எட்டாம் எட்வேர்ட் மன்னராகவும் ஷீலா மிசஸ் சிம்ப்சனாகவும் போவது என்று முடிவு செய்தோம். அவர்களுடைய காதலும், எட்வேர்ட் மன்னர் முடி துறந்ததும் சிறு இங்கிலாந்தில் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்திருந்தது. மேலும் உடைகள் அணிவதற்கு சவுகரியமாக இருக்கும். இதற்கும் கூட ஷீலா முதலில் இணங்கவில்லை. அவர்களுடைய காதல் திருமணத்துக்கு அப்பாற்பட்டது என்று வாதாடினாள். ஆனால் அவர்கள் மணமான பிறகு ‘டியூக் அண்ட் டச்சஸ் ஆப் விண்ட்சர்’ ஆகியதால் அதே பெயர்களில் போனோம். இந்த சிறு விவாதம் எங்களுக்குள் இருக்கும் பெரிய வித்தியாசத்தை நன்றாக உணர்த்தியது.

எல்லோரும் இரவு ஒன்பது மணியளவில் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் பட்லர் நான் முக்கிய விருந்தினர் ஆனதால் எல்லோரும் வந்த பிறகு ஒன்பதரை மணிக்குப் போனால் போதும் என்று சொல்லிவிட்டான். கிளப் பிரசிடெண்ட் மிஸ்டர் வேக்ஸ்டாப்ஃ ஒன்பதே கால் மணிக்கு வந்து தமது குதிரை வண்டியில் என்னை அழைத்துச் சென்றார். லண்டனிலுள்ள பிரகாசமான ஒளி அலங்காரங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அங்கு இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசமே இருக்காது. இருட்டே நிம்மதி அளித்தது. ஆனால் இங்கு இருந்த தீபா அலங்காரங்கள் பெரு மகிழ்ச்சியையும் மனோ நிம்மதியையும் ஒன்றாக அளித்தன. மரங்களிலிருந்து தொங்கிய விளக்குகள் காற்றில் ஊசலாடின. புல் தரைகளிலும், செடிகளுக்குள்ளும் விளக்குகள் மறைத்து வைக்கப்பட்டு ஒரு மெல்லிய ஒளியை வீசின. கட்டிடத்தின் அழுக்கும் அசுத்தமும், உடைந்த ஓடுகளும் கரைபடிந்த சுவருகளும் இரவில் மறைந்துவிட்டன. மங்கலான ஒளி அலங்காரத்தில் அந்த பழைய கட்டிடம் தேவலோசம் மாதிரி தோன்றியது. உள்ளே பேச்சும், சிரிப்பும், சங்கீதமும் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆனால் நாங்கள் வண்டியிலிருந்து இறங்கியதும் ஒரு நிம்மதி ஏற்பட்டது. குழுமியிருந்த எல்லோரும் ஒரு பெரிய வட்டமாக நின்று ஒரு பாட்டு பாடி என்னை வரவேற்றனர்.

என் வாழ்க்கையிலேயே அது ஒரு முக்கிய கட்டமாகத் தோன்றியது. அ.பி. கால ஆராய்ச்சி நிறுவனத்தில் பெயர் தெரியாமல் இருந்துவிட்டு இம்மாதிரியான ஒரு பெரிய உற்சாக வரவேற்பை ஏற்பதென்றால் உள்ளம் குழையாமல் என்ன செய்யும்? என் கண்களில் நீர் தோன்றியது. சிறு இங்கிலாந்து மக்களை என் இருதய பூர்வமாக நேசிக்க ஆரம்பித்தேன்.

நாங்கள் ஒரு பெரிய மண்டபத்தினுள் சென்றோம். அங்கு பல வர்ண காகிதங்களைக் கொண்டும் பூக்களைக் கொண்டும், இலைகளைக் கொண்டும் பலவிதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயே சரித்திர முக்கியத்துவம் உள்ள படங்களும் இங்கிலாந்தின் கொடியும் தொங்கின. சர் வின்ஸ்டன் பிரதமர் சர்ச்சில் மாதிரி ஆடை அணிந்திருந்தார். “நாமே சரித்திரத்தில் பங்கேற்றிருக்கும் போது மற்றவர்போல் நடிப்பது மிகவும் கடினம்,” என்று குசுகுசுத்தார். “சிறு இங்கிலாந்து பெரிய இங்கிலாந்துடன் இணைந்தால் நானும் சரித்திரத்தில் இடம் பெறலாம் இல்லையா? ”என்றார்.

நான்கு பேர் ஜான் புல் வேடத்தில் இருந்தார்கள். ஒருவர் எட்டாம் ஹென்றியாக தம் ஆறு மனைவியருடனும் வந்திருந்தார். அந்த ஆறு ‘மனைவி’யரில் மேரியும் இருப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். மேரி என்னைப் பார்த்ததும் ஒரு குறும்புச் சிரிப்புடன் கண் சிமிட்டினாள். அதை யாராவது பார்த்துவிட்டார்களா என்று நான் கவலைப்பட்டேன். நல்ல வேளையாக யாரும் பார்க்கவில்லை. தவிர அங்கே ஆறு குயின் விக்டோரியாக்கள் இருந்தாலும் ஒரே ஒரு பிரின்ஸ் ஆல்பர்ட்தான் இருந்தார். இரண்டாம் சார்லஸும் நெல் குவென்னும் இருந்தார்கள். பலரை உடையிலிருந்து அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. என் உடையும் அப்படித்தான் இருந்தது. அதனால் ஷீலா எதிர்பார்த்த விளம்பரம் கிடைக்கவில்லை.

கிளப் பிரசிடெண்ட் எனக்கு ஒரு டம்ளர் விஸ்கி கொண்டு வந்தார். பிறகு என்னை ஒரு சிறு மேடையின் மீது அழைத்து நிறுத்தினார். விருந்தினர்கள் எல்லோரும் வரிசையாக வந்து தங்களை எனக்கு அறிமுகம் செய்து கொண்டார்கள். எல்லோருடனும் கை குலுக்கினேன். அவர்களுடைய முகங்களிலிருந்து எனக்குப் போலவே அவர்களுக்கும் இது ஒரு முக்கியமான, உணர்ச்சிவசமான நாள்

என்று தெரிந்தது. மேரி என்னுடன் கை குலுக்கியபோது என் விரல்களைக் கொஞ்சம் அழுத்தியதைத் தவிர வேறு எந்தவிதமாகவும் என்னை முன்பு சந்தித்ததாக காட்டிக் கொள்ளவில்லை. எட்டாம் ஹென்றியின் முதல் மனைவியாக மேரி வேடம் அணிந்திருந்தாலும் அந்த அரசியின் சாதுவான குணங்கள் மேரியிடம் இருப்பதாகத் தெரியவில்லை. என் மனதில் இதையெல்லாம் பார்த்து கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. சீக்கிரம் இதுவெல்லாம் ஒரு முடிவுக்கு வரும். பிறகு நான் திரும்பி மேற்கு கோளத்துக்குச் சென்று பப் தத்துவம், பக்குவப்படுத்தும் முறைகள், ஒரு சிறிய அறை, தனிமை முதலியவற்றுடன் வாழ வேண்டும் என்னும் சிந்தனைகள் என் மனதில் தோன்றின. எனது இன்றைய வாழ்க்கை அங்கே தெரிந்தால் என்ன ஆகும் என்ற எண்ணம் மிகுந்த வேதனை அளித்தது. மேலும், இம்மக்களுடன் நான் ஒன்றுபட்டுவிட்டேன். தனிமையிலிருந்து விடுபட்டு, அன்பு, பாந்தம், சிரிப்பு, சுதந்திரம் முதலிய உணர்ச்சிகளுடன் வாழ்ந்த பிறகு எப்படி திரும்பிப் போவது என்ற யோசனை என்னை கவலையில் ஆழ்த்தியது.

அறிமுகப்படுத்தல் முடிந்த பிறகு சத்தமும் கேளிக்கையும் அதிகரித்தன. பலர் டான்ஸ் ஆட ஆரம்பித்தனர். மற்றவர்கள் குடித்துக்கொண்டும் நகைச்சுவையுடன் பேசிக்கொண்டும் இருந்தனர். பிரசிடெண்ட் மற்றொரு டம்ளர் கொண்டு வந்து எனக்குக் கொடுத்துவிட்டு “நீங்கள் டான்ஸ் ஆடவில்லையா? ” என்று கேட்டார்.

“எனக்கு ஆடிப் பழக்கமில்லையே” என்றேன்.

“அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். இங்கு இருப்பவர்களுக்குள் ஒரு அழகான பெண்ணை ஆட அழையுங்கள். ஆடும்போது அவள் கால் விரல்களை மிதித்துவிட்டால், ‘சாரி’ என்று சொன்னால் போதும். ஆனால் ஆடத் தெரியாது என்று மட்டும் சொல்ல வேண்டாம்.”

அப்பொழுது ஷீலா என்னை வந்து பிடித்துக் கொண்டாள். “அறிமுகம் எல்லாம் முடிந்துவிட்டதால் நாம் இனி நம் இஷ்டம் போல் இருக்கலாம். “நாம் டான்ஸ் ஆடலாமே,” என்றாள்.

பிரசிடெண்ட் சொன்ன அறிவுரை ஞாபகத்துக்கு வந்தது. ‘சரி’ என்றேன்.

ஷீலா என்னை அணைத்தவாறு டான்ஸ் தரைக்கு இழுத்துச் சென்றாள். ஆடுவது அவ்வளவு கஷ்டமாகத் தெரியவில்லை. கையில் தாளம் போடுவது போல காலில் தாளம் போட வேண்டும். அவ்வளவுதான். ஷீலா நன்றாக ஆடத் தெரிந்தவள். ஆகவே சில நிமிடங்களில் நான் கூச்சமின்றி ஆடலானேன். ஷீலாவுடன் நான் ஆடுவதைப் பார்த்து மற்றவர்கள் சிரித்து கண் சிமிட்டினார்கள். ஷீலா என்னை நெருங்க அணைத்து ஆடினாள். எனக்கு வெட்கமாய் இருந்தது.

நாங்கள் ஆடி முடிந்ததும் பலர் வந்து இங்கிலாந்தைப் பற்றியும் அங்கைய வாழ்வைப் பற்றியும் விசாரித்தார்கள். நான் எவ்வளவு காலம் சிறு இங்கிலாந்தில் தங்கப் போகிறேன், மறுபடியும் எப்போது திரும்பி வருவேன் என்றெல்லாம் கேட்டார்கள். ஒரு அன்னியனுடன் பேசுவதில் அவர்களுக்கு கொஞ்சம் கூட கூச்சம் இருப்பதாக தெரியவில்லை. ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்துக்கு சுலபமாக மாறி மாறி சம்பாஷித்தனர். என்னை நீண்ட நாளாக பார்க்காத ஒரு பழைய உறவினர் மாதிரி நடத்தினார்கள்.

டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தவர்கள் அடிக்கடி கூட ஆடுபவர்களை மாற்றுவதை நான் கவனித்தேன். நானும் வேறு யாராவதோடு ஆட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அம்மாதிரி மாற்றும் முறை எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் வெட்கமும் கோழைத்தனமும் என்னைத் தடுத்து நிறுத்தின. ஷீலாவும் என்னை விடாமல் கூடவே இருந்தாள். மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினால் கூட என்னை தன் ஏகபோக சொத்தாக பாவிப்பது மாதிரி தெரிந்தது. மற்ற இளம் பெண்களும் என்னுடன் ஆட முன்வரவில்லை. இம்மாதிரியான சிக்கலான உறவுகளில் நான் வழி தெரியாமல் தவித்தேன்.

பதினொரு மணிக்கு விருந்து என்று அறிவிக்கப்பட்டது. எல்லோரும் அடுத்த ஹாலுக்குப் போக ஆரம்பித்தனர். ஆனால் பலர் குடித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தனர்.

“போய் சாப்பிடலாமா? ” என்றாள் ஷீலா.

“ஆம். எனக்குக் கொஞ்சம் பசியாக இருக்கிறது,” என்றேன்.

ஒரு பெரிய நீண்ட மேஜை மேல் பலவித வகையான மாமிசங்களும், காய்கறி வகைகளும் பழவகைகளும் பரிமாரப்பட்டிருந்தன. வேண்டியதை எங்கள் தட்டங்களில் வைத்துக்கொண்டு எனக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த சிறு மேஜையில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தோம். வயதான இருவர் வந்து “நாங்களும் இங்கே உட்காரலாமா?” என்று கேட்டார்கள்.

ஷீலா முகத்தை சுழித்ததிலிருந்து அவளுக்கு அவர்களைப் பிடிக்கவில்லையென்று தெரிந்தது. இருந்தாலும், “நன்றாக உட்காரலாம்,” என்றேன் நான்.

“போல்டன் உங்களுக்குத் தெரியுமா? ” என்று கேட்டார் அந்த கிழவர்.

“அவரை எனக்குத் தெரியாது,” என்றேன்.

“என் கணவருக்கு காது மட்டு. கொஞ்சம் சத்தமாக பேச வேண்டும்,” என்றாள் அவர் மனைவி.

நான் சொன்னதையே மறுபடியும் சத்தமாக திருப்பிச் சொன்னேன்.

“வங்கா ஷயர். அதுதான் எங்களுடைய சொந்த ஊர்,” என்றார்.

அப்பொழுதுதான் மேரி அங்கே வந்தாள். “நானும் இங்கே உட்காரலாமா? ” என்று கேட்டாள்.

“உட்காருங்கள்,” என்றேன். அது ஷீலாவுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

“என் பெயர் மேரி விண்டர்” என்று சொல்லி மேரி எல்லோருடனும் கை குலுக்கிவிட்டு உட்கார்ந்தாள்.

“இங்கிலாந்தில் உங்கள் தாயகம் எங்கே இருக்கிறது? ” என்று கேட்டேன்.

“எனக்குத் தெரியாது,” என்று சொல்லி சிரித்தாள். “எங்கள் வம்சா வழியை நான் பாதுகாக்கத் தவறிவிட்டேன்.”

“நீங்கள் கிளப்பில் அங்கத்தினரா? ” என்று ஷீலா கேட்டாள்.

“இல்லை. எட்டாம் ஹென்றியின் மனைவிகளில் ஒருவராக வந்திருக்கிறேன். ஒரு விருந்தாளி என்று சொல்லாம்.”

பிறகு சாப்பாடு முடியும் வரையில் ஷீலா பேசவே இல்லை. ஆனால் மேரி பேசிக் கொண்டே இருந்தாள். “நீங்கள் வந்த அன்று உங்களைப் பார்த்தேன் சர் ஜியார்ஜ். அதாவது கூட்டத்தில் நின்று பாாத்தேன். இந்த வாழ்க்கை உங்களுக்கு மிக புதியதாய் இருக்குமே. நீங்கள் இருக்கும் லண்டன் மாநகரில் எல்லாம் நவீனமாகவும், ரம்மியமாகவும் இருக்கலாம். இருந்தாலும் எங்கள் எழிய வாழ்க்கையிலும் கொஞ்சம் சுவாரஸ்யம் இல்லையா? ”

எங்கள் மேஜையில் உட்கார்ந்திருந்த வயதான பெண் தன் கணவரின் நல்ல காதில் ஏதோ சொன்னாள். உடனே அவர் “விண்டர்? சிறு இங்கிலாந்திலேயே சிறந்த மின்சார நிபுணர். அவர் இறந்த பிறகுதான் மின்சாரம் குட்டிச் சுவர் ஆகிவிட்டது. நீ அவருக்கு சொந்தமா? ” என்று கேட்டார்.

“ஆம் அவர் மகள்,” என்றாள் மேரி.

“இவ்வளவு ஆண்டுகளாக நீ எங்கே போய்விட்டாய்? நான் தான் டக்ளஸ் மாமா! ஞாபகமிருக்கிறதா? ”

“நன்றாக ஞாபகமிருக்கிறது மாமா. ஆனால் உங்களுக்கு ஞாபகமிருக்குமென்று நான் நினைக்க வில்லை,” என்று மேரி பதிலளித்தாள்.

பிறகு அந்தக் கிழவர் டர்பைன்ஸைப் பற்றியும் மின்சார கம்பிகளைப் பற்றியும் பேசலானார். ஆகாரம் முடிந்ததும் ஷீலா மறுபடியும் என்னை இழுத்துக் கொண்டு டான்ஸ் ஹாலுக்கு வந்தாள்.

என்னை கௌரவிப்பதற்காக ஒரு விசேஷமான பாட்டு எழுதி அதை ஆண்களும் பெண்களும் மாறி மாறி பாடுவதாய் இருந்தது. அது கடைசிவரையிலும் ரகசியமாக வைத்திருந்தாலும் ஷீலா என்னிடம் சொல்லியிருந்தாள். அதில் அவளும் பங்கு கொள்ளப் போவதால் என்னை விட்டுவிட்டு போக

வேண்டி நேர்ந்தது. நானும் மேரியும் ஒரு ஓரத்தில் நின்று கொண்டு அவர்களுடைய ஆடல் பாடலை ரசித்தோம். எல்லோரும் பார்ப்பதற்காக ஒரு வட்டமாக நின்று கொண்டனர். நடுவில் பன்னிரண்டு ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி என் புகழைப் பாடினர்.

ஒவ்வொரு அடியாக பாடிக்கொண்டே போக, ஆடலும் பாடலும் சூடு பிடிக்க ஆரம்பித்தது. எல்லோரும் அவர்களுடன் ஒன்று சேர்ந்து பாட ஆரம்பித்தனர். ஆடலும் பாடலும், சிரிப்பும் கேளிக்கையும் ஆற்று வெள்ளம்போல் பிரவாகமெடுத்து ஓட ஆரம்பித்தன. ஏதோ ஒரு காந்த சக்தி அந்த நீலமலை வெள்ளையர்களுடன் என்னை அழுத்தி இழுப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மயிர் சிலிர்க்கும், ஆனாலும் ஒரு ரம்மியமான உணர்ச்சி. பாட்டு கடைசிக்கு வந்ததும் மண்டபத்திலிருந்து 'ஒன்ஸ் மோர்' 'ஒன்ஸ் மோர்' என்ற ஒலிகள் கிளம்பின. ஆகவே முதலிலிருந்து மறுபடியும் பாடி முடித்த போது எழுந்த கரகோஷம் முகட்டைப் பீய்த்து விடும்போல் இருந்தது.

மேரி என்னை மண்டபத்துக்கு நடுவில் இழுத்துச் சென்று என்னுடன் டான்ஸ் ஆடலானாள். "அந்த ஷீலா உங்களை நன்றாக சங்கிலி போட்டு பிடித்து வைத்திருக்கிறாள்," என்றாள் மேரி. "அவள் பிடியிலிருந்து நழுவுவது உங்களுக்கு கஷ்டமாய் இருக்கும். ஆனால் செக்ஸ் விஷயத்தில் அவளிடம் அதிக தூரம் போக முடியாது. எல்லாம் பேச்சளவில்தான். அதாவது மணம் ஆகும் வரையில்."

"இன்றைய இங்கிலாந்தில் மணம் சட்ட விரோதம் என்று அவளுக்குத் தெரியும்".

"ஆனால் சிறு இங்கிலாந்தில் அது தேவையாயிற்றே. மேலும் சுவர்க்கத்தில் கடவுள் அதை எதிர்பார்ப்பார், இல்லையா? "

"சுவர்க்கத்தைப் பற்றி நான் ஒரு நிபுணன் அல்ல? " என்று பதிலளித்தேன்.

"எதில்தான் நீங்கள் நிபுணர் என்றே எனக்குத் தெரியவில்லை," மேரி கொஞ்சம் சோகக் கிளையுடன் பேசினாள். "இருந்தாலும், நீங்கள் ரொம்ப நல்லவர். மறுபடியும் என்னை எப்போது பார்க்கப் போகிறீர்கள்? "

மேரியுடன் என்னால் சகஜமாகப் பழக முடிந்தது. எதைப்பற்றியும் கூச்சமில்லாமல் பேசினேன். ஆனால் ஷீலாவுடன் அப்படிப் பேச முடியவில்லை. மனத்தில் ஒரு உறவுத் தடங்கல் இருப்பது போன்ற ஒரு எண்ணம். ஷீலாவுக்கு நான் பக்க வாத்தியம் வாசிப்பது போன்ற ஒரு உணர்ச்சி இருந்ததே தவிர இருவரும் சரிசமமாக இருப்பதாகத் தோன்றவில்லை.

மேரியின் கேள்விக்கு நான் பதில் சொல்லும் முன் ஷீலா அங்கே வந்தாள். "ஜியார்ஜ், நான் உங்களை எங்கெல்லாமோ தேடினேன்," என்றாள். மேரியை அசட்டை செய்து பேசவே இல்லை. "கிளப் பிரசிடெண்ட் உங்களை சில வார்த்தைகள் பேச வேண்டும் என்று வேண்டுகிறார்."

மேரிக்கு வணக்கம் சொல்லிவிட்டு ஷீலாவுடன் மேடைக்குச் சென்றேன். அங்கே கிளப் பிரசிடெண்ட், "இப்பொழுது சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் சில வார்த்தைகள் பேசுவார்கள்," என்று சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

> "எனக்கு இவ்வளவு அன்பும் ஆர்வமும் கலந்த வரவேற்பு அளித்ததற்கு உங்கள் எல்லோருக்கும், முக்கியமாக உங்கள் கிளப் தலைவருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களுடைய மகிழ்ச்சியையும் சந்தோஷ ஆரவாரத்தையும் கேட்கும்பொழுதும், பார்க்கும்பொழுதும் நானும் உங்களில் ஒருவனாக ஆகிவிட்டேன் போல தோன்றுகிறது. எதிர்காலத்தில் நம் ஒற்றுமையும் நட்புணர்வும் மேலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை. மீண்டும் ஒரு முறை எனது அன்பு கலந்த நன்றியை உங்கள் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்."

நான் பேசி முடிந்ததும் பலத்த கரகோஷமும் ஆரவாரமும் எழுந்தன. 'சர் ஜியார்ஜ் வாழ்க' 'இங்கிலாந்து வாழ்க' என்னும் கோஷங்களும் எழுந்தன. எல்லோரும் என்னைச் சூழ்ந்து கை

குலுக்கினர். மெல்ல கூட்டத்தின் மத்தியில் நடந்து வெரண்டாவுக்கு வந்தேன். ஷீலாவும் அங்கே வந்தாள்.

“நீங்கள் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தீர்களே, அந்தப் பெண் யார்?” என்று கேட்டாள் ஷீலா.

யாரோ தெரியாது. என்னை ஆடக் கூப்பிட்டாள் பெயர் மேரி என்று சொன்னாள்.”

“அம்மாதிரி பெண்களிடம் நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பணமுள்ள அல்லது அந்தஸ்துள்ள ஆண்களை வலை வீசிப் பிடிப்பதுதான் அவர்கள் தொழில். அதற்காக என்ன செய்வதற்கும் தயங்கமாட்டார்கள்.”

“அப்படி ஒன்றும் தெரியவில்லையே. நாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது போல்டன் என்பவர் கூட அவள் தகப்பனாரை நன்றாகத் தெரியும் என்று சொல்லவில்லையா?” ஒன்றும் தெரியாதவன் போல் பேசினேன்.

“நீங்கள் ஒரு உயர்ந்த பண்பாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள். இங்குள்ள மோசடிகளும் பித்தலாட்டங்களும் உங்களுக்குத் தெரியாது.”

திருமணம் சட்ட விரோதம் என்றும், அன்பு, பாசம் வாழ்க்கையில் இருக்கக்கூடாதென்றும் தீர்மானித்த சமூகத்தின் பண்பைப் பற்றி என்ன சொல்வது என்று எண்ணினேன். பிறகு, “நீ எச்சரித்ததற்கு ரொம்ப நன்றி,” என்றேன்.

“இம்மாதிரி பெண்களை கிளப்பில் அங்கத்தினராக அனுமதிப்பதில்லை. அவள் எப்படி வந்தாள் என்று தெரியவில்லை.”

“எட்டாம் ஹென்றியின் மனைவிகளில் ஒருவராக வந்தாளாம்,” என்று சொன்னேன்.

“இந்த ஊர் ஆண்களுக்கு எது சரி, தப்பு என்பதே தெரியாது,” என்று ஷீலா நொந்து கொண்டாள்.

எனது பேச்சுடன் அதிகாரபூர்வமான சடங்குகள் எல்லாம் முடிந்தன. ஆனால் சங்கீதமும் டான்ஸ் ஆட்டமும் குடிப்பதும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. நானும் ஷீலாவும் மேலும் இரு தடவை டான்ஸ் ஆடினோம். பிறகு கிளப் பிரசிடெண்டுக்கு நன்றி தெரிவித்துவிட்டு நான் ஹேம்ப்டன் கோர்ட் மாளிகையை அடைந்தேன்.

*************

எனக்கும் ஷீலாவுக்கும் இருந்த உறவில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் நாங்கள் எப்பொழுதுமே தனியாக இருக்க வாய்ப்பு இல்லை. இதைப் பற்றி நான் ரொம்ப யோசனை செய்தேன். ஷீலாவுக்கு என்மேல் உண்மையாகவே அன்பு இருந்தால், தனியாக சந்திக்காமல் எப்போதும் மற்றவர்களுடனோ அல்லது கூட்டங்களிலோ இருப்பதில் என்ன பிரயோஜனம்? இங்கிலாந்தில் கல்யாணம் தடுக்கப்பட்டிருப்பது ஷீலாவுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் என்னுடன் அன்யோன்னியமாக பழகினால் அதற்கு என்ன அர்த்தம்? மணத்துக்கு அப்பாற்பட்ட உறவு வேண்டுமென்பதுதானே? டான்ஸ்களுக்கும், விருந்துகளுக்கும் மட்டும் போய்க் கொண்டிருந்தால் அம்மாதிரியான உறவு எப்படி விருத்தியடையும்? எப்படி கை கூடும்? இதைப்பற்றி என் சிந்தனைகளை நான் வெளிப்படையாக இங்கேயாவது சொல்லிவிடுவது நல்லது. மேற்கு கோளத்தில் இருக்கும்போது எனக்கு செக்ஸிலோ அல்லது உணர்ச்சியிலோ அக்கரையில்லை. பக்குவப்படுத்தும் முறை அதற்கு ஒரு முடிவு கண்டுவிட்டதென்றே சொல்லலாம். ஆனால் இங்கு வந்த பிறகு, பக்குவப்படுத்தல் நின்றுவிட்ட பிறகு மேரி உறவுமாதிரியே ஷீலாவுடனும் வைத்துக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது. ஆனால் ஒரு சிறிய பிழை செய்தாலும் அது என் பிரயாணத்தையே குலைத்துவிடலாம் என்பதையும் அறிந்திருந்தேன்.

நான் பிறந்து வாழ்ந்த சமூகத்தில் இம்மாதிரி பிரச்சனைகளே இல்லை. அப்படி இருந்தாலும் அதற்கு பப் நேரடியான விடை தரும். செக்ஸ் வேண்டுமென்று ஒருவர் ஆசைப்பட்டால் கேளிக்கை வனத்துக்குப் போக வேண்டியதுதான். அதே யோசனையுள்ள பல பெண்கள் அங்கே வந்திருப்பார்கள். பிடித்தவர்களுடன் பேசி ஏற்பாடு செய்துகொள்ளலாம். இருவரும் ஒன்று சேர்ந்து பல கேளிக்கைகளில் பங்கெடுத்து திருப்தியான பிறகு அவரவர் வழியில் போக வேண்டியதுதான். ஒருவரையே இரண்டு தடவைக்கு மேல் சந்தித்தால் கம்ப்யூடரிலிருந்து இருவருக்கும் எச்சரிக்கை வரும். அம்மாதிரியான 'நிரந்தர' உறவுகள் தனியார் சுதந்திரத்துக்கு தடங்கல் என்றும், ஒருவர் உணர்ச்சிக்கு அடிமை ஆகிவிடலாமென்றும் பப் அறிவுறுத்தும். மேலும் அந்த உறவு நீடித்தால் இருவரும் பக்குவப்படுத்தும் மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுடைய மூளைகள் கழுவி சுத்தமாக்கப்படும்.

ஆனால் நீல மலை வெள்ளையர்கள் சமுதாயத்தில் அம்மாதிரியான பிரச்சனைகள் மிகவும் சிக்கலாகத் தெரிந்தது. காலத்தையும் இதற்காக ரொம்ப செலவளிக்க வேண்டியிருந்தது. மேரி தான் இந்தப் பிரச்சனைகளுக்கு விதிவிலக்காக இருந்தாள். அ.மு. சரித்திரம் நான் நன்றாகக் கற்றிருந்ததால், காதல் மிளர்ந்து நிச்சியதார்த்தத்தைப் பற்றியும், பிறகு திருமணத்தைப் பற்றியும் நான் அறிந்திருந்தேன். ஆனால் அறிவால் தெரிந்து கொள்வது வேறு, உணர்ச்சியால் ஒத்துக்கொள்வது வேறு.

ஒரு நாள் ஷீலா மீன் பிடிக்கப் போகலாம் என்று கூறினாள். அ.மு. காலத்திலும், இன்று சிறு இங்கிலாந்திலும் மீன் பிடிப்பது ஒரு நல்ல பொழுதுபோக்காக கருதப்பட்டு வந்தது. மேலும் அது ஒரு கூட்டுப் பொழுது போக்கு அல்ல. ஒரு ஆறு அல்லது ஏரிக்கரைக்குச் சென்று தனிமையாக அனுபவிக்க வேண்டிய விளையாட்டு மாதிரி. தவிறவும் வேறு நடவடிக்கைகளையும் மறைக்க அது உதவும். 'மீன் பிடிக்கப் போவது' என்பதே அம்மாதிரி நடவடிக்கைகளை மறைப்பதற்காகவும் உபயோகப்படுத்தலாம். ஆனால் எந்த மாதிரியான 'மீன் பிடிப்பை'ப் பற்றி ஷீலா சொன்னாள் என்று எனக்குப் புரியவில்லை.

''எனக்கு மீன் பிடிப்பதைப் பற்றி ஒன்றுமே தெரியாது,'' என்று சொன்னேன்.

''நான் உங்களுக்கு கற்பிக்கிறேன்,'' என்றாள் ஷீலா. ''என் தகப்பனாரிடமிருந்து வேண்டிய சாதனங்களை இரவல் வாங்கிக் கொள்ளலாம். மதிய உணவையும் கொண்டு போய் விட்டால் நீண்ட நேரம் நாம் தனியாக இருந்து இயற்கை எழிலில் ஆனந்தமாக பொழுதுபோக்கலாம். சீக்கிரம் மழைகாலம் வந்துவிடும் அதற்கு முன்னால் உள்ள வெய்யிலை நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.''

மீன் பிடிப்பு ஆரம்பத்திலிருந்து எங்களுடைய உறவு ஒரு புது கட்டத்தை அடைந்தது என்று சொல்லலாம். விருந்துகள், டான்ஸ் ஆடும் வைபவங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. நான் வந்ததனால் ஏற்பட்ட உற்சாகமும் ஆர்வமும் குறைந்து மக்கள் என்னை தங்களுக்குள் ஒருவனாக ஏற்றுக் கொண்டார்கள். மீன் பிடிப்பினாலும் அடிக்கடி வனபோஜனம் செய்ததாலும் நாங்கள் தனியாகவும் இயற்கை எழிலிலும் அதிக நேரம் செலுத்த வாய்ப்பு ஏற்பட்டது. காதலுக்கும் கற்பனைக்கும் இவையெல்லாம் ஒரு ஏற்ற சூழ்நிலையாக அமைந்தன.

முதல் தடவை நாங்கள் மீன் பிடிக்கப் போனபோது அதற்கு வேண்டிய சாதனங்களைத் தவிர தனது டோங்காவில் முதுகில் ஏற்றிச் செல்லக் கூடிய இரு பைகளையும் கொண்டு வந்திருந்தாள். நாங்கள் அவைகளை எடுத்து மாட்டிக்கொண்டு சில கிலோ மீட்டர் தூரத்துக்குச் சென்று ஒரு அடர்ந்த வனத்தை அடைந்தோம். வழியில் ஷீலா அங்குள்ள மரங்களைப் பற்றியும் பூக்களைப் பற்றியும் பறவை ஓசைகளைப் பற்றியும் எனக்கு சொல்லிக்கொண்டே வந்தாள். மழைகாலம் வந்தால் இவையெல்லாம் எப்படி மாறும் என்றும் எடுத்துரைத்தாள். இயற்கையைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் ஷீலா ரொம்ப அறிவோடு பேசினாள். இதைப் பற்றி நான் புகழ்ந்தபோது, ''வேறு தெரிந்துகொள்வதற்கு இந்த ஊரில் என்ன இருக்கிறது? இதென்ன லண்டன் மாநகரமா? '' என்றாள் சோகத்துடன்.

கடைசியாக நாங்கள் ஒரு சிற்றாற்றை அடைந்தோம். ஷீலா உண்மையிலேயே மீன் பிடிப்பதில் அக்கரையோடு வந்திருக்கிறாள் என்றறிய நான் கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தேன். அந்த ஆற்றங்கரையில் மீன் பிடிப்பதைப் பற்றி எனக்கு எடுத்துரைத்தாள். எந்தமாதிரி ஆகாரம் மீனுக்கு

பிடிக்கும், அதை எப்படி கண்ணியில் வைப்பது, அதை எப்படி ஆற்று நீருக்குள் வீசுவது, மீன் அதைக் கடித்தால் எப்படி அதை நழுவ விடாமல் கரைக்கு இழுப்பது என்பதைப்பற்றி எல்லாம் போதித்தாள். சுலபமாக நான் எல்லாம் அறிந்து கொண்டேன். பிறகு இருவரும் கண்ணிகளை நீரில் வீசிவிட்டு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டோம். ஷீலா என் கையைப் பற்றி கொஞ்சம் அழுத்தினாள். ஆனால் பேசினால் மீன் ஓடிவிடும் என்பதனால் மௌனமாக அமர்ந்திருந்தோம். அவளோடு கை கோர்த்துக்கொண்டு அமைதியாக இருப்பதும் மனதுக்கு ஒரு ரம்மியத்தை அளிப்பதை அறிந்தேன். ரொம்ப நேரம் கழித்த பிறகு ஒவ்வொன்றாக மூன்று மீன்களைப் பிடிக்க முடிந்தது. ''பட்லரை இவற்றை உமக்கு இரவு போஜனத்துக்கு சமைக்கச் சொல்லுங்கள்,'' என்றாள் ஷீலா. அவற்றை அதற்கென்று இருந்த பெட்டியில் வைத்து மூடினாள்.

எனக்கு ரொம்ப பசியாய் இருந்தது. காலையில் நேரத்தில் எழுந்ததாலும் பல கிலோ மீட்டர் நடந்ததாலும் தாகமும் ஏற்பட்டது. ஷீலா பலவித ரொட்டிகள், மாமிச வகைகள், கேக், பழம் முதலியன நிறைய கொண்டு வந்திருந்தாள். தனக்கு பழ ரசமும் எனக்கு பியரும் இருந்தன. வெய்யில் சூடு அதிகமானதால் ஒரு மர நிழலில் கம்பளத்தை விரித்து அதன் மேல் உட்கார்ந்து ஆகாரம் உட்கொண்டோம். பிறகு எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு கம்பளத்தின் மீது இருவரும் படுத்துக்கொண்டோம். என் மனது நிம்மதி அடைந்தது; உள்ளம் மகிழ்வுற்றது. இம்மாதிரி ஷீலாவுடன் சும்மா படுத்துக் கொண்டிருப்பதாலேயே என் வாழ்வு நிறைவு பெற்றதாக உணர்ந்தேன்.

''ஜியார்ஜ்'' ஷீலா கொஞ்சம் நெருங்கி வந்து கூப்பிட்டாள்.

''உம்.''

''சந்தோஷமா? ''

''பின் என்ன? ''

''என்னுடன இம்மாதிரி தனியாக இருப்பதைப் பற்றிக் கேட்டேன்.''

நானும் கொஞ்சம் நெருங்கி ஆலிங்கனம் செய்து முத்தமிட்டேன். இருவரின் உடம்புகள் தொட படுத்துக் கொண்டோம். ஷீலா சிரித்துக்கொண்டே என் முகத்தை வருடினாள். அந்த நிமிடத்தில் நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஊர்ஜிதமாக அறிந்து கொண்டேன். என் உள்ளம்தான் தடங்கலாய் நின்றது. ச்சக் உணர்ச்சிவசப்படாமல் பங்கு கொள்ள வேண்டும் என்று சொன்னதிலிருந்து அவர் மொழிகள் என் மனதை அலசிக் கொண்டிருந்தன. ஆனால் ஷீலா மேரி மாதிரி அல்ல. அவள் இம்மாதிரி நிலைமையில் துணிவோடு தானாக முதல் அடி எடுக்கமாட்டாள். என் சக்தியிலும் எனக்கு நம்பிக்கையில்லை. எங்கள் காதல் முத்தம் வைப்பதோடும் ஆலிங்கனம் செய்வதோடும் நின்றுவிட்டது. என்னைப் பற்றி ஷீலாவுக்கு ஏமாற்றமாய் இருக்குமா என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. அப்பொழுதுதான் ச்சக் கொடுத்த மாத்திரைகள் என் நினைவுக்கு வந்தன. அவைகள் இன்னும் ஹேம்ப்டன் கோர்ட் மாளிகையில் என் பெட்டியில் கவனிப்பாரற்று கிடந்தன.

''ஜியார்ஜ், நீங்கள் எவ்வளவு நல்லவர் என்று உங்களுக்கே தெரியாது. மேலும் ஒரு பெண்ணின் மனோ நிலையை நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்கள். லண்டனில் ரொம்ப அனுபவம் இருக்கும் போல் தெரிகிறது.''

அவள் என்ன சொல்கிறாள் என்று எனக்கு அர்த்தமாகவில்லை. இருந்தாலும் அவள் பேச்சு மனதுக்கு ரம்மியமாக இருந்தது.

''நீங்கள் அதிகமாக பேசுவதில்லை. ரொம்ப மரியாதையாக நடந்து கொள்கிறீர்கள். அன்னியராய் இருந்தும்கூட என்னை நன்றாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பிரபுத்துவ ஆங்கில வம்சா வழி இதிலிருந்து தெளிவாக பிரதிபலிக்கிறது.''

என்னை இருக்கிப் பிடித்து, கன்னத்தை வருடி தலைமயிரைக் கலக்கினாள். அப்பொழுது நான் காதலைப் பற்றியும் அன்பைப் பற்றியும் ஏதாவது சொல்லி இருக்க வேண்டும். அப்படித்தானே அ.மு.

நாவல்களிளெல்லாம் எழுதியிருக்கிறார்கள். ஏதாவது பேசவோ செய்யவோ என்னால் முடியவில்லை. ஆனால் உள்ளூர மகிழ்வடைந்தேன்.

அந்த இயற்கையின் சூழ் நிலையாலும், பியர் ஆகாரம் சாப்பிட்டதினாலும் ஷீலாவின் அன்பாலும் எனக்கு தூக்கம் வந்துவிட்டது. சிறிது நேரம் தூங்கிவிட்டேன். எழுந்தபொழுது ஒரு மெல்லிய குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. ஷீலா எல்லாவற்றையும் எடுத்து பைகளுக்குள் வைத்து புறப்பட தயாராக இருந்தாள். கம்பளியையும் மடித்து எடுத்துக்கொண்டு புறப்பட்டோம்.

"இந்த நாளை சந்தோஷமாக கழித்தீர், இல்லையா? " என்று கேட்டாள் ஷீலா.

"ஆனால் நீ சந்தோஷப்படவில்லையே?" என்றேன் நான். ஷீலா அதற்கு பதில் சொல்லவில்லை.

"பல பொறுப்புகள் இருக்கும் உங்களுக்கு மீன் பிடிப்பதுதான் மனதுக்கு நிம்மதியும் ரம்மியமும் அளிக்கக்கூடிய பொழுதுபோக்கு," என்றாள் ஷீலா. "இங்கிலாந்தின் பிரதம மந்திரிகள் பலருக்கு மீன் பிடிப்பதில் அதிக ஆர்வமாம்."

"சரித்திரம் சொல்வது உண்மையானால், ஒரு நெருக்கடி வரும்போதெல்லாம், அவர்கள் மீன் பிடிக்கப் போய்விடுவார்கள். திரும்பி வருவதற்குள் நெருக்கடியும் ஒருவிதமாக முடிந்துவிடும்."

"சிறு இங்கிலாந்து பிரதமர்களும் அப்படித்தான்."

"சர் வின்ஸ்டன் கூட மீன் பிடிக்கத்தான் எங்கோ போயிருப்பதாக பட்லர் சொன்னான்."

"சனி ஞாயிறு தினங்களில் வெளியே போக எனக்குப் பிடிக்காது. விடுமுறை நாட்களானதால் எங்கு பார்த்தாலும் கூட்டம் நிறைய இருக்கும். வார மத்தியில் போனால் வளமும் ஆறும் நமக்கே என்று இருக்கும்," என்று சொல்லி விடைபெற்றாள்.

பட்லரிடம் நாங்கள் பிடித்த மீன்களைக் கொடுத்தபொழுது அவனுக்கு சிரிப்பு வந்தது. "உங்களுக்கு மீன் பிடிக்கும் வழக்கம் இல்லை என்பது தெளிவு. மிஸ் கியூரேடரும் அவ்வளவு நல்ல ஆசிரியர் அல்ல. ஆனால் நாள் ஆக ஆக நீங்களும் நல்ல 'மீனவர்' ஆகலாம் . அதுதான் ஒரு பெரிய ராஜதந்திரிக்கு அழகு."

"ஆற்றில் நிறைய மீன் இல்லை போல் இருக்கிறது," என்றேன்.

"சார், நீங்கள் மீன் பிடிப்பதைப் பற்றி ஒரு புஸ்தகம் வாங்கி படிப்பது நல்லது."

"நான் நல்ல மீனவர் ஆக வேண்டுமென்றால் மீன்கள்தான் புஸ்தகம் படிக்க வேண்டும்."

"மீன்களுக்குப் படிக்கத் தெரியாதே!" என்றான் பட்லர்.

ஒரு வாரத்துக்குப் பிறகு மறுபடியும் மீன் பிடிக்கப் போகலாமா என்று ஷீலா கேட்டபோது நான் மிக ஆர்வத்துடன் ஒப்புக் கொண்டேன். போன தடவை ஆகாரம் எல்லாம் நன்றாக இருந்ததா என்று கேட்டதற்கும் 'ரொம்ப நன்றாக இருந்தது' என்றேன்.

"உங்களை திருப்திப்படுத்துவது ரொம்ப சுலபம். நீங்கள் ஒரு நல்ல கணவராக அமைவீர்கள்." என்றாள் ஷீலா.

"இந்தத் தடவை உனக்கு கொஞ்சம் அதிக தொந்தரவு கொடுக்கப் போகிறேன்," என்று நான் மறை பொருளாக சொன்னேன்.

"நீங்கள் அப்படி என்ன தொந்தரவு கொடுப்பீர்கள் என்று பார்க்கலாம்," என்று சொல்லிவிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய எத்தளித்தாள். நானும் இந்தத் தடவை ஏமாற்றமடையக் கூடாது என்று செய்து கொண்டேன.

அதிருஷ்டவசமாகவோ என்னவோ இந்தத் தடவை நிறைய மீன்கள் கிடைத்தன. ஷீலாவும் பொறுமையாக எந்தக் கரையிலிருந்து கண்ணியை வீச வேண்டும். சூரிய நிழல் எந்தப் பக்கத்தில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னாள். ஆனால் அன்று என் மனம் மீன் பிடிப்பதில் செல்லவில்லை. பின்னால் வரப்போகும் பெரு மகிழ்ச்சியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்.

“நீங்கள் நான் சொல்வதை கவனிக்கமால் எதைப் பற்றியோ நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்,” என்றாள் ஷீலா.

“இன்றைக்கு நிறைய மீன் கிடைத்திருக்கிறதே? ” என்றேன்.

“அது உங்கள் முயற்சியால் அல்ல. தெய்வாதீனம் என்றுதான் சொல்ல வேண்டும்.”

“பட்லர் இந்த மீன்களைப் பார்த்தால் ரொம்ப திருப்திப்படுவான்.”

“பட்லரைப்பற்றி ஏன் நீங்கள் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்” என்றாள் ஷீலா. “அவன்தான் உங்கள் வாழ்க்கையையே நிர்ணயிக்கிறான் போல் இருக்கிறது. நீங்கள் இங்கிலாந்துக்கு பேச்சு வார்த்தைக்காக போகும்போது கூட உங்களுடன் யார் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி அவன்தான் முடிவு செய்வானா?”

நான் ‘பேச்சு வார்த்தை’க்காக இங்கிலாந்துக்குத் திரும்புவேன் என்றும் கூட யாராவது போக வேண்டியிருக்குமென்றும் இதுவரையிலும் நான் நினைக்கவே இல்லை. ஆனால் யோசித்துப் பார்த்தபோது நான் ஆங்கில அரசாங்க தூதுவரானால் அம்மாதிரி போவது சகஜம்தானே.

“நீங்கள் அதிகார தோரணையில் திரும்பிப் போக வேண்டியிருந்தால் உங்களுக்கு சிறு இங்கிலாந்தின் நிலைமையை நன்றாக அறிந்த ஒருவர் வேண்டாமா? பேச்சுவார்த்தைகளின் போது குறித்துக்கொள்ளவும், யார் யாரை சந்திக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கவும் ஒரு காரியதரிசி தேவையிருக்குமல்லவா? ஆனாலும் ரொம்ப வற்புருத்தி கெஞ்சி கேட்டால்தான் நான் வருவேன். இல்லாவிட்டால் கண்டிப்பாக வர மாட்டேன்,” ஷீலா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

எல்லாம் நான் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக போவதாக காணப்பட்டது. நிலைமையை எப்படியாவது சமாளிக்க முயன்றேன்.

“நான் ரகசியமாய் வைத்திருந்து கடைசியில் நீ ஆச்சரியப்படுமாறு சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் நீ புத்தி கூர்மையுடன் யூகித்துவிட்டாய்,” என்றேன் புன் சிரிப்புடன். என் சிறு இங்கிலாந்து வாழ்வே ஒரு பெரிய பொய்யை அஸ்திவாரமாகக் கொண்டதாகையால் மற்றொரு சிறு பொய் சொல்வதில் குற்றமில்லை என்று எண்ணினேன். “நான் போகும்போது உன்னைத் தவிர யாரைக் கூட்டிக்கொண்டு போவேன்? ”

“நீங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்! எல்லாம் நீங்களாகவே என்னிடம் சொல்லாமல் திட்டம் போட்டிருக்கிறீர்கள். உங்கள் மாதிரி ஒருவர் எங்கேயும் கிடைக்கமாட்டார்!” ஷீலா என்னைத் தாவிப் பிடித்து ஒரு முத்தமளித்தாள். “இவ்வளவு திறமையுள்ளவர் என்பதால்தான் உங்களை இந்த முக்கியமான பொறுப்புக்கு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!”

மீன் பிடிப்பதைப் பற்றி நான் கவனிக்காததையெல்லாம் மறந்துவிட்டாள். “உங்களுக்கு ரொம்ப பசியாய் இருக்குமே? வாருங்கள் சாப்பிடலாம்.”

எனக்குத் பிடித்த ஆகார வகைகளையெல்லாம் கொண்டு வந்திருந்தாள். மேலும் எனக்காக எதிலும் காரம் போடவில்லை. ரோஸ்ட் கோழியும், காற்கறிகளும் பழ வகைகளும் மிகவும் ருசியாக இருந்தன. பியர் குடிக்கும்பொழுது ச்சக் கொடுத்த மாத்திரைகள் இரண்டையும் ஷீலாவுக்கு தெரியாமல் விழுங்கிவிட்டேன்.

“இன்று நாம் சீக்கிரம் திரும்பலாமா? நீங்கள் என்னை இங்கிலாந்துக்கு கூட்டிக்கொண்டு போவதைப்பற்றி உடனே என் தகப்பனாரிடம் கூற வேண்டும்,” என்றாள் ஷீலா.

“அப்படி ஒன்றும் அவசரம் இல்லை. பிரயாணம் இன்னும் சில நாளைக்கு பிறகுதான் இருக்கும். இன்னும் நான் என் சன்னத்துகளையே சமர்ப்பிக்கவில்லையே. இங்கே ரொம்ப ரம்மியமாக இருக்கிறது. கொஞ்சம் படுத்து இளைப்பாரலாமே,” என்றேன்.

நாங்கள் கம்பளி மேல் படுத்துக்கொண்டோம். ஷீலாவை இருகப் பிடித்து ஆவலோடு முத்தமிட்டேன். அவள் உடம்பை வருடினேன்.

“ஜியார்ஜ், இன்றைக்கு உங்கள் அன்பு ஆவேசமாக இருக்கிறதே,” என்றாள் ஷீலா சிரித்துக்கொண்டே. அவளைத் தொட்ட என் கையைக் கொஞ்சம் தள்ளிவிட்டாள்.

“ஏன் உனக்குப் பிடிக்கவில்லையா? ”

“ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நாம் யார் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.”

ஆனால் அவள் சொன்னது என் காதில் இறங்கவில்லை. மேலும் முத்தமிட்டுக் கொண்டும், அவள் உடம்பை வருடி சோதனை செய்து கொண்டும் இருந்தேன். எனது பொத்தான்களையும் கழட்ட ஆரம்பித்தேன்.

“ஜியார்ஜ்! ஜியார்ஜ்” ஷீலா கூவினாள். அவள் குரலில் அன்பு, ஆசை, ஆர்வம் ஒலித்தது. “தயவு செய்து பத்திரமாய் இருங்கள்!”

“நான் தயாராகத்தான் இருக்கிறேன்.”

திடீரென்று ஷீலா என்னைத் தள்ளிவிட்டு எழுந்து உட்கார்ந்தாள். “எதற்காக தயாராய் இருக்கிறீர்கள்? ” அவள் குரலில் கவலை, கோபம் தொனித்தது. ஆனால் அப்பொழுது அவற்றை புரிந்து கொள்ளும் சக்தி எனக்கு இல்லை.

“நான் எஸ்.ஏ.பி. சாப்பிட்டிருக்கிறேன்.”

“எஸ்.ஏ.பி. என்றால் என்ன? ”

“செக்ஸ் ஏக்டிவேஷன் பில்ஸ் (பாலுறவை ஊக்குவிக்கும் மாத்திரை),” என்று உற்சாகத்துடன் சொன்னேன்.

பளார் என்று என் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. “நீ என்ன மனிதனா, மிருகமா? ” என்று கத்தினாள். பிறகு என்னைத் தள்ளிவிட்டு எழுந்து தன் ஆடைகளை சரிசெய்து கொண்டாள்.

“நான் என்ன தப்பு செய்துவிட்டேன். கொஞ்சம் சொல்,” என்று கெஞ்சி கேட்டேன்.

ஆனால் ஷீலா ஒரு வார்த்தைகூட பேசவில்லை. தனது பையில் சாமான்களை எடுத்து குறுக்கு தோழில் மாட்டிக்கொண்டு விருவிரென்று நடந்தாள்.

நான் செயலற்றவனானேன்.

***********

## அத்தியாயம் பத்து

ஷீலா கொடுத்த அரை எனக்கு ஒரு தற்காலிக நோவு மட்டும் தரவில்லை. நிரந்தரமாக எனக்கு ஒரு பாடம் கற்பித்தமாதிரி இருந்தது. சிறு இங்கிலாந்துக்கு வந்ததிலிருந்து நான் ஒரு கனவுலகில் சஞ்சரித்தேன். அந்த அரை மீண்டும் என்னை யதார்த்த உலகுக்கு இறக்கிவிட்டது.

இதற்கு முன்பு என்னை யாரும் இம்மாதிரி அடித்ததில்லை. இதுவே ஒரு புதிய அனுபவம். பப் தத்துவத்துக்கு உடம்பு தண்டனையில் நம்பிக்கையில்லை. எனக்கு ஒரு பெரிய களங்கமேற்பட்டு நான் இழிவாக்கப்பட்டதாக தோன்றியது. ஷீலா சென்றதும் என் கண்களிலிருந்து நீர் சொரிந்தது.

நான் சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்தாக நடிக்க மட்டுமில்லை. அவரென்றே நான் நினைத்துவிட்டேன். நீல மலை வெள்ளையர்கள் மாதிரியே நானும் ஒரு மாய வாழ்க்கைக்கு அடிமையாகிவிட்டேன். ஆனால் என் மாய வாழ்க்கை எந்த வினாடியிலும் அம்பலமாகலாம். நான் அ.மு.கால சரித்திர ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒரு சாதாரண ஊழியன் என்பதை மறந்து ஆங்கில அரசின் தூதுவா் என்றே நம்பிவிட்டேன். உண்மையாக பார்க்கும்பொழுது நான் கம்ப்யூடரில் ஒரு நம்பர்தானே. எனக்கு ஒரு தனி அந்தஸ்த்தோ உரிமையோ இல்லை என்பதையே மறந்துவிட்டேன். நான் திரும்பிப்போனால் என் நம்பரையே யாராவது அழித்துவிட்டால் அத்துடன் என் வாழ்க்கை முடிந்துவிடும்.

ஷீலா கொடுத்த அரையுடன் பப் இடம் எனக்கு இருந்த விசுவாசமும் பூரணமாக மறைந்துவிட்டது. பப் மாத்திரைகளை எறிந்துவிட்டாலும் அதன் கொள்கைகளை நான் பூரணமாக கைவிடவில்லை. அதன் பிரகாரம் உணர்ச்சி வசப்படாமலே எல்லாவற்றிலும் பங்கு கொள்ளலாம் என்று கருதி வந்தேன். நீலமலை வெள்ளையர்களின் எதிர்காலத்திலும் எனக்கு அக்கரையில்லை. எதிர்காலத்தில் அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைப் பற்றியும் நான் நினைக்கவில்லை. இப்பொழுதுதான் அவர்கள் மேல் உள்ள அன்பு என் மனதில் உதயமாயிற்று. அவர்களுடன் ஒன்றாக இணைய நான் விரும்பினேன். அப்படியென்றால் நான் இங்கிலாந்து தூதுவராக எப்படி வாழ்வது. உண்மையைச் சொல்ல வேண்டாமா? அதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அவர்களுடைய சண்டை சச்சரவுகளும், சுதந்திரமும் கவலையற்ற வாழ்க்கையும் எனக்கு ரொம்ப பிடித்திருந்தது. அவர்களுடைய விரும்பு வெறுப்புகளும், பொறாமை, ஆசை, ஆர்வம், ஆவல் எல்லாம் என்னை ஈர்த்தன.

‘விசுவாசத்தின் குழந்தைதான் துரோகம்’ என்பது பப்பின் ஒரு பழமொழி. ஆனால் இன்று எனக்கு விசுவாசம் - நீலமலை வெள்ளையர்களுக்கு நான் காட்டும் விசுவாசம் - தான் முக்கியமாக தென்பட்டது. எனக்கு உள்ளக் கிளர்ச்சியைக் கொடுத்து, இறந்தகால, இறந்துவிட்ட உணர்வுகளை மீண்டும் தூண்டி, மனிதாபிமானத்தை மறுபடியும் என் மனதில் வேறூட்டியவர்களுக்கு இருந்த விசுவாசம். ஆனால் அதே சமயத்தில் நான் பிறந்து வளர்ந்த மேற்கு கோளத்துக்கு நான் துரோகம் செய்துவிட்டேனோ என்ற எண்ணமும் தோன்றியது. ஆம். விசுவாசமும் துரோகமும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள்தானே.

அடிபட்ட என் கன்னத்தை தடவிக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று நான் யோசித்தபொழுது இந்த சிந்தனைகள் என் மனதில் எழுந்தன. ஷீலாவின் மனத்தை நான் ரொம்பவும் புண்படுத்திவிட்டேன் என்பதை தெரிந்துகொண்டேன். ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை. இத்துடன் எங்கள் உறவுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதுதான் என்பதும் தெளிவாயிற்று. ஒருவிதத்தில் இதுவும் நல்லதுதான் என்று நினைத்தேன். ஆனால் இனிமேலாவது இம்மாதிரி சங்கடங்களில் அகப்படாமல் இருக்க வேண்டும். இருந்தாலும் ஷீலாவின் உறவு முறிந்தது எனக்குப் பெரிய கவலை அளித்தது.

நான் இன்னும் ஷீலாவின் கம்பளியின் மேல்தான் உட்கார்ந்திருந்தேன். அதையும் அவள் விட்டுப்போன மற்ற சில சாமான்களையும் எடுத்துக்கொண்டு நான் ஹேம்ப்டன் கோர்ட்டுக்கு நடக்கலானேன்.

அவள் தனியாக வந்தது பட்லருக்கு ஆச்சரியமாக இருந்தது. “சார், கொஞ்சம் டீ சாப்பிடுகிறீர்களா? ” என்று கேட்டான்.

“ஆம்” என்று சொன்னதும் டீ வந்தது. அதை சாப்பிட்டபோது கொஞ்சம் இளைப்பாறிய தெம்பு தோன்றியது. மேலும் என்ன செய்வது என்று யோசனை செய்தேன். நான் சாப்பிட்டிருந்த மாத்திரைகள் வேலை செய்ய ஆரம்பித்தன. ஏதாவது ஒரு பெண்ணை, எப்படியாவது பார்க்க வேண்டும், என்னும் ஆவல் ஏற்பட்டது. என்னைப் பொருத்தவரை இது மிகவும் அபூர்வமான விஷயம். அதை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை. சமாளிக்க முடியாது என்று தோன்றியது. ஒருவேளை அதிக மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டேனோ? எப்படியாவது உடனே மேரியைப் பார்க்க வேண்டும் முடிவு செய்தேன்.

என்னைப் பார்த்ததும், “நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? ” என்று பட்லர் கவலையோடு கேட்டான்.

“நான் சிறிது நேரம் வெளியே செல்கிறேன்.”

“இப்பொழுதுதானே ரொம்ப நேரம் நடந்து வந்திருக்கிறீர்கள்? ”

“பரவாயில்லை” என்று சொல்லிவிட்டு நான் வெளியேறினேன். எங்கு செல்கிறோம் என்னும் உணர்ச்சியே இல்லாமல் புல்தரைகள், வீடுகள், கடைகள் எல்லாம் தாண்டி நகரின் நெருங்கிய பாகத்துக்கு வந்தேன். ஏதோ ஒரு உள்ளுணர்ச்சி என் பாதங்களைத் தூண்டுவதுபோல இருந்தது. நாய்கள் மோப்பம் பிடித்துக் கொண்டு போவதைப்போல வழி தெரியாமலேயே மேரியை முதல் தடவை சந்தித்த குடிக்கும் இடத்துக்கு வந்தேன். மேலும் சில நிமிடங்களில் ‘சோஹோ சாலை’ என்று பலகையைப் பார்த்தவுடன் மேரியின் வீட்டு நம்பரும் ஞாபகத்துக்கு வந்தது.

நல்ல வேளையாக மேரி இருந்தாள். “எங்கே ரொம்ப நாளாக காணவில்லை,” என்று சிரித்துக் கொண்டே என்னை வரவேற்றாள். “அதுவும் பகலிலே!” என்றாள்.

“ரொம்ப அவசரம்” என்றேன். அவளைப் பார்த்ததும் பலநாள் ஆகாரமின்றி இருந்தவனுக்கு ஒரு விருந்து பரிமாறி இருப்பது போன்ற உணர்ச்சி தோன்றியது.

அவள் கதவு மூடியவுடன் அவளை இறுக்கிப் பிடித்து ஆலிங்கனம் செய்தேன். பிறகு அவள் கையைப் பிடித்து படுக்கைக்கு இழுத்துச் சென்றேன். நல்ல வேளையாக ஆண்களின் பல மனோபாவங்களை அவள் சுலபமாக அறியும் சக்தி வாய்ந்தவள். ஏதோ ஒரு அசாதாரண அனுபவம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அதனால் நான் ஆவேசப்பட்டிருப்பதாகவும் உணர்ந்து அதற்குத்தகுந்த சிகிச்சை அளித்து எனக்கு நிம்மதி அளித்தாள்.

கடைசியாக இருவரும் ஒய்ந்து படுக்கையில் சாய்ந்து இளைப்பாறும்பொழுது மேரி எழுந்து சென்று எனக்கு ஒரு டிரிங்க் கொண்டு வந்தாள். ஆனால் அப்போதும் இம்மாதிரி ஒரு விபரீத சம்பவம் நடப்பதற்கு என்ன காரணம் என்று கேட்கவில்லை. அவளுடைய சமயோசித அறிவை நான் மெச்சினேன்.

மேரியின் அன்பும், விஸ்கியும் ஒன்று சேர்ந்து என்னை நிம்மதியுடன் இளைப்பாற உதவின. மேரி பக்கத்தில் சாய்ந்து படுத்துக்கொண்டு பேசாமல் என் முகத்தையும் தோள்களையும் வருடினாள். அப்பொழுதுதான் மேரியின் மீது எனக்குள்ள ஆழ்ந்த அன்பை அறியலானேன். அதுவரைக்கும் நான் ஒரு மிருகம்மாதிரிதான் நடந்துகொண்டேன். ஆனால் மேரியின் அன்பு என்னை ஒரு மனிதனாக்கிவிட்டது. மேற்கு கோளம் அழிக்க முயன்ற என் உண்மையான, தூய்மையான மனிதத்தன்மை வெளிப்பட்டது. இதற்குப் பெயர்தான் காதலோ? எனக்குத் தெரியவில்லை. அனுபவம் இருந்தால்தானே? அல்லது மற்றவர்கள் மூலமாகவாவது பரிச்சியம் இருந்தால்தானே? ஆனால் ஒரு உண்மையான தன்னிறைவு பெற்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. என் டம்ளர் காலியானவுடன் மேரி மேலும் அதை நிறைத்து கொண்டுவந்தாள்.

கடைசியாக “நான் ஏன் இந்தமாதிரி நடந்து கொண்டேன் என்று ஆச்சரியமாக இல்லையா? ” என்று கேட்டேன்.

“நீங்கள் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும்” புன்சிரிப்புடன் சொன்னாள். “ஷீலாவுடன் ஏதாவது சண்டை பிடித்துக் கொண்டீர்களா?”

அவளுடைய புத்தி கூர்மையைப் பற்றியும் உள்ளுணர்வுத் திறமையைப் பற்றியும் நான் வியந்தேன். ‘‘எப்படித் தெரியும்? ’’ என்றேன்.

‘‘இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? போனதடவை நீங்கள் இங்கே வந்தபொழுது ஒரு எண்பது வயது கிழவர்மாதிரி நடந்து கொண்டீர்கள். நடுக்கம், கவலை, பயம் எல்லாம் அப்போது உங்கள் நடத்தையில் இருந்தது. ஆனால் இன்று ஆவேசப்பட்டவர்போல இருந்தீர்கள். பெண் குலத்தையே வெறுத்தமாதிரி என்னை நேசித்தீர்கள். இதிலிருந்து ஏதோ ஒரு புதிய உணர்ச்சி, ஏமாற்றம், இழிவு உம் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஷீலாவைத் தவிர வேறு யார் உம் மனதில் இம்மாதிரியான எண்ணங்களைத் தூண்டுவார்கள்? ’’

எவ்வளவு நுண்ணியமாக நிலைமையை அலசி வைத்திருந்தாள் மேரி? அந்த மாத்திரைகளைப் பற்றித்தான் அவளுக்கு தெரியவில்லை. தெரிவதற்கும் நியாயம் இல்லை. என் உள்ளக் கிளர்ச்சியை அவளிடம் அள்ளிக்கொட்ட விரும்பினேன். என் இருதயத்தைக் கரைத்து ஊற்ற விரும்பினேன்.

‘‘மேரி, நான் நடந்த எல்லாவற்றையும் சொன்னால், அதை புரிந்துகொண்டு என் மேல் அனுதாபம் காட்டுவாயா? ’’

‘‘பாருங்கள், நீங்கள் வேறொரு நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் பண்பாடு, வாழ்க்கை, நியாய அநியாயம் எல்லாம் முற்றிலும் மாறுபட்டிருக்கும். இதை அறிய கல்வியறிவு வேண்டியதில்லை. பகுத்தறிவு இருந்தால் போதும். நான் விளையாட்டுக்கோ, பொழுது போக்குக்காகவோ அல்லது பணத்துக்காகவோ உங்களை நேசிக்கவில்லை. ஆர அமர யோசித்துத்தான் அந்த முடிவுக்கு வந்தேன். நாம் ஒருவருடன் ஒருவர் உண்மையுடன் பழகினால்தான் நம் நம்பிக்கை வளரும். நீங்கள் சொல்வதை சொல்லுங்கள். முடிந்தவரை நான் உதவி செய்கிறேன்.’’

உடனே நடந்த எல்லாவற்றையும் சொன்னேன். ஜீவிய விஞ்ஞான பிரச்சனைகளைப் பற்றியும் ச்சக் கொடுத்த மாத்திரைகளைப் பற்றியும், ஷீலா எப்படி என்னை மணம் செய்துகொள்ள முடியாது என்று தெரிந்தும் ஊக்குவித்தாள் என்பதைப் பற்றியும் கடைசியாக அன்று காலை நடந்த சம்பவத்தைப் பற்றியும் விவரமாக சொன்னேன்.

‘‘குளிகை சாப்பிட்டதைப் பற்றி அப்பட்டமாக சொன்னீர்களா? ’’ என்று கேட்டாள்.

‘‘ஆம். முந்திய தடவை மீன் பிடிக்கப் போனபோது ஷீலா கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தாள் என்று நினைத்தேன். ஆகவே இன்றைக்கு ‘பத்திரமாய் இருங்கள்’ என்று சொன்னபோது நான் ‘கவலைப்பட வேண்டாம், மருந்து சாப்பிட்டிருக்கிறேன்’ என்று சொன்னேன்.’’

மேரி விழுந்து விழுந்து சிரித்தாள். நான் சொன்னதில் சிரிப்பதற்கு என்ன இருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஐந்து நிமிடத்துக்குப் பிறகுதான் அவள் சிரிப்பு அடங்கியது. பிறகு ‘‘பாவம். நீங்கள் ஒரு குழந்தை மாதிரி! ஆனால் அது ஷீலாவுக்கு எப்படித் தெரியும்!’’

‘‘எனக்கு ஒன்றும் புரியவில்லையே,’’ என்று கவலையோடு கேட்டேன்.

‘‘அவள் உங்களை கோபப்பட்டு அறைந்துவிட்டுச் சென்றதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. சுயமரியாதையுள்ள எந்தப் பெண்ணும் ஒரு ஆண் செக்ஸ் மாத்திரை சாப்பிட்ட பிறகுதான் தன்னை நேசிக்க முடியும் என்பதை கொஞ்சங்கூட விரும்பமாட்டாள். அது அவளுடைய அந்தஸ்த்துக்கும் அழகுக்கும் காதலுக்கும் ஒரு இழிவு அல்லவா? அதுவும் தன் காதலனுடன்! பாவம்!

‘‘பின் ஏன் என்னை ‘பத்திரமாய் இருங்கள்’ என்று சொன்னாள்? ’’

‘‘இதுகூட உங்களுக்குத் தெரியவில்லையா? தான் கர்ப்பமாகக் கூடாது. நீங்கள் கருத்தடுப்பு முறைகளை கையாள வேண்டும் என்பதற்காகத்தான் ‘பத்திரமாய் இருங்கள்’ என்றாள்.’’

‘‘ஷீலா எனக்கு வாய்ப்பு தந்திருந்தால் நான் எல்லாம் தெளிவாக சொல்லியிருப்பேனே!’’

“உங்களுடைய மேற்கு கோளத்துடைய செக்ஸ் பிரச்சனை0கள் அவளுக்கு எப்படித் தெரியும்?” என்றாள் மேரி.

“அப்பொழுது நீ கா்ப்பமாகிவிட்டால்?” என்று நான் கவலையோடு கேட்டேன்.

“தடுப்பு முறைகளைப்பற்றி எனக்குத் தெரியும்.”

இதைக்கேட்டு நான் கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தேன். மேரி கருத்தரித்தால் ச்சக்கினுடைய பிரச்சனைகளுக்கு விடை கண்டுபிடித்தமாதிரி ஆகிவிடும். எனக்கும் திடீரென்று, ஒரு மனைவியும் குழந்தைகளும் இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று தோன்றியது. அவா்கள் வளா்வதைப் பாா்த்தால், அவா்கள் அறிவு விலாசமடைவதைக் கண்டால் எவ்வளவு ரம்மியமாக இருக்கும்!

ஆனால் மேரி என் சிந்தனையில் குறுக்கிட்டாள். “நீங்கள் ஷீலாவுக்கு ஒரு கடிதம் எழுதி மன்னிப்பு கேட்க வேண்டும். அதுதான் நியாயம். உங்களுடைய உறவு முடிவடைந்தாலும், அதில் ஒரு கசப்பு இருக்கும். எப்படியிருந்தாலும் இந்த உறவு நீங்கள் திரும்பிச் செல்லும் வரைக்கும்தானே?” என்றாள்.

மறுபடியும் மேரியின் அறிவையும் புத்தி கூா்மையையும் நான் மெச்சினேன். அவள் மேல் உள்ள அன்பையும் காதலையும் வெளிக்காட்ட விரும்பினேன். பல இனிய பெயா்களால் அவளை அழைத்து ஆசைகாட்ட ஆவல் கொண்டேன். இனி எனக்கு ஷீலாவோ அல்லது வேறெந்தப் பெண்ணோ வேண்டாம். வாழ் நாள் முழுவதும் நான் உனக்கு அடிமையாய் இருப்பேன் என்று சொல்லி அவளை மகிழவைக்க நினைத்தேன். ஆனால் ஆயட்காலம் முழுவதும் அடக்கிவைக்கப்பட்ட ஆா்வம், பக்குவப்படுத்தப்பட்ட உள்ளம், என்னைப் பேசவிடவில்லை. இருந்தாலும் எனது ஆா்வம, தலைமுறை தலைமுறையாக இருந்த அடக்கு முறையையும் மீறக்கொண்டு எழுந்தது.

“மேரி, எதிா்காலத்தில் என்ன ஆகும் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் ஒரு குறிக்கோளில் நான் உறுதியாய் இருக்கிறேன். அன்பு, காதல் என்றால் என்ன என்று இப்பொழுதுதான் நான் அறிந்து கொண்டேன். முடியுமானால் உன்னை மணம் செய்துகொண்டு என் வாழ்நாளை உன்னுடன் கழக்க விரும்புகிறேன். ஆனால் நான் நினைப்பதற்கு மாறாக எதிா்காலம் ஏற்பட்டாலும், இந்த வினாடியை, இந்த இன்பத்தை நம்மிடமிருந்து யாரும் அபகரிக்க முடியாது. பின்னால் என்னைப் பற்றி நீ என்ன கேள்விப்பட்டாலும், நான் இப்போது சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு என்னை மன்னித்துவிடு.”

“நீங்களும் உணா்ச்சி வசப்பட்டுவிட்டீா்களே! இருந்தாலும் மணத்தைப் பற்றி பேச வேண்டாம். ஒரு பெரிய தூதுவருடைய வைப்பாட்டியாக இருக்க எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய மனைவியாக நான் இருக்க மாட்டேன். இருப்பினும் நீங்கள் வேண்டும்போது நான் உங்களுக்காக இங்கே காத்திருப்பேன்.”

இம்மாதிரியான அன்புக்கும் விசுவாசத்திற்கும் நான் என்ன கைம்மாறு செய்வது? மேலும் எங்களை ஆசை ஆட்கொண்டது. சிறிது நேரத்துக்குப் பிறகு நான் மனமில்லாமல் விடை பெற்றேன்.

நான் போகும்போது மேரி, “இன்று நீங்கள் எத்தனை மாத்திரைகள் சாப்பிட்டீா்கள்? ” என்றாள்.

`“இரண்டு”.

“அடுத்த தடவை இங்கே வரும்போது ஒன்றுக்குமேல் சாப்பிட வேண்டாம்.”

நானும் அவளுடன் சோ்ந்து சிரித்தேன்.

***************

நான் ஹேம்ப்டன் கோா்ட்டுக்குப் போனதும் ஷீலாவுக்கு கீழ்கண்ட கடிதம் எழுதினேன்.

> “நான் ஒரு மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்துவிட்டேன். ஆனால் அது எப்படி நடந்தது என்று தெரியவில்லை. நமது சமூகங்களுக்கும் பண்பாடுகளுக்கும் இடையேயுள்ள ஆழ்ந்த வேற்றுமையைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. நமது உறவு

நீடிக்குமானால் மேலும் இம் மாதிரியான சங்கடங்களுக்கு நாம் உட்படுவோம். நான் முன்பே தெளிவாக சொன்ன மாதிரி மணம் என்பது இங்கிலாந்தில் சட்டவிரோதம். ஆனால் உனக்கு வேறு எந்தவித உறவிலும் சிரத்தையில்லை என்பது எனக்குத் தெரியும். ஆகையால் இத்துடன் நம் உறவை முடித்துக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு உன் மீது எப்பொழுதும் அன்பும் மரியாதையும் இருக்கும் என உறுதி கூறுகிறேன். பல நாட்களாக நீ எனக்கு அளித்த உதவிக்கும் நான் ரொம்ப கடமைப்பட்டுள்ளேன். நான் அறிவின்மையால் செய்த தவறை மன்னிப்பாய் என்று நம்புகிறேன்.''

மறு நாளே பதில் வந்தது.

''உங்கள் மன்னிப்புக் கடிதத்தைப் பெற்றேன். நமது இரு சமூகங்களுக்குள் ஆழ்ந்த வேறுபாடுகள் இருப்பது உண்மைதான். நூற்றைம்பது ஆண்டுகள் தனித்திருந்தவர்கள் ஒன்று சேர்வதில் பல சிக்கல்கள் இருக்கும். ஆனால் ஒரு புது உறவை நிர்மானிப்பதில் நாம் முன்னோடிகளாக இருப்போம் என்று நான் கனவு கண்டேன். அதுவெல்லாம் எப்படி இருந்தாலும், உங்கள் வேலைக்கு நான் இன்னும் உதவி புரிய விரும்புகிறேன். ஒரு பெரிய நாட்டின் தூதுவர் ஒரு காரியதரிசிகூட இல்லாமல் இயங்குவது கஷ்டம். அந்த வேலையை எனக்கு அளிப்பதாக சொன்னீர்கள். இன்னும் தரப்போகிறீர்களல்லவா? ''

அன்று இரவு படுக்கையில் படுத்துக்கொண்டு தூங்க முடியாமல் என் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் அலசி, பிரித்து ஒரு தீர்வுகாண முயன்றேன்.

ஷீலா இன்று நடந்த சம்பவத்துக்குப் பிறகுகூட உறவை வளர்க்க விரும்புகிறாள் என்று அவள் கடிதத்திலிருந்து தெளிவாயிற்று. இங்கிலாந்து செல்லும் ஆசைதான் அதற்கு காரணமென்றும் என் மேல் இருக்கும் அன்பு அல்லவென்றும் நினைத்தேன். அது எப்படி இருப்பினும் மேலும் அந்த உறவை நீடிக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் சிக்கல்களும் அமைதியின்மையும் ஏற்படுமே தவிர வேறு எந்த நன்மையும் இருக்காது. அதனால் ஷீலாவின் கடிதத்துக்கு பதில் எழுதுவதில்லை என்று முடிவு செய்தேன்.

நான் ஒரு சிறிய ஆராய்ச்சியாளனாகத்தான் நீலமலைகளுக்கு வந்தேன். மேற்கு கோளத்தைப் பொறுத்தவரையில் அது அவ்வளவு முக்கியமல்ல. ச்சக்கும், அவருடைய கூட்டாளிகளுக்கும்தான் அதில் அதிக சிரத்தை. நான் ஒரு பார்வையாளனாகத்தான் வந்தேன். பங்கெடுத்துக்கொள்ள வரவில்லை. ஆனால் ச்சக்கின் தூண்டுதலாலும், பக்குவப்படுத்தும் மாத்திரைகளை எறிந்துவிட்டதாலும், என் மனோ அபிலாட்சைகளாலும் நான் உணர்ச்சிவசப்பட்டு சிறு இங்கிலாந்து வாழ்க்கையில் பங்குகொள்ள முற்பட்டேன். அப்படியிருக்கும்போது நான் எப்படி ஒரு பாரபட்சமற்ற பார்வையாளனாக, விஞ்ஞானியாக இருக்க முடியும்?

நான் பக்குவப்படுத்தும் மாத்திரைகளை சிரமமாக சாப்பிட்டிருந்தால் ஒரு வேளை உணர்ச்சிவசப்படாமலே பங்குகொண்டிருக்க முடியும். ஆனால் நீல மலை அனுபவம் ஒரு சாதாரண அனுபவம் அல்ல. என் உள்ளத்தையே அலசி, மறந்துபோன உள் மனத்து அபிலாட்சைகளையெல்லாம் கிளப்பி, பல ஆசைகளுக்கும் இச்சைகளுக்கும் இடமளித்துவிட்டது. இவற்றையெல்லாம் அந்த குளிகைகள் எத்தனை நாளைக்கு தடுத்திருக்கும்? இப்பொழுது நான் பப் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு 'சுதந்திர சிந்தணையாளன்' ஆகிவிட்டேன். மேற்கு கோளத்தில் இதற்கு மரண தண்டணைதான். ஆனால் அதற்கு பெயர் வேறு; முடிவு கட்டுவது என்று சொல்வார்கள். இந்த சுதந்திர மனப்பான்மை ஒரு புது ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அளித்தாலும், வாழ்வில் பங்கெடுத்தல் பிரம்மாணந்தத்தைக் கிளப்பினாலும் எதிர்காலத்தை நோக்கும்போது எனக்கு பயமாக இருந்தது.

எந்த சமயத்தில் நான் இந்த சிக்கல்களிலெல்லாம் மாட்டிக் கொண்டேன் எப்போது என் உள்ளத்தை நீலமலை வெள்ளையர் வாழ்க்கைக்கு பறிகொடுத்தேன்? பிரதமர் என்னை சர் ஜியார்ஜ் சோனியன்-ஸ்மித் என்று அழைத்தபொழுதா? அல்லது ஷீலா என்னை நேசித்து பேசினபொழுதா? இல்லாவிட்டால் மேரி என்மேல் கருணை கூர்ந்து தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அன்பு, காதல் என்றால் என்ன என்று என் வாழ்க்கையிலேயே முதல் தடவையாக காட்டியபொழுதா? தெரியவில்லை. நான் நீலமலைகளில் இறங்கிய வினாடியிலிருந்து இந்த இணைப்பு ஆரம்பமாகிவிட்டது. ஷீலா உறவு

முறிந்தது; அதை வெளியே கொண்டு வந்துவிட்டது. ஒரு கொப்புளம் பழுத்து வெடிப்பது மாதிரி. அவ்வளவுதான்.

இவற்றிற்கெல்லாம் ஒரு முக்கியமான காரணம் என் தனிமைதான். நண்பா்கள், உறவினா்கள் ஒருவருமே இல்லாமல் பிறந்த நாளிலிருந்து வாழ்ந்த ஒருவனுக்கு திடீரென்று பலா் சிரத்தையெடுத்து இன்பதுன்பங்களைப் பற்றி அக்கரை காட்டினால் அது உள்ளத்தைக் கிளறிவிடுவது இயற்கைதானே. உணா்ச்சிகளுக்கும் உறவுகளுக்கும் எப்படி அடிமையாகாமல் இருப்பது?

மேரி மேல் எனக்கு காதல் ஏற்பட்டது பிரச்சனைகளை மேலும் சிக்கல் ஆக்கிவிட்டது. ஒருவனது வாழ்க்கையை இன்னொரு பெண்ணோடு பகிர்ந்துகொள்வதைவிட இந்த உலகில் வேறென்ன பேரின்பம் இருக்கிறது? ஒரு பெண்ணின் அன்பைப் பெறுவது, அவளுக்காக வாழ்வைத் தியாகம் செய்வது, இவையெல்லாம் எனக்கு தூய்மையான புத்துணர்ச்சிகளாக அமைந்தன. ‘விருப்பும் வெறுப்பும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்’ என்று சொல்லித் தந்த பப் வேதாந்தத்திற்கு எனது இன்றைய சிந்தனைகள் நேர் விரோதமாக இருந்தன. மேரி எந்தமாதிரியான கைம்மாறும் இல்லாமல் தன் அன்பை எனக்கு அளித்து என்னை ஒரு உண்மையான ‘மனிதன்’ ஆக்கியதற்கு நான் அவளுக்கு எப்படி ஈடு செய்வது? மற்றவர்கள் தன்நலத்துடன் என்னிடம் அன்போடு நடந்து கொண்டாலும், அவா்களும் என்னை உதாசீனம் செய்யாமல் உறவு கொண்டாடவில்லையா? ஆனால் மேரியின் அன்புதான் தூய்மையான, பரிசுத்தமான, எதிர்நோக்காத அன்பு என்று அறிந்து கொண்டேன். உயர்ந்த சிந்தனைகள் எல்லாம் பல தலைமுறைகளுக்கு ஒரு தடவை மீண்டும் மீண்டும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தேன்.

இவற்றையெல்லாம்விட இன்னொரு முக்கிய மாறுதல் என்னவென்றால் என் உள்ளத்தில் மனச்சாட்சி உதயமாகிவிட்டது. எது சரி எது சரியல்ல என்னும் பாகுபாட்டை அறிந்துகொண்டேன். இதுவும் பப் தத்துவத்துக்கு நேர் எதிரடி உணர்ச்சியாகும். ‘மனச்சாட்சிதான் பயங்கொள்ளிகளின் கடைசி வாசஸ்தலம்’ என்று பப் எனக்கு கற்பித்திருந்தது. ஆனால் இப்பொழுது இங்கிலாந்து அரசின் தூதுவா் என்று நான் பாசாங்கு செய்வது சரியா, ஞாயமா, முறையா என்று கவலைப்பட்டேன். அவா்களுடைய விருந்தாளியாக இருந்துகொண்டு அவா்களையே ஏமாற்றுவது ஒரு கயவனின் செயல் என எனக்குப்பட்டது.

இந்த சூழ்நிலையில் நான் என்ன செய்வது? என்ன செய்ய முடியும்? முதலில் ச்சக்குடன் பேசுவது நல்லது என்று எண்ணி நெருக்கடிக்காக எனக்கு அளித்த நம்பரில் அவரை கூப்பிட்டேன்.

ரொம்ப நேரத்துக்கப்புறம் தான் பதில் கிடைத்தது. நாங்கள் ஒருவருக்கொருவா் அறிமுகம் செய்து கொண்டவுடன் ச்சக், “என்ன ஜியார்ஜ், என்ன நெருக்கடியில் மாட்டிக் கொண்டீா்கள்?” என்றார்.

“ச்சக், உங்களை உடனே சந்தித்துப் பேச வேண்டும்,” என்றேன். என் பேச்சில் ஒரு அவசரக் குறி தொணித்தது.

“சரி சொல்லுங்கள்.”

“நேரடியாக பேச வேண்டும்.”

“நீங்கள் யாரையாவது கொலை செய்யவோ அல்லது பலவந்தப்படுத்தவோ இல்லையே?”

“அம்மாதிரி ஒன்றும் இல்லை. இருந்தாலும் நெருக்கடிதான்.”

“ஏதாவது அபாயத்தில் இருக்கிறீா்களா?”

“திடீரென்று ஒன்றும் இல்லை.”

“அப்படியென்றால் நெருக்கடி இல்லை,” என்றாா் ச்சக் நிதானமாக. “அடுத்த ஞாயிற்றுக்கிழமை எப்போதும்போல் பேசுவோம்.”

“இல்லை ச்சக். நான் பேசாவிட்டால் என் மனது.... என் உள்ளம்....”

“ஜியார்ஜ், நான் திடீரென்று என் வேலைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எப்படி வருவது? சிறு இங்கிலாந்து அரசாங்கம் என்ன நினைக்கும்? இதையெல்லாம் நினைக்காமல்....”

“ச்சக்! என் நிலைமையில் நீங்கள் உணரவில்லை. இது என் மனச்சாட்சியின் நெருக்கடி!”

“பக்குவப்படுத்தும் குளிகைகள் என்ன ஆயின?”

“நான் இங்கு வந்த நாளே அவைகளை எறிந்துவிட்டேன்.”

“அப்பொழுது நெருக்கடி என்பது உண்மைதான். ஆனால் அது உங்களுடைய பொறுப்பு”.

“பொறுப்பைப்பற்றி இப்பொழுது கவலைப்படுவானேன். நீங்கள் வந்தால் போதும்.”

அவர் கொஞ்சம் யோசனை செய்துவிட்டு பிறகு, “சரி நான் வருகிறேன். உங்களுக்கு கிருஷ்ணா வீடு தெரியுமல்லவா? ”

“ஆம்”

“அவர் சொல்லி அனுப்புவார். உடனே அங்கே வர வேண்டும். என்ன?”

“சரி, ச்சக். ரொம்ப தேங்க்ஸ்”.

“எனக்கு தேங்க்ஸ் சொன்னால் மனச்சாட்சி என்னும் வியாதி உங்களை பலமாக பிடித்துக் கொண்டு விட்டது.”

* * *

மறு நாட் காலை ஜான் என்னைப் பார்க்க வந்தார். ரொம்ப கவலையுடன் காணப்பட்டார். முகம் வாடியிருந்தது.

நேராக விஷயத்துக்கு வந்தார். “உங்களுக்கும் ஷீலாவுக்கும் இடையில் என்ன நடந்தது என்ற தெரியவில்லை. ஆனால் அவள் உங்களைப் பார்க்க வரமாட்டேன் என்கிறாள். உங்களுடன் எந்த உறவும் வேண்டாம் என்கிறாள்.”

நான் அவருக்காக ரொம்ப வியசனப்பட்டேன். அவர் மிகவும் நல்லவர். சிறு இங்கிலாந்தை எனக்கு தெளிவாக்கியவர். அவருடன் நடந்ததை சொல்ல நான் ஆசைப்பட்டேன். அப்படி சொல்லாமல் இருப்பது என் மனச்சாட்சிக்கு விரோதமாகப்பட்டது. ஆனால் அதைப்பற்றி பேசுவதற்கே எனக்கு வெட்கமாக இருந்தது. மேலும் ஷீலாவே சொல்லாத பொழுது..... ஒரு வேளை இன்னும் சில நாட்களில்......”

“நானும் அதைப்பற்றி கவலைப்படுகிறேன் ஜான்,” ஷீலா நன்றாகத்தானே இருக்கிறாள்?”

“எனக்கு ஒரே மகள் ரொம்ப செல்லமாக வளர்ந்தவள். அவளுக்கு துயரம் என்றால் என்னால் தாள முடியாது.” அவர் பேச்சில் இரும்புத் திடம் இருப்பது போல் தோன்றியது. நான் பயந்துவிட்டேன். ஆனால் உடனே அன்போடு பேசலானார். “உங்கள் மேலும் எனக்கு அன்பு உண்டு. உங்கள் இருவருக்கும் ஒரு பிணைப்பு ஏற்படும் என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் ஒரு காரணமுமின்றி ஷீலா இப்படிப்பேசுவது எனக்கு ஒரு புதிராய் இருக்கிறது.”

“அவள் ஒன்றும் சொல்லவில்லையா? ”

“இல்லை. எங்கள் உறவு முடிந்துவிட்டது என்பதைத் தவிர வேறொன்றும் சொல்லவில்லை.”

‘‘அதைத் தெளிவாக்குவது எனக்கும் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கிறது. சில விஷயங்களில் நம் இரு நாடுகளுக்குமிடையே பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இங்கிலாந்திலும் மேற்கு கோளத்திலும் திருமணமே சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது. திருமணத்தைப் பற்றி இந்த தலைமுறையில் யாருக்குமே ஒன்றும் தெரியாது. அ.மு. சரித்திரம் படித்திருப்பதால்தான் எனக்கே தெரியும். மணம், குடும்பம், குழந்தைகள் எல்லாமே சமூகத்திலிருந்து மறைந்துவிட்டன. எல்லோரும் செக்ஸ் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்.’’

‘‘ஜியார்ஜ், நான் சொல்வதற்கு மன்னிக்கவும். உங்கள் நாட்டில் எல்லோருமே தந்தையறியாத குழந்தைகள் தானா? ’’

‘‘ஆம். உண்மைதான்,’’ என்றேன்.

மனச்சாட்சியைப் பற்றி எப்படி அறிந்து கொண்டேனோ அதே முறையில் உண்மையை திறமையுடன் மறைப்பதைப் பற்றியும் நான் கற்றுக் கொண்டேன். மேற்கு கோளத்தில் பொய் சொல்லியும் எனக்கு வழக்கமில்லை.

எப்படியோ நான் சொன்னது ஜானுக்கு ஆறுதல் அளித்ததாகத் தோன்றியது. ‘‘நீங்கள் சொன்னதைப் பற்றி எனக்கு சந்தோஷம். உறவு ரொம்ப தூரம் போகுமுன் நீங்கள் இதைப்பற்றி சொன்னது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஷீலா நல்ல பெண். மனத்துக்கு அப்பாற்பட்ட உறவை கனவிலும் விரும்பமாட்டாள். நீங்கள் சொன்னது அவளுக்கு பெரிய அதிர்ச்சியைத் தந்ததில் வியப்பில்லை. எல்லோருக்குமே அதிர்ச்சி தாக்கக்கூடிய விஷயம். திருமணம் என்பது இன்றோ நேற்றோ ஏற்பட்ட ஒரு சடங்கு அல்ல. ஏடம், ஈவா காலத்திலிருந்து புனிதமானதாகவும் தெய்வீகமானதாகவும் கருதப்பட்டு வந்த ஒரு சமூக உறவு. உங்கள் நாட்டில் அது தடுக்கப்பட்டிருந்தாலும் இங்கிருக்கும்வரையில் எங்கள் உறவுகளையும் கருத்துகளையும் மதிப்பீர்கள் என்று நம்புகிறேன்.’’

‘‘கண்டிப்பாக,’’ என்று உறுதியளித்தேன்.

ஜான் கொஞ்சம் யோசனை செய்தார். பிறகு எங்களுடைய சொந்த பிரச்சனையை விட்டுவிட்டு நான் சொன்னதை ஒரு பொதுப் பிரச்சனையாக விவாதிக்கலானார்.

‘‘திருமணமே இல்லையென்றால் குழந்தைகள் எப்படி பிறக்கின்றன. அவர்களை வளர்ப்பது யார் பொறுப்பு? சொல்லுங்கள் பார்க்கலாம்,’’ என்று கேட்டார்.

பிறகு நான் குழந்தைப் பண்ணைகளைப் பற்றியும், செயற்கை கருத்தரிப்பு முறைகளைப் பற்றியும், ஜனக்கட்டுப்பாட்டு திட்டங்களைப் பற்றியும் விரிவாக சொல்லவேண்டி நேரிட்டது. கடைசியாக நானும் அப்படிப் பிறந்த குழந்தைகளுள் ஒருவன் என்று சொன்னேன்.

‘‘எல்லா குழந்தைகளுமே பெற்றோரின் அன்பும் வாஞ்சையும் இல்லாமல் வளர்கின்றன. இல்லையா?’’

‘‘அரசுதான் அவர்களுக்கு பெற்றோர், ஆசிரியர், கடவுளும் கூட’’

‘‘அரசு பிடிக்கவில்லையென்றால்? ’’

‘‘அதுதான் அவர்களின் முக்கியமான தத்துவம் ஜான். அங்கே தனியார் சுதந்திரமோ, தனியார் விருப்பு வெறுப்போ கிடையாது. ஒருவர் ஒரு குடும்பத்துக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ சேர்ந்தவர் அல்ல. ஆகவே ஒரு குழுவுக்கும் இன்னொரு குழுவுக்கும் இங்கிருப்பது போல் அபிப்பிராய பேதம், போராட்டம், ஒன்றுமே கிடையாது,’’ பிறகு நான் கல்வியைப் பற்றியும் பக்குவப்படுத்தலைப் பற்றியும் விவரித்தேன்.

‘‘ஐயோ கடவுளே!’’ என்றார் ஜான் அதிர்ச்சியுடன். மாபெரும் திகில் அவரை ஆட்கொண்டது. ‘‘இதனால்தான் என் கேள்விகளையெல்லாம் நீங்கள் தவிற்று வந்திருக்கிறீர்கள். உங்கள் நாட்டில் மனிதர்களை உணர்ச்சியற்ற யந்திரங்களாக்கிவிட்டார்கள். உமது நாட்டின் கொள்கையில் உமக்கு நம்பிக்கை உண்டா? ’’

‘‘எனக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது ஒரு அற்ப விஷயம்.’’

‘‘நீங்கள் உற்சாகத்தோடு அந்தக் கொள்கையை கடைபிடிக்கவில்லை என்பது தெளிவு. எனக்கு அதுவே போதும்.’’

‘‘ஆனால் இதைவிட்டால் வேறு வழி என்ன ஜான்? மக்களுக்கு பல வழிகளில் இருந்து இதுதான் நல்லது என்று தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லை. முழுக் கட்டுப்பாடு இருக்கிறது.’’

‘‘நான் அந்த ஊரில் இல்லாதது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.’’

‘‘ஜான் நான் இங்கு வந்த முதல் நாளிலிருந்து எல்லோருக்கும் அங்கே எப்படிப்போவது என்று ஆவலுடன் இருக்கிறார்கள். உங்கள் அரசாங்கம் அந்த அரசாங்கத்துடன் இணைய விரும்புகிறது. உங்கள் இருதயத்தில் இங்கிலாந்து எப்படி இருக்கும் என்று ஒரு படம் வரைந்து அந்தப் படத்துக்கு உயிர் கொடுத்து அங்கே போக எல்லோரும் கனவு காண்கிறீர்கள். ஆனால் உண்மை அதற்கு நேர் எதிரிடை. உண்மை தெரிந்தால் யார் அங்கே போக விரும்புவார்கள்? ’’

‘‘நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்க எனக்கு தாகமாகிறது,’’ என்றார் ஜான் சிரித்துக்கொண்டே.

எனது விருந்தோம்பல் குற்றத்துக்கு நான் மன்னிப்பு கேட்டுவிட்டு பிறகு பட்லரைக் கூப்பிட்டு இருவருக்கும் ட்ரிங்க்ஸ் கொண்டுவரச் சொன்னேன்.

‘‘பாட்டிலை இங்கேயே வைத்துவிடு பட்லர்,’’ என்றார் ஜான். நான் சொன்ன செய்தி அவரை அலக்காட்டிவிட்டது.

‘‘நீங்கள் கேள்விகளுக்கெல்லாம் ஏன் நேரடியான பதில் சொல்லவில்லை என்று இப்போதுதான் எனக்கு அர்த்தமாகிறது,’’ என்றார் ஜான். ‘‘ஆனால் நிலைமை இந்த மாதிரி இருக்கும் என்று நாங்கள் யாரும் கனவிலும் நினைக்கவில்லை.

‘‘எப்பொழுது சொன்னாலும் உங்களுக்கு அதிர்ச்சி ஏற்படும் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நல்ல சமயம் பார்த்து சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக, இப்பொழுதே சொல்லவேண்டி நேரிட்டது. ஆனால் இதையெல்லாம் எப்பொழுது எல்லோருக்கும் சொல்லவேண்டி நேரிட்டது. ஆனால் இதையெல்லாம் எப்பொழுது எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள்தான் யோசனை சொல்ல வேண்டும்.’’

ஜான் கொஞ்சம் யோசனை செய்தார். டம்ளரில் இருந்ததை குடித்துவிட்டு மேலும் நிரப்பிக் கொண்டார். ‘‘நீங்கள் சொன்ன விஷயங்கள் சிறு இங்கிலாந்தைப் பொருத்தவரையில் ஒரு தேசீய விபத்து என்று சொல்லலாம். எங்கள் ஆகாயக்கோட்டைகள் எல்லாம் இடிந்துவிட்டன. இங்கிலாந்துடன் இணையும் கொள்கை பகல் கனவாகிவிட்டது. பலர் உங்களை நம்புவார்களா என்பதை சந்தேகம். அதனால் ரொம்ப யோசனை செய்த பிறகுதான் இதை வெளியிட வேண்டும்.’’

‘‘நீங்களாவது என்னை நம்புகிறீர்கள் அல்லவா?’’

‘‘நான் நம்புகிறேன். இதையெல்லாம் நீங்கள் கற்பனை செய்திருக்க முடியாது. ஷீலா உறவினால் என்னிடம் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு ஏற்பட்டது. இல்லாவிட்டால் என்னிடம் கூட சொல்லியிருக்கமாட்டீர்கள். ஆம். நான் நம்புகிறேன்.’’

‘‘நீங்கள் நம்பினால் நீங்கள் மற்றவர்களையும் நம்ப வைக்கலாம், இல்லையா? உங்கள் வார்த்தைக்கு சிறு இங்கிலாந்தில் அதிக மதிப்புண்டே?’’

ஜான் மனம் வேறு திசையில் திரும்பியதாக தோன்றியது. ‘‘நீங்கள் இன்றைய இங்கிலாந்தைப் பற்றிய விவரங்களை வெளியிட்டால் சர் வின்ஸ்டன் தோல்வி அடைவார். அவர்தான் இங்கிலாந்துடன் இணையும் கொள்கைக்கு காரணகர்த்தா. இங்கிருக்கும் எல்லோருமே இங்கிலாந்துடன் குடியேறுவதைப்பற்றிக் கூட அவர் பேசியிருக்கிறார்.’’

“அது உங்கள் பிரச்சனை. ஆனால் நான் சொன்னதை நீங்கள் ரகசியமாக வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.”

“நான் வெளியிடமாட்டேன்” என்றார் ஜான். பிறகு வாய்விட்டு சிரித்தார். மனது, அதிர்ச்சியிலிருந்து நிம்மதியாகிவிட்டமாதிரி இருந்தது. “ஜியார்ஜ், தத்துவார்த்தமாக பார்க்கும்பொழுது, விருப்பு வெறுப்பும், நல்லது கெட்டதும், நியாயம் அநியாயமும், உணர்ச்சியும் எழுச்சியும், இவையெல்லாம் தொன்று தொட்டு மனிதவர்க்கத்தின் சொத்தாக இருந்து வந்திருக்கின்றன. அதுதான் மனிதனுக்கு கடவுள் அளித்த ஸ்ரீதனம் என்றே சொல்லலாம். மிருகங்களுக்குகூட இந்த உணர்ச்சிகள் இருக்கின்றன. இந்துக்களிடையே ஒரு அழகான கதையுண்டு. ஆதிகாலத்தில் மேருவை மத்தாகவும் பாம்பைக் கயிறாகவும்கொண்டு பாற்கடலைக் கடைந்தார்களாம். அதிலிருந்துதான் நன்மை தீமை, அமிர்தம், விஷம் எல்லாம் வந்ததாக சொல்வார்கள். அந்தக் காலத்திலிருந்து தீமையை ஒழித்து நன்மையை ஊக்குவதுதான் மானிட வர்க்கத்தின் முயற்சி என்றே சொல்லலாம். அதற்குத்தான் நாம் நாகரிகம் என்றும் பண்பாடு என்றும் முன்னேற்றம் என்றும் பெயர்கள் கொடுத்திருக்கின்றோம். இவற்றையெல்லாம் ஒழித்துக்கட்டுவது என்றால், அது முடியாத காரியம்.”

“அவற்றையெல்லாம் ஒழித்துக் கட்டுவதில் மேற்கு கோளம் ரொம்ப முன்னேறியிருக்கிறது.”

“ஆனால் அவர்கள் அந்த வழியில் பூரணமாக முன்னேற முடியாது. நீங்கள் பாருங்கள் அதற்கு முன்னால் தடங்கல் ஏற்படும்.”

“தடங்கல் இப்பொழுதே ஏற்பட்டுவிட்டது.”

“என்ன! தடங்கலா? ஏற்பட்டுவிட்டதா? சொல்லுங்கள்!” என்றார் ஜான் ஆவலுடன்.

பிறகு நான் செயற்கை கருத்தரிப்பு முறைகளைப் பற்றியும், ஜனத்தொகை குறைவதைப்பற்றியும் ச்சக் சொன்ன விஷயங்களையெல்லாம் விவரமாக சொன்னேன்.

“இதெல்லாம் உண்மையா!” என்றார் ஜான் ஆச்சரியத்துடன். டம்ளரிலிருந்து நிறைய குடித்து வாயைத் துடைத்துக்கொண்டார்.. “எல்லாம் தலைகீழாகிவிட்டது போல் தெரிகிறது. எனக்கு பைத்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது.”

“பயப்படாதீர்கள், ஒன்றும் ஆகப்போவதில்லை. சிறு இங்கிலாந்தில் ஏராளமான குழந்தைகள் பிறக்கின்றனவே. நீங்கள் தனியே இருக்கும்வரையில் மனித வர்க்கம் அழியாது.”

நான் சொன்ன யோசனை மெதுவாகத்தான் ஜான் மனத்தில் புகுந்து அதில் இருக்கும் வாய்ப்புகளை வெளிப்படுத்தியது. “என்ன சொல்கிறீர்கள்? சிறு இங்கிலாந்து மக்கள்தான் இருப்பார்கள் என்றா?”

“அல்லது உங்கள் மூலமாக மனித வர்க்கத்தைப் பெருக்கலாமல்லவா?”

ஜான் மறுபடியும் டம்ளரை நிறைத்துக்கொண்டார். “என்னைப் பகடி செய்கிறீர்களா, அல்லது எல்லாம் உண்மையா? என் மனம் கலைகின்றதே. ஷீலாவை மணக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் பரவாயில்லை. அதற்காக இம்மாதிரி கதைகள் சொல்லி என்னை அலக்களிக்க வேண்டாம்.”

“இல்லை ஜான். நான் இதுவரை சொன்னதில் ஒரு துளி பொய்கூட கிடையாது.”

“நான் சிறிது நேரத்துக்கு முன்பு என் மகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைகொண்ட தகப்பனாக இங்கு வந்தேன். ஆனால் மனித வர்க்கத்தின் சுமைகளையே என் மேல் ஏற்றிவிட்டீர்களே. இதை நான் எப்படி சுமப்பது.”

“இந்த சுமைகள் பல நாட்களாக நான் சுமந்து வந்திருக்கிறேன் ஜான்,” என்னுடன் இன்று நீங்கள் பங்கிக் கொண்டீர்கள். அவ்வளவுதான்.”

சிறிது நேரம் இருவரும் பேசாமல் இருந்தோம். ஜான் மெல்ல தம் விஸ்கியைப் பருகினார். பிறகு, ‘‘ஜியார்ஜ், நீங்கள் இவ்வளவு என்னிடம் சொன்ன பிறகு இங்கிருக்கும் நிலைமையை நானும் உங்களிடம் சொல்ல வேண்டும் இல்லையா? இங்கே பலர் உங்களுடைய உண்மையான அந்தஸ்தைப் பற்றியும் உங்களுடைய நோக்கத்தைப் பற்றியும் கேள்வி கேட்கிறார்கள். நீங்கள் ஏன் உங்களுடைய சன்னத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை? ஒரு பெரிய நாட்டின் தூதுவராய் இருந்தும் ஏன் தனியாக உதவியாளர்கள் இன்றி வந்திருக்கிறீர்கள்? இங்கிலாந்தைப் பற்றியும் அங்கெய வாழ்க்கையைப் பற்றியும் ஏன் ஒன்றுமே சொல்லவில்லை? பலர் இந்திய அரசு அனுப்பிய ஒற்றர் நீங்கள் என்று கருதுகிறார்கள்.’’

‘‘நீங்கள் அதை நம்பவில்லையே?’’

‘‘நான் நம்பாமல் இருக்கலாம். ஆனால் பலர் நம்புகிறார்கள். மற்றவர்கள் இங்கிலாந்து செல்ல நீங்கள் நுழைவுச் சீட்டு தரவேண்டும் என்றும் கேட்கிறார்கள். அ.மு. காலத்திலும் அதற்குப் பிறகு டெல்லியில் இருந்த ஆங்கில தூதுவர் அம்மாதரி நுழைவுச் சீட்டுகளை அளித்து வந்தார். மனமாகாத பெண்கள் போக வேண்டுமென்றால் அவர்கள் கர்ப்பமாய் இல்லை என்று கூட நிரூபிக்க வேண்டியிருந்தது.’’

‘‘ஜான் இன்று இங்கிலாந்து செல்வது அவ்வளவு சுலபமல்ல. முதலில் கீழ்கோள அரசு அனுமதிக்க வேண்டும்.’’

‘‘எனக்குத் தெரியும் ஜியார்ஜ். இன்று காலையில் நீங்கள் சொன்னதற்கப்புறம், அங்கே போக யாரையுமே அனுமதிக்காமல் இருப்பது நல்லது.’’

நான் என் நண்பரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ஆனால் என்னைப் பற்றிய உண்மையை மட்டும் சொல்லவில்லை. அதையும் சொல்லிவிட்டால் என் மனோபாரம் குறையும். என் மனச்சாட்சியும் நிம்மதியடையும். ஆனால் அதைச் சொன்னால் நான் சொன்ன மற்ற விஷயங்களும் பொய் என்று ஜான் நினைத்துவிடலாம். இந்த உண்மையான நண்பனிடம் நேராக நடந்துகொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டேன். ஆனால் வேறு வழியில்லை.

‘‘நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம் என்றால், அங்கே குழந்தை உற்பத்தி குறைந்து வருகிறது என்றால், இங்கே குழந்தை பெறத் தகுதியுடையவர்களை சோதித்துப் பார்த்து அங்கே அனுப்பலாம் இல்லையா?’’ என்றார் ஜான் சிரித்துக்கொண்டே.

‘‘நான் சொல்லியதெல்லாவற்றைக் கேட்ட பிறகும் நீங்கள் உங்கள் நகைச்சுவையை இழக்கவில்லை.’’

‘‘நீங்கள் விவரித்த உலகத்தில் வாழ வேண்டுமென்றால் நகைச் சுவை ஒன்றுதான் நமக்கு ஒரு ஊன்றுகோலாய் இருக்கும்,’’ என்றார் ஜான்.

‘‘ஆம்.’’

‘‘சிறு இங்கிலாந்துதான் மனித வர்க்கத்தின் விருத்திக்கு ஆணிவேர் என்றால் என் யோசனை சரிதானே?’’

‘‘அதற்கும் ஒரு சர்வதேச ஒப்பந்தம் வேண்டியிருக்கும்.’’

‘‘நீங்கள் இன்னும் ஏதாவது விபரிதமான செய்திகளை சொல்லும்முன் நான் போய்விடுவது நல்லது. நீங்கள் சொன்ன ரகசியம் என்னிடம் பத்திரமாய் இருக்கும். ஆனால் நீங்களும் உங்களைப்பற்றி நடமாடும் வதந்திகளைப் போக்க நடவடிக்கை எடுத்து உங்கள் உண்மையான அந்தஸ்த்தை நிலைநிறுத்த வேண்டும்.’’

பிறகு ஜான் விடைபெற்றார்.

## அத்தியாயம் பதினொன்று

ஜான் போன பிறகு அவரிடம் இவ்வளவு முக்கியமான விஷயங்கள் சொன்னது சரியா என்று யோசனை செய்தேன். ஒரு புதிய சூழ்நிலையில் சங்கடமான கட்டத்தில் நான் இருந்தேன். என்ன செய்வது என்று முடிவு செய்வது கஷ்டமாக இருந்தது. ஆகவே நான் சம்பவங்களையும் நடவடிக்கைகளையும் கட்டுப்பாடு செய்வதற்கு பதிலாக அவைகள் என்னை இழுத்துச் செல்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. சூழ்நிலைக்கு நான் அடிமையாகிவிட்டேனோ? உணர்ச்சிவசப்பட்டு நடக்கிறேனோ? ஜான் ஒரு பெரிய அதிர்ச்சிக்குட்பட்டிருந்தாலும், என் பிரச்சனைகளை அனுதாபத்துடன்தான் பார்த்தார். ஆனால் என்னைப் பற்றிய உண்மை தெரிந்தால்?

அவரிடம் சொன்னதைக்கூட நான் கொஞ்சம் தந்திரமாகவும் பொருக்கி எடுத்தும்தான் சொல்லியிருந்தேன். என்னைப் பற்றி சொல்லவில்லை. அன்றாட வாழ்க்கையைப் பற்றி சொல்லவில்லை. ஷீலாவின் உறவு முறிந்ததற்கு உண்மையான காரணத்தை சொல்லவில்லை. நியாயம் அநியாயம் தெரிந்திருந்தும் மனச்சாட்சி தலையெடுத்திருந்தும், நான் பப் தத்துவத்தைத்தான் கைப்பற்றியிருந்தேன். இருந்தாலும் இதில் உள்ள நீதி எனக்கும் கவலை தந்தது. வேறு வழியில்லை என்று சமாதானப் படுத்திக்கொண்டாலும் நான் ஜானிடம், எனக்கு உதவிய நண்பரிடம், உண்மையாக நடந்து கொள்ளவில்லை என்னும் எண்ணம் என்னை உறுத்தியது.

இருந்தாலும் அவருடன் பேசியது கொஞ்சம் நிம்மதி அளித்தது. ஷீலாவை பொருத்த பிரச்சனையாவது ஒருவாறு சிக்கல் இல்லாமல் தீர்ந்துவிட்டதே. அவசரப்பட்டு ச்சக்கைக் கூப்பிட்டது தவறாகத் தோன்றியது. பப் தத்துவத்தைக் கற்றவர்கள் பொதுவாக தர்க்க ரீதியாக செயல்படுவார்கள். சொன்னதைச் சரியாக குற்றமில்லாமல் நிறைவேற்றுவதில் நிபுணர்கள். ஆனால் உணர்ச்சிவசப்பட்ட சிக்கலான பிரச்சனைகளை அலசித் தீர்வு காணுவதிலும், தாமாக முடிவெடுத்து அந்த முடிவை செயல்படுத்துவதிலும் அவர்கள் உபயோகமற்றவர்கள். எல்லாவற்றையும் ஒன்றாக கூட்டிப்பார்க்கும்பொழுது நான் ச்சக்கைக் கூப்பிட்டது சரிதான் என்று தோன்றியது. ‘மாட்சிமை பொருந்திய ஆங்கில அரசின் தூதுவர்’ என்னும் வேடம் எனக்கு நாளுக்கு நாள் கடினமாகத் தோன்றியது. அதிலிருந்து வெளியேறினால்தான் எனக்கு நிம்மதியிருக்கும். அதற்குப் பிறகு என்ன ஆகும் என்பதைப் பற்றி என்னால் நினைக்க முடியவில்லை.

நான் ஆங்கில தூதுவர் என்பதை சிலர் நம்பவில்லை என்பதும் எனக்கு கவலை தந்தது. நான் உண்மையை வெளியே சொல்லும் முன்பே அவர்கள் கண்டுபிடித்துவிட்டால் நான் ஒரு பெரிய குற்றவாளி ஆவேன். நானாக ஒத்துக்கொண்ட சலுகை எனக்கு கிடைக்காது. இந்து விஷயம் சிறு இங்கிலாந்திலேயே ஒரு பெரிய விவாதமாக சீக்கிரம் மாறிவிட்டது.

மறுநாள் பட்லர் ஒரு சுவற்றுப் பத்திரிக்கையின் பிரதி ஒன்றைக் கொண்டுவந்து காட்டினான். அதில் கீழ்க்கண்ட செய்தி வெளியாகி இருந்தது.

“சிறு இங்கிலாந்து மக்களே!

நம்மிடையில் ஒரு ‘ஆங்கில தூதுவர்’ வந்து குடியேறி இருக்கிறார். கீழ்க்கண்ட கேள்விகளுக்கு அவர் விடையளிப்பாரா?

இன்னும் ஏன் சன்னத்துகளை அரசுக்கு சமர்ப்பிக்கவில்லை?

பெண்களுடன் ‘மீன்பிடிக்க’ப் போவதைத்தவிர வேறு என்ன காரியங்கள் சாதித்திருக்கிறீர்?

ஏன் உங்களுக்கு உதவியாளர்கள் யாரும் இல்லை?

நீர் தூதுவர்தானா?

அல்லது வெளிநாட்டு ஒற்றறா?”

இதை நான் படிக்கும்போது பட்லர் பக்கத்திலேயே நின்றிருந்தான். ‘‘ரொம்ப வியசனத்துக்குரிய விஷயம் சார்,’’ என்றான் நான் படித்தபிறகு. ‘‘இந்த காட்டு மிராண்டிகளின் செய்கைக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்.’’

‘‘இதற்கு யார் பொறுப்பு தெரியுமா?’’ என்று கேட்டேன்.

‘‘நான் விசாரித்தேன் சார். இதில் இருவர் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஒருவர் இந்தியர் மற்றொருவர் வெள்ளையர். இருவருக்கும் உங்கள் மேல் ஏதோ கோபமாம்.’’

‘‘என்ன கோபம்?’’

‘‘ஒருவர் ஷா என்னும் இந்தியர், பத்திரிக்கை ஆசிரியர். நீங்கள் இங்கே வந்த அன்று அவர் கேள்விகளுக்கு நீங்கள் அலட்சியமாக பதிலளித்தீராம். அவர் பத்திரிக்கை இப்பொழுது வேலை நிறுத்தத்தில் இருப்பதால்தான் அவரும் சுவருக்குப் போயிருக்கிறார்.’’

‘‘இன்னொருவர்? ’’

‘‘அவர்தான் ராபர்ட் க்ருக்; கவிஞர். மிஸ் ஷீலாவினுடைய அன்பை நீங்கள் திருடிக்கொண்டதாக அவர் நினைக்கிறார்.’’

‘‘இம்மாதிரி சில்லரை விஷயங்களுக்காக மற்றவர்களின் மேல் வீணாக பழி சுமத்துவதா? ’’

‘‘இதுவும் ஜனநாயகத்தின் நன்மைகளில் ஒன்று சார்,’’ பட்லர் ரொம்ப நொந்து கொண்டான். ‘‘யார் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். இங்கிலாந்தில் இம்மாதிரி பொறுப்பற்ற செய்கைகள் நடக்காது என்று நம்புகிறேன்.’’

‘‘அங்கைய முறைகளே வேறுவிதம்.’’

‘‘அது ரொம்ப நல்லது சார். இந்த ஊரில் சுதந்திரத்துக்கு ஒரு கட்டுப்பாடு கிடையாது. அந்தஸ்துக்கு மரியாதை கிடையாது. எல்லாரும் சரிசமம் என்று கூத்தாடுகிறார்கள்.’’

‘‘பொது வாழ்க்கையில் இவையெல்லாம் சகஜம்தானே,’’ என்றேன்.

‘‘நீங்கள் ரொம்ப தாராள மனப்பான்மை கொண்டவர்கள். ஆனாலும் என் நாட்டினர் நடத்தைக்கு நான் வெட்கப்படுகிறேன்.’’

உண்மை தெரிந்தால் பட்லர் என்ன நினைப்பான் என்று யோசித்தேன்.

சிறிது நேரத்தில் பிரதமரின் காரியதரிசி பிட்மென் என்னைப் பார்க்க வந்தார். பிரதமர் சார்பிலும் தன் சொந்த சார்பிலும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு இந்த சம்பவத்தை தயவுசெய்து மறந்துவிடுமாறு வேண்டிக்கொண்டார்.

‘‘பிரதமர் தம் வியசனத்தை உங்களுக்கு தெரியப்படுத்துகிறார். ஆனால் இம்மாதிரி நடவடிக்கைகளை தடுப்பது கஷ்டம். இதற்கு கண்டனம் தெரிவிக்கப்போகிறோம்.

‘‘அப்படியே மறந்துவிடலாம்,’’ என்றேன்.

‘‘இல்லை சர் ஜியார்ஜ்! கண்டனம் அதிகார பூர்வமாக தெரிவித்தே ஆக வேண்டும். நம் இரு அரசுகளின் மதிப்பும் மரியாதையும் இதனால் பாதிக்கப்படுகிறது.’’

‘‘அப்படியென்றால் உங்கள் பொறுப்பிலேயே செய்யுங்கள். என் பொறுப்பில் வேண்டாம்.’’

‘‘அதுதான் சரி. உங்களை இந்த விவகாரத்தில் இழுக்க நாங்கள் விரும்பவில்லை.’’

ஏன் இதை மறுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்று என்னைக் கேட்க பிட்மெனுக்குத் தோன்றவில்லை.

‘‘எமது ஒற்றர்கள் விசாரித்து சில நாளில் இதற்கு யார் பொறுப்பு என்பதை கண்டுபிடித்துவிடலாம்.’’

‘‘ஆஸ்தான கவி ராபர்ட் க்ருக் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.’’

பிட்மென் ஆச்சரியத்தில் ஒரு சின்ன சீட்டி அடித்தார். ‘‘காதல் ஏமாற்றம் எந்தமாதிரியான விபரீதங்களில் போய் முடிகின்றது பாருங்கள். மேலும் உங்கள் ஒற்றர்கள் இவ்வளவு சீக்கிரம் எப்படி கண்டு பிடித்தார்கள்?’’

‘‘ஒற்றர்கள் அல்ல. ஒரு வதந்திதான்.’’

‘‘சிறு இங்கிலாந்தில் வதந்தி எப்போதுமே உண்மையாக இருக்கும். அதிகாரபூர்வமாக விடும் அறிக்கைகள்தான் அடிக்கடி மாறுதலடையும்,’’ என்றார் பிட்மென்.

பிறகு, ‘‘நீங்கள் வேண்டுமென்றால் இதன் காரணகர்த்தர்களின் மேல் மானநஷ்ட வழக்கு போடலாம். ஆனால் அது ஜெயிப்பது கஷ்டம். அவர்கள் ‘பொது நலத்தை’ முன்னிட்டு சில கேள்விகள் கேட்டிருப்பதாக வாதாடுவார்கள். வழக்கு அப்பீலுக்குப் போய் முடிவடைவதற்குள் பல ஆண்டுகள் ஆகிவிடும்.’’

‘‘நான் வழக்கு தொடரப்போவதில்லை,’’ என்று திட்டவட்டமாக அறிவித்தேன்.

‘‘அதுதான் நல்லது,’’ என்று சொல்லி பிட்மென் விடைபெற்றார்.

* * *

பிறகு வயதான ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். ‘‘என் பெயர் ‘புரொபஸர் டாயன்பி’. நான் சிறு இங்கிலாந்து சர்வகலாசாலையிலிருந்து ஓய்வு பெற்ற சரித்திர ஆசிரியர்.’’ என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

‘‘அதுதான் உங்கள் உண்மைப் பெயரா?’’ என்று கேட்டேன்.

‘‘சிறு இங்கிலாந்தின் பழக்கவழக்கங்களையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே,’’ என்றார் அவர். ‘‘ஒருவர் அரசியல்வாதியானால் சர்ச்சில், ஏட்லி, பிட், லாயிட் ஜியார்ஜ் முதலிய பெயர்களை வைத்துக்கொள்ளலாம். நான் சரித்திர ஆசிரியர் ஆனதால் டாயன்பி என்னும் பெயர் வைத்துக்கொண்டேன்.’’

‘‘இதெல்லாம் எனக்கு கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது’’ என்றேன்.

‘‘இதில் குழப்பமென்ன?’’ என்றார் புரொபஸர் டாயன்பி . நாங்கள் எல்லோரும் ஆங்கில தேச பக்தர்கள். ஆகவே நம் பண்பாட்டையும், வம்சாவழியையும் பாதுகாக்க இந்த சுலபமான முறையைக் கையாண்டு வருகிறோம். இங்கிலாந்திலும் கூட குறைந்தது. நூறு விக்டோரியா சாலை விக்டோரியா வீதி, விக்டோரியா சதுக்கம் என்று இருக்குமே. வீதிகளுக்கு புகழ்பெற்றவர்களின் பெயர்களை வைத்தால் நாமும் ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது? ஒரு சிறு ஆங்கிலேயே சமூகம் பெரிய ஆசியாவின் மத்தியில் இருப்பதால் இது ஒரு சரித்திர நிர்ப்பந்தம் என்றே சொல்லலாம்.’’

‘‘ஆம். எனக்கு இப்போது நன்றாக தெரிகிறது,’’ என்றேன்.

‘‘இங்கு இருக்கும் எல்லா வெள்ளையர்களைப் போல எனக்கும் இங்கிலாந்துக்குப் போக ஆசையாய் இருக்கிறது. நான் ஆங்கில வம்சாவளியைச் சேர்ந்தவன் என்பதற்கு என்னிடம் அத்தாட்சி இருக்கிறது. இதுதான் என் மூதாதையின் ஆங்கிலேயே பாஸ்போர்ட். இதை சர் ஏண்டனி ஈடனே கொடுத்திருக்கிறார்.’’ ஒரு கிழிந்த தஸ்தாவேஜை என்னிடம் காட்டினார்.

‘‘சிறு இங்கிலாந்து அரசு உங்களுக்கு பாஸ்போர்ட் வழங்கியிருக்கிறதா?’’

‘‘இது உங்களுக்கு அதிசயமாக தெரியலாம். ஆனால் ஒய்ட் ஹாலில் - அதுதான் எங்கள் அரசின் பிரதான அலுவலகம் - பாஸ்போர்ட்டைப் பற்றியே கேள்விப்பட்டதில்லையாம்! அரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து ஒரு பாஸ்போர்ட் கூட கொடுத்ததில்லை, என்கிறார்கள்! இருந்தாலும் ஆங்கில வம்சாவழியில் வந்தவன் என்பதால் நீங்களே எனக்கு ஒரு பாஸ்போர்ட் கொடுக்கலாம் இல்லையா?

‘‘நீங்கள் ஏன் இங்கிலாந்துக்குப் போக வேண்டும்?’’

‘‘உங்களுடைய கேள்வி ஒரு உண்மையான தெய்வ பக்தனை நீ சுவர்க்கத்துக்கு ஏன் போக விரும்புகிறாய் என்று கேட்பது மாதிரி இருக்கிறது. அங்கு போவது என் உரிமை. அதற்கு வேண்டிய அரசியல் சாசன சட்டங்கள் எனக்குத் தெரியும்.’’

‘‘இன்றைய சூழ்நிலையில் இங்கிலாந்துக்கு பிரயாணம் செய்வது சாத்தியமில்லை. இங்கிலாந்து அரசைத்தவிர கிழக்கு கோள அரசும் அதற்கு வேண்டிய சலுகைகள் அளிக்க வேண்டும்.’’

‘‘அதெல்லாம் எனக்குத் தெரியாமலில்லை,’’ என்றார் புரொபசர். ‘‘என்போல் உங்களிடம் நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரிகள் வருவார்கள். நீங்கள் வருடம் இவ்வளவு பேர்தான் போகலாம் என்று ஒரு கோட்டா வைக்க வேண்டியிருக்கும். முதலில் விண்ணப்பிற்கிறவர்களுக்கு முதலிலும் பின்னால் வருகிறவர்களுக்கு பின்னாலும் என்று நிர்ணயிப்பீர்கள். அதனால்தான் நான் முதலில் உங்கள் ஆபிசில் பதிவு செய்துகொள்ள வந்திருக்கிறேன்.’’

‘‘புரொபசர், நீங்கள் அங்கே எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறீர்கள்? இன்றைய இங்கிலாந்தில் சிலவு ரொம்ப அதிகம்.’’

‘‘நான் பிச்சையெடுக்கவோ அரசாங்க உதவி கோரியோ அங்கே செல்லவில்லை.’’ அவர் ரொம்ப சுய மரியாதை உடையவர்போல் பேசினார். ‘‘பல வெளிநாட்டவர்கள் முன்னெல்லாம் அப்படி செய்வதுண்டு. நான் கொஞ்சம் பணம் சேமித்து வைத்திருக்கிறேன். ஆக்ஸ்போர்ட் அல்லது கேம்ப்ரிட்ஸ் சர்வகலாசாலைகளில் ஒரு விசிட்டிங் புரொபஸராக என்னை நியமிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சிறு இங்கிலாந்து சரித்திரத்தைப் பொருத்தவரையில் என்னைவிட அதிகம் யாருக்கும் தெரியாது. அதைப்பற்றி நான் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறேன். இங்கிலாந்தில் அதை பிரசுரிக்கலாம் என்று இருக்கிறேன். எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது எனக்கு ஒன்றும் பணக் கஷ்டம் இருக்காது.’’

‘‘என்னைப் பார்க்க வந்ததைப்பற்றி ரொம்ப மகிழ்ச்சி. உங்கள் கோரிக்கையை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு வேண்டியது செய்கிறேன்’’ என்று சொல்லி பேட்டியை முடிக்கப் பார்த்தேன்.

ஆனால் புரொபஸர் விடுவதாய் இல்லை. ‘‘முதலில் நீங்கள் என் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள். பிறகு அம்மாதிரி பதிவு செய்து கொண்டதற்கு அத்தாட்சி வேண்டும். எனக்கு முன்னால் பெயர்கள் பதிவாகியிருக்கின்றனவா அல்லது என் பெயர்தான் முதலாவதா என்றும் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் அரசியல்வாதிகளெல்லாம் என் மாதிரி மக்களை விட்டுவிட்டு முந்திக்கொள்வார்கள்.’’

‘‘இன்னும் என் அலுவலகம் செயல்படவில்லை. உம் பெயரை பதிவு செய்வதற்குக்கூட எனக்கு அதிகாரம் இல்லை.’’

‘‘நீங்களும் இங்கிருக்கும் அரசாங்க ஊழியர்கள் மாதிரியே நடந்து கொள்கிறீர்களே?’’ என்றார் புரொபஸர். ‘‘ஆங்கில அரசின் தூதுவர் மாசற்றவராய் இருப்பார் என்று நம்பினேன்.’’

‘‘பிரயாணம் ஆரம்பமாகி நானும் அதற்கு பொறுப்பாக இருந்தால் உங்களுடைய பெயர் முதலாவதாக இருக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன்,’’ என்றேன்.

அது அவருக்கு திருப்தி அளித்தது. ‘‘நான் பல வருடங்களாக குடிக்காமலும் குதிரைப்பந்தயத்துக்குப் போகாமலும் பணம் சேமித்து வைத்திருக்கிறேன். ஆகவே நான்தானே முதலில் சுவர்க்கத்துக்கும் போக வேண்டும்.

“சுவர்க்கம் ஒன்றும் அவ்வளவு பிரமாதமாய் இருக்காது புரொபஸர்.”

“இருந்தாலும் எல்லோரும் அங்கே போக விரும்புகிறார்கள் இல்லையா?” என்று புரொபஸர் டாயன்பி விடைபெற்றார்.

அவருக்கு அடுத்தபடி வந்தவர் பழயை சரித்திரத்தில் ஒரு சிறு பகுதியை எனக்கு எடுத்துச் சொன்னார். “பெரிய பிரிவினைக்கு முன்பு பல இந்தியர்கள் இங்கிலாந்தில் குடியேறினார்கள். அவர்களையெல்லாம் திருப்பி இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு அதற்கு பதிலாக எங்களை அழைத்துக் கொண்டால் என்ன?” என்று கேட்டார்.

“அது ரொம்ப கஷ்டமாய் இருக்கும். இந்த ஏழு தலைமுறைகளில் ஒருவருடைய வம்சாவளியைக் கண்டுபிடிப்பது முடியாது. மேலும் இங்கிலாந்து அவர்களுக்கும் தாய்நாடு ஆகிவிட்டது,” என்று விளக்கம் தந்தேன்.

“ரத்த பாந்தத்தைவிட சட்ட பாந்தம் முக்கியமா?” என்று சொல்லிவிட்டுப் போனார்.

அடுத்த சில தினங்களில் பலர் என்னைப்பார்க்க வந்தார்கள். எல்லோரும் சாதாரண மக்கள்தான். அந்தஸ்தோ பணமோ அதிகம் இல்லாதவர்கள். ஆனால் எல்லோர் குறிக்கோளும் ஒன்றுதான். எல்லோருமே இங்கிலாந்து போக விரும்பினர். அவர்களுக்கும் நான் பிடிகொடுக்காமல் பதிலளித்து அனுப்பினேன். சிலர் திருப்திப்பட்டு போனார்கள் ; சிலர் விவாதித்துவிட்டுப் போனார்கள் ; சிலர் என்னை மிரட்டியும் பார்த்தார்கள்.

நான்காவது நாள் ஒரு சுவற்றில் கீழ்கண்ட கோரிக்கை எழுதப்பட்டிருந்தது.

“எங்கள் கோரிக்கைகள்

இங்கிலாந்து செல்லும் உரிமை வேண்டும்!

பாஸ்போர்ட் வேண்டும்!

நாணையம் மாற்ற உரிமை வேண்டும்!

இவைகளைப்பற்றி அரசாங்கம் என்ன செய்கிறது!

சர் ஜியார்ஜ் எதற்காக வந்துள்ளார்?

உடனே பதில் வேண்டும்!”

* * *

இப்பொழுது மேலும் என்னை தனிமை ஆட்கொண்டது. ஷீலா என்னைப் பார்க்கவே இல்லை. ஜானும் அடிக்கடி வருவதில்லை. வரவேற்புகளும் விருந்துகளும் ஓய்ந்து நின்றுவிட்டன. பிரதமர் இன்னும் விடுமுறையில் இருந்தார். நகரில் நெருக்கடி இருப்பதாக தோன்றியது. பட்லரும் என்னைப் பொருத்தவரையில் சாதக பாதகங்கள் அதிகமாகிக்கொண்டு வருவதாக தெரிவித்தான். இம்மாதரியான நிலைமையை சமாளிப்பதில் எனக்கு அனுபவம் இல்லை. சொன்னபடி செய்வது, மற்றவர்களின் உத்தரவை நிறைவேற்றுவது அல்லது பக்குவப்படுத்தும் மனைகளுக்கு சென்று மனதை சரிசெய்து கொள்வது - இவற்றில்தான் எனக்கு அனுபவம். ஆகவே நிலைமை கட்டுக்கடங்காததாக தோன்றியது.

பட்லர் மூலமாகத்தான் எனக்கு வெளியுலகுடன் தொடர்பு. அவள் சொன்ன சமாசாரங்கள், செய்திகள், யோசனைகள் இவைகளைத்தான் நான் நம்பியிருந்தேன். இவற்றைப்பற்றி சொல்வதில் பட்லர் ரொம்ப தாராளம்.

“நகரில் இரண்டு கட்சிகள் சார்,” என்று சொன்னான் பட்லர். “சிறு கட்சி ஒன்று நீங்கள் இந்திய அரசின் ஒற்றர் என்று நினைக்கிறது. அவர்களுக்கும் இங்கிலாந்து செல்ல உதவுவதாய் இருந்தால் அவர்கள் நீங்கள் ஒற்றர் என்பதை மறந்து விடுவார்கள். இன்னொரு கட்சியில் உள்ளவர்கள் இங்கிலாந்துக்குப் போக ஆவலுடன் இருப்பவர்கள். நீங்கள் அவர்களை அலட்சியம் செய்துவிட்டு அரசியல்வாதிகளையும் அந்தஸ்து உள்ளவர்களையும்தான் அனுப்புவீர்கள் என்று பயப்படுகிறார்கள். சிறு இங்கிலாந்துவாசிகள் இங்கிலாந்தில் குடியேறுவதைப்பற்றி ஆங்கில அரசாங்கம் யோசித்து

வருகிறது. அதுவரையிலும் எல்லோரும் பொறுத்திருங்கள் என்று ஒரு அறிக்கை விடுத்தால் எல்லோரும் பொறுமையாக காத்திருப்பார்கள்.''

''நான் அம்மாதிரி அறிக்கை விட முடியாது பட்லர்.''

''சார், நான் சொல்வதற்கு நீங்கள் மன்னிக்க வேண்டும். உண்மையையும் நேர்மையையும் பூரணமாக கைப்பிடித்தால் அவை பொதுவாழ்வுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும்.''

இந்த சம்பாஷணைக்குப் பிறகு ஒரு நாள் பிட்மென் என்னைப் பார்க்க வந்தார். ''உங்களுக்கு ஒரு முக்கியமான கடிதம் இருக்கிறது. அதை நேரிலேயே சமர்ப்பிக்க நான் வந்திருக்கிறேன்,'' என்று அரசு முத்திரை வைத்த கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.

''சர் வின்ஸ்டன் இன்னும் லீவில் இருப்பதாகச் சொன்னார்களே? '' என்று கேட்டேன்.

''ஆம். லீவில்தான் இருக்கிறார். இங்கு இருக்கும் நெருக்கடியான நிலைமையை அறிந்தபிறகு தம் விடுமுறையை மேலும் சில தினங்களுக்கு நீடிக்க முடிவு செய்துள்ளார். ''பிரதமர் ஊரிலிருந்தால் பிரச்சனை பெரிதாகும். இல்லாவிட்டால் அது தானாக, சுலபமாக தீர்ந்துவிடும்' என்னும் கொள்கையில் உறுதியுடன் இருப்பவர். ஆனால் அலுவலகத்துடன் எப்போதும் தொடர்பு வைத்துக் கொள்வார்.

நான் கடிதத்தைப் பிரித்தேன். அது கையால் எழுதப்பட்டிருந்தது. ''நாட்டிலிருந்த கடைசி டைப்ரைட்டர் இருபது வருடங்களுக்கு முன்பு பழுதடைந்து மியூசியத்துக்கு அனுப்பப்பட்டது'' என்று பிட்மேன் விளக்கம் தந்தார்.

''அன்புமிக்க சர் ஜியார்ஜ்,

உமது விஜயத்தைப் பற்றி நகரில் எழுந்துள்ள பிரச்சனைகளைப் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். சிறு இங்கிலாந்து அரசின் சார்பாக நான் மன்னிப்பு தெரிவிக்கிறேன். இவைகளுக்கு சுமூகமான தீர்வுகாண அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இப்பிரச்சனைகள் பெரிதல்ல. நீங்கள் உங்கள் சன்னத்துகளை சமர்ப்பித்தால் ஒரு பிரச்சனை முடிந்துவிடும். பாஸ்போர்ட்களும் நுழைவுச் சீட்டுகளும் வேண்டியவர்களைப் பொருத்தவரையில் நான் இதை கவனிக்க ஒரு உயர்தர கமிட்டியை நியமிக்கப் போவதாகவும், இந்திய அரசாங்கத்துடனும் ஆங்கில அரசுடனும் தொடர்புகொள்ளப் போவதாகவும், ஆறு மாதத்துக்குள் ஒரு முடிவு எதிர்பார்க்கலாமென்றும் அறிவிக்கப்போகிறேன். இந்த முறை உங்களுக்கும் திருப்தியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நான் அடுத்த வாரம் திரும்புகிறேன். நான் வந்ததும் சன்னத்து சமர்ப்பிக்கும் விழாவை பிரமாதமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்போகிறேன்.

உண்மையுள்ள

பால்ட்வின்

''சன்னத்து சமர்ப்பிக்கும் சடங்கை ஒரு தேசீய விழாவாக கொண்டாட ஏற்பாடுகள் செய்கிறோம்,'' என்றார் பிட்மென். ''இம்மாதிரி ஒரு சடங்கு இந்த நூற்றைம்பது வருடங்களில் ஏற்பட்டதில்லை. ஊர்வலங்கள், தீபாலங்காரங்கள், வானவெடி, விடுமுறை எல்லாம் அதில் இடம்பெறும். ஒரு கொண்டாட்டம் என்று எடுத்துக்கொண்டால் சர் வின்ஸ்டனை யாரும் மீற முடியாது. அரசியலில் ஈடுபடுவதற்கு முன் அவர் ஒரு நடிகராகவும் நாடக டைரெக்டராகவும் இருந்திருக்கிறார். பொதுமக்கள் என்ன விரும்புகிறார்கள் என்று அவருக்குத் தெரியும். நாடக மேடையிலானாலும் சரி அரசியல் மேடையிலானாலும் சரி, ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் அடுத்தபடியாக நடக்கப்போகிறது என்று காட்டுவதில் அவர் நிபுணர்.''

“என் மனம் குழம்பியது. நெஞ்சு அழுத்தியது. என்ன சன்னத்துகளை நான் சமா்ப்பிக்கப் போகிறேன்? சா் வின்ஸ்டன் இன்னும் ஒரு வாரத்துக்கு வரமாட்டார். அதற்குள் ச்சக் வந்து இந்த கடும் சோதனையிலிருந்து எப்படியாவது என்னைக் காப்பாற்றுவாரா?

“இங்குள்ள நிலைமையைப் பற்றி என் அரசுடன் விவாதிக்க ஒரு வேளை நான் இங்கிலாந்து செல்ல வேண்டியிருக்கும்,” என்றேன்.

“இப்பொழுது செல்வது அவ்வளவு உசிதமல்ல, பொது ஜனங்கள் அதை தப்பர்த்தம் செய்து கொள்வார்கள். நீங்கள் அயல்நாட்டு ஒற்றா் என்று கூறும் கட்சிக்கு அது சாதகமாக இருக்கும். அதை உபயோகப்படுத்தி அவா்கள் அரசாங்கத்தை விமரிசிப்பார்கள். முதலில் சன்னத்து சமா்ப்பிக்க வேண்டும். பிறகு கமிட்டி நியமனத்தை அறிவிக்க வேண்டும். அதற்கப்புறம் நீங்கள் சென்றால்தான் அது பேச்சுவார்த்தைக்கு என்று எல்லோரும் நம்புவார்கள்.”

“உங்களுடைய கடிதத்துக்கு உடனே பதில் வேண்டுமா? ” என்று கேட்டேன்.

“அவசரமில்லை. ஆனால் சடங்குக்கு நாள் குறிப்பதற்கு முன் வந்தால் போதும்.”

அன்று பிற்பகல் ஒரு ஊா்வலம் நடந்தது என்று பட்லா் சொன்னான். இங்கிலாந்து செல்ல பிரயாண வசதிகள் செய்யுமாறு வற்புறுத்துவதற்காக நடத்திய ஊா்வலம். பல ஆங்கில தேசீய கீதங்களை ஊா்வலத்தினா் பாடிக்கொண்டு சென்றனா். ஒரு மூலையில் ‘வெளிநாட்டு ஒற்றரை வெளியேற்று!” என்று சிலா் கோஷமிட்டபோது அவா்களுக்கும் ஊா்வலத்தினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. போலீசார் வந்து அவா்களைப் பிரித்துவிட்டு நிலைமையை சமாளித்தார்கள்.

பட்லா் இவற்றைப் பற்றி மிகவும் சுவாரஸ்யத்துடன் பேசினான். என் மனத்தில் அச்சமும் திகிலும் இருந்தாலும் வேறு யாரும் இந்த சம்பவங்களை முக்கியமானதாக கருதவில்லை என்று பட்லா் அறிவித்தான். பிரதமா் ஊரில் இல்லை. ஜான் என்னைவிட்டு ஒதுங்கி இருந்தார். ‘வருகிறேன்’ என்று சொன்ன ச்சக் இன்னும் வரவில்லை. நாளுக்கு நாள் என் தனிமை அதிகமாகிக்கொண்டு வந்தது. நான் குற்றம் செய்துவிட்டேன் என்ற உணா்ச்சியும் அதை எப்படி நிவா்த்திப்பது என்று தெரியாமையும் எனக்கு நீண்ட கவலையளித்தன. யாருடனாவது மனதைத் திறந்து பேசினால் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கும். ஒரே ஒருவனுடன் நான் என் மனோ நிலையை சொல்ல முடியும் மேரி.

இருட்டான பிறகு நான் வெளியே செல்ல முடிவு செய்தேன். ‘உலாவப் போகிறேன் சிறிது நேரம்,” என்று பட்லரிடம் சொன்னேன்.

“அது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை சாா். இப்பொழுதிருக்கும் நிலைமையில் டோங்காவில் போவதுதான் நல்லது.”

“நான் காற்று வாங்க சிறிது தூரம் செல்கிறேன் சீக்கிரம் வந்துவிடுவேன்,” என்ற சொல்லிவிட்டு வெளியே சென்றேன்.

“அபாயம் அதிகமாகும்போதுதான் ஒரு ஆங்கிலேயருடைய தைரியமும் அதிகமாகும்,” என்று சொல்வார்கள் சா் ஜியார்ஜ்” பெருமையுடன் பட்லா் சொன்னான்.

நல்ல வேளையாக மேரி வீட்டில் இருந்தாள். சந்தோஷத்தோடு என்னை வரவேற்றாள். என்னை மடி மேல் உட்காரவைத்து என் தலைமயிரை கோதினாள். “உங்கள் தலைமயிா் தங்க இழைகள் மாதிரி இருக்கின்றன. ஆனால் தங்கத்தைவிட மிக மிருதுவாக இருக்கிறது,” என்றாள்.

நான் ஒன்றும் பேசவில்லை. துயரம் வாயை அடைத்துவிட்டது.

பிறகு “நீங்கள் ஒரு பெரிய தேசீய வாக்குவாதத்தை கிளப்பிவீட்டீர்கள்,” என்றாள்.

“நான் என்ன செய்தேன்? ”

“அதுதான் சொல்கிறேன். நீங்கள் வருகிறவா்களுக்கெல்லாம் அது செய்கிறேன் இது செய்கிறேன் என்று வாக்களித்திருந்தால் எல்லோரும் உங்களை மெச்சியிருப்பார்கள். பிறகு தங்கள்

எண்ணங்கள் கைகூடவில்லை என்றால் தூற்றிருப்பார்கள். நீங்கள் நேர்மையாக நடந்துகொண்டதனால் எல்லோர் மனத்திலும் சந்தேகங்களை கிளப்பிவிட்டீர்கள். நீங்கள் ராஜதந்திரியாய் இருக்க லாயக்கில்லை. ஒரு சர்வகலாசாலையிலோ அல்லது ஒரு சோதனைச் சாலையிலோ இருக்க வேண்டும். நீங்கள் எப்படி ராஜதந்திரி ஆனீர்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.''

மேரியின் ஆழ்ந்த உள்ளுணர்ச்சி எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவள் பிரச்சனைகளை இவ்வளவு நுணுக்கமாக அலசி ஒரு முடிவுக்கு வந்திருப்பது அவளுடைய அறிவை வெளிப்படுத்தியது. ''உனக்கு இவ்வளவு அரசியல் ஞானம் இருப்பது எனக்குத் தெரியவில்லை,'' என்றேன்.

''உங்கள் சினேகிதி ஷீலாவுக்கு இருக்கிற அந்தஸ்து எனக்கு இல்லாதிருக்கலாம். ஆனால் நான் நல்ல அறிவு பெற்றிருந்தால்தான் என் நண்பருக்கு உதவியாய் இருக்க முடியும்.''

''ஷீலா விஷயம்தான் எல்லாம் முடிந்ததே. அதை ஏன் மறுபடியும் ஞாபகப்படுத்துகிறாய்?''

''இந்த வாக்குவாதங்களுக்கெல்லாம் அவளும் ஒரு காரணம்தான். அவளால்தானே அந்த கவிஞர் முதல் போஸ்டர் ஒட்டினார்.''

''மேரி, உனது உதவி எனக்கு இப்போது ரொம்ப தேவை. நான் ஒரு பரிதாபகரமான நிலையில் இருக்கிறேன்.''

''நீங்கள் இன்று மாத்திரை சாப்பிடவில்லை என்பது தெளிவாகிறது.'' மேரி சிரித்துக்கொண்டே சொன்னாள். ''இன்று என் புத்திகூர்மையும் அனுதாபமும்தான் வேண்டும் இல்லையா? ''

திடீரென்று என் உள்ளத்தில் ஏதோ வெடித்தமாதிரி ஒரு உணர்ச்சி தோன்றியது. அடைத்து வைத்திருந்த துயரம் திமிறிக்கொண்டு மேல் எழுந்தது. பக்குவப்படுத்தப்பட்ட லேசான மேல் மூடி உடைந்து என் உள்ளுணர்ச்சிகள் பிரவாகமாக வெளிவந்தன. என் தலையை அவள் மார்பின் மேல் வைத்து சிறு குழந்தை மாதிரி கதறி அழுதேன். தாயற்ற நான் ஒரு புதிய தாயைக் கண்டு பிடித்தேனா? ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தாய் இருக்க வேண்டாமா? அந்த உரிமையை இன்று நான் பெற்றுவிட்டதாக தோன்றியது இவ்வளவு ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சியை நான் அனுபவித்தது இதுதான் முதல் தடவை. கண்ணீர் அளிக்கும் நிம்மதியையும் நான் முதல் தடவையாக அடைந்தேன். நான் இழந்த குழந்தைப் பருவத்தை நினைத்தும் அதை மேற்கு கோளத்தில் கண்டிராத மூன்று நான்கு தலைமுறைகளைப் பற்றி நினைத்தும் அழுதேன். மேரி ஒரே நிமிடத்தில் என் தாயாகவும் காதலியாகவும் சினேகிதியாகவும் தோன்றினாள். என்னைத் தான் பெற்ற குழந்தை போல் அணைத்து முத்தமிட்டு தட்டிக்கொடுத்து தாலாட்டினாள்.

கடைசியாக நான் என் அழுகையை நிறுத்திய பிறகு மேரி, ''பாவம்! குழந்தை போல் அழுகிறீர்கள். ஏதோ பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். அது என்னவானாலும் பரவாயில்லை. என்னிடம் சொல்லுங்கள் முடிந்தால் உதவி செய்கிறேன். முடியாவிட்டால் ஏதாவது வழி சொல்கிறேன். என்னோடு பகிர்ந்து கொண்டால் உங்களுக்கும் மனச் சுமை குறையும். அது என்னவானாலும் என் அன்பு உங்களுக்கு இருக்கும்.''

''நான் அழுதது இதுதான் என் வாழ்விலேயே முதல் தடவை. பப் தத்துவத்தின்படி குழந்தைகள் அழக்கூடாது. பிறகு மனோ எழுச்சிகளையெல்லாம் பக்குவப்படுத்தல் மூலம் அகற்றிவிட்டதால் நான் ஒரு நடமாடும் யந்திரமாய் இருந்தேன். இங்கு வந்தபிறகுதான் பலவித உணர்ச்சிகளையும் நன்றாக உணர ஆரம்பித்தேன்.''

''நீங்கள் எனக்கு ஒன்றும் தெளிவாக்க வேண்டியதில்லை. உங்கள் மனது ரொம்ப அழுத்தத்திற்குட்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் உங்களுடைய பிரச்சனை என்னவென்று சொன்னால் தானே நான் யோசனை சொல்ல முடியும்.''

''ஏற்கெனவே உனக்கு சில விஷயங்கள் தெரியும். மற்றவைகளையும் ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். அப்புறம் என் விதியைப் பற்றி நீ முடிவு செய்யலாம்.''

“அந்த மாதிரி பெரிய வார்த்தைகளையெல்லாம் உபயோகிக்க வேண்டியதில்லை. நீங்கள் என்ன கொலை செய்தீர்களா அல்லது ஒரு பெண்ணை பலவந்தப்படுத்தினீர்களா? பின் ஏன் பயப்பட வேண்டும்? ”

“மற்றவராக நடிப்பது இந்த ஊரில் பெரிய குற்றமா சொல்லு.”

என் கேள்வியைக் கேட்டதும் மேரி ஆச்சரியப்பட்டாள். ஒரு நிமிடம் யோசனை செய்துவிட்டு பிறகு “எனக்குத் தெரியவில்லை. அது யாரைப்போல் எந்த சூழ்நிலையில் எப்படி நடித்தீர்கள் என்பதைப் பொறுத்து இருக்கும் என்று நினைக்கிறேன. ஆனால் நீங்கள் யாரைப் போல் நடிக்க முடியும்? ”

பிறகு நான் நீலமலைகளுக்கு எப்படி, என்ன காரணத்துக்காக வந்தேன் என்பதைப் பற்றியும், எப்படி சா் வின்ஸ்டன் என்னை ஆங்கில தூதுவா் என்று வரவேற்றாா் என்பதைப் பற்றியும் விவரமாக சொன்னேன்.

பிறகு, “மேரி, நீ நினைத்ததுபோல நான் இங்கிலாந்து தூதுவா் அல்ல. சா் பட்டமும் எனக்கு இல்லை. நான் வெறும் ஜியாா்ஜ் ஸ்மித். ஒரு சிறு ஸ்தாபனத்தில் சாதாரண ஆராய்ச்சியாளன். மேற்கு கோளத்தில் GB 145 APNH 623 என்னும் எண்தான் என் அடையாளக் குறி நான் திரும்பிப் போனால் இங்கு நடந்துகொண்ட விதத்துக்கு என்னை முடிவுகட்டினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இங்கேயே இருந்தால் ஆள்மாறாட்டத்துக்காக சிறைக்கு அனுப்பிவிடுவாா்கள். உன்னையும் நான் ஏமாற்றிவிட்டேன். நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் பொருந்தும்,” என்றேன்.

மேரி சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. நான் அவள் முடிவுக்கு கவலையோடு காத்திருந்தேன். “ஆம் எனக்கு இது ஒரு ஏமாற்றம்தான். இருந்தாலும் என்னை ஏமாற்றுவதற்காக நீங்கள் இப்படி நடிக்கவில்லை. சூழ்நிலை உங்களை மிஞ்சிவிட்டது. அவ்வளவுதான். சில நாளைக்கு முன்பு என்னை மணம் செய்துகொள்ள விரும்புவதாக சொன்னீர்கள். நான் வேண்டாம் என்று மறுத்துவிட்டேன். ஆனால் இப்போது அதற்கு ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த சில்லரைத் தொந்தரவுகள் முடிந்ததும் அதைப் பற்றி யோசிக்கலாம்.”

என் மகிழ்ச்சிக்கு அளவில்லை. “என்னைக் கைவிட மாட்டாயே? ” என்றேன்.

“ஒரு குழந்தையை எப்படி கைவிட முடியும்? ” என்றாள் மேரி சிரித்துக்கொண்டே. “நீங்கள் அழுவதுகூட ஒரு குழந்தை மாதிரிதான். கண்ட மாத்திரைகளை சாப்பிட்டும், பக்குவப்படுத்தப்பட்டும் உங்கள் மனது ரொம்ப அவதிப்பட்டுவிட்டது. யாா் என்ன சொன்னாலும் சரி என்றுவிடுகிறீா்கள். இங்கேயே இருந்தால் கொஞ்ச நாளில் எல்லாம் சரியாகிவிடும்.”

“மேரி, நீ எனக்கு புதுவாழ்வு அளித்துவிட்டாய். புனா் ஜென்மம் பெற்ற மாதிரி எனக்கு ஒரு உணா்வு ஏற்படுகிறது. ஒரு யந்திரத்திலிருந்து என்னை ஒரு மனிதன் ஆக்கிவிட்டாய். பிரச்சனைகளை எதிா்த்து நிற்கும் தைரியம் இப்போது எனக்கு இருக்கிறது,” என்றேன்.

“முட்டாள்தனமாக ஏதாவது செய்துவிடாதீா்கள். ‘நான் ஆங்கில தூதுவா் அல்ல’ என்று அறிவித்து தொந்தரவுகளை விலைக்கு வாங்க வேண்டாம். உமது நண்பா்களை கலந்து ஆலோசித்து வேண்டிய நடவடிக்கை எடுங்கள். நானும் விசாரித்துப் பாா்க்கிறேன்,” என்று மேரி எச்சரித்தாள்.

ச்சக் ஒருவா்தான் எனக்கு நண்பா். அவா்தானே என்னை இங்கே அழைத்து வந்தவா். அப்புறம் கிருஷ்ணா இருக்கிறாா்.”

“கிருஷ்ணா உங்களுக்கு சாதகமாக இருந்தால் உங்களுக்கு ஒன்றும் நேராது. பிரதமருக்கு கூட அவரிடம் மரியாதையுண்டு. அவரை நீங்கள் நம்பலாம்.”

“திரும்பி இங்கிலாந்துக்குப் போக எனக்கு இஷ்டமில்லை. என்ன நோ்ந்தாலும் என் எதிா்காலம் இங்கேதான். உன்னுடன்தான். கண்ணீரின் உப்பையும் காதலின் இனிப்பையும் ருசி பாா்த்த பின்பு அந்த மங்கலான வெளிச்சத்தில், மேற்கு கோளத்தில், என் வாழ்நாளைக் கழிக்க விரும்பவில்லை.

“நீங்கள் திரும்பிப் போக விரும்பினாலும் நான் விடப்போவதில்லை. எதற்காக உங்களிடம் இவ்வளவு சிரத்தை கொண்டிருக்கிறேன் என்று நினைத்தீர்கள்? ”

அந்த உறுதியுடன் நான் விடை பெற்றேன்.

---------------------------------------------

## அத்தியாயம் பன்னிரண்டு

நான் ஹேம்ப்டன் கோர்ட்டுக்கு திரும்பி வந்தபோது ஜான் அங்கே எனக்காக காத்திருந்தார். பட்லர் அவருக்கு ஒரு ட்ரிங்க் கொடுத்து சௌகரியமாக உட்கார வைத்திருந்தான். அவர் மிகுந்த கவலையுடன் காணப்பட்டார்.

"பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது ஜான். இந்நேரத்துக்கு எப்படி வந்தீர்கள்? " என்று கேட்டேன்.

"எனக்கு ஒரு புரியாத செய்தி வந்திருக்கிறது. உங்களை கிருஷ்ணா அவர்களின் வீட்டுக்கு இன்று இரவே கூட்டிக்கொண்டு வர வேண்டுமாம். இதற்கு என்ன அர்த்தம்? " உங்களுக்குத் தெரியுமா?"

"அங்கே போனால் தெரியும்," என்றேன். ச்சக்தான் அந்த செய்தி அனுப்பியிருக்க வேண்டும் என்று யூகித்தேன்.

"அர்த்தமாகாத கோரிக்கை வந்தால் அதை நான் எப்படி நம்புவது? கிருஷ்ணாதான் உங்களைப் பார்க்க விரும்புகிறாரா என்று கூட தெரியவில்லை. அப்படியிருந்தால் அவர் உங்களை நள்ளிரவில் ஏன் கூப்பிட வேண்டும்? பகலில் பகிரங்கமாக சந்திக்கலாமே? "

பட்லர் கொண்டு வந்த விஸ்கியை சாப்பிட்டுக்கொண்டே நான் யோசனை செய்தேன். ஜானுடனாவது இனிமேல் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்று எனக்குப் பட்டது. கடைசியாக, "ஜான் இந்த கோரிக்கையில் எந்தவிதமான சதியோ உள் நோக்கமோ இருக்காது. அப்படியிருந்தால் உங்களுக்கு ஏன் அழைப்பு அனுப்புகிறார்கள்? என்னை தனியாக அழைப்பது ரொம்ப சுலபம் ஆயிற்றே?" என்றேன'.

"அதுதான் ஒரு புதிராய் இருக்கிறது. சர்வதேச அரசியல் சூதாட்டத்தில் என்னை ஏன் இழுக்க வேண்டும்? உங்களைப் பற்றி விவாதங்களும் தர்க்கங்களும் ஆரம்பமானதிலிருந்து நான் ஒதுங்கித்தானே இருந்திருக்கிறேன்."

"என் மேல் நம்பிக்கையில்லாததாலா? "

"பாருங்கள் ஜியார்ஜ்! நீங்கள் இங்கு வந்ததிலிருந்து நான் உங்களுக்கு உண்மையான நண்பனாய் இருந்திருக்கிறேன். ஆனால் இருவரையிலும் நீங்கள் உங்கள் சன்னத்துகளை சமர்ப்பிக்கவில்லை. ஆங்கில நாட்டு தூதுவர் என்று அச்சடித்த ஒரு காகிதத்தைக் கூட இன்னும் நான் பார்க்கவில்லை. இவையெல்லாம் சந்தேகத்தைக் கிளப்புகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது இந்த கோரிக்கை. கிருஷ்ணா ரொம்ப நல்லவர். ஆனால் இந்திய அரசாங்கத்துடன் அவருக்கு தொடர்பு உண்டு. இந்த சூழ்நிலையில் எனக்கு நம்பிக்கை இருக்க முடியுமா?"

"நான் இந்திய அரசாங்கத்தின் ஒற்றர் என்று நினைக்கிறீர்களா?"

நேரடியாக இம்மாதிரி நான் கேட்டது ஜானை சங்கடத்துக்குள்ளாக்கியது, "வேறு என்ன நினைப்பது? " என்று எதிர்த்துக் கேட்டார்.

"ஜான் உங்களிடம் நான் முழு உண்மையையும் சொல்லாதது உண்மைதான். என் மனதுக்கும் அதனால் நிம்மதியில்லை. ஆனால் அதற்கு காரணங்கள் உண்டு. அது எப்படியிருந்தாலும் நான் இந்திய அரசு மட்டுமல்ல அரசின் ஒற்றனுமல்ல என்று சத்தியமாகச் சொல்கிறேன்."

"அதைப்பற்றி சந்தோஷம்," என்றார் ஜான்.

"ஒற்றர் பார்த்து கண்டுபிடிக்க இங்கே என்ன இருக்கிறது ஜான்? இன்றைய வெளியுலக விஞ்ஞானம் இருக்கும் நிலையில் பல மைல்களுக்கு அப்பால் இருந்தே அவர்களால் எல்லாமே கண்டு கொள்ளலாம். உங்கள் உணர்ச்சிகளைக் கூட அவர்கள் பதிவு செய்துகொள்ள முடியும். இங்கே புரட்சி, அராஜகம் ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய இந்தியர்கள் இங்கே இருக்கிறார்கள். என் மாதிரியான ஒரு அன்னியனுக்கு இங்கே என்ன வேலை? "

‘‘இதெல்லாம் எனக்கும் தெரியும்,’’ ஜான் ஒத்துக் கொண்டார். ‘‘சில சமயங்களில் மேலே பறக்கும் தட்டுகளை நாங்கள் பார்த்திருக்கிறோம். மேலும் கிருஷ்ணா சிறு இங்கிலாந்துக்கு விரோதமாக ஒன்றும் செய்யமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் எல்லாமே புதிராய் இருக்கிறது.’’

‘‘என்னை அங்கே கூட்டிக்கொண்டு போங்கள் உண்மை சீக்கிரம் உங்களுக்குத் தெரிந்துவிடும்.’’

*************

கிருஷ்ணா எங்களை வரவேற்று இருவருக்கும் விஸ்கி அளித்தார். நான் என் ஆச்சரியத்தைத் தெரிவித்தபோது தம் வெள்ளை நண்பர்களுக்காக வீட்டில் விஸ்கி வைத்திருப்பதாக சொன்னார்.

நாங்கள் வருவதற்கு நேரமான காரணத்தைப் பற்றி ஜான் விவரித்தார். கிருஷ்ணா என்னை அழைத்து வந்ததற்கு அவருக்கு நன்றி தெரிவித்தார்.

‘‘நான் ஒரு நிபத்தணையின்மேல்தான் சர் ஜியார்ஜை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். அது இந்த விஷயத்தைப் பற்றிய முழு உண்மையையும் நான் அறிய வேண்டும் என்பதுதான்,’’ என்று ஜான் தன் நிலைமையை தெளிவுபடுத்தினார்.

உங்கள் நிபந்தனையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே,’’ கிருஷ்ணா பதிலளித்தார்.

‘‘ஆனால் சர் ஜியார்ஜ் ஒத்துக் கொண்டிருக்கிறார்.’’

கிருஷ்ணா என்னைப் பார்த்தார். ‘‘ஆம், நான் அம்மாதிரி வாக்களித்தேன். அவர் உண்மை அறிந்துகொள்வது நல்லது என்று நினைக்கிறேன்,’’ என்றேன்.

‘‘உங்களை இங்கு அழைத்துவர வேறு யாரையாவது அனுப்பியிருக்கலாமே.’’

‘‘உங்களைச் சார்ந்த ஒரு இந்தியர் ஹேம்ப்டன் கோர்ட்டுக்குச் சென்று சர் ஜியார்ஜை இங்கே அழைத்து வந்திருந்தால் சுவர் பத்திரிக்கையாளர்களுக்கு அதுவே போதும் இல்லையா? ’’ என்று ஜான் கேட்டார்.

‘‘இதனால் ஒரு புது பிரச்சனை உண்டாகிறது,’’ என்றார் கிருஷ்ணா. ‘‘உங்களுக்கு உண்மை முழுதும் தெரிய வேண்டுமென்றால் நீங்களும் எல்லாவற்றையும் நாங்களாக வெளியில் சொல்லும்வரை ரகசியமாக வைத்திருக்க வேண்டும். அது நியாயம்தானே? ’’

‘‘இந்த விஷயத்தில் சிறு இங்கிலாந்தை பாதிக்க ஏதாவது உண்டா? ’’ என்று கேட்டார் ஜான். ‘‘அப்படி இல்லையென்றால் நானும் ஒத்துக்கொள்ள தயார்.’’

‘‘என்னை உங்களுக்குத் தெரியும் ஜான்,’’ அவ்வளவுதான் கிருஷ்ணா சொன்னார். பிறகு சில வினாடிகள் ஜான் கண்களை ஏறிட்டு, ஆழ்ந்து பார்த்தார். அவருடைய கண்களிலிருந்து ஜான் மனதுக்குள் ஏதோ பாய்வது மாதிரி தோன்றியது. என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஜான் தலைகுனிந்து ‘‘சரி’’ என்றார்.

அதற்குப் பிறகு சில நிமிடங்கள் ஜான் ஒன்றுமே பேசவில்லை. கிருஷ்ணா கிழக்கு கோள முறையான (Thought control – T C) ‘சிந்தனை கட்டுப்பாடு’ முறையை பயன்படுத்தி ஜானை பணிய வைத்தார் என்று தோன்றியது.

கிருஷ்ணா எழுந்து ஒரு கதவைத் திறந்தார். ச்சக் கையில் ஒரு விஸ்கியுடன் உள்ளே சிரித்துக்கொண்டே வந்தார். ஜானுக்கு தானே அறிமுகப்படுத்திக் கொண்டார். இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு யாருக்கு வேண்டியிருந்தாலும் அது ச்சக் மூலமாகத்தான் முடியும் என்று நான் பின்னால் அறிந்து கொண்டேன்.

‘‘இந்தியர்கள் மது வகைகளை உபயோகிப்பதில்லை என்று எல்லோரும் சொல்கிறார்களே?’’ என்று ச்சக்கை கேட்டேன். நிலைமை மோசமாக இருந்தாலும் உண்மையைச் சேகரிக்கும் என் தொழில் வழக்கம் போகவில்லை.

‘‘சிறு இங்கிலாந்திலுள்ள இந்தியர்கள் தான் அப்படி. மற்றவர்கள் சாப்பிடுவதுண்டு,’’ என்று ச்சக் பதிலளித்தார்.

ஜானை ச்சக் எதிர்பார்க்கவில்லை. அவரை யோசனையோடு பார்த்தார். கிருஷ்ணா நிலைமையை விளக்கிச் சொன்னார்.

‘‘நீங்கள் எப்படி முடிவு செய்தாலும் சரி,’’ என்றார் ச்சக்.

‘‘நிலைமை இதுதான் ஜான்,’’ என்று கிருஷ்ணா ஆரம்பித்தார். முக்கியஸ்தர் என்னும் முறையில் அவர்தான் முதலில் பேசினார். என்னைக் கேள்வி கேட்காமல் தானே ஆரம்பித்தது பற்றி நான் மகிழ்ச்சியடைந்தேன். ‘‘சர் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் சர்ரும் இல்லை, சோனியனும் இல்லை. அ.மு. ஆராய்ச்சி நிறுவனத்தில் வேலை செய்யும் வெறும் ஜியார்ஜ் ஸ்மித்.’’

‘‘அவர் அங்கு வேலை செய்ததைப்பற்றி எனக்குத் தெரியும். ஆனால் அது ரொம்ப நாளைக்கு முன்பு கேள்விப்பட்டேன்,’’ என்றார் ஜான்.

‘‘நான் எல்லாம் சொல்லிவிடுகிறேன். பிறகு வேண்டுமென்றால் நீங்கள் கேள்வி கேட்கலாம். இவர் ஆங்கிலேய அரசாங்கத்தின் தூதுவரும் அல்ல. அம்மாதிரி அரசாங்கமே இன்று கிடையாது. நீல மலை வெள்ளையர்களின் பழக்கவழக்கங்களையும், உறவுகளையும், நம்பிக்கைகளையும் பற்றி தெரிந்து கொள்ள இங்கே வந்தார். நீண்டகால நோக்கோடு பார்க்கும்பொழுது அரசாங்க தூதுவராக இருப்பதைவிட இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் நாம் மற்றவர்களுடன் இணையும்போது இவைகளெல்லாம் மறைந்துவிடும். அ.மு. காலத்தில் வாழும் சமூகம் உலகிலேயே நாம் ஒன்றுதான். தொல்பொருள் ஆராய்ச்சியாளர் என்னும் முறையில் இவற்றையெல்லாம் பதிவுசெய்து வைப்பதில் உங்களுக்கும் மிகுந்த அக்கறை இருக்குமல்லவா? ’’

‘‘ஏன் சீக்கிரம் இந்த வாழ்க்கை அழிந்துவிடுமா? ’’ ஜான் கவலையோடு கேட்டார்.

‘‘வெள்ளையர்கள் எல்லோரும் அவர்கள் நினைக்கிறது போல் இங்கிலாந்தில் குடியேறிவிட்டால் இங்கே பிறகு என்ன இருக்கப்போகிறது? அது எப்படி இருந்தாலும் ஜியார்ஜ் இங்கே மாறு பெயரோடு வந்திருக்கிறார் என்பதுதான் நம் பிரச்சினை.’’

‘‘மன்னியுங்கள். நீங்கள் சொல்வது கொஞ்சம் சரியில்லை,’’ என்று ச்சக் இடைமறுத்தார். ‘‘மேற்கு கோள பிரதிநிதியாக அவருடைய நியமனம் சட்டப்படி இப்போது செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகளும் என்னிடம் இருக்கின்றன.’’

‘‘ஆகவே அவர் சிறு இங்கிலாந்து சட்டத்தை மீறியிருந்தாலும் அது சில நாளைக்குத்தான். அதனால் அது அவ்வளவு முக்கியமல்ல.’’

‘‘சர் ஜியார்ஜ் என்று கூறிக்கொள்ள அவருக்கு தகுதியோ அல்லது உரிமையோ கிடையாது,’’ ஜான் கொஞ்சம் ஆவேசமாகப் பேசினார்.

‘‘நான் இடைமறித்தேன். ‘‘என்னை நம்புங்கள் ஜான். நான் உங்கள் நாட்டில் இறங்கும்வரையிலும் ஆங்கில தூதுவரென்றோ அல்லது எனக்கு சர் பட்டம் உண்டென்றோ நான் கனவிலும் நினைக்கவில்லை. உங்கள் பிரதமர்தான் இரண்டையும் என்மீது திணித்தார். ச்சக்தான் அதற்கு சாட்சி.’’

இது இன்றைய நிலைமையின் ஒரு அம்சம். ஒரு சிறு அம்சம் என்று சொல்லலாம். ஆனால் முக்கியமான விஷயம் என்னவென்றால் இன்று வெளியுலகில் - முக்கியமாக மேற்கு கோளத்தில் - இருக்கும் சூழ்நிலை. நாம் இங்கே சிறு இங்கிலாந்தில் பேணிக்காக்கும் சுதந்திரம் அங்கே இல்லை. மக்களெல்லாம் யந்திரங்கள் ஆகிவிட்டார்கள். தீர்க்கவாதப்படி, யந்திரங்கள் இடும் கட்டளைப்படி

நடந்து கொள்கிறார்கள். பிறந்த நாளிலிருந்து பக்குவப்படுத்தப்பட்ட அடிமைகள். கேள்வி கேட்கவோ மறுக்கவோ அவர்களுக்குத் தெரியாது. விருப்பு வெறுப்பு, ஆசை ஆர்வம், உணர்ச்சி எல்லாம் அடக்கப்பட்டுவிட்டன. விஞ்ஞானத்தில் நாம் பின்னடைந்து இருந்தாலும், நம் சுதந்திரம், சண்டை சச்சரவுகள், போராட்டங்கள் நம்மை மானிடர்களாக காப்பாற்றி வருகின்றன. இவையெல்லாம் உங்களுக்கும் தெரியும்.''

''ஆம் இவற்றைப் பற்றியெல்லாம் ஜியார்ஜ் சொன்னார். ஆனால் எனக்குத் தெரியும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? ''

''ஜான் உங்களுடைய வெளி மனத்தில் இருப்பது எல்லாமே எனக்குத் தெரியும். ஏனென்றால் என் மனம் ஒரு ரேடியோ பெட்டி மாதிரி. நீங்கள் என் பக்கத்தில் இருந்தால் போதும். அதே மாதிரி உங்கள் மனதை என்னால் கட்டுப்படுத்தவும் முடியும்.''

''சிந்தனைக்கட்டுப்பாடு. டி.சி. இல்லையா? ''

''ஆம். இந்த முறையில் மேற்கு கோளத்தைவிட நாங்கள் மிகவும் முன்னேறியிருக்கிறோம்.''

''இதுதான் எனக்கு முதல் அனுபவம். நேரடியாக காண்பது,'' என்றார் ஜான்.

''இது ஒன்றும் புதிதல்ல. இதன் மூலமாகத்தான் பழைய காலத்தில் சில ஜோஸ்யர்கள் தம்மிடம் வருபவர்களின் நம்பிக்கையைப் பெற்றார்கள். உதாரணமாக நீங்கள் ஜியார்ஜ் உடன் ஷீலாவின் உறவு பற்றி கவலைப்பட்டிருக்கிறீர்கள். மேற்கு கோளத்தில் திருமணம் சட்ட விரோதம் என்று அவர் சொல்லியிருக்கிறார். இப்பொழுது அவர் நிலைமை மாறியிருப்பதால் அவர் இப்பொழுது ஷீலாவை மணம் புரிய விரும்புவாரா என்று யோசனை செய்கிறீர்கள் இல்லையா? ''

''ஆச்சரியம்! ஆச்சரியம்! நம்ப முடியவில்லையே!'' என்றார் ஜான். எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. என்னைப் பற்றியும் மேரியைப் பற்றியும் அவருக்குத் தெரியுமே என்று நான் கொஞ்சம் கவலையுடன் இருந்தேன்.

கிருஷ்ணா என்னைப் பார்த்து சிரித்தார். என்னை ஊக்குவிப்பதுபோல முதுகைத் தட்டிக்கொடுத்தார். அப்போது என் ரகசியம் அவரிடம் பத்திரமாக இருக்கும் என்று தெரிந்து நிம்மதியடைந்தேன். அவர் மேலும் ஜானுடன் பேசலானார்.

''அந்த ஜோஸ்யர்கள் காலத்திலிருந்து சிந்தனை கட்டுப்பாடு ரொம்ப முன்னேறியுள்ளது. அதுவும் விஞ்ஞான முறையில். மேற்கு கோளத்தில் பக்குவப்படுத்தும் முறை மாதிரி கிழக்கு கோளத்தில் நாம் டி.சி.ஐ உபயோகப்படுத்துகிறோம். ஆனால் அந்த இரண்டுக்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் உண்டு. பக்குவப்படுத்தலினால் மனிதர்கள் உணர்ச்சியில்லாமல் யந்திரங்களாகிவிடுகிறார்கள். ஆனால் டி.சி முறையில் அவர்களுடைய மனம் பலாத்காரத்திலோ அல்லது வேண்டாத வழிகளிலே செல்லும்போது தான் நாங்கள் கட்டுப்படுத்துகிறோம். மனிதர்கள் மனிதர்களாகவே இயங்குகிறார்கள்.''

''அம்மாதிரி கட்டுப்படுத்துவோர்க்கு என்ன தகுதி?'' என்று ஜான் வினாவினார்.

''என் போன்றவர்கள் அறிவு, ஞானம் உள்ளவர்கள் மனித குலத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்.''

''அவர்களை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? '' ஜான் விடுவதாயில்லை.

கிருஷ்ணா சிரித்தார். ''நாங்களை நாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். மற்றவர்களுக்கு அந்த தகுதி இருக்காது.''

''அப்போது அது ஜனநாயகம் அல்லவே? ''

''நான் முன்பே சொன்னேன் ஜான். சிறு இங்கிலாந்தைத் தவிர வேறு எங்கும் தனியார் சுதந்திரம் இல்லையென்று.'' கிருஷ்ணா விளக்கம் தந்தார்.

‘‘ஜானுக்கு கொஞ்சம் திரும்பி ஏற்பட்டது. ‘‘சரி இனி நடக்க வேண்டியதைப் பற்றி சொல்லுங்கள்.’’

‘‘இந்தப் பிரச்சனையின் இன்னொரு அம்சம் என்னவென்றால், இரு கோளங்களிலும் குழந்தை உற்பத்தி குறைந்துகொண்டு வருகிறது,’’ என்று ஆரம்பித்து செயற்கை கருத்தரிப்பு முறைகளைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும், இந்த சூழ்நிலையில் நீலமலை வாசிகளின் பொறுப்பு பற்றியும், அவர்களை இன்னும் சில காலத்துக்கு தனிமையாக வைப்பதின் அவசியம் பற்றியும் கிருஷ்ணா விரிவாக எடுத்துரைத்தார்.

‘‘இங்கு வரும்வரையில் ஜியார்ஜ் வாழ்ந்த வாழ்க்கை எனக்கு கண்டிப்பாக வேண்டாம்,’’ என்றார்,’’ ஜான்.

‘‘மேற்கு கோளத்துடன் நாம் இணைய முற்பட்டாலோ அல்லது எல்லோரும் அங்கே குடியேறினாலோ அதுதான் ஏற்படும்,’’ என்று கிருஷ்ணா சுட்டிக்காட்டினார். ‘‘அதனால் ஏற்படும் அதிர்ச்சி தாங்கமுடியாததாக இருக்கும்.’’

‘‘மிஸ்டர் கியூரேடர் அவர்களே,’’ என்று ச்சக் முதல் முதலாக பேச ஆரம்பித்தார். ‘‘சிறு இங்கிலாந்து பிரச்சனைகளில் தலையிடுவதற்கு என்னை மன்னிக்கவும். நான் கிழக்கு கோளத்தைச் சேர்ந்தவன். ஆனால் ஒரு பெரிய பிரச்சனை, மனித வர்க்கத்தின் பிரச்சனையைப் பற்றி நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த குழந்தை உற்பத்தி இப்படியே குறைந்துகொண்டு போனால் இன்னும் மூன்று தலைமுறைகளில் குழந்தை பிறப்பதே அபூர்வமாகிவிடும். அப்பொழுது இந்த உலகத்தின் தலைவிதியைப் பற்றி கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். முதலில் குழந்தைகள், பிறகு இளைஞர்கள் குறைந்துகொண்டே வருவார்கள். தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் வேலை செய்ய புதிய தொழிலாளிகள் இருக்க மாட்டார்கள். ஆகவே ஓய்வுபெரும் வயதை அதிகப்படுத்த வேண்டி வரும். முதியவர்கள் இறக்க இளைஞர்கள் முதியோர் ஆவார்கள். அரசாங்கம், அதிகாரம், பொருள் உற்பத்தி, சேவை ஸ்தாபனங்கள், கல்விச்சாலைகள் - எல்லாம் ஒவ்வொன்றாக ஸ்தம்பித்துவிடும். வீதிகளில் குப்பைகூளம் நிரம்பும். இன்னும் இருக்கும் சிலருக்கு ஆகாரம் வரவர குறையும். கடைசியாக இறப்போரை புதைப்பதற்கும் யாரும் இருக்கமாட்டார்கள். பல லட்ச வருடங்களாக இந்த உலகில் நடமாடி வந்த மானிடவர்க்கம் அப்படித்தான் முடிவுபெறும். கொஞ்சம் நினைத்துப்பாருங்கள். பல ஆயிர வருடங்களாக நாம் கட்டிய நிறுவனங்கள், கற்பனை செய்த இலக்கியம், வரைந்த ஓவியங்கள், சிந்தித்து எழுதிய தத்துவங்கள் எல்லாம் மறைந்துவிடும். மறுபடியும் இவ்வுலகத்தை மிருகங்களும் பறவைகளுமே ஆட்கொள்ளும்.’’ ச்சக் கொஞ்சம் தம் பேச்சை நிறுத்தினார். பிறகு ‘‘மிஸ்டர் கியூரேடர் அவர்களே, இம்மாதிரியான ஒரு எதிர்காலம் மனித வர்க்கத்துக்கு ஏற்பட வேண்டுமா? ’’

‘‘ஒரு பயங்கரமான எதிர்காலம்தான்,’’ என்று ஜான் ஒத்துக்கொண்டார். ‘‘ஆனால் உண்மையிலேயே அப்படி நடக்குமா? அதைத் தடுப்பதற்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன?’’

‘‘இதற்கு வேண்டிய அத்தாட்சிகளை நான் உங்களுக்கு கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். ஆனால் நான் சொன்னதெல்லாம் உண்மை. கிருஷ்ணா அவர்களுக்கும் தெரியும். ஆனால் இம்மாதிரி நடக்க ஒரு சதவிகித வாய்ப்புதான் என்றாலும் நாம் அதைத் தவிர்க்க முயல வேண்டாமா? அதைத் தவிர்க்கும் வாய்ப்பு உங்கள் கையில் இந்த நீல மலைகளின் தூய காற்றிலும் இங்கு வசிக்கும் வெள்ளையர்களிடமும் இந்தியர்களிடமும்தான் இருக்கிறது. இங்கே இன்னும் இயற்கை முறையில் குழந்தைகள் பிறக்கிறார்கள். குழந்தை வளமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்த குழந்தை வளத்தை பாதுகாக்க வேண்டுமென்றால் இன்னும் சில காலத்துக்கு உங்களை தனிமையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.’’

‘‘சரி, இதைப்பற்றியெல்லாம் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்,’’ என்றார் ஜான்.

‘‘இங்கிலாந்து செல்ல வேண்டும் என்னும் ஆசையைத் தடுக்க வேண்டும்,’’ என்று ச்சக் பதிலளித்தார். ‘‘அம்மாதிரி போனால் நீலமலை வெள்ளையர்களுக்கு மட்டுமின்றி மனிதகுலத்துக்கே அது அபாயகரமானது. அம்மாதிரி தடுப்பதற்காக மேற்கு கோளத்திலுள்ள உண்மை நிலையை ஜியார்ஜ் நீலமலைவாசிகளுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும்.’’

ஜான் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். பிறகு பேச ஆரம்பித்தபொழுது சோர்வுடனும் கவலையுடனும் பேசினார். ச்சக் அவருக்கு மற்றொரு விஸ்கி அளித்தார். அதை ஒரே மூச்சில் குடித்துவிட்டு ஜான் பேசலானார். “இந்த நூற்றைம்பது வருடங்களாக நாங்கள் இங்கிலாந்து – எங்கள் தாய் நாடு – போக காத்திருந்தோம். பெரிய அணுத்திரையை விலக்கியபோது அது எங்களுக்கு ஒரு தேசீய பைத்தியம் மாதிரி ஆகிவிட்டது. அப்புறம் ஜியார்ஜ் வந்ததும் அது ஒரு பெரிய கொண்டாட்டம், விழாவாக கொண்டாட முற்பட்டோம். இப்பொழுது நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அங்கே எங்களை சோதனை எலிகள் மாதிரி நடத்துவார்கள் போல் தெரிகிறது. இவை விட பெரிய அதிர்ச்சி வேறு என்ன வேண்டும்?”.

“ஜான் சிறு இங்கிலாந்துக்கு இப்போது இருக்கும் சங்கடம் ஒரு பெரிய ஏமாற்றத்துக்கும் இன்னொரு பெரிய ஏமாற்றத்துக்கும் மத்தியில் நிற்பதல்ல. மனித குலம், சரித்திரம் நமக்கு ஒரு சவால் விட்டிருக்கிறார்கள். அதை ஏற்பதா வேண்டாமா என்பதுதான் பிரச்சனை,” கிருஷ்ணா வலியுறுத்தினார்.

“நான் உங்களை எப்படி நம்புவது? நீங்கள் சொல்வதெல்லாம் கிழக்கு கோள அரசின் சூழ்ச்சியாய் இருந்தால்.”

“சூழ்ச்சி செய்யும் நோக்கமிருந்தால் நாங்கள் ஏன் இந்த நூற்றைம்பது வருடங்களாக உங்களை சும்மாவிட்டு வைத்திருக்கிறோம்? ” என்றார் ச்சக்.

“ஜான் நான் எப்பொழுதாவது ஒரு நேர்மையற்ற காரியத்தை செய்திருக்கிறேனா? சிறு இங்கிலாந்தின் நலத்தை புறக்கணித்திருக்கிறேனா? சொல்லுங்கள் என்று கேட்டார் கிருஷ்ணா.

“இல்லை. எனக்கு மட்டுமில்லை. சிறு இங்கிலாந்தில் எல்லோருக்குமே உங்கள் மீது நம்பிக்கையிருக்கிறது,” என்று ஜான் ஒத்துக்கொண்டார்.

“இந்த நெருக்கடியான கட்டத்தில் நாம் நமது கடமையை நன்றாக உணர்ந்து செய்ய வேண்டும். நாம் ஒரு சிறு சமூகமாக இருந்தாலும், மனிதகுலத்தை ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்ப வைத்தோம் என்று பிற்கால சரித்திரம் சொல்லவேண்டும்.”

“சரி” ஜான் மனதை திடப்படுத்திக்கொண்டார். “நான் என்ன செய்யவேண்டும்?”

“இப்போதைக்கு நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நாங்கள் சொன்னதை இன்னும் சில நாட்களுக்கு ரகசியமாக வைத்துக்கொண்டு எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நாங்களாக இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்லவில்லை. நீங்கள் கேட்டுத்தான் சொன்னோம்.”

“ஆம் நான்தான் ஒரு பெரிய சுமையை, ஒரு பெரிய அதிர்ச்சியை விலை கொடுத்து வாங்கிக் கொண்டேன். மனிதகுலத்தின் பாரமே என் மனத்தை அழுத்துகிற மாதிரி இருக்கிறது. இன்னும் எத்தனை நாளைக்கு நான் இதை சுமக்க வேண்டும்? ”

“ரொம்ப நாளுக்கு இருக்காது,” கிருஷ்ணா உறுதியளித்தார். “நாங்கள் இவைகளையெல்லாம் வெளியிடும் சமயத்தில் உங்களுடைய ஆதரவு எங்களுக்கும் - முக்கியமாக ஜியார்ஜுக்கும் இருக்குமல்லவா? ”

“வேறு நான் என்ன செய்ய முடியும்? ”

“முக்கியமாக ஜியாஜ் ஆங்கில அரசின் தூதுவர் அல்ல என்று தெரிந்தால் அவர் நிலைமை ரொம்ப மோசமாகிவிடும். அவருக்குத்தான் உம் உதவி அதிகம் வேண்டியிருக்கும்.”

“ஆம். இந்த நெருக்கடியில் கஷ்டப்படுபவர் அவர் ஒருவர்தான்,” ஜான் என்னை அனுதாபத்தோடு நோக்கினார். “ஜியார்ஜ், உங்கள்மேல் கோபப்பட்டதை தயவுசெய்து மறந்துவிடுங்கள். இந்த உலக சதுரங்கத்தில் உங்களை ஈடு வைத்திருக்கிறார்கள். என்னால் முடிந்த உதவியும் ஆதரவும் உங்களுக்கு இருக்கும்.”

“இதை ஒரு சதுரங்க ஆட்டமாக நினைக்க வேண்டாம் ஜான்,” என்றார் கிருஷ்ணா, “மனிதகுலத்துக்கு செய்யும் சேவை என்று கருதுங்கள்.”

திடீரென்று ஜான் எழுந்தார். “நான் கொஞ்சம் தனியாக இருந்து நீங்கள் சொன்னவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும். நான் விடைபெறுகிறேன். என் டோங்கா திரும்பிவந்து ஜியார்ஜை கூட்டிக்கொண்டு போகும்.”

இதுவரையிலும் நான் பேசாமடந்தையாக எல்லாவற்றையும் விவரமாக கேட்டுக்கொண்டிருந்தேன். கிருஷ்ணாவும் ச்சக்கும் நான் அங்கு இருந்ததையோ அல்லது எனக்கும் இந்த விஷயத்தில் அக்கறை இருக்குமென்பதையோ அறியாதவர்கள் போல் ஜானுடன் பேசினார்கள். மனிதகுலத்துக்காக என்னை சந்தோஷமாக தியாகம் செய்வார்கள்போல் தோன்றியது.

ஜான் போனபிறகு ச்சக் என் பக்கம் திரும்பினார். “ஜியார்ஜ், ஷீலாவுடன் ஏற்பட்ட ஒரு அனுபவத்துக்குப் பிறகு பெண்களை சும்மா விட்டுவிட்டீர்களல்லவா?” என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

நான் பதில் பேசவில்லை. எவ்வளவோ கேட்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் பேச்சு வரவில்லை.

“நீங்கள் தானே என்னை வரச் சொன்னீர்கள்? ” என்று ச்சக் கேட்டார். “என்ன செய்ய வேண்டும்? ”

“எல்லா முடிவும் நீங்களே செய்துவிட்டீர்களே. இது நான் சொல்ல என்ன இருக்கிறது? ” என்றேன்.

“அப்படி நினைக்க வேண்டாம்,” என்று கிருஷ்ணா இடைமறுத்தார். “நீங்கள் வாக்களித்தமாதிரி கியூரேடரை திருப்தி செய்ய வேண்டியிருந்தது இல்லையா? ஆனால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி இப்போது பேசலாம்.”

நான் நகரில் இருக்கும் நிலைமையைப் பற்றி சுருக்கமாக விவரித்தேன். அவர்களுக்கும் அது தெரிந்திருந்தது. கடைசியாக, “நான் இனிமேலும் ஆங்கில தூதுவராக நீடிப்பது முடியாத காரியம். இந்த சங்கடத்திலிருந்து எப்படி தப்பிப்பது என்பதுதான் என் பிரச்சனை.”

“உங்களுக்கு மூன்று வழிகள் இருக்கின்றன,” என்றார் சச்க். “ஒன்று நீங்கள் ஆங்கிலேயே தூதுவராக நீடிப்பதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள் என்னிடம் இருக்கின்றன. அவைகள் லண்டனிலிருந்து வர தாமதமானதால்தான் நான் இங்கு வருவதற்கும் நாளாயிற்று.”

“நான்தான் சொல்லிவிட்டேனே. தஸ்தாவேஜுகள் இருந்தாலும்கூட இனிமேலும் தூதுவராய் இருக்க நான் விரும்பவில்லை. அதற்கு எனக்கு தகுதியும் இல்லை.” மேரியை மனதில் வைத்துக்கொண்டுதான் நான் இப்படி சொன்னேன்.

“ஆனால் அதனால் நம் குறிக்கோளை அடைய முடியும் என்றால்? ”

“ச்சக் நம் குறிக்கோள் என்ன என்பதை நீங்கள் மறந்தாலும் நான் மறக்கவில்லை. அது நீலமலை வெள்ளையர்களின் சமூகத்தை ஆராய்வதுதான். அந்த குறிக்கோளை நான் ஏறக்குறைய நிறைவேற்றிவிட்டேன்.”

“அப்படியென்றால் இரண்டாவது வழியைப் பற்றி சிந்திக்கலாம். அதாவது நீங்கள் உடனே லண்டனுக்கு உங்கள் நிறுவனத்துக்குச் சென்று நீ இங்கு அறிந்தவற்றைப் பற்றி அறிக்கை தயாரிக்கலாம்,” ச்சக் என்னை விடுவதாய் இல்லை.

“அது வேண்டாம்!” என்றேன். எனக்கு அழுகை வரும்போல் இருந்தது. அந்த மங்கல வாழ்வுக்கும், விரும்பு வெறுப்பற்ற சமூகத்துக்கும். பக்குவப்படுத்துதலுக்கும் இந்த சுதந்திரத்தையும், ஜான் போன்ற நண்பர்களையும், முக்கியமாக மேரியையும் விட்டுச்செல்ல மனமில்லை. கண்ணீரும்

சிரிப்புமே எனக்கு இருக்கட்டும் என்று ஆவல் கொண்டேன். பிறகு, "மூன்றாவது வழி என்ன? " என்று கேட்டேன்.

ச்சக்கும் கிருஷ்ணாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். "மூன்றாவது வழி தான் கஷ்டமான வழி. ஆங்கில தூதுவர் அல்ல என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதற்காக சிறு இங்கிலாந்து நீதிமன்றம் அளிக்கும் தண்டனையை ஏற்று அனுபவிப்பது," என்றார் ச்சக்.

"தண்டனை என்ன?" என்று கவலையோடு கேட்டேன்.

"ஜியார்ஜ்!" ச்சக் அன்போடு என் தோள் மேல் கை வைத்துப் பேசினார். "உங்கள் உள்ளம் இன்னும் குழந்தையுள்ளம். நீங்கள் இங்கே நீலமலை வெள்ளையர்களை பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அதே சமயத்தில் நாங்களும் உங்கள் நிறுவனத்தின் ஒப்புதலுடன் ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம் என்பது உங்களுக்கு தெரியாது. அது என்னவென்றால் ஒரு பக்குவப்படுத்தப்பட்ட மனம் இயற்கை சூழ்நிலையில் செயல்பட்டால் அந்தப் பக்குவப்படுத்தல் எத்தனை நாளைக்கு இருக்கும் என்பது. உங்களுடைய நடத்தையிலிருந்து பக்குவப்படுத்தல் ஒரு மேல் பூச்சு மாதிரிதான் என்றும் மனம் சீக்கிரம் தன் இயற்கை நிலைமைக்கு வந்துவிடுமென்றும் அறிந்து கொண்டோம். ஆகையால் நீங்கள் திரும்பிப் போனாலும் உங்கள் நடத்தைக்காக லண்டனில் உங்களுக்கு ஒரு தண்டனையும் இருக்காது. உங்களுடைய தியாகத்தினால் பக்குவப்படுத்தும் முறையையே மேற்கு கோளம் கைவிட்டாலும் விடலாம். ஆகவே நான் சொன்ன இரண்டாம் வழியைப் பற்றி யோசனை செய்து சொல்லுங்கள்."

நான் யோசனை செய்தேன். ஆனால் லண்டனுக்கு திரும்புவதைப் பற்றியல்ல. இப்பொழுது ச்சக் சொன்னதும் என் மனதை சோதிப்பதற்குத்தான் என்று யோசித்தேன். பிறகு 'என்னைக் கேட்காமல் என் மனதை நீங்கள் எப்படி ஒரு ஆராய்ச்சி நிலைய எலிபோல சோதனை செய்யலாம்? என்று கேட்டேன்.

"லண்டனில் நீங்கள் இந்தக் கேள்வி கேட்டிருப்பீர்களா? பேசாமல் ஒத்துக் கொண்டிருப்பீர்கள் இல்லையா? "

"ஆம்" என்று தலையசைத்தேன்.

"உங்கள் மனத்தில் சுதந்திர மனப்பான்மை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது," கிருஷ்ணா வாய்விட்டு சிரித்தார். "குழந்தையுள்ளமும் மாறி முதிர்ச்சியடைந்து வருகிறது. சரி, தப்பு என்பவைகளுக்கு வித்தியாசம் அறிந்து அதன்படி நடக்க முயற்சிக்கிறீர்கள். ஆம் இனி நீங்கள் லண்டனுக்குச் செல்வது நல்லதல்ல."

"என்னை ஒரு சோதனை எலியாக உபயோகித்து மாறுதல்கள் செய்வதால் ஏற்படும் மனக் கஷ்டங்களைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்ளவில்லையோ? என்று வாதாடினேன்.

"கஷ்டமில்லாமல் மாறுதல்கள் செய்ய முடியாது," என்றார் ச்சக். ஆனால் அதோடு சிரிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் இவைகளையும் நாங்கள் அளிக்கவில்லையா? "

"மேரியை இவ்வளவு சீக்கிரம் மறந்துவிட்டீர்களா? " என்று சிரித்தார் கிருஷ்ணா. அவர்கூட ச்சக் மாதிரியே பேச ஆரம்பித்துவிட்டார்.

"என் மனதிலிருப்பது எல்லாமே உங்களுக்கு டி.சி. மூலமாக தெரிந்திருக்கும் போது என்னை ஏன் கேள்வி கேட்கிறீர்கள்," என்றேன்.

"ஜியார்ஜ்! நாங்கள் உங்களுடைய நண்பர்கள். உங்களுக்கு எது இஷ்டமோ அதைத்தான் நாங்கள் செய்ய விரும்புகிறோம் என்பதை தயவுசெய்து மறக்க வேண்டாம்" என்று ச்சக் வாதாடினார். "உங்களை ஆராய்ச்சிக்கு ஒரு உதாரணமாக உபயோகித்தாலும் உங்கள் நலனை நாங்கள் மறக்கவில்லை. இந்த ஆராய்ச்சியால் மனிதகுலம் நன்மையடையும்.

“மனிதகுலம் முக்கியமாய் இருக்கலாம். ஆனால் எனக்கு நான் தானே முக்கியம்? என் எதிர்காலம் என்ன? ” என்றேன் ஆவேசத்துடன்.

மனிதகுலம் முக்கியம் ஜியார்ஜ்” கிருஷ்ணா பொறுமையுடன் அறிவுறுத்தினார். “இந்த நூற்றைம்பது வருடகாலமாக அதை நாம் முக்கியமாக மேற்கு கோளத்தில் மறந்துவிட்டோம். ஆனால் மனிதகுலத்தைப் பற்றி கவலைப்படுவதால் உன்னை மறந்து விடுவோமென்றோ அல்லது அலட்சியம் செய்வோமென்றோ அர்த்தம் அல்ல.”

“ரொம்ப நன்றி!” என்று கொஞ்சம் பரிகாசமாகப் பேசினேன்.

“ஜியார்ஜ், என் விஞ்ஞான ஆர்வத்தினால் நான் சில சமயங்களில் மற்ற அம்சங்களை மறந்துவிடுவது உண்மைதான். ஆனால் உங்களை இனி மறக்கமாட்டேன். நீங்கள் இங்கேயே தங்கியிருக்க விரும்பினால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். நீலமலைகளிலுள்ள முக்கியஸ்தர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டி அங்கு நீங்கள் பேச வேண்டும். அக்கூட்டத்தில் இங்கிலாந்தின் இன்றைய வாழ்க்கையை விவரிக்க வேண்டும். அதற்கு வேண்டிய எத்தனங்களையெல்லாம் நான் ஏற்பாடு செய்கிறேன். கூட்டம் உங்களுக்கு அனுதாபமாய் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கடைசியாக நீங்கள் எப்படி இங்கே வர நேர்ந்தது என்பதைப் பற்றியும் சொல்லலாம்.”

“இந்த வழியைக் கை பிடிப்பதனால் நீங்கள் நீலமலைவாசிகளின் நலனுக்கும் உதவுவீர்கள். அதே சமயத்தில் உங்கள் உண்மை நிலையையும் வெளிப்படுத்துவீர்கள். உம் மனச்சாட்சியும் திருப்தியடையும்,” என்று கிருஷ்ணாவும் வாதாடினார்.

“நான் நேராக பிரதமரிடம் சென்று ‘சர் வின்ஸ்டன், நான் ஆங்கில நாட்டின் தூதுவர் அல்ல. எனக்கு சர் பட்டமும் கிடையாது. உங்கள் விருந்தோம்பலை நான் ஆள்மாறாட்டமாக ஏற்றிருக்கிறேன்” என்று சொன்னால் என்ன? ”

“அம்மாதிரி செய்வது உங்கள் தியாக உணர்ச்சியை திருப்தி செய்யலாம். ஆனால் உங்களை சிறைக்கு அனுப்புவதைத் தவிர வேறொன்றும் நடக்காது. நாங்கள் சொல்லும் வழியினால் ஆயிரக்கணக்கான நீலமலைவாசிகளுக்கு நீங்கள் பட்ட கஷ்டங்களிலிருந்து விடுதலை அளிப்பீர்கள். மேலும் பொதுஜன அனுதாபம் உமக்கு இருந்தால் சிறைவாசமும் இல்லாமல் போகலாம்.”

“நான் பொய் காரணம் சொல்லி இங்கே வந்தேன் என்றால் நான் சொல்வதை யார் நம்புவார்கள்?” என்று கேட்டேன்.

அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நான் செய்கிறேன்,” என்றார் ச்சக்.

“கூட்டத்தில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் அதற்கு வேண்டிய பாதுகாப்பு நான் அளிக்கிறேன்,” என்றார் கிருஷ்ணா.

ஒத்துக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

# அத்தியாயம் பதிமூன்று

நான் பேசுவது ராஜரீக பூகோள சங்கத்தின் ( Royal Geographical Society) சார்பில் என்று அரசு முடிவு செய்தது. சிறு இங்கிலாந்திலேயே அதுதான் நல்ல அந்தஸ்தும் மதிப்பும் உள்ள சங்கம். என் பெயரை விளம்பரப்படுத்தியபோது சர் பட்டத்தை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டேன். 'இங்கிலாந்தில் இன்றைய வாழ்க்கை என்னும் பொருள் பற்றி ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் பேசுவார்' என்று சுவர் விளம்பரங்களில் எழுதப்பட்டிருந்தது. மாதம் ஒரு முறை வெளிவந்த சிறு இங்கிலாந்தின் ஒரு சஞ்சிகையிலும் அந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு ஜான்தான் காரணகர்த்தராய் இருந்தார். அந்த நெருக்கடியான நாட்களில் அவர் உதவியும் ஆதரவும் எனக்கு தெம்பு அளித்தது. "முன்பு நீங்கள் பப் தத்துவத்துக்கு அடிமையாய் இருந்தீர்கள். உமது செய்கைகளுக்கு நீங்கள் பொறுப்பல்ல. அதனுடைய மனிதத் தன்மையற்ற கொடூரமான முறைகளை வெளிப்படுத்தி மற்றவர்களையும் எச்சரிக்க முன்வந்துள்ள உங்களின் தைரியத்தையும் சேவை மனப்பான்மையையும் நான் பாராட்டுகிறேன். இது சிறு இங்கிலாந்தின் நெறிக் கொள்கைக்கு வெற்றி என்று கூறலாம்" என்று எனக்கு உற்சாகமூட்டினார். அவர் இரண்டு மூன்று தடவை மேலும் கிருஷ்ணாவை சந்தித்திருப்பதாக தெரியவந்தது.

'நம்மிடையே ஒரு மர்ம மனிதன்' என்று சிறு இங்கிலாந்து டைம்ஸ் ஒரு தலையங்கம் எழுதியது. "கடைசியாக இங்கிலாந்தின் தூதுவர் இவ்வளவு நாள் பேசாமல் மழுப்பிவிட்டு இப்போது திடீரென்று தம் நாட்டைப் பற்றி பேச முன்வந்திருக்கிறார். அவருக்கு விளம்பரத்தில் ஆசையிருந்தால் அதை பூரணமாக பெற்றுவிட்டார். அவருக்கு விளம்பரத்தில் ஆசையிருந்தால் அதை பூரணமாக பெற்றுவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் விளம்பரத்துக்கு ஏற்ற பேச்சு இருக்குமா?

வழக்கமாக இம்மாதிரி கூட்டங்களுக்கு வெகு சிலர்தான் வருவார்கள் என்று ஜான் சொன்னார். ஆனால் இந்தக் கூட்டத்திற்கு எல்லா முக்கிய வெள்ளையர்களும் இந்தியர்களும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அம்மாதிரி முக்கியமானவர்களுக்கு பிரத்தியோக அழைப்புக் கடிதங்களும் அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்கு முன் வரிசைகளில் உட்காருமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அமைச்சர்கள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் முதலியோருக்கும் அதேமாதிரி வசதி செய்யப்பட்டிருந்தது. மண்டபம் நிறைந்து வெளியேயும் கூட்டம் இருக்கலாம் என்று ஜான் மதிப்பிட்டார்.

நான் ஆங்கில தூதுவர் அல்ல என்று சொல்லிவந்தவர்கள் எல்லோரும் இக்கூட்டத்தை பகிஷ்கரிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் இந்த பிரச்சாரம் கூட்டத்திற்கு மேலும் விளம்பரம் அளித்தது என்று சொல்லலாம். இங்கிலாந்தைப் பற்றி – தம் பழைய தாய் நாட்டைப் பற்றி – ஏற்கனவே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல், அங்கு போக வேண்டுமென்ற ஆவல், இந்த நூற்றைம்பது வருடங்களாக காணாத ஒரு உற்சாகத்தையும், ஏன் ஆவேசத்தையே உண்டாக்கிவிட்டது என்று சொல்லலாம். எங்கு பார்த்தாலும், வீதிகளிலும், குடிக்கும் இடங்களிலும், கேளிக்கை மனைகளிலும், என்னைப்பற்றி சர்ச்சைகளும் வாக்குவாதங்களும் ஏராளமாக இருந்தன என்று பட்லர் அறிவித்தான். நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதைப் பற்றி பந்தயம் கூட சிலர் கட்டிக் கொண்டார்களாம்.

ச்சக் என் பிரசங்கத்துக்கு உதவியாக இருக்க அதற்கு வேண்டிய படங்கள் காட்டுவதற்கும், மண்டபத்துக்கு வெளியே இருப்பவர்களும் அவைகளைப் பார்க்க ஏற்பாடு செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுத்தார். அதற்கு வேண்டிய உபகரணங்களை சென்னையிலிருந்து கொண்டுவர சிறு இங்கிலாந்து அரசு அவருக்கு அமைதியளித்திருந்தது. நீளம், அகலம் மட்டுமின்றி ஆழமும் தெரியும்படியான 3-D படங்கள் அவை. மண்டபத்தில் உட்கார்ந்திருப்போர்களுக்கு அப்படங்களின் மத்தியில் இருப்பது போன்ற உணர்ச்சியிருக்கும். மேலும் அப்படங்கள் அதிலுள்ள பாத்திரங்களின் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும். என் பேச்சுக்கும் அப்படங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஆனதால் நானும் ச்சக்கும் ஒட்டி வேலை செய்ய வேண்டியிருந்தது. நான் எந்தக் கூட்டத்திலும் பேசியது கிடையாது. ஆகையால் இந்த அனுபவத்தை கவலையோடு எதிர்பார்த்திருந்தேன்.

"என் பேச்சை எழுதி மனப்பாடம் செய்துகொள்ளட்டுமா? " என்று கேட்டேன்.

“வேண்டாம்,” என்றார் ச்சக். “அது ஒரு புஸ்தகத்திலிருந்து படிப்பது போன்ற எண்ணத்தை கூட்டத்தினருக்கு ஏற்படுத்தும். நீங்கள் கொஞ்சம் தடுமாறினாலும் பரவாயில்லை. வார்த்தைகள் உங்கள் இருதயத்திலிருந்து வர வேண்டும். அப்பொழுதுதான் உங்களை நம்புவார்கள்.”

இருந்தாலும் நான் நன்றாக யோசனை செய்து என்ன பேசப் போகிறேன் என்பதை விவரமாக குறித்துக்கொண்டேன். ச்சக்கும் அதைப் பாாத்து அதற்குத் தகுந்தமாதிரி படங்களையும் திருத்திக்கொண்டார். படங்கள் திரையில் வரும்போது நான் பேச வேண்டியதில்லை. ஆகவே ஒவ்வொன்றுக்கும் எத்தனை நிமிடங்கள் என்று ஒரு ஒத்திகை மாதிரி நடத்தி அதை இருவரும் நன்றாக அறிந்துகொண்டோம்.

நான் பேசப்போகும் நாளன்று நன்றாக யோசனை செய்து என் ஏற்பாடுகளை செய்தேன். என் சாமான்களையெல்லாம் பெட்டிகளில் வைத்துப் பூட்டிக் கொண்டேன். நான் திரும்பி ஹேம்ப்டன் கோர்ட்டுக்கு வரமாட்டேன் என்று தெரியும். தற்காலிகமாக கிருஷ்ணா அவர்களின் வீட்டிலிருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

“நீங்கள் திரும்பி இங்கிலாந்துக்கு போகப் போகிறீர்களா? ” என்று கேட்டான் பட்லர். “அல்லது தனியாக தூதராலயம் வைக்கப் போகிறீர்களா? ”

“எல்லாம் என் பேச்சுக்குப் பிறகு தெரிய வரும்,” என்றேன். “என் வாழ்விலும் சிறு இங்கிலாந்து வாழ்விலும் இது ஒரு முக்கிய கட்டம். என்ன ஆகும் என்று இப்பொழுது சொல்ல முடியாது.”

“உங்கள் தூதுவராயத்தில் சேவை செய்ய நான் மிகவும் பெருமைப்படுவேன்.”

“நான் அதை மறக்கமாட்டேன் பட்லர்,” என்று பதிலளித்தேன். எனக்கு எவ்வளவோ புத்திமதி அளித்த பட்லரை விட்டுப்போக கொஞ்சம் வியசனமாகத்தான் இருந்தது.

“நானும் உங்கள் உரையைக் கேட்கப் போகிறேன்,” என்றான் பட்லர்.

கூட்டத்தைப் பற்றிய அறிவிக்கப்பட்ட அன்றுதான் பிரதமரும் தமது விடுமுறையில் இருந்து திரும்பி வந்தார். என்னைப் பார்க்க விரும்புவதாக அவரிடமிருந்து அழைப்பு வந்தது.

“நீங்கள் கொஞ்சம் விளம்பரப்படுத்திக்கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது,” என்றார் சர் வின்ஸ்டன். “விளம்பரம் எப்பொழுதுமே நல்லதுதான். இருவரையிலும் ஏன் பேசாமல் இருந்தீர்கள் என்று இப்பொழுதுதான் நான் அறிகிறேன். இந்த முறையினால் எல்லோருடைய ஆர்வத்தையும் நன்றாக கிளறிவிட்டிருக்கின்றீர்கள்.”

“இங்கிலாந்தின் இன்றைய வாழ்க்கையைப் பற்றி எல்லோரும் அறிந்துகொள்வது நல்லது என்று நினைத்துத்தான் நான் இந்த பிரசங்கத்துக்கு ஒத்துக்கொண்டேன். அங்குபோக விரும்புகிறவர்கள் எல்லோரும் அதைப்பற்றி அறிவது நல்லதுதானே? ”

“நீங்கள் சன்னத்துகள் சமா்ப்பித்தபிறகு இந்த பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.”

“என் பேச்சுக்குப் பிறகு அந்த சடங்கு இருப்பதுதான் நல்லது.”

சா் வின்ஸ்டனுக்கு அது கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. “சன்னத்து சமா்ப்பிப்பதை ஒரு விழாவாக கொண்டாட ஏற்பாடு செய்திருந்தோம்” என்றார்.

“எப்படியிருந்தாலும் நீங்கள் என் பேச்சைக் கேட்க வருவீகள் அல்லவா? ”

“நான் மட்டுமல்ல. மந்திரிசபை, பார்லிமெண்ட் எல்லோருமே அங்கே இருப்பார்கள்.”

* * *

கூட்டம் நான்கு மணிக்கு என்று விளம்பரங்கள் அறிவித்தன. நான் ராஜதந்திரி அணியவேண்டிய உடைகளை விட்டுவிட்டு ஒரு சாதாரண மனிதன் மாதிரி உடையணிந்து கொண்டேன். கிருஷ்ணாவும் ஜானும் என்னுடன் கூட்டத்திற்கு வந்தார்கள். அம்மாதிரியான கூட்டத்தில் பேச எனக்கு துணிவு இருக்குமா என்று அவர்கள் கவலையாக இருந்தார்கள். ஆனால் இந்த சில நாட்களில் என் மனமும் உள்ளமும் நன்றாக வளர்ந்து முதிர்ந்துவிட்டது. நீலமலை வெள்ளையர்களை நேருக்கு நேர் சந்திக்க நான் தயாராய் இருந்தேன். இப்பொழுது அவர்கள் தான் குழந்தைகள் மாதிரி எனக்குத் தோன்றினார்கள். நான் தூதுவராக நடித்ததற்கு ஏதாவது தண்டனை இருந்தால் அதையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. தியாகம் செய்வதற்கு வேண்டிய பெருந்தன்மையும் எனக்கு இருந்தது. வாழ்க்கையில் டாம்பீகமாகவும் பாதுகாப்புடனும் காலம் கழிப்பதைவிட தன்மானம் தான் முக்கியமானது என்பதையும் உணர்ந்துகொண்டேன். அதே சமயத்தில் நான் என் முயற்சியல் வெற்றி காணாவிட்டால் என்ன ஆகும் என்ற கவலையும் என் மனதை வாட்டியது.

கூட்டம் மண்டபத்தில் நிறைந்து வழிந்தோடியது. பிரத்தியோகமாக முக்கியஸ்தர்களுக்கு என்று இருந்த நாற்காலிகள் மட்டும் இன்னும் சில காலியாக இருந்தன. மண்டபத்துக்கு வெளியிலும் பெரிய கூட்டம் காத்திருந்தது. அவர்களுக்குள் சிறிது சலசலப்பும் பேச்சுவார்த்தைகளும், சத்தமும் இருந்தது. சிலர் ஆங்கிலேயே ராஜிய கீதத்தைப் பாடினார்கள். மற்றும் சிலர் அவர்களைப் பார்த்து ஏளனமாக சிரித்தனர்.

ராஜரீக பூகோள சங்கத்தின் தலைவர் புரொபசர் டட்லி – ஸ்டேம்ப் எங்களை வரவேற்றார். என்னைப் பற்றி ஜான் அவரிடம் முன்பே சொல்லியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் என்னை ஆங்கில அரசின் தூதுவர் என்று கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தவில்லை. இங்கிலாந்திலிருந்து வந்திருக்கும் ஒரு உயர்ந்த நண்பர் என்றும் அ.மு. சரித்திர ஆராய்ச்சியாளர் என்றும் அறிமுகப்படுத்தினார்.

அவர் பேசி முடித்ததும் கூட்டத்தில் அமைதி நிலவியது. இந்த பிரசங்கத்தின் சரித்திர முக்கியத்துவத்தைப் பற்றி எல்லோரும் அறிந்திருந்தனர். அவர்கள் மனதிலிருந்த உள்ளுணர்ச்சியை என்னால் யூகிக்க முடிந்தது. மண்டபத்துக்கு வெளியிலும் எல்லோரும் நிசப்தமாக இருந்தனர். நீலமலைகளிலுள்ள முக்கியஸ்தர்கள் எல்லோரும் முன் வரிசைகளில் அமர்ந்திருந்தனர். பல இந்தியர்களும் ஷீலாவும் மேரியும் கூட்டத்தில் இருந்தார்கள். ச்சக் மேடைக்குப் பக்கத்தில் இருந்து பல யந்திரங்களை இயக்க தயாராய் இருந்தார். என் வாழ்க்கையிலேயே ஒரு முக்கியமான கூட்டம் ஆரம்பமாயிற்று. நான் பேச எழுந்தேன்.

> ‘‘பெரியோர்களே! தாய்மார்களே!’’ நான் கொஞ்சம் தயக்கமாகத்தான் ஆரம்பித்தேன். நான் வீசப்போகும் வெடிகுண்டுகள் வெடித்து அவர்கள் ஆசைகளை பாழாக்கும் முன்பே அவர்களுடைய அனுதாபத்தை நான் பெறுவது அவசியம்.
>
> ‘‘உங்கள் அழகிய நாட்டில் நான் மூன்று மாதகாலமாக இருந்து வருகிறேன். நான் சந்தித்த ஒவ்வொருவரும் என்னுடன் மிகுந்த நட்போடும் விருந்தோம்பல் உணர்ச்சியோடும் என்னை உபசரித்திருக்கிறார்கள். இந்த அன்பை நான் மிகவும் மதிக்கிறேன். உங்கள் தாராள மனப்பான்மைக்கு என் ஆழ்ந்த நன்றி.

மண்டபத்தில் எல்லோரும் புன்முறுவல் பூத்தனர். அது என்னை ஊக்குவித்தது.

> ‘‘இந்த மூன்று மாதங்களில் பலர் என்னை இங்கிலாந்தில் இன்றைய வாழ்க்கையைப் பற்றி பல கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். யாருக்குமே நான் நேரடியாக பதிலளிக்கவில்லையென்பது உண்மைதான். ஆனால் அது உங்களை நான் ஏமாற்ற கையாண்ட வழியல்ல. எங்கு ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் இங்கிலாந்துக்கு செல்வதைப்பற்றியும் அங்கு குடியேறுவதைப்பற்றியும் பலர் என்னிடம் விசாரிக்க வந்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் அங்குள்ள யதார்த்த நிலைமையை உங்களுக்கு அறிவிப்பது என் கடமை என்று எண்ணினேன். நீங்கள் எனக்கு இந்த மூன்று மாதமாக அளித்த அன்புக்கும் ஆதரவுக்கும் நான் செய்யும் கைம்மாறு அதுதான்.
>
> ‘‘என் பேச்சை மட்டுமின்றி அங்குள்ள இன்றைய வாழ்க்கையை நீங்கள் படங்கள் மூலமாகவும் ஒளி, ஒலி மூலமாகவும், உணர்ச்சி மூலமாகவும் கூட அறியப் போகிறீர்கள். இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்த ச்சக் அவர்களுக்கும் என் நன்றி. ஒரு கோணத்திலிருந்து

பார்க்கும் பொழுது என் பேச்சே நீங்கள் பார்க்கும் படங்களுக்கு ஒரு விளக்க உரை மாதிரிதான்.

ஆடியன்ஸ் ரீஏக்ஷன் இண்டிகேட்டர் (ARI) (கூட்டத்தினரின் உள்ளுணர்வு அளவுகோல்) என் பக்கத்தில் இருந்தது. அதிலிருந்து என் முகவுரை ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருப்பது தெரிய வந்தது. பிறகு நான் கடந்த நூற்றைம்பது வருடங்களாக ஏற்பட்டுள்ள தொழில் அபிவிருத்தியை விளக்கினேன். யுனிவர்சல் ஏர்கண்டிஷனிங், போக்குவரத்துக்காக பல தட்டுகளில் இருந்து நடமாடும் மேடைகள், ஒரே தடவை உபயோகப்படுத்தி எறிந்துவிடும் ஆடைகள், ஜீரணமான உணவு வகைகள் இவற்றையெல்லாம் பற்றி கூட்டத்தினர் ஆவலோடு கேட்டார்கள். கம்ப்யூடர்களால் தானாக இயங்கும் தொழிற்சாலைகளைப் பற்றியும், சங்கீதம், கலை, நடனம் இவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றியும், அன்றாட பொருள்களை இலவசமாக விநியோகிக்கும் சூப்பர் மார்க்கெட்டுகளைப் பற்றியும் சொன்னேன். நோய் தடுப்பு முறைகளால் எப்படி எல்லோருமே ஆரோக்கியமாக இருக்கிறார்கள் என்பதையும் விபத்துகள் ஏற்பட்டு காலோ கையோ போனால் அதே மாதிரி அவயவங்களை மாற்றும் முறைகளைப் பற்றியும் சொன்ன போது கூட்டத்தில் சிறு கரகோஷம் எழுந்தது. நான் பேசிக்கொண்டிருந்தபோது அதற்கு தகுதியான படங்கள் திரையில் காட்டப்பட்டன. கூட்டத்தினர் அந்தப் படங்களை ஆச்சரியத்துடன் மூச்சு விடாமல் பார்த்தனர். என்றுமே சினிமா கூட பார்க்காதவர்களுக்கு அவை பெரிய நவீனங்களாக தோன்றின. அந்தப் படங்களுக்கு அகலம் நீளம் மட்டுமின்றி ஆழமும் இருந்ததால் கூட்டத்தினருக்கு தாங்களும் அந்த வாழ்க்கையில் பங்கு கொள்வது போன்ற பிரமை உண்டாயிற்று. ஆடியன்ஸ் ரியேக்ஷன் இண்டிகேட்டரில் அவர்கள் என் பேச்சை நன்றாக அனுபவிக்கிறார்கள் என்று காட்டியது. பிறகு நான் இங்கிலாந்து வாழ்க்கையின் மற்ற அம்சங்களை விவரிக்க முயன்றேன்.

"ஆம். நாங்கள் ஜட வாழ்க்கையில் பூரணத்துவம் பெற்றுவிட்டோம்.

கனவுகண்ட சுவர்க்கத்தை இவ்வுலகிலேயே நிர்மாணித்துவிட்டோம்.

என் பேச்சின் கஷ்டமான பாகம் இப்போதுதான் வந்தது. என் எதிர்காலம் இன்னும் அரை மணி நேரத்தில் நிர்ணயமாகும் என்று உணர்ந்தேன். இருந்தாலும் கூட்டத்தினருடைய ரசிப்பு என் கவலையைப் போக்கடித்துவிட்டது. ஒரு புதிய சுதந்திரத்தோடு அழுத்தி பேசலானேன்.

பிறகு நான் ஜீவிய விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பற்றி விவரித்தேன். குழந்தை பிறக்க கர்ப்பப் பையோ அல்லது பெண்களோ வேண்டியதில்லையென்றும் ஆகவே குழந்தை உற்பத்தி என்று தான் மேற்கு கோளத்தில் பேசுவதாகவும், மற்ற பொருள்கள் மாதிரி குழந்தைகளும் தனி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றியும் எடுத்துரைத்தேன். குழந்தைகள் செயற்கை கர்ப்பப் பைகளில் எப்படி உதித்து உருவாகி வளர்கிறார்கள் என்றும் படங்கள் திரையில் தோன்றின. பிறகு அக்குழந்தைகள் ஓர் நகரும் மேடை மீது ஒன்றொன்றாக வர அவைகளை அங்குள்ள தொழிலாளர்கள் சோதித்து குற்றமுள்ளவைகளை ஈவு இரக்கமின்றி எடுத்தெறிந்து கொண்டிருந்தனர். அங்கிருந்து அவை வளர்ப்புத் தொட்டிகளுக்கு மாற்றப்பட்டன. நான் பேசவும் கூட இல்லை. படத்துடன் விளக்கமும் தரப்பட்டது. அப்பொழுதுதான் கூட்டத்திலிருந்து ஒரு கூச்சல். எல்லோரும் திரும்பினர். அது ஷீலா. மயக்கமுற்று விழுந்துவிட்டாள்.

"இப்படித்தான் மேற்கு கோளத்தில் குழந்தை உற்பத்தி நடந்து வருகிறது. நானும் இம்மாதிரி பிறந்தவன்தான். நாலாவது தலை முறை. தாயின் பாலோ, தாயின் அன்போ நாலு தலைமுறையாக அறியாத ஜீவன்கள்.

"வேறு சில செய்திகளையும் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன. மனிதகுல எதிர்காலத்துக்கு அவை ரொம்ப முக்கியமானவை. சில காலமாக குழந்தை உற்பத்தி குறைவடைந்து வருகிறது. விஞ்ஞானிகள் செயற்கை முறைகள்தான் இதற்கு காரணம் என்று கருதுகின்றனர். இப்படியே போய்க்கொண்டிருந்தால் இன்னும் சில தலைமுறைகளில் மனிதகுலமே இருக்காது. நீலமலை வெள்ளையர்களும் இந்தியர்களும்தான் மனிதகுல பிரதிநிதிகளாக இருப்பார்கள். இதன் விளைவுகளைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை.

ஆடியன்ஸ் ரியேக்ஷன் இண்டிகேட்டார் முள் மேலும் கீழும் வேகமாக ஆடியது. கூட்டத்தினர் பலவித உணர்ச்சிகளுக்கு மத்தியில் தவிப்பதை அது காட்டியது.

அப்புறம் குழந்தை வளர்ப்பைப் பற்றிப் பேசினேன். உள்ளுணர்ச்சி மூலமாக தூங்கும்போது கற்பது, மனது பல சிந்தனைகளால் பாதிக்கப்படாமல் இருக்க பக்குவப்படுத்துவது, குழந்தைகளின் திறமையை கணிக்க உபயோகப்படுத்தும் சோதனைகள் முதலியவற்றை விவரித்தேன். படங்கள் திரைக்கு வந்தபோது குழந்தைகளில் கத்துதல், அழுகை, அவைகளுக்கு பப் தத்துவம் ஓதுதல் அவைகளின் பயம், நடுக்கம் எல்லாவற்றையும் கூட்டத்தினர் காணவும் உணரவும் முடிந்தது: என்ன நடக்கிறது என்பது அவர்களுக்கு சரியாக விளங்காவிட்டாலும், ஏதோ ஒருவித சித்திரவதை நடக்கிறது என்பதை உணர்ந்துகொண்டார்கள். குழந்தைகளுக்கு வேண்டிய அன்பு, ஆசை, பெற்றோர்களின் வாஞ்சை இவைகளுக்கு பதிலாக செயற்கை முலைகள் பால் அளித்தன. கம்ப்யூட்டர் கைகள் தட்டிக்கொடுத்தன. ரேடியோ ஒலி அவர்களுக்கு செய்ய வேண்டியதை சொல்லிற்று. அப்படி செய்யாத குழந்தைகளுக்கு தானாக மின்சார அதிர்ச்சி வரும். குழந்தைகள் பீறிட்டு அழுவார்கள். அவர்களுக்கு ஆறுதல் சொல்லவோ எடுத்து முத்தமளிக்கவோ அங்கு யாரும் இல்லை. இவ்வளவு பயங்கரமான படங்களைப் பார்த்தும் கூட்டத்தினர் அதை நிறுத்தச் சொல்லவில்லை. யம பாசத்தால் கட்டுண்டவர்கள் மாதிரி தமது ஆசன கைப்பிடிகளை அழுத்திப் பிடித்துக்கொண்டு திரையை விறைத்துப் பார்த்தனர். அந்த குழந்தைகள் - ஏன் நானும் கூட – பட்ட கஷ்டத்தை அவர்களும் அனுபவித்தனர்.

“அம்மை தடுப்பதற்கு ஊசி போடுவது மாதிரி உணர்ச்சியைத் தடுப்பதற்கு பக்குவப்படுத்தல் நடக்கிறது. பதினைந்தாவது வயதுக்குள் இந்த பள்ளியிலிருந்து வெளியேறும் ஆண்டுகளுக்கும் உணர்ச்சியே இருக்காது. எது சரி எது குற்றம் என்பதும் தெரியாது. ஆனால் அவர்களுக்கு எதிர்ப்பு, போராட்டம் என்ற குணங்களும் இருக்காது. கேள்வி கேட்காமல் கம்ப்யூட்டருக்கு கீழ்படிதல், சொன்னபடி செய்தல் அதுதான் தெரியும்.

“எதிர்ப்பு இன்றி இவையெல்லாம் எப்படி சாதிக்கப்பட்டன என்று நீங்கள் கேட்கலாம். அதுதான் பப். மேற்கு கோளத்தின் மதம், தத்துவம் சில உதாரணங்கள்.

“விரும்புவதை விலக்காவிட்டால் வெறுப்பும் விலங்காது.’

‘குடும்ப விசுவாசம் நாட்டுக்கு துரோகம்.’

‘சிந்தனைகள்தான் லட்சியங்களின் பெற்றோர். இரண்டையும் நீக்க வேண்டும்.’

‘மனிதனின் மனம் கோணல். கம்ப்யூடரின் ஞானம் நேர்மை.’

நான் பப் தத்துவத்தை விளக்கும்போது அதற்கேற்ற படங்களும், ஒலிகளும் கூட்டத்தினரை நடுங்க வைத்தன. குடும்பங்களை பிரிப்பதையும், காதலர்களைத் தனிமைப்படுத்துவதையும், புத்தகங்களை எறிப்பதையும் கோவில்களை அசுத்தமாக்குவதையும் படங்கள் சித்தரித்தன.

“கம்ப்யூட்டர்கள் உலகத்தை ஆட்கொண்டுவிட்டன. எப்படி நடந்துகொள்வது என்ன செய்வது, என்ன சிந்திப்பது என்பதை இருபத்தி நான்கு மணி நேரமும் நமக்கு அறிவுறுத்துகின்றன. ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளையும், சிந்தனைகளையும் அபிலாட்சைகளையும் பதிவு செய்து தர்க்கரீதிப்படி அவர்களுக்கு வேண்டிய உணவையோ, கேளிக்கைளையோ, பால் உறவையோ மருந்துமாதிரி அளிக்கின்றன. கம்ப்யூட்டர்கள்தான் நாடுகளையே பரிபாலிக்கின்றன. அவை சாகா வரம் பெற்றவை. ஏதாவது கோளாறு ஏற்பட்டால் தாங்களே சரிசெய்து கொள்ளும் திறமை அவைகளுக்குண்டு. அவை நிரந்தரம். நாம்தான் பிறந்து, வாழ்ந்து மடிய வேண்டும்.

“இந்த யுனிவர்சல் கம்ப்யூட்டர் சிஸ்டத்துக்கு முடிவு இல்லையா? இவைகளுக்குப் பின்னால் ஒரு தெய்வீக சக்தி இயங்குகிறதா? பிரிவிணையின்போது ஏற்பட்ட பொருள் முன்னேற்றக் குழுவும் அறிவு முன்னேற்றக் குழுவும் என்ன ஆயின?” இக்கேள்விகளுக்கு பதில்சொல்ல நான் சிறிது தயங்கினேன். பிறகு, “பெரியோர்களே, இக்கேள்விகளுக்கு எனக்கு பதில் தெரியாது. நான் இங்கு வரும்வரைக்கும் நானும் பப் தத்துவத்தில் மூழ்கியிருந்தேன். இங்கு வந்தபிறகுதான் அன்பு, ஆர்வம், ஆசை,ஆவல், விருப்பு வெறுப்பு, நியாயம் அநியாயம், தன்நலம், தியாகம் ஆகியவற்றை கற்றுக்கொண்டேன். என்னை ஒரு யந்திரத்திலிருந்து மனிதனாக ஆக்கிய உங்களுக்கும் இந்த அழகிய நீலமலைகளுக்கும் நான் என்றும் கடமைப்பட்டிருப்பேன்.”

படங்களும் பேச்சும் நின்றுவிட்டன. மண்டபத்தில் ஒரு சாவு போன்ற அமைதி நிலவியது. ஆடியன்ஸ் இண்டிகேட்டர் கூட்டத்தினர் ஆவேசப்பட்டிருப்பதாக காட்டியது. அவர்களுடைய கனவுக் கோட்டைகளை – நூற்றைம்பது வருடங்களாக கட்டிய கோட்டைகளை – நான் சிறிது நேரத்தில் இடித்து தள்ளிவிட்டேன். கூட்டத்தினர் சர் வின்ஸ்டன் உள்பட – எல்லோரும் தம் கைக்குட்டைகளை எடுத்து முகங்களைத் துடைத்துக்கொண்டனர். ஆனால் என் பேச்சு இன்னும் முடியவில்லை. என்னைப் பொருத்தவரையில் கடைசி வெடிகுண்டை எனக்காகவே வைத்திருந்தேன்.

> ‘‘என் பேச்சினால் உங்களுடைய உள்ளங்களையும் கனவுகளையும் பாழ்படுத்தியிருந்தால் என்னை மன்னிக்கவும். நம் வாழ்வையே பாழடையச் செய்வதைவிட உண்மையறிந்து கனவுகளைப் பாழடையச்செய்வது நல்லது.
>
> ‘‘கடைசியாக இன்னும் ஒரு விஷயம் நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அது என்னைப்பொறுத்த, தனிப்பட்ட விஷயம்.

நான் ஆடியன்ஸ் இண்டிகேட்டரை பார்த்தேன். அது ஒரு மத்திய நிலைமையைக் காட்டியது. நான் இவ்வளவு அவர்கள் மனக்கோட்டைகளை இடித்து என்மேல் வெறுப்பு இல்லை. ஆனாலும் என் கடைசி வார்த்தைகளுக்கு அவர்கள் ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிந்தது.

> ‘‘இங்கிலாந்தின் தூதுவர் ஏன் தன் நாட்டைப் பற்றி இவ்வாறு பேச வேண்டும் என்று நீங்கள் யோசிக்கலாம். வழக்கமாக ஒரு ராஜதந்திரி தம் நாட்டின் பெருமையைப் பற்றித்தான் பேசுவார். அப்படியிருக்க நான் ஏன் உண்மையை ஒளிக்காமல் சொன்னேன்? அதன் காரணம் ரொம்ப சுலபம். நான் இங்கிலாந்தினுடையவோ அல்லது மேற்கு கோளத்தினுடைய தூதுவன் அல்ல. நான் இங்கிலாந்திலிருந்து உங்கள் வாழ்க்கை முறையைக் கற்க வந்தவன்.......’’

திடீரென்று கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் எழுந்தன. பலர் தம் கைகளை வீசிக்கொண்டு மேடையை அணுக ஆரம்பித்தனர். ஆனால் ச்சக் முன்யோசனைப்படி மேடையைச் சுற்றிலும் தொட்டால் கொஞ்சம் அதிர்ச்சி தரக்கூடிய மின்சாரக்கம்பி போட்டிருந்தார். தடிகளும் கற்களும் மேடைமேல் விழுந்தன. ‘துரோகி’! ‘வஞ்சகன்! என்னும் வார்த்தைகள் வசைமாரியாகப் பொழிந்தன. அதே சமயத்தில் ‘சிறு இங்கிலாந்தைக் காத்தவர் வாழ்க!’ என்னும் கோஷங்களும் எழுந்தன. முதல் வரிசையில் இருந்த முக்கியஸ்தர்கள் - சர் வின்ஸ்டன், சர்.கிளெமெண்ட், கிருஷ்ணா - கூடிப் பேசினார்கள். கடைசியாக பிரதமர் ச்சக் கையிலிருந்த ‘மைக்’ எடுத்துப் பேசலானார்.

> ‘‘சிறு இங்கிலாந்துவாசிகளே! இன்று இங்கே நடந்த சம்பவம் எனக்கும் பெரிய ஆச்சரியமே. ஆனால் குழப்பத்தினாலோ கிளர்ச்சியினாலோ நிலைமை சீர்திருந்தப் போவதில்லை. இந்த நாட்டில் இன்னும் நியாயம் சட்டம் இருக்கின்றன. நீங்கள் அடக்கமாகவும் ஒழுங்காவும் இருந்தால் நானும் என் அரசாங்கமும் வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.’’

‘ஆம்! ‘ஆம்!’ என்றும் ‘இல்லை! இல்லை’ என்றும் கூட்டத்தில் கோஷங்கள் எழுந்தன.

‘‘சர் வின்ஸ்டன், என் பிரசங்கத்தை நான் முடிக்கலாமா?’’ என்று கேட்டேன்.

அவர் என்னை வெறித்துப் பார்த்தார். ‘‘என்னை இழிவுக்கும், சிரிப்புக்கும் ஆளாக்கிவிட்டீர்கள்! அதற்கு வட்டியும் முதலும் சேர்த்து கொடுக்கப் போகிறீர்கள்’’ என்று கூவினார்.

‘‘பெரியயோர்களே!’’ என்று நான் சத்தத்துக்கும் மேலாக என் மைக்கை உபயோகித்து சத்தமிட்டேன். மேலும் என்ன சொல்லப் போகிறேனோ என்று சிறிது அமைதி ஏற்பட்டது. ‘‘நான் இங்கு வந்தபொழுது ஒரு பப்பியாகத்தான் இருந்தேன்.’’ கூட்டத்தில் ஏளனச் சிரிப்பு எழுந்தது. ‘‘நன்றி கெட்ட பப்பி!’’ என்று ஒருவர் கூவினார். அதை கவனிக்காமல் நான் மேலும் பேசலானேன். ‘‘என் மனம் பக்குவப்படுத்தப்பட்டிருந்தது. என் நடவடிக்கைக்கு நான் பொறுப்பற்றவனாய் இருந்தேன். ஆனால் இந்த நீலமலைகளில் தூய காற்றில், சுதந்திரக் காற்றில் நான் சுய அறிவு பெற்றுவிட்டேன். அதனால்தான் நானாக உங்கள் முன்னிடம் வந்து என் குற்றத்தை ஒப்புக்கொண்டேன். மேற்கு கோளத்துக்கு நான் இனி திரும்பிப் போக முடியாது. ஆதலால் ஒரு அரசியல் அகதி என்னும் முறையில் நான் உங்கள் நாட்டில் தஞ்சம் புக விரும்புகிறேன்.’’

என் பேச்சு நின்றவுடன் மேலும் குழப்பம் ஆரம்பமாயிற்று. ஆனால் இந்தத் தடவை கிருஷ்ணா பேசலானார். ''என்னை உங்களுக்கு எல்லோருக்குமே தெரியும். நான் உங்கள் நலத்துக்காக பாடுபடுபவன். நான் சொல்வதைக் கொஞ்சம் தயவு செய்து கேளுங்கள்.'' உடனே கூட்டத்தில் நிம்மதி ஏற்பட்டது. அவர் எப்படி ஒரு கூட்டத்தை கட்டுப்படுத்துகிறார் என்று நான் வியந்தேன். ''இந்த இளைஞர் என்ன குற்றம் செய்திருந்தாலும் அதற்கு இந்நாட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இங்கிலாந்தைப் பற்றியும் மேற்கு கோளத்தைப் பற்றியும் இவர் அறிவித்த தகவல்களை நாம் என்றும் மறக்க முடியாது. அதற்கு அவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். நமது நாட்டில் ஒருவன் ஒரு குற்றத்தை ஒப்புக்கொண்டால் கூட அதை ஒரு நீதிபதி ஆராய்ந்து தீர்ப்பு சொல்லும் வரையில் அவன் குற்றவாளி அல்ல. அதனால் நான் ஜியார்ஜ் ஸ்மித்தை போலீஸிடம் ஒப்புவித்துவிட்டு நாம் எல்லோரும் வீடு சென்று அவர் சொன்னதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.''

அவர் பேச்சு கூட்டத்தினருக்கு நிம்மதியளித்தது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கூட்டம் கலைய ஆரம்பித்தது.

''நன்றாக சமாளித்துவிட்டீர்களே!'' சர் வின்ஸ்டன் கிருஷ்ணாவை பாராட்டினார். ''கூட்டம் ஆவேசப்பட்டால் அவர்களை கட்டுப்படுத்தவது ரொம்ப கஷ்டம். என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது.'' பிறகு பிரதமர் என்பக்கம் திரும்பினார். ''எங்கள் எல்லோரையுமே நீ முட்டாள்கள் ஆக்கிவிட்டாய். சிறு இங்கிலாந்தின் சிறைச்சாலை உங்கள் பக்குவப்படுத்தும் மனைகளுக்கு ஒன்றும் மோசம் போகாது.''

''அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்கள் இங்கிலாந்துக்குப் போகும் எண்ணத்தை விட்டுவிட்டால் போதும்.''

''எங்கள் ஆணி வேரையே நீ வெட்டிவிட்டாய். எங்கள் சரித்திரம், கலாச்சாரம், நாட்டுப்பற்று எல்லாவற்றிற்குமே முடிகட்டிவிட்டாய். உனக்கு என்ன தண்டனை அளித்தாலும் தகும்.'' பிரதமர் கோபாவேசத்துடன் பேசினார்.

''உண்மை பேசுவதற்குக் கூட உங்கள் நாட்டில் தண்டனையா? '' என்று கேட்டேன்.

பிரதமர் பதில் பேசவில்லை. நான் மேலும் சொன்னேன். ''சர் வின்ஸ்டன், உங்களுடைய ஆணிவேர் இங்கே, எழில்மிகுந்த மலைகளிடையேதான் இருக்கின்றது. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் அல்ல. உங்கள் நூற்றைம்பது வருட சரித்திரம், கலாச்சாரம் எல்லாம் இங்கேதான். வீண் கனவு காண்பதற்கு பதிலாக இதை பேணிக்காக்க வழி தேடுங்கள். மனிதகுலத்தையே நீடூழி வாழச்செய்ய உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை நழுவ விட வேண்டாம்.''

''அந்த குழந்தை உற்பத்தி குறையும் விஷயமா? ''

''ஆம்''

''சிறு இங்கிலாந்து அரசுக்கு அதன் பொறுப்பு நன்றாகத் தெரியும். அதை மற்றவர்கள் சொல்ல வேண்டியதில்லை.'' சர் விண்ஸ்டன் ராஜதந்திரி ஆகிவிட்டார். ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவது மாதிரி பேசினார். ''உலக விமோசனத்திற்காக எங்கள் கடமையை நாங்கள் செய்ய தவறமாட்டோம். அதற்கு வேண்டிய தியாகங்கள் செய்யவும் பின்வாங்கமாட்டோம். ஜனத்தொகையை பெருக்குவது எங்கள் கடமை என்றால் அதை முழு மனதோடு நிறைவேற்றுவோம். ஆனால் அதே சமயத்தில் எங்கள் உரிமைகளையும், சுதந்திரத்தையும் எக்காரணம்கொண்டும் விட்டுக் கொடுக்கமாட்டோம்.......''

இந்த மாறுபட்ட சூழ்நிலையில் பிரதமர் புது கொள்கையை வகுப்பதில் ஈடுபட்டிருந்தார். அவருடன் எப்படி இவ்வளவு தைரியமாகப் பேசினேன் என்று எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. 'டைம்ஸ்' பத்திரிக்கை ஆசிரியர் மிஸ்டர் ஷா எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் குறித்துக்கொண்டார். ச்சக்கும் கிருஷ்ணாவும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். நான் அரசியல் தஞ்சம் கேட்டது அவர்களுக்கு முன்பே தெரியாது.

அப்பொழுது போலீஸ் என்னைக் கைது செய்ய வந்தார்கள். நாங்கள் விடை பெறுகிறோம்,'' என்று கிருஷ்ணா என்னுடன் கை குலுக்கினார். "ஆனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த சமூகத்துக்கு நீங்கள் ஒரு பெரிய சேவை செய்திருக்கிறீர்கள். சில நாட்களில் அதை எல்லோருமே உணறுவார்கள். நீங்கள் சிறையில் இருந்தாலும் நான் சீக்கிரம் உங்களைப் பார்க்கிறேன்.''

ச்சக்கும் விடை பெற்றார்.

போலீஸ் என்னை அழைத்துச் சென்றனர்.

*************

## அத்தியாயம் பதிநான்கு

சிறைச்சாலைகளைப் பற்றி நான் அ.மு. சரித்திரங்களில் படித்திருந்தாலும் இந்த புதிய அனுபவத்திற்கு நான் தயாராய் இல்லை. ஒரு சிறிய இருண்ட அறையில் என்னைப் பூட்டிவிட்டார்கள். குப்பையும், அழுக்கும், நாற்றமும் நிறைய இருந்தன. ஒரு மூலையில் ஒரு படுக்கையும் இன்னொரு மூலையில் ஒரு பக்கெட்டும் இருந்தன. பக்கெட்டிலிருந்து வந்த நாற்றத்தினால்தான் அது எதற்காக அங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிந்து கொண்டேன். உயரத்தில் காற்றோட்டத்திற்காக ஒரு சிறிய ஜன்னல் இருந்தது. வெளியே மாலை நேரமானால் இந்த அறையிலும் பூரண இருட்டு வந்துவிடும் என்று நான் யூகித்தேன். அந்த அறையில் நான் தனியாக இல்லையென்பதும் சீக்கிரம் தெரிய வந்தது. ஈக்கள், கொசுக்கள், பூச்சிகள், எலிகள், இவைகள் என்னை மிகவும் தொந்தரவுக்குள்ளாக்கின.

நான் மிகவும் சோர்வடைந்திருந்தேன். உடம்பிலும், மனத்திலும் உள்ளத்திலும் மிகுந்த களைப்பு தோன்றியது. சென்ற சில நாளைய சம்பவங்களும் மன அழுத்தமும் எல்லாவற்றிக்கும் மேலாக இன்றைய கூட்டமும் என்னை அலக்கடித்துவிட்டன. மனச்சாட்சியைப் பின்பற்றுவது அவ்வளவு சுலபமல்ல என்று அறிந்தேன். ஆனால் நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? எவ்வளவு கஷ்டத்துக்கு இனிமேல் ஆளானாலும் எனது தன்மானத்தை அந்த கூட்டத்தில் காப்பாற்றிக் கொண்டதைப் பற்றி மனதுக்கு நிம்மதியாய் இருந்தது. ஆனால் என் களைப்பு வெகு சீக்கிரத்தில் என்னை அந்த நரக சூழ்நிலையிலும் தூக்கத்தில் ஆழ்த்திவிட்டது.

ஒரு போலீஸ்காரன் ஒரு சிறிய விளக்குடனும் கொஞ்சம் ஆகாரத்துடனும் வந்து எழுப்பினான். ரொட்டியும் கறிக்குழம்பும் ஒரு மண்பாண்டத்தில் இருந்தது. நான் சாப்பிடும்போது அவன் பார்த்துக்கொண்டு காத்திருந்தான்.

“இந்த அறையை கொஞ்சம் சுத்தம் செய்ய முடியுமா? ” என்று கேட்டேன்.

“ஹேம்ப்டன் கோர்ட்டுக்கும் நியூகேட்டுக்கும் இப்போது வித்தியாசம் தெரிகிறதா? ” என்றான்.

“இந்த அசுத்தத்தில் நான் எப்படி தூங்குவது?”

“இங்கு வர உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் ஊருக்குப் போய் ஒரு பப்பியாக இருந்திருக்க வேண்டும்.” அவன் சிரித்தான்.

“எங்கள் ஊருக்குப் போக முடியாது. நான் என் வாழ்க்கையை இங்கேயே கழிக்க முடிவு செய்துவிட்டேன்.”

“நீங்கள் நேற்று சொன்னதில் கொஞ்சம் உண்மை இருந்தால்கூட அங்கைய வாழ்க்கை கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் பிரதமருக்கு உங்களை இங்கே வைத்திருக்க மனசிருக்காது. அவர் உங்களை நாடு கடத்திவிட்டாலும் விடலாம்.”

“அந்த போலீஸ்காரன் விளக்கையும் உணவு கொண்டுவந்த பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அறை பூரண இருட்டில் ஆழ்ந்தது. படுக்கைக்கும் பக்கெட்டுக்கும் நிரண்டிக்கொண்டுதான் போக வேண்டும். நான் இரண்டு ஜீரண மாத்திரைகளை விழுங்கிவிட்டு யோசனை செய்தேன். நான் நாடு கடத்தப்படலாம் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அம்மாதிரி ஏற்பட்டால் என் வாழ்க்கை பாழடைந்துவிடும். இதை நினைத்து தூங்க முடியாமல் வேதனைப்பட்டேன். இந்த ஆபத்துடன் ஒப்பிட்டபொழுது என் சூழ்நிலை கூட அவ்வளவு மோசமாக தெரியவில்லை. அன்று இரவு முழுதும் கொசுக்கடியும், நாற்றமும், எலிகளின் உபத்திரவமும் என் மன சஞ்சலத்துக்கு துணையாக இருந்துவந்தன.

காலையில் கிருஷ்ணா என்னைப் பார்க்க வந்தார். என் முகத்தையும் அழுக்கடைந்த துணிகளையும் பார்த்து விசனம் தெரிவித்தார். “நீங்கள் இந்த கஷ்டத்தில் அதிக காலம் இருக்க வேண்டியதில்லை. ஜானும் நானும் உங்களை ஒரு தனி வீட்டில் இருக்க முயற்சி செய்து வருகிறோம். உங்களுக்கு சிறைவாச தண்டனை கிடைத்தால் இங்கே திரும்ப வேண்டியிருக்கும்.”

‘‘என்னை நாடு கடத்தல் செய்ய முடியுமா? ’’ என்று அவரை ஆவலுடன் கேட்டேன்.

அவர் சிரித்தார். ‘‘அது நடக்காது. அப்படி ஏதாவது முயற்சி நடந்தாலும் நீங்கள் மேற்கு கோளத்துக்குப் போகாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,’’ என்று உறுதியளித்தார்.

என் நெஞ்சிலிருந்து ஒரு பெரிய பாறையை அப்புறப்படுத்திய மாதிரி அவர் சொற்கள் இருந்தன.

‘‘என் தண்டனையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ’’

‘‘இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்கள் ஒரு பெரிய புதிரைக் கிளறிவிட்டீர்கள். எல்லோரும் ஒரு உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். மேலும் அரசியல் ரீதியிலும் சில மாறுதல்கள் ஏற்படலாம். இன்னும் சில நாட்களில் நிலைமை தெளிவாகும்.’’

‘‘மிஸ்டர் கிருஷ்ணா! என் பேச்சு எப்படியிருந்தது? ’’ என்று கேட்காமலிருக்க முடியவில்லை.

‘‘நன்றாக அமைந்திருந்தது,’’ என்றார் அவர். ‘‘நீங்கள் அரசியல் தஞ்சம் கேட்டது ஒரு உயர்ந்த ராஜ தந்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். எல்லோரும் அதை சிறு இங்கிலாந்துக்கு ஒரு சான்றிதழாக சொல்கிறார்கள். நாளாக ஆக உங்களுக்கு ஆதரவு அதிகமாகி வரும். உங்களை ஜாமீனில் விடுதலை செய்ய நான் நீதிமன்றத்துக்கு மனு செய்யப் போகிறேன். இரண்டு மூன்று நாட்களில் அது விசாரணைக்கு வரும். அப்போது பார்க்கலாம்.’’

சிறு இங்கிலாந்தில் சிறையில் இருப்பவர்களைப் பார்ப்பது ரொம்ப சுலபமாகத் தெரிந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு மேரி வந்தாள். நான் இருந்த நிலைமையைப் பாத்துவிட்டு, ‘‘பாவம்! நீங்கள் ரொம்ப சுத்தத்தில் வாழ்ந்து அனுபவப்பட்டவர். இங்கே உங்களைப் பார்க்க எனக்கே வெட்கமாய் இருக்கிறது. நான் போய் பார்க்கிறேன்.’’

மேரி என்ன செய்தாள் என்று தெரியவில்லை. சிறிது நேரத்தில் ஒரு பெண் வந்து கூட்டியெடுத்து பக்கெட்டை சுத்தம்செய்து அதில் ஃபெனாயில் ஊற்றி வைத்தாள். படுக்கையை மாற்றி ஒரு சுத்தமான மெத்தையை விரித்தாள்.

‘‘உங்களுடைய துணிமணிகள் எங்கே? ’’ என்று மேரி திரும்பிவந்து கேட்டாள்.

‘‘ஹேம்ப்டன் கோர்ட்டில் எல்லாம் கட்டி வைத்திருந்தேன். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.’’

நான் அவற்றை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். பேசாமல் இருந்தால் இங்கே ஒன்றும் நடக்காது. உங்கள் உரிமைகளை நிலைநாட்ட நீங்கள் போராட வேண்டும்.’’

‘‘நீ எப்படி போராடினாய்? ’’ என்று கேட்டேன்.

‘‘நீங்கள் ஒரு தூயமான நாட்டிலிருந்து வந்திருப்பதாகவும், இந்த அழுக்கிலும் அசுத்தத்திலும் இருப்பதால் உங்களுக்கு ஏதாவது நோய் வந்தால் அதற்கு போலீசும் சிறு இங்கிலாந்து அரசாங்கமும்தான் பொறுப்பென்றும், பல லட்சபவுன்கள் அவர்கள் நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டி வருமென்றும் சொன்னேன். அவ்வளவுதான்.’’

‘‘என் எதிர்காலம் என்ன மேரி? ’’

‘‘தெரியவில்லை. சிலர் உங்களை பெரிய வீரனாகவும் தியாகியாகவும் போற்றுகிறார்கள். உமது சொந்த கஷ்டத்தைப் பாராட்டாமல் இந்த நாட்டை காப்பற்றியதற்காக உங்களை ஜெயிலுக்கு அனுப்புவதற்கு பதிலாக உங்களுக்கு பிரபுத்துவ பட்டம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். மற்றும் சிலர் இந்நாட்டின் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு நாட்டின் பிரதமரையே ஏமாற்றியதற்கு கண்டிப்பாக சிறை செல்ல வேண்டுமென்கிறார்கள்.’’

‘‘என்னை நீயாவது நம்புகிறாயல்லவா? ’’

“நான் நம்புகிறேன். ஆனால் நீங்கள் கொஞ்சம் முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். நேருக்கு நேர் உண்மையைச் சொன்னால் இப்படித்தான் ஆகும். உண்மை பேசுவதுதான் இந்த உலகத்தில் பல கஷ்டங்களுக்கும் காரணமாக இருக்கிறது.”

அவளை அணைத்து ஆலிங்கனம் செய்ய என் ஆத்மா துடித்தது. ஆனால் அந்த இடத்திலும் சூழ்நிலையிலும் அது உசிதமாகப் படவில்லை. “என்ன ஆனாலும் நீ என் கட்சிதானே? ” என்று கேட்டேன்.

“இல்லாவிட்டால் நான் ஏன் இங்கே வருகிறேன்? ” என்று மேரி திருப்பிக் கேட்டாள். “நான் மறுபடியும் வந்து பார்க்கிறேன்,” என்று விடைபெற்றாள்.

மேரி சென்ற பிறகு நான் ரொம்ப நேரம் யோசனையில் ஆழ்ந்தேன். அ.மு. சரித்திர ஆராய்ச்சி ஸ்தாபனத்திலிருந்து கிளம்பி வந்து இன்னும் நான்கு மாதம் கூட ஆகவில்லை. ஆனால் நடந்த சம்பவங்களையும் மாறுதல்களையும் பார்க்கும்பொழுது அது ஒரு யுகம் மாதிரி தோன்றியது. கம்ப்யூட்டரில் ஒரு எண் அல்லது குறியாய் இருந்துவிட்டு இப்போது உலக அரசியல் அரங்கில் பங்குகொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்டேன். யந்திரத்திலிருந்து மனிதன் ஆகிவிட்டேன். உலக சரித்திரத்தை முன் ஏற்றுவதற்கு நான் ஒரு தூண்டுகோல் மாதிரி ஆகிவிட்டேன். இதனால் ஏற்பட்ட ஒரு மனோவெழுச்சியையும் என்னால் மறக்க முடியவில்லை.

ஆகாரம் வேளாவேளைக்கு வந்தது. மேரி வந்துபோன பிறகு வெளியிலிருந்த கக்கூசை உபயோகிக்க அனுமதித்தனர். கைகால் அலம்ப கிணற்றுப் பக்கமும் போகலாம். பின்னால் இருந்த சவுக்கத்தில் நடப்பதற்கும் அனுமதித்தனர்.

மறுநாள் ஆகாரம் கொண்டுவந்த போலீஸ்காரன், “நீங்கள் சர்.வின்ஸ்டனின் காலை வாறிவிட்டுவிட்டீர்கள் போல் இருக்கிறதே!” என்றான்.

“அது எப்படி? ”

“அவருடைய கட்சி அங்கத்தினர்களே அவருக்கு எதிராக மாறிவிட்டார்களாம். நீங்கள் தூதுவர் அல்ல என்று ஏன் முன்பே அவர் கண்டுபிடிக்கவில்லை என்று கேட்கிறார்களாம். இங்கிலாந்தின் வாழ்க்கை நிலை தெரியாமல் ஏன் எல்லோரையும் அங்கு செல்லவும் அந்நாட்டுடன் இணையவும் ஊக்குவித்தார் என்றும் கேட்கிறார்களாம்.”

“பாவம்! அவருக்கிருந்த ஆவலில் அவரே என்னைத் தூதுவர் ஆக்கிவிட்டார்.”

“அரசியலுக்கும் எனக்கும் ரொம்ப தூரம். அதில் நான் இறங்கமாட்டேன். கால் அழுக்காகிவிடும்,” என்றான் அந்த தத்துவ ஞானி.

* * *

என்னை ஜாமினில் விட வேண்டும் என்று கிருஷ்ணா செய்திருந்த விண்ணப்பம் மறு நாளே விசாரணைக்கு வந்தது. நான் நியூ கேட்டிலிருந்து கோர்ட்டுக்கு ஒரு மூடிய வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டேன். யாரும் என்னை கவனித்ததாக தெரியவில்லை. ஜட்ஜ் ஹிக்கின்ஸ் ஒரு பெரிய ஹாலில் மேடை மீது அமர்ந்திருந்தார். ஒரு அழுக்கடைந்த சிகப்புத் துணி அவருக்கு முன்னால் இருந்த மேஜை மேல் விரிக்கப்பட்டிருந்தது. அவர் ஆசனத்துக்குப் பின்னால் இருந்த சுவற்றில் கண் கட்டப்பட்ட ஒரு பெண் கையில் ஒரு தராசு பிடித்துக் காட்சியளித்தாள். அது நீதியின் பாரபட்சமின்மையைக் குறிக்கும் என்று கிருஷ்ணா விளக்கம் தந்தார். பல வக்கீல்கள் கருப்பு கோட் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். கிருஷ்ணாவும் அதே உடையில் இருந்தார்.

“இது ஒரு ஆரம்ப விசாரணை. இன்று இல்லாவிட்டாலும் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் உங்களை ஜாமீனில் விட்டுவிடுவார்கள்,” என்று கிருஷ்ணா என் காதில் குசுகுசுத்தார்.

இன்னொரு வக்கீலும் என்னுடன் கை குலுக்கினார். “கிருஷ்ணாவை விட உங்களுக்கு நல்ல வக்கீல் கிடைப்பது கஷ்டம்,” என்றார் அவர். “அதுவும் நீங்கள் குற்றம் செய்திருந்தால் இவரால்தான் உங்களை விடுவிக்க முடியும்.”

ஜட்ஜ் வந்து தம் ஆசனத்தில் அமர்ந்தார். எல்லோரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினோம். ஏதோ ஒரு அ.மு.கால சினிமா பார்ப்பது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. இதெல்லாம் உண்மையா கனவா என்று ஒரு நிமிடம் மயங்கிவிட்டேன்.

“சிறு இங்கிலாந்து அரசு – வாதி

‘ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் - பிரதிவாதி.

விசாரணை இப்போது தொடங்கும்” என்று ஜட்ஜ் அறிவித்தார்.

உடனே அரசாங்க வக்கீல் பேச ஆரம்பித்தார். “மை லார்ட்! எனது அறிவாள நண்பர் கிருஷ்ணா தனது கட்சிக்காரரை ஜாமீனில் விட வேண்டும் என்று கோருகிறார். நான் அதை எதிர்க்கிறேன்.”

பிறகு கிருஷ்ணா பேசலானார். “மை லார்ட்! இந்த விசாரணையைப் பற்றிய சில முக்கியமான தகவல்களை நான் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு அசாதாரணமான வியாச்சியம். பலாத்காரமோ, கொலை, களவோ ஒன்றும் இல்லை. என் கட்சிக்காரர் இன்னொருவராக நடித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதுவும் அவருடைய சொந்த ஒப்புதல் வாக்குமூலம்தான் அதற்கு காரணம். அதனால் என் கட்சிக்காரரை ஜாமீனில விடுவதால் இந்த விசாரணைக்கு எந்தவிதமான தடங்கலோ அல்லது தலையீடோ ஏற்பட காரணம் இல்லை……..”

“மை லார்ட்!” என்று அரசாங்க வக்கீல் குறுக்கிட்டார்.

“நான் சொல்வதை தடங்கல் இல்லாமல் சொல்லலாமல்லவா? ” என்றார் கிருஷ்ணா.

“சொல்லுங்கள்” என்றார் ஜட்ஜ். பிறகு அரசாங்க வக்கீல் பேசவில்லை.

“மை லார்ட்! குற்றம் சாட்டப்பட்டவர் வேறு நாட்டிலிருந்து வந்தவர். அவர் நாட்டில் உள்ள ஆகாரம், வாழ்க்கைத்தரம், ஆரோக்கிய வசதி நம் நாட்டில் இல்லை. மேலும் நம் சிறைச்சாலைகளின் அசுத்தத்தைப் பற்றி தாங்களே பல முறை கூறியுள்ளீர்கள். ஆகவே என் கட்சிக்காரர் நம் சிறையில் பலநாள் இருந்தால் அவருடைய உடல்நலம் மிகவும் பாதிக்கப்படும். அவர் வேண்டியிருந்தால் அரசாங்க தூதுவராக இருந்திருக்கலாம். நம் நாட்டு மக்கள் நலனுக்காகத்தான் அவர் உண்மையை வெளியிட்டிருக்கிறார். அதனால் ஒரு சிறிய சட்ட ரீதியான குற்றத்துக்காக சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக அரசாங்கம் அவரை கௌரவித்திருக்க வேண்டும். அதனால் அவரை போலீஸ் பாதுகாப்புடன் ஒரு தனி இல்லத்தில் வசிக்கவாவது நீங்கள் உத்திரவிட வேண்டும்.”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று நீதிபதி அரசாங்க வக்கீலைக் கேட்டார்.”

“மைலார்ட்! இந்த நூற்றைம்பது வருடங்களில் இம்மாதிரியான ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்துக்கு முன்னால் வந்ததில்லை. மக்களிடையே இது ஒரு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிறு இங்கிலாந்தை அழிப்பதற்கு நடக்கும் சதியின் ஒரு பாகம் இது என்று அரசாங்கம் சந்தேகிக்கிறார்கள். நம் சுதந்திரத்தை அபகரித்து கிழக்கு கோளத்துடன் இணையச் செய்யும் முயற்சி இது. மேற்கு கோளத்தின் மீது தவறான வதந்திகளைப் பரப்பி நம் ஒற்றுமையைக் குலைக்கச் செய்யும் ஏற்பாடு. குற்றவாளியை இப்போது ஜாமீனில் விட்டால் போலீசார் மேற்கொள்ளவிருக்கும் துப்பறிதலுக்கு பெரிய இடையூறாக அமையும்.”

“என் கட்சிக்காரரால் நாட்டுக்கே ஆபத்து என்றால் அவரை வேறு சட்டத்தின்படி கைது செய்திருக்க வேண்டும்,” என்றார் கிருஷ்ணா. “என் கட்சிக்காரர் ஆள் மாறாட்டத்திற்காகத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார். அப்படியிருக்கும்போது வேறு விவகாரங்களை இதில் புகுத்துவது சரியல்ல.”

“இது ஒரு ஆரம்ப விசாரணை. எங்களிடமிருக்கும் எல்லா சாட்சியங்களையும் தர வேண்டிய அவசியமில்லை,” என்று அரசாங்க வக்கீல் வாதாடினார்.

“அதுதான் சட்டம்,” நீதிபதி கூறினார். “இருந்தாலும் அரசாங்கம் சீக்கிரம் தமது துப்பறிதலை முடித்து விசாரணைக்கு வர வேண்டும்.” பிறகு அவர் கிருஷ்ணா பக்கம் திரும்பினார். “உங்கள் கட்சிக்காரர் சிறையில் இருப்பதால் உடல்நலம் கெடும் என்றால் மறுபடியும் நீங்கள் விண்ணப்பியுங்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளலாம்.”

அத்துடன் அன்றைய விசாரணை முடிந்தது.

*   *   *

இரண்டு நாட்களுக்குப் பின் ச்சக் என்னைப் பார்க்க வந்தார். “எங்கே சில நாளாக காணவில்லை,” என்று கேட்டேன்.

“பயப்பட வேண்டாம். நான் உங்களைக் கைவிட மாட்டேன்,” என்றார் அவர். “நான்தான் உங்களை இந்த சங்கடத்தில் மாட்டி வைத்தேன். அதனால் அதிலிருந்து விடுவிப்பதும் என் பொறுப்பு தானே.”

“அப்பொழுது நீங்கள் பப் தத்துவத்தை கடைபிடிப்பதில்லை.”

“கிழக்கு கோளத்தில் முன்னேற்றம் வேறுவிதமாக அமைந்துள்ளது. நீதி நெறிகளை நாங்கள் இன்னும் பின்பற்றுகிறோம். ஆனால் நிலைமை கட்டுக்கடங்காவிட்டால் சிந்தனை கட்டுப்பாட்டை உபயோகிப்போம்.”

“நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ”

“உங்களுடைய பேச்சையும் நான் கொண்டுவந்த படங்களையும் சிறு இங்கிலாந்தில் பல இடங்களில் காட்டி வருகிறேன். நாளுக்குநாள் அதைப்பார்க்க கூட்டம் அதிகரித்து வருகிறது. உங்களுடைய வார்த்தைகளை மக்கள் நம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். பலத்த கரகோஷத்துடன் உங்கள் உள்ளத்திலிருந்து வரும் மொழிகளை வரவேற்கிறார்கள். இங்கிலாந்துக்கும் போக வேண்டும் என்ற ஆவல் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.”

“உங்களுடைய முயற்சிகளுக்கு மிகவும் நன்றி.”

“பிறகு அவர் நிலைமையை விளக்கினார். “சர் வின்ஸ்டனுடைய பதவியே இப்போது ஆட்டம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. அவர் முட்டாள்தனமாக நடந்து கொண்டதாகவும் உங்கள் சன்னத்துகளை தணிக்கை செய்யாமலும், வேறு அத்தாட்சியில்லாமலும் எப்படி உம்மை தூதுவர் என்று அழைத்து அதற்கு வேண்டிய மரியாதையெல்லாம் அளித்தார் என்று கேட்கிறார்கள்.”

“அவர்தானே என்னைத் தூதுவராக்கினார்.

“உங்கள் வார்த்தைகளை அதிகம் பேர் நம்பினால் அவரைப் பின்பற்றுபவர்கள் குறைந்து வருகிறார்கள் என்றுதான் அர்த்தம். உமது விசாரணையை சீக்கிரம் முடித்து உங்களை குறைந்தது ஒரு வருடத்திற்காவது சிறையில் தள்ளிவிட்டால் பிறகு உங்கள் பேச்சை எல்லோரும் மறந்துவிடுவார்கள் என்று பிரதமர் நினைக்கிறார். பிறகு மெதுவாக தன் கொள்கையை மாற்றிக்கொள்ள அவருக்கு அவகாசம் இருக்கும். ஆனால் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது.”

“ஏன்? ”

“இதைக் கேட்டுப்பாருங்கள்,” என்று ச்சக் எனக்கு ஒரு டிரேன்ஸ் ரிசீவரும், ஆடியன்ஸ் ரியேக்ஷன் இண்டிகேட்டரும் வழங்கினார். “முன் மாதிரியே அதே மீட்டரில் என்னுடன் தொடர்பு கொள்ளலாம். அடுத்த தடவை உங்கள் பேச்சை நான் ஒலிபெருக்கும்போது நீங்களும் கேட்கலாம்,” என்று சொல்லி விடைபெற்றார்.

குறித்த நேரத்தில் நான் அந்த உபகரணங்களை இயக்கினேன். முதலில் கிருஷ்ணாவின் பேச்சு ஒலிபெருக்கி மூலம் வந்தது. “அன்றைக்கு ராஜீய பூகோள சங்கத்தில் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித் செய்த பிரசங்கம் நமது சரித்திரத்தையே மாற்றிவிட்டது. அவர் நம் கண்களைத் திறந்துவிட்டார். அவர் சொன்னதைக் கொண்டுதான் நம் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும். இதனால் பலருக்கு ஏமாற்றமும் மனத்தாங்களும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் உண்மை, யதார்த்தம் இவைகளை அவர் நமக்கு அளித்திருக்கிறார். அவை உறுத்தும். ஆனால் வாழ்க்கையை சுத்தப்படுத்தும். அவர் சொல்வதைக் கேளுங்கள்.”

என் பேச்சைக் கேட்க எனக்கு எப்படியோ புதுமையாக இருந்தது. அந்த டிரேன்ஸ் ரிசீவர் சிறிய சிறையில் என்னை நானே பார்த்துக்கொள்ளவும் முடிந்தது. முதலில் எனக்கு இருந்த கவலையும் நடுக்கமும் கூட என் பேச்சுக்கு ஒரு நேர்மையைத் தந்தது நான் உண்மையை என் உள்ளத்திலிருந்து சொல்கிறேன் என்பதை அது ஊர்ஜிதப்படுத்தியது.

ஆனால் கூட்டத்தினருடைய மனநிலைதான் எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மேற்கு கோள வாழ்க்கையை அவர்கள் வெறுத்தாலும் அந்த வெறுப்பை என் மேல் காட்டவில்லை. என்மேல் அனுதாபம் காட்டி கரகோஷம் செய்தார்கள். சர் வின்ஸ்டன் ஏன் இதை தடை செய்யவில்லை என்று நான் நினைத்தேன்.

கடைசியாக கிருஷ்ணா மறுபடியும் பேசினார். “நீங்கள் ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்தைப் பார்த்தீர்கள். அவர் பேசியதைக் கேட்டீர்கள். அவரைப் பார்த்தால் ஒரு குற்றவாளி மாதிரியா இருக்கிறார். யோசனை செய்து பாருங்கள்.”

உடனே கூட்டத்தில் கோஷங்கள் எழுந்தன.

கிருஷ்ணா சாஸ்திரிக்கு ஜே!

சிறு இங்கிலாந்துக்கு ஜே!

இம்மாதிரி கோஷமிட்டவர்கள் இந்தியர்கள் அல்ல. நீலமலை வெள்ளையர்கள் தான். எல்லோர் நெற்றியிலும் சிலுவைகள் இருந்தன. எனது விடுதலை சீக்கிரம் ஆகும் என்று உணர்ந்தேன்.

*   *   *

சில நாட்கள் அமைதியாக கழிந்தன. என்னைப் பார்க்க வந்த மேரி பொதுஜன அபிப்பிராயம் என்பக்கம் திரும்புவதாக சொன்னாள். என் பேச்சின் முக்கிய பகுதிகள் சுதந்திரச் சுவரில் கூட வந்துவிட்டதாம். ஒரு கூட்டத்தில் கீழ்கண்ட கோஷம் எழுந்ததைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

‘சர் ஜியாஜ் கி ஜே!’

திடீரென்று சீதோஷ்ண நிலைமையிலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. வெப்பமான சூரிய வெளிச்சம் போய் எல்லோரும் எதிர்பார்த்த மழைக்காலம் வந்துவிட்டது. மேகமும் பனியும் தூரலும் தினமும் காலையிலிருந்து மாலைவரைக்கும். ரொம்ப உஷ்ணமாக இருந்த என் சிறு அறை திடீரென்று குளிராகவும் ஈரமாகவும் ஆகிவிட்டது. உல்லன் துணிகள் போட்டுக் கொண்டும் கூட எனக்கு சளியும் காய்ச்சலும் வந்துவிட்டது. எப்பொழுதுமே நோய் அனுபவம் இல்லாத எனக்குக் கொஞ்சம் பயமாய் இருந்தது. ச்சக்கை டிரென்ஸ் ரிசீவரில் கூப்பிட்டு சொன்னேன்.

“நம் சிறிய பிரச்சனை வேகமாக ஒரு முடிவுக்கு வரப் போகிறது,” என்றார் அவர். “திங்களன்று பார்லிமெண்ட் மழைக்கால கூட்டம் ஆரம்பமாகும். அப்போது உங்கள் வழக்கை விசாரிக்க ஒரு பிரத்தியோக நீதிபதியை நியமிக்க பிரதமர் ஓர் சட்டத்தைக் கொண்டு வருகிறார். உங்களை தூதுவராக ஒரு பெரிய விழாவாக நடத்த முடியவில்லை. அதனால் உமது விசாரணையையாவது விளம்பரத்திற்கு பயன்படுத்த முயற்சிக்கிறார். ஆனால் அவர் சட்டம் நிறைவேறுவது சந்தேகம். அப்படியானால் உங்களை விடுதலை செய்வதை விட வேறு வழியில்லை.”

“எப்படி அவ்வளவு உறுதியாக சொல்லுகிறீர்கள்? ”

“சர் வின்ஸ்டன் மீது அவருடைய கட்சியிலேயே பல புகார்கள் இருக்கின்றன. சர் ராபர்ட் பீல் - சர் வின்ஸ்டனுக்கு முந்திய பிரதமர் - தமது கோஷ்டியுடன் அவருக்கு விரோதமாக ஓட்டளிப்பார். அவரும் பிரதமரும் பூனையும் எலியும் போல. அப்படி ஓட்டளித்தால் பிரதமர் ராஜீனாமா செய்ய வேண்டி வரும்.

“அரசியல் ரொம்ப அசிங்கமாகத் தெரிகிறது,” என்றேன்.

“உங்களுக்கு ஜனநாயகத்தின் அசிங்கம் வேண்டுமா அல்லது மேற்கு கோளத்தின் பயங்கரங்கள் வேண்டுமா? ”

“பார்லிமெண்ட் கூட்டத்தின் நடவடிக்கைகளை நான் பார்க்க முடியுமா? ”

“ஆம். நான் பார்வையாளர் கேலரியிலிருந்து அனுப்புகிறேன். உங்கள் டிரேன்ஸ் ரிசீவரில் பார்க்கலாம்.”

ச்சக் அனுப்பிய மாத்திரைகள் என் காய்ச்சலைத் தடுத்துவிட்டன. பார்லிமெண்ட கூட்டத்தை நான் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்.

திங்கட்கிழமை காலை பார்லிமெண்ட் மண்டபத்தில் அங்கத்தினர்கள் எல்லாம் உணர்ச்சிவசப்பட்டவர்களாக தோன்றினார்கள். காகிதங்களைப் புரட்டிக் கொண்டும் கூட்டங்கூட்டமாக நின்று விவாதித்துக்கொண்டும் மற்றவர்களை தங்கள் பக்கத்துக்கு இழுத்துக்கொண்டும் இருந்தார்கள். சபாநாயகர் வந்து உட்கார்ந்ததும் மற்றவர்களும் தங்கள் ஆசனங்களில் அமர கொஞ்சம் அமைதி நிலவியது. அப்போதும் குசு குசுப்புகள் நிற்கவில்லை.

பிரதமர் எழுந்து நின்று வேலை செய்யாத மைக்கை தமது உயரத்திற்கு சரி செய்து பிறகு பேசலானார்.

> “சபாநாயகர் அவர்களே கனம் அங்கத்தினர்களே! ஒரு பெரிய நெருக்கடி நம் நாட்டில் எழுந்துள்ளது. சென்ற நூற்றைம்பது வருடங்களாக நாம் நமது சுதந்திரத்தையும் நமது வாழ்க்கை முறையையும் பல இடையூறுகளுக்கிடையே பாதுகாத்து வந்திருக்கிறோம். ஆனால் இன்று நமக்குள்ளேயே ஒரு புதிய விரோதி எழுந்து நமது வாழ்க்கையைப் பாழாக்க ஒரு சதி நடந்து வருகிறது. நம் விரோதிகளுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ‘நாங்கள் சாதாரண மக்கள் அல்ல. நாங்கள் விட்டுக் கொடுப்பவர்கள் அல்ல. நாங்கள் இந்த மலைகளிலும் காடுகளிலும், உயிருள்ளளவும் போராடுவோம். என்றைக்கும் நாங்கள் பணிய மாட்டோம்’. நம் மக்களுக்கு நான் நிம்மதியோ கேளிக்கையோ தரப்போவதில்லை. ரத்தம், வேர்வை, கண்ணீர் இவைகள்தான் உங்கள் விதி உங்கள் பாக்கியம், கடைசியில் நிரந்தர புகழ்…..”

பிரதமரின் நண்பர்களிடமிருந்து ஒரு சிறு கரகோஷம் எழுந்தது. அதே சமயத்தில் எதிர் கட்சியினர் ஏளனமாக கூச்சலிட்டனர். பிரதமர் மீண்டும் பேசலானார்.

> “ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்” பிரதமர் என் பெயரை இரண்டு தரம் உச்சரித்தார். “ஜியார்ஜ் சோனியன் - ஸ்மித்! அவர்தான் இந்த சதியின் சின்னம்; ஈட்டியின் கூர்மை. அவர்தான் நம் சமூகத்தில் ஆழமாக பதிந்திருக்கும் ஐஸ்கட்டியின் வெளியே தெரியும் நுனி. நம் தாய்நாட்டின் தூதுவர் என்று சொல்லிக்கொண்டு இங்கே வந்து அதே தாய் நாட்டை தூற்றும் துரோகி. அவர் வார்த்தைகளே அவரை தண்டித்துவிட்டன……”

“சபாநாயகர் அவர்களே” எதிர் கட்சித் தலைவர் எழுந்தார். “ஜியார்ஜ் ஸ்மித் ஒரு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார். இன்னும் அவர் குற்றம் செய்தவர் என்று எந்த நீதிபதியும் சொல்லவில்லை. அப்படியிருக்கும்பொழுது அவரை துரோகி என்றும் சதி செய்தவர் என்றும் இங்கே பேசுவது நீதிமன்றத்தை அவமதிப்பதல்லவா? ”

“எனக்கும் இந்த நாட்டு சட்டங்கள் தெரியும்!” பிரதமர் ஆவேசத்துடன் கூவினார். “நான் இப்படி பேசுவதற்கு ஒரு காரணம் உண்டு.”

“சரி மற்றதை விட்டுவிட்டு காரணத்தை முதலில் சொல்லுங்கள்,” என்றார் கிளெமெண்ட்.

“எதிர்கட்சி அங்கத்தினற்கு இருக்கும் பல நற்குணங்களில் பொறுமை ஒன்று இல்லைபோல் இருக்கிறது,” என்று பிரதமர் ஏளனமாகப் பேசினார். “கொஞ்சம் பொறுமையாய் இருங்கள்,” என்று புத்திமதி சொன்னார். ஆனால் மேலும் அந்தப் பொறுமையை சோதிப்பதுபோல விஷயத்துக்கு வராமல் பேசிக்கொண்டே போனார். அவரது கட்சிக்காரர்களே குசுகுசுக்க ஆரம்பித்தார்கள். கடைசியாக, “இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது முக்கியமல்ல. நம் நாட்டின் வாழ்க்கையும் நாகரீகத்தின் எதிர்காலமும்தான் முக்கியம். இந்த சதிக்கு காரணமாய் இருந்தவரை ஹேம்ப்டன் கோர்ட்டிலிருந்து நியூகேட் சிறைக்கு மாற்றியிருக்கிறோம். வெளிநாட்டு படங்களைக் காட்டி மக்கள் மனத்தை மாற்ற ஒரு முயற்சி நடைபெற்று வருகிறது. ஜனநாயக நாடு என்பதால் அதை தடைசெய்யவில்லை. ஆனால் நம் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஓரே வழிதான். கைது செய்தவரை உடனே விசாரித்து தண்டனை அளிக்க வேண்டும். அதற்காக ஒரு பிரத்யோக நீதிமன்றத்தை நிறுவ நான் அதிகாரம் வேண்டுகிறேன்.”

பிரதமருக்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் சர் கிளெமெண்ட் வில்சன் பேச எழுந்தார்.

“அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். போன கூட்டத்து கடைசி நாளன்று பிரதமர் ஆங்கிலேயே தூதுவர் வந்திருப்பதைப் பற்றியும், அவர் இந்த சபையில் பேசவிருப்பதைப்பற்றியும் பெருமையாக அறிவித்தார். எங்களுக்கு கொஞ்சம் ஆச்சரியமாய் இருந்தது. ஆனால் எங்கள் சந்தேகங்களை பிரதமர் இகழ்ச்சி செய்து நிராகரித்துவிட்டார். ஆதலால் ‘ஆங்கில தூதுவரின் பேச்சை’க் கேட்க ஆவலுடன் இங்கு வந்திருக்கிறோம்.

எதிர் கட்சியினர் ஏளனமாக பிரதமரைப் பார்த்து சிரித்தார்கள். அரசாங்க கட்சினர் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். சர் கிளெமெண்ட் மேலும் பேசலானார்.

“இங்கு வந்த தூதுவருக்கு நமது பிரதமரே ‘சர்’ பட்டம் வழங்கியதாக நம்பகமான செய்தி எங்களுக்கு கிடைத்திருக்கிறது. அவர் பல நாட்கள் அரசாங்க விருந்தினராக ஹேம்ப்டன் கோர்ட்டில் வசித்து வந்தார். பிரதமரே அவரை பல இடங்களில் வரவேற்று, புகழ்ந்து பேசியிருக்கிறார். பிரதமருடைய ஒப்புதலின் பேரில்தான் அந்த தூதுவருடைய பிரசங்கத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவருடைய அங்கீகாரத்தின்படிதான் பிரதமர் குறிப்பிட்ட படங்கள் தருவிக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு திடீரென்று அதே நபரை விசாரிக்க தனி நீதிமன்றத்தை பிரதமர் கோருகிறார்.

“இன்று நம் சுதந்திரத்துக்கோ பண்பாட்டுக்கோ ஆபத்து இல்லை. ஆள்மாறாட்டத்தைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. பிரதமரை ஒரு ஏப்ரல் முட்டாளாக்கிவிட்டால் அதற்கு நாடோ அல்லது மக்களோ பொறுப்பல்ல. ஆனால் இன்றைக்கு எழுந்துள்ள பெரிய கேள்வி என்னவென்றால், ‘இம்மாதிரி நடந்துகொண்ட பிரதமருக்கு நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண தகுதி இருக்கிறதா’ என்பதுதான். நாட்டை ஆளும் உரிமையை பிரதமர் இழந்துவிட்டார்……”

எதிர் கட்சித் தலைவர் பேசி முடித்ததும் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து சிலரும் எதிர்ப்பு தெரிவித்து சிலரும் வாக்குவாதம் செய்தனர். ஓட்டு எடுப்பதற்கு கொஞ்சம் முன்பாக சர் ராபர்ட் பீல் பேசினார்.

“நான் ரொம்ப வேதனையுடன்தான் இன்று பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பிரதமரும் நானும் பல வருடங்களாக நண்பர்களாக இருந்து வந்திருக்கிறோம். பல

போராட்டங்களில் தோளோடு தோள் கொடுத்து வெற்றி கண்டிருக்கிறோம். சில நாள்வரைக்கும் அப்படித்தான் இருந்து வந்தோம். எங்கள் உறவு தியாகம், நம்பிக்கை என்னும் இரு குணங்களால் பலப்பட்டு இருந்தது. ஆனால் இந்த ஆங்கில தூதுவர் என்று சொல்லிக்கொண்டு ஒருவர் வந்த நாளிலிருந்து பிரதமரின் கொள்கைகளும் முடிவுகளும் தப்பான வழியில் செல்ல ஆரம்பித்தன. இவ்வளவு முக்கியமான விஷயத்தில் எதிர் கட்சியினருடன் ஆலோசிக்காவிட்டாலும், தம் நண்பர்களுடனாவது ஆலோசித்திருக்கலாம். யாரோ ஒரு சாதாரண ஆராய்ச்சிக்காரன் வந்ததை ஒரு பெரிய கொள்கை வெற்றியாக கொண்டாடப்பட்டது. இன்று அந்தக் கொள்கை சின்னாபின்னமாகி சிதறிக்கிடக்கிறது. இந்த சூழ்நிலையில் என் ஆதரவு அவருக்கு எப்படிக் கிடைக்கும்? ''

சர் ராபர்ட் உட்கார்ந்தவுடன் கூட்டத்தில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. பலர் ஒரே சமயத்தில் பேச ஆரம்பித்தனர். சபாநாயகர் 'ஒழுங்கு! ஒழுங்கு!' என்று பலமுறை தம் மேஜையைத் தட்டினார். பிரதமர் மறுபடியும் எழுந்து, ''இங்கு பேசிய பல அங்கத்தினர்களின் விருப்பப்படி என் கோரிக்கையை நான் ஓட்டுக்குவிட விரும்பவில்லை.......''

''ராஜீநாமா செய்! ராஜீநாமா செய்!'' என்று கோஷங்கள் கிளம்பின.

மறுபடியும் பிரதமர் எழுந்து அமைதி கோரினார். ''இந்த சபை மீதும் அதன் மரபுகள் மீதும் எனக்கு ரொம்ப அன்பும் மரியாதையும் உண்டு. இங்கிலாந்தில் இருந்து நாம் பெற்ற உயர்ந்த பண்புகளை நிலைநிறுத்துவதில் எனக்கு மிஞ்சியவர்கள் யாரும் இல்லை. அந்த பண்புகளின்படி நான் பிரதமர் ஸ்தானத்தை இன்று முதல் துறக்கிறேன்.''

கூட்டத்தில் குழப்பம் கூச்சலும் சபாநாயகரால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் அது கோபத்தால் ஏற்பட்ட குழப்பம் அல்ல. சந்தோஷத்தாலும் ஜனநாயக வெற்றி என்பதாலும் ஏற்பட்ட சந்தோஷ ஆரவாரம். இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் எல்லோரும் சர் வின்ஸ்டனை சூழ்ந்துகொண்டு அவருக்கு பாராட்டு தெரிவித்தனர். அவருடைய விரோதிகளெல்லாம் அவருடன் கை குலுக்கி தோளைத் தட்டிக் கொடுத்தனர். அவரும் புன்னகையுடன் இந்த பாராட்டுகளை ஏற்றுக்கொண்டார்.

இந்த வாழ்க்கை முறை எனக்கு அர்த்தமாகவில்லை. இதுதான் ஜனநாயக முறை, மரபு என்று பின்புதான் அறிந்தேன்.

* * *

சர் வின்ஸ்டன் ராஜீநாமா செய்த மூன்று நாட்களில் சர் ராபர்ட் பீல் பிரதமராக ஒரு கூட்டு அரசாங்கம் ஏற்பட்டது. முதலாவதாக ஒரு இந்தியர் மந்திரிசபையில் இடம்பெற்றார். கிருஷ்ணா வெளிநாட்டு அமைச்சராக பதவி ஏற்றார். இந்த நியமனத்தால் அரசின் கொள்கை எல்லோருக்கும் தெளிவாக விளங்கிவிட்டது.

புதிய அரசின் முதல் தீர்மானங்களில் ஒன்று என்னவென்றால் என்னை விடுதலைசெய்து எனக்கு சிறு இங்கிலாந்து நாட்டுரிமை வழங்கப்பட்டதுதான். சிறையிலிருந்து அன்றே நான் எல்லாவிதங்களிலும் ஒரு சுதந்திர மனிதனாக வெளியே வந்தேன்.

* * *

## பின்னுரை

என் வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது.

நான் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் ஒரு வேலை சம்பாதிக்க முயற்சித்தேன். மற்றவர்களுடைய தாராளத்தால் நான் வாழ விரும்பவில்லை. நான் கிழக்கு கோளத்தின் பல பாகங்களுக்குச் சென்று மேற்கு கோள வாழ்க்கையைப் பற்றி பேசலாம் என்று ச்சக் யோசனை சொன்னார். ஆனால் அது எனக்குப் பிடிக்கவில்லை. கிருஷ்ணா என்னை தமக்கு ஆலோசகராக வைத்துக்கொள்ள விரும்பினார். எனது மேற்கு கோள அனுபவங்கள் அவருக்கு வெளிநாட்டுக்கொள்கையில் உபயோகமாக இருக்கும். ஆனால் அந்த வேலைக்கு மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் போதுமானதாய் இருந்தது.

கடைசியாக நான் ஜானுக்கு உதவியாளராக இருந்து மியூசியத்தை சீர்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார்கள். ஜானுக்கு குழந்தைகள் இல்லை. ஷீலாவுக்கும் மியூசியத்தில் அக்கறையில்லை. ஆகவே நான் மியூசியத்தில் வேலை ஆரம்பித்தேன். பழைய தஸ்தாவேஜுகளை புதுப்பிப்பதிலும், பாதுகாப்பதிலும் அவற்றை பிரித்தனுகுவதிலும் எனக்கு நல்ல அனுபவம் இருந்தது. அதற்கு வேண்டிய நவீன சாதனங்களை ச்சக் கொடுத்தார். முதல் சிலநாள் ஜான் என்னிடம் கொஞ்சம் தூரமாக இருந்தாலும் என் வேலையைப் பார்த்த பின்பு அவருக்கு ரொம்ப திருப்தியும், வியப்பும் ஏற்பட்டது. இப்பொழுது நாங்கள் இருவரும் சிறு இங்கிலாந்தின் அதிகாரபூர்வமான சரித்திரத்தை எழுதுவதில் ஈடுபட்டிருக்கிறோம்.

* * *

என் வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கும்பொழுது நான் இங்கே வந்த புதிதில் எவ்வளவு அப்பாவியாகவும் ஒன்றும் அறியாதவனாகவும் இருந்தேன் என்று உணர்கிறேன். ச்சக், கிருஷ்ணா முதலியோர் - ஏன் சர் வின்ஸ்டனும் கூட – என்னை ஒரு குழந்தை மாதிரி நடத்தி வந்தார்கள். இரண்டு நல்ல வார்த்தை, கொஞ்சம் புகழ்ச்சி கிடைத்தால் அதுவே ஒன்றும் அறியாத எனக்கு ரொம்ப திருப்தியை அளித்தது. இவையெல்லாம் ஒரு உள்நோக்கோடு இருக்கலாம் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பப் தத்துவத்துக்கு வெளியே நான் ஒரு குழந்தைதான். ஆனால் வயதான குழந்தை. இல்லாவிட்டால் ஷீலாவுடன் எழுந்த சிக்கல்கள் இருந்திருக்காது. ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக மனித உறவுகளிலுள்ள சிக்கல்களையும், சங்கடங்களையும், ஆழ்ந்த பந்தங்களையும் அறிந்து கொண்டேன். பப் தத்துவத்திற்கு பதிலாக கிழக்கு கோளத்தின் முக்கியஸ்தர்கள் கடைபிடிக்கும் சிந்தனை கட்டுப்பாட்டையும் கற்றுக் கொண்டால் என் அறிவு இன்னும் விருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை.

முதலிலிருந்தே ச்சக் என்னை ஒரு குழந்தை மாதிரி பாவித்து விளையாடிவந்தார். பின்னால் நடந்த சம்பாஷணைகளில் அதை ஒத்துக்கொண்டும் இருக்கிறார். ஆனால் இவ்வுலக லௌதீக வழக்கங்களையும் அவர் எனக்கு கற்பித்திருக்கிறார். அவர்தான் என்னை ஆங்கில தூதுவர் ஆக்கியதற்கு முக்கிய காரணம். அம்மாதிரியான ஒரு சங்கடத்தில் என்னை மாட்டிவிட்டதற்கு அவர் சொல்லும் காரணம் அவருக்கு மனித குலத்தின் எதிர்கால அக்கறைதான். என்னை பப் தத்துவத்திலிருந்து விடுவித்து ஒரு முழு மனிதனாக்கியது அவர்தான் என்பதையும் நான் மறக்க முடியாது.

அவர்தான் எனக்கு சிந்தனைக் கட்டுப்பாடும் கற்பிக்கிறார். ஆனால் அது எனக்கு அதிக சந்தோஷத்தை அளிக்கிறது என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் மேரி என்ன நினைக்கிறாள் என்று எனக்குத் தெரிகிறது. ஒரு கணவன் என்னும் நோக்கோடு பார்க்கும்பொழுது சில சமயங்களில் அது ரசிக்கக் கூடியதாய் இல்லை. இருந்தாலும் அவள் அன்பைப் பற்றியும் எனக்கு அளிக்கும் சேவையைப் பற்றியும் நான் பெருமைப்படுகிறேன்.

* * *

நான் விடுதலையான இரண்டு மாதங்களுக்குப் பிறகு எனக்கும் மேரிக்கும் செய்ண்ட் பால் சர்ச்சில் திருமணம் நடைபெற்றது. கிருஷ்ணா அதற்கு பொறுப்பேற்று முன்னின்று பிரமாதமாக நடத்தி

வைத்தார். நாட்டிலுள்ள முக்கியஸ்தர்கள் எல்லோருமே அவர்கள் மனைவிமார்களுடன் கோவிலுக்கும் பிறகு நீலமலை கிளப்பில் நடந்த வரவேற்புக்கும் வந்திருந்தனர். ச்சக் துணை மாப்பிள்ளையாக இருந்து நான் எவ்வித இக்கட்டிலும் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொண்டார். அவருடைய ஹாஸ்ய உணர்ச்சிக்கு ஏற்ப மேலும் சில மாத்திரைகளையும் அளித்தார்.

முதலில் எங்கள் திருமணத்தைப் பற்றி அறிவிக்கப்பட்டபோது முக்கியமாக பெண்கள் கொஞ்சம் வம்பளந்தார்கள். மேரியினுடைய பழைய வாழ்க்கையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்.

‘‘அந்தப் பெண்களுக்கெல்லாம் என் மேல் பொறாமை,’’ என்றாள் மேரி. ‘‘ஷீலாவுக்கு பயந்து உங்களை சும்மா விட்டுவிட்டார்கள். இப்பொழுது தவறிப்போனோமே என்று வியசனப்படுகிறார்கள்.’’

‘‘ஏன்? என்னிடம் பணம், அந்தஸ்த்து, ஒன்றுமில்லையே? ’’

‘‘நீங்கள் ஒருவர்தானே உண்மையான வெள்ளையர், நாங்களெல்லாம் தார் பூசப்பட்ட வெள்ளையர்கள்தானே.’’

நான் ஆச்சரியப்பட்டேன். ‘‘வெள்ளையாய் இருப்பது அவ்வளவு முக்கியமா? ’’

‘‘உங்களுக்கு அது முக்கியமில்லாமல் இருக்கலாம். ச்சக்குக்கும் கிருஷ்ணாவுக்கும் அது முக்கியமல்ல. ஆனால் வெள்ளையர் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கு அது முக்கியம்.’’

‘‘மேரி, என்னை ஏன் நீ மணம் செய்துகொள்ள விரும்புகிறாய்? ’’

மேரி என்னை அணைத்துக்கொண்டாள். ‘‘நீங்கள் வெள்ளையராய் இருப்பதால்தான்.’’

‘‘இவையெல்லாம் பிரிவிணைக்கு முந்திய தப்பெண்ணங்கள் அல்லவா? ’’

‘‘நீல மலைகள் இன்னும் பிரிவிணைக்கு முந்திய காலத்திலேதான் இருக்கின்றன.’’

‘‘வேறு ஒரு காரணமும் இல்லையா? ’’ என்றேன் கொஞ்சம் ஏமாற்றத்துடன்.

‘‘நீங்கள் நான் சொன்னபடி கேட்பீர்கள். இங்கத்து ஆண்கள் வெகு சீக்கிரம் மேயப் போய்விடுவார்கள்.’’

இவ்வளவு அனுபவத்துக்குப் பிறகும் இன்னும் எனக்கு பெண் மனம் அர்த்தமாகவில்லை. ஆனால் மேரியின் அன்பைப்பற்றி எனக்கு உறுதி உண்டு.

பட்லர் மட்டும் எங்கள் மணத்துக்கு வரவில்லை. நான் என் அந்தஸ்த்தை விட்டுக்கொடுத்து விட்டதாக அவன் நினைத்தான். எனக்கு கடவுள் மீதும் மதத்தின் மீதும் நம்பிக்கை இல்லாவிட்டாலும், திருமண சடங்குகள் என் உள்ளத்தைக் கிளறின. மேரி சாவு பிரிக்கும்வரை என்னை மரியாதையுடன் நேசித்து கீழ்படிவதாக வாக்களித்தபோது என் கண்களில் நீா் தளும்பியது.

நாங்கள் கென்சிங்டனில் ஒரு சிறிய வீட்டில் வாழ்கிறோம். வீட்டைச் சுற்றிலும் புல் தரைகளும் பூப்பாத்திகளும் நிறைய அழகு செய்கின்றன. எங்கள் வீட்டில் வெள்ளையர், இந்தியர், பணக்காரர், படித்தோர் ஆக எல்லோரையும் சந்திக்கலாம். எல்லோரிடமும் நாங்கள் பாரபட்சமின்றி பழகுகிறோம். இந்த சுதந்திர வாழ்வு மற்றவர்களுக்கு வழக்கமாய்விட்டது. ஆனால் அதைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் எனக்குக் கொஞ்சம் பெருமைதான் இருந்தாலும் எல்லோருடனும் சகஜமாக பேசிச் சிரித்து அளாவளாவுவது எனக்கு கொஞ்சம் கஷ்டமே.

நாங்கள் மணம் செய்து கொண்டபோது எங்களுக்கு குழந்தை பிறக்குமா பிறக்காதா என்ற வாக்குவாதம் எல்லோரிடையிலும் பரவியிருந்ததாம். வெளியுலகில் குழந்தை உற்பத்தி குறைந்திருப்பதாலும், நான் நான்காவது தலைமுறையாக செயற்கை முறையில் பிறந்தவன் என்பதாலும் நீலமலை வெள்ளையர்களிடையே இந்த சந்தேகமும் வாக்குவாதமும் - எங்கள் காதில் விழாமல் - மும்முரமாக இருந்ததாம். இதைப்பற்றி பெரிய தொகைகளை பந்தயமும் கட்டினார்கள். ஆனால் ச்சக் கொடுத்த மாத்திரைகளைப் பற்றி யாருக்கும் தெரியாது. ஷீலாவுக்கு மட்டும்தான் தெரியும். ஆனால்

அவள் அதைப்பற்றி பிரஸ்தாபிக்கமாட்டாள். மேரியும் ச்சக்கும் கூட குழந்தை மூன்று வருடங்களில் பிறக்கும் என நிறைய பணம் கட்டினார்கள்.

ஆனால் குழந்தை பிறக்காது என்று கட்டியவர்களெல்லாம் நிறைய பணத்தை இழக்க வேண்டிவரும். மேரி கர்ப்பம் தரித்திரிக்கிறாள். நான் இந்த செய்தியை ச்சக்குக்கு டிரேன்ஸ் ரிசீவர் மூலம் அனுப்பியபொழுது உடனே பதில் வந்தது. ‘‘குழந்தைக்கு நான் கட்டிய பந்தையத்தால் பத்து லட்சம் பவுன் கிடைக்கும். கடைசியாக என் ஆராய்ச்சியும் நூற்றுக்கு நூறு வெற்றி.’’

------------------------------------------